19-3

உ

ஸ்ரீ பகவத் கீதை

[இரண்டாம் பாகம்]

[அத்யாயம் 8 முதல் 18 வரை]



வில்லவரம்பல் குப்புஸ்வாமி அய்யரவர்களால்
இயற்றப்பட்ட
'கீதார்த்த தீபிகை'
எனும் தமிழ் அனுவாதத்தைத் தழுவிய
தமிழ் உரையுடன் கூடியது

தொகுத்தவர் :

அ. குப்புஸ்வாமி

கும்பகோணம் சாரதா விலாஸ அச்சகத்தில்
அச்சிடப்பட்டது.

2-பாகங்களும் விலை ரூ. 10] [1974

உ

ஸ்ரீ பகவத் கீதை

[இரண்டாம் பாகம்]



ஸ்ரீ ஆதிசங்கர பகவத்பாதர், ஸ்ரீராமானுஜாசார்யார்,
ஸ்ரீமத்வாசார்யார், ஸ்ரீ ஸ்ரீதரர், ஸ்ரீ ராகவேந்த்ரர்
ஆகிய ஆசார்ய புருஷர்களின் வ்யாக்யானங்களை
அநுஸரித்து,
வில்லவரம்பல் குப்புஸ்வாமி அய்யரவர்களால்
இயற்றப்பட்ட
'கீதார்த்த தீபிகை'
எனும் தமிழ் அனுவாதத்தைத் தழுவிய
தமிழ் உரையுடன் கூடியது

தொகுத்தவர் :

அ. குப்புஸ்வாமி

கும்பகோணம் சாரதா விலாஸ அச்சகத்தில்
அச்சிடப்பட்டது.

2-பாகங்களும் விலை ரூ. 10] [1974

19-3

எட்டாவது அத்யாயம்

அக்ஷரபரப்ரஹ்மயோகம்

अर्जुन उवाच

किं तद्ब्रह्म किमध्यात्मं किं कर्म पुरुषोत्तम ।
अधिभूतं च किं प्रोक्तमधिदैवं किमुच्यते ॥ १

अधियज्ञः कथं कोऽत्र देहेऽस्मिन् मधुसूदन ।
प्रयाणकाले च कथं ज्ञेयोऽसि नियतात्मभिः ॥ २

அர்ஜுன உவாச

கிம் தத்ப்ரஹ்ம கிமத்யாத்மம் கிம் கர்ம புருஷோத்தம ।
அதிபூதம் ச கிம் ப்ரோக்தமதிதைவம் கிமுச்யதே ॥ 1

அதியக்ஞ: கதம் கோஅத்ர தேஹேஅஸ்மின் மதுஸூதன ।
ப்ரயாணகாலே ச கதம் ஞேயோஅஸி நியதாத்மபி: ॥ 2

ஓ புருஷோத்தமா! முன் சொன்ன ப்ரஹ்மம் என்பது யாது? அத்யாத்மமமென்பது யாது? கர்மமென்பது யாது? அதிபூதமென்றுல் என்ன? அதிதெய்வமென்றுல் என்ன? ஓ மதுஸூதனு! இந்த உடலுள்ளிருக்கும், பலனைத் தரும், ஏவுகிறவருமான அதியக்ஞன் யார்? எத்தகையவர்? மரண காலத்தில் மனதை அடக்கியவர்களால் எப்படி அறிந்துகொள்ளத்தக்கவராகின்றீர்?

[ஸ்ரீ ராமானுஜர்— ப்ரக்ருதியிலிருந்து விடுபட்டு ஆத்ம தர்சனத்தின் பொருட்டு முயல்பவர், அறியவேண்டிய ப்ரஹ்மம், அத்யாத்மம், கர்மம் ஆகியவை எத்தகையன? ஐச்வர்யத்தை வேண்டுவோர் அறிய முயலும் அதிபூதம், அதிதெய்வம் எத்தகையன? முன் அத்யாயத்தில் குறிக்கப்பட்ட மூவகையினரும் அறியவேண்டிய அதியக்ஞன்

யார்? அவர் சுபாவம் எப்படிப்பட்டது? இம்மூவகைய ராலும், மரண காலத்தில் நீர் எப்படி அறியப்படவேண்டி யவர்? (இது கேள்வியின் கருத்து)

ஸ்ரீ ராகவேந்த்ரர்:— முதல் ச்லோகம் ஸ்வரூபத்தைப் பற்றிய கேள்விகளைக்கொண்டது. இரண்டாவது தர்மத் தைப் பற்றிய கேள்விகளைக்கொண்டது.]

श्रीभगवान् उवाच

अक्षरं ब्रह्म परमं स्वभावोऽध्यात्ममुच्यते ।
भूतभावोद्भवकरो विसर्गः कर्मसंज्ञितः ॥ ३

ஸ்ரீபகவான் உவாச

அக்ஷரம் ப்ரஹ்ம பரமம் ஸ்வபாவோஅத்யாத்மமுச்யதே ।
பூதபாவோத்பவகரோ விஸர்க: கர்மஸம்ஜ்ஞித: ॥

ஸ்ரீ பகவான் சொல்வது:—

மேலானதும், அழிவற்றதுமான பொருள் ப்ரஹ்மம். ஜீவ ஸ்வபாவம் அத்யாத்மம், பூதங்களான பொருள் களின் உற்பத்தியைச் செய்கிற யக்ஞத்தில் அர்ப்பணித் தல் கர்மமெனப்படும்.

[ஸ்ரீ சங்கரர்:— स्वभाव: (ஸ்வபாவ:) ப்ரஹ்மத்தின் இருப்பு அதாவது— ப்ரஹ்மம் உடலில் ஜீவஸ்வரூபமாய் விளங்குவதே. இப்படி விளங்கும் ஜீவஸ்வரூபமே அத் யாத்மம். உடலை இருப்பிடமாகக்கொண்டது எதுவோ அந்த ஜீவஸ்வரூபமே அத்யாத்மம்

ஸ்ரீதரர்:— स्वभाव: (ஸ்வபாவ:)=உடலை அண்டி அல் லது அனுஸரித்தும், நான் செய்கிறேன், நான் அனுபவிக் கிறேன், முதலிய பற்றுதலைக் கொண்டும், விளங்கும் ப்ரஹ்மத்தின் அம்சமாகிய ஜீவஸ்வரூபம் ஸ்வபாவம். அதே அத்யாத்மம். பொருள்களின் தோற்றம், வளர்ச்சி

இவைகளை உண்டாக்கும் தேவதைகளை உத்தேசித்து மந்திரங்கள் ஓதி வேள்வியில் (யக்ஞத்தில்) அர்ப்பணிக்கப்படுபவை கர்மம்.

ஸ்ரீ ராமானுஜர்:— अक्षरम् (அக்ஷரம்)=அழிவற்ற க்ஷேத்ரஞ ஸமஷ்டி ரூபமான परमं (பரமம்) = ப்ரக்ருதி விமுக்தாத்ம ஸ்வரூபம், ब्रह्म (ப்ரஹ்ம) ப்ரஹ்மமெனப்படுகிறது. (முக்தஜீவஸ்வரூபம்). स्वभाव: (ஸ்வபாவ:)= ப்ரக்ருதி, அதாவது ஆத்மாவல்லாததும், ஆத்மாவையொட்டியுள்ள பூதஸூக்ஷ்மம் முதலியவை. இதுதான் அத்யாத்மம். भूतभावोद्भवकरो विसर्ग: कर्मसंज्ञित: (பூதபாவோத்பவகரோ விஸர்க: கர்மஸம்ஞித:)=மனிதன், விலங்கு, பக்ஷி முதலியவற்றை உற்பத்தி செய்கிற, ஆணின் தொடர்பாலுண்டாகும் விந்து வெளிப்படுதல் கர்மமெனப்படும். இம் மூன்றும் மோக்ஷத்தில் விருப்பமுள்ளவர்களறிந்து கொள்ளச் சொல்லப்பட்டது, ஏனெனில் முதலில் சொன்ன முக்த ஜீவஸ்வரூபத்தையடையவும் பின் சொன்ன இரண்டையும் (அத்யாத்மம், கர்மம்) விடவும் வேண்டுமென்பதை அவர்கள் அறியவேண்டியது.
ஸ்ரீ மத்வர், ஸ்ரீ ராகவேந்த்ரர்:— மேலான, அழிவற்ற விஷ்ணுவே ப்ரஹ்மம். ஜீவனைச் சேர்ந்த வஸ்து ஸ்வபாவம். அதாவது அவனுக்குதவியாகவுள்ள உடல், புலன்கள், மனம் முதலியன. இதுதான் அத்யாத்மம். அல்லது ஜீவனுடைய நிலையான இருப்பே ஸ்வபாவம். அதுதான் அத்யாத்மம். உயிருள்ளவற்றையும், உயிரற்றவைகளையும் உண்டாக்கும் ஈச்வரனின் படைப்பு கர்மமெனப்படுகிறது]

अधिभूतं क्षरो भावः पुरुषश्चाधिदैवतम् ।
अधियज्ञोऽहमेवात्र देहे देहभृतां वर ॥ ४

அதிபூதம் க்ஷரோ பாவ: புருஷஸ்சாதிதைவதம் ।
அதியக்ஞோஅஹமேவாத்ர தேஹே தேஹப்ருதாம் வர ॥ 4

உடலுடையவர்களுள் மேலோனே, அர்ஜுனா! அழிவடையத்தக்க பொருள்கள் அதிபூதமென்றும், விராட் புருஷனே (உலகங்கள் யாவும் வியாபித்துள்ளவன்) அதி தெய்வமென்றும் சொல்லப்படுகிறது. இவ்வுடலில் அந்தர்யாமியாக (ஊடுருவி மறைந்திருக்கும்) இருக்கும் நானே அதியக்ஞன்.

क्षर: भाव: अधिभूतम् (க்ஷர: பாவ: அதிபூதம்) = (1) பிறப்பு இறப்புள்ளவை எல்லாம் அதிபூதம்-ஸ்ரீசங்கரர், ஸ்ரீ ராகவேந்த்ரர், (2) அழியக்கூடிய உடல் முதலியன அதிபூதம்-ஸ்ரீதரர், (3) ஐச்வர்யத்தை வேண்டும் மக்களால் அறியவேண்டியதாகச் சொல்லப்பட்ட அதிபூதம்,அழியத் தக்கதாயும் ஐம்மாபெரும் பூதங்களிலுள்ளதாயும், அப் பூதங்களாலுண்டானதாயும் இருக்கும் ஸ்தூல சப்த ஸ்பர் சாதிகள் (கண்ணுக்கு புலன்படும், கேட்கப்படும். உணரப் படும் பொருள்கள்) – ஸ்ரீ ராமானுஜர், (4) அழியக்கூடிய எல்லாப் பொருள்களும் அதிபூதம்; ஏனெனில் அவை ஜீவனைச் சேர்ந்தவை. ஜீவனுக்கு உபயோகமில்லாத பொருள் ஒன்றுமில்லை எனக் கருத்து – ஸ்ரீ மத்வர்.

पुरुषश्च अधिदैवतम् (புருஷஸ்ச அதிதைவதம்) = (1) ஸூர்ய மண்டலத்திலிருப்பவனும், இந்திரன் முதலியோரை ஏவு பவனாகவுமுள்ள ஹிரண்ய கர்பனே அதிதெய்வம்— ஸ்ரீ சங்கரர், (2) ஸூர்யமண்டலத்திலுள்ளவனும், தன் அம்சங்களாகிய தேவதைகளுக்கு அதிபனாகவுமுள்ள விராட்புருஷன் (பிரம்மா) அதிதைவதம்— ஸ்ரீதரர். (3) பிரம்மா முதலிய தேவதைகளுக்கு மேற்பட்டவனும் அவர்கள் அனுபவிப்பதைக்காட்டிலும் விசேஷமான விஷயங்களை அனுபவிக்கிற புருஷன்— ஸ்ரீ ராமானுஜர். (4) இந்த்ரன் முதலிய தேவதைகளுக்கதிபனான பிரம் மாவே அதிதைவதம் அல்லது ஜீவாபிமானியான ஸங்கர் ஷண மூர்த்தியே அதிதைவதம்.— ஸ்ரீ மத்வர், ஸ்ரீ ராக வேந்த்ரர்.

अहमेव अधियज्ञ: (அஹமேவ அதியக்ஞ:) = (1) தேஹங் களால் நடத்தப்படும் யக்ஞங்களுக்கு அபிமானியான

விஷ்ணு, அதியக்ஞன், அவனே நான்— ஸ்ரீ சங்கரர், (2) தேஹத்தில் உள்ளிருந்து புலப்படாமலிருந்துகொண்டு யக்ஞத்தில் மனம் கொள்ளும்படி ஏவுகிறவனுகவும், பயனையளிப்பவனுகவும் இருக்கும் நானே அதியக்ஞன்— ஸ்ரீதரர், (3) இந்த்ரன் முதலியோருக்குச் சரீரியாகவும் (உடலாகவும்) எல்லா யக்ஞங்களாலும் ஆராதிக்கப்படுகிறவனுகவுமான நானே அதியக்ஞன்— ஸ்ரீ ராமானுஜர், (4) எல்லா உடல்களிலும் உள்ளே ஊடுருவி நிற்கும் நான் யக்ஞ பலனை உண்பவனுனதால் நானே அதியக்ஞன். அக்ஷரம் ப்ரஹ்மபரம் (ச்லோகம்-3ல்) என்று சொல்லப்பட்ட பரமாத்மா— ஸ்ரீமத்வர், ஸ்ரீ ராகவேந்த்ரர்.]

अन्तकाले च मामेव स्मरन्मुक्त्वा कलेवरम् ।
यः प्रयाति स मद्भावं याति नास्त्यत्र संशयः ॥ ५

அந்தகாலே ச மாமேவ ஸ்மரன்முக்த்வா கலேவரம் ।
ய: ப்ரயாதி ஸ மத்பாவம் யாதி நாஸ்த்யத்ர ஸம்சய: ॥ 5

எவன் தன் வாழ்நாளின் முடிவில் (மரண காலத்தில்) என்னையே எண்ணிக்கொண்டு உடலை விட்டுப் போகிருனே அவன் என் ஸ்வரூபத்தை அடைகிருன் என்பதில் ஐயமில்லை. मामेव (மாமேவ)=(1) அந்தர்யாமியாகவுள்ள பரமேச்வரனுன என்னையே (ஸ்ரீதரர்), (2) பரமேச்வரனும் விஷ்ணுவாகவுமுள்ள என்னையே (ஸ்ரீ சங்கரர்).

मद्भावम् (மத்பாவம்)=(1) வியாபகமான விஷ்ணு ஸ்வரூபத்தை (ஸ்ரீ சங்கரர்), (2) என்னை எந்த உருவத்தில் நினைக்கிருனே அந்த உருவத்தை (ஸ்ரீ ராமானுஜர்), (3) என்னிடத்தில் முடிவிலா நித்யமான இருப்பை (ஸ்ரீ மத்வர், ஸ்ரீ ராகவேந்த்ரர்]

यं यं वापि स्मरन्भावं त्यजत्यन्ते कलेवरम् ।
तं तमेवैति कौन्तेय सदा तद्भावभावितः ॥ ६

யம் யம் வாபி ஸ்மரன்பாவம் த்யஜத்யந்தே கலேவரம் ।
தம் தமேவைதி கௌந்தேய ஸதா தத்பாவ பாவித: ॥ 6

ஓ குந்தியின் மகனே! எவன் தன் இறுதிக்காலத்தில் எவ்வெந்த உருவத்தை நினைக்கின்றவனாக உடலை விடுகிறானோ, அவன் எப்போதும் அந்தந்த உருவத்தின் நினைவோடு கூடியவனாக இருந்தபடியால் அந்தந்த உருவத்தையே அடைகிறான்.

[ஸ்ரீதரர் :— எவன் மரண காலத்தில் ஈச்வரனை நினையாது, மனிதன், விலங்கு முதலிய எந்த உருவத்தை மனதில் நினைக்கிறானோ, அதே விதமான உடலைத்தான் அடுத்த பிறவியிலடைகிறான். இதே மாதிரிதான் ஸ்ரீராகவேந்த்ரரும் கருதுகிறார்.

குறிப்பு:— சாகும் தருவாயில் மானைப்பற்றி எண்ணிய ஜடபரதர் மானின் பிறவியை அடைந்தது இதற்கு உதாரணம். (விஷ்ணு புராணம் அம்சம்-2., 13-வது அத். 32, 33-ச்லோகங்கள்). பரமாத்மஸ்மரணை மரண காலத்தில் ஒருவனுக்கு ஏற்படவேண்டுமானால் எக்காலத்திலும் பகவத் ஸமரணை செய்த பழக்கமிருக்கவேண்டும். மரண காலத்தில் பரமாத்மஸ்மரணை ஏற்படுகிறவனுக்கு மறுபிறவி கிடையாதாகையால் மோக்ஷமடைய விரும்புபவன் எப்போதும் பரமாத்மாவை நினைத்துக்கொண்டே இருக்க வேண்டும்.]

तस्मात्सर्वेषु कालेषु मामनुस्मर युध्य च ।
मय्यर्पितमनोबुद्धिर्मामेवैष्यस्यसंशयः ॥ ७

தஸ்மாத்ஸர்வேஷு காலேஷு மாமனுஸ்மர யுத்ய ச ।
மய்யர்பிதமனோபுத்திர்மா மேவைஷ்யஸ்யஸம்சய: ॥ 7

(என்னிடம் எப்போதும் மனம் வைப்பவன் மரண காலத்தில் என்னிடம் மனமுள்ளவனாக இருப்பான்). ஆகையால் எப்போதும் என்னையே நினைத்துக்கொண்டிரு.

போரும் செய். என்னிடம் மனம், புத்தி இவைகளை வைத்தவனாகவானால் என்னையே அடைவாய், ஐயமில்லை.

[ஸ்ரீ ராமானுஜர் :— பகவானிடம் எப்போதும் மனத்தை வைத்திரு என்பதினால் இனி போர் செய்யத் தேவையில்லை என அர்ஜுனன் எண்ணுதிருக்க, "நீ என்னை நினைத்துக்கொண்டே போர் செய்" என்று பகவான் சொல்கிறார். "போர் செய்துகொண்டே வெற்றி, தோல்விகளில் மனதை வைக்காது, ஈச்வர்ய கைங்கர்யமாக எண்ணி யுத்தம் செய்," என்று கருத்து.]

अभ्यासयोगयुक्तेन चेतसा नान्यगामिना ।
परमं पुरुषं दिव्यं याति पार्थानुचिन्तयन् ॥ ८

அப்யாஸயோகயுக்தேன சேதஸா நான்யகாமினா ।
பரமம் புருஷம் திவ்யம் யாதி பார்தானுசிந்தயன் ॥

ஓ பார்த்தா! அப்யாஸம் (பயிற்சி, பழக்கம்) எனும் உபாயத்தோடு கூடிய பிற விஷயங்களில ஈடுபாடில் லாததுமான மனதினால் ப்ரகாசமான பரமபுருஷனை(ப்ரஹ் மத்தை) தியானிக்கிறவன், அந்த ப்ரஹ்மத்தையே அடை கிறான்.

अभ्यासयोगयुक्तेन (அப்யாஸயோகயுக்தேன)= (1) முத லில் எதைத் தியானஞ் செய்யத் தொடங்கினாலே அதையே விடாது தியானிப்பது அப்யாஸம் இதுவே அதை அடைய உபாயமாகும். (ஸ்ரீதரர், ஸ்ரீ சங்கரர்) (2) நித்யநைமித்திக கர்மானுஷ்டானங்களுக்கு விரோத மின்றி, தான் நினைத்துக்கொண்டிருக்கும் மூர்த்தியைத் தியானம் செய்ய மனதைப் பழக்குவது அப்யாஸம். அந்த மூர்த்தித் தியானமே யோகம். (ஸ்ரீராமானுஜர்)

दिव्यम् (திவ்யம்)= ஸூர்ய மண்டல மத்தியிலிருப்பவ ரான. (ஸ்ரீ சங்கரர்) இந்த ச்லோகத்தின் இரண்டாம் பாதிக்கு ஸ்ரீராமானுஜர் தரும் விளக்கம் :— "நாராயண னாகிய என்னை, இறுதிக்காலத்தில் நினைப்பவன், எனக்குச் சமமான உருவத்தை அடைகிறான்.]

कविं पुराणं अनुशासितारं अणोरणीयांसमनुस्मरेद्यः ।
सर्वस्य धातारमचिन्त्यरूपं आदित्यवर्णं तमसः परस्तात् ॥ ९

கவிம் புராணம் அனுசாஸிதாரம் அணோரணீயாம்
ஸமனுஸ்மரேத்ய: I
ஸர்வஸ்ய தாதாரமசிந்த்யரூபம் ஆதித்யவர்ணம தமஸ:
பரஸ்தாத் II 9

प्रयाणकाले मनसाऽचलेन भक्त्या युक्तो योगबलेन चैव ।
भ्रुवोर्मध्ये प्राणमावेश्य सम्यक् स तं परं पुरुषमुपैति दिव्यम् ॥

ப்ரயாணகாலே மனஸாஅசலேன பக்த்யா யுக்தோ
யோகபலேன சைவ I
ப்ருவோர்மத்யே ப்ராணமாவேச்ய ஸம்யக் ஸ தம் பரம்
புருஷமுபைதி திவ்யம் II 10

நிலையான மனதோடும், பக்தியோடும், த்யான வலிமையுடனும், கூடினவனாக மரண காலத்தில், ப்ராண வாயுவை, புருவங்களின் நடுவே செவ்வனே நிறுத்தி, எல்லாமறிந்த அநாதிகாலமாக இருக்கிற, எல்லாவற்றையும் இயக்கும், அணுவில் அணுவாகவும், எல்லா ப்ரபஞ்சத்திற்கும் காப்பானாகவும், நினைத்துப் பார்க்கமுடியாத உருவமுடையவனாகவும், ஸூர்யனையொத்த ஒளி வீசுபவனும், மாயையைக் கடந்தவனுமாகவுமுள்ள பரமபுருஷனை (பரமாத்மாவை). இடைவிடாது எவன் நினைக்கிறானோ, (தியானம் செய்கிறானோ) அவன் திவ்யமான அந்த பரமாத்மாவை அடைகிறான்.

[सम्यक् (ஸம்யக்) = ஜாக்ரதையாக — ஸ்ரீ சங்கரர்.

अनुशासितारम (அனுசாஸிதாரம்) = எல்லா உலகின் நியாமகன் — ஸ்ரீ சங்கரர், ஸ்ரீ ராகவேந்த்ரர்.

अणीयांसम् (அணீயாம்ஸம்) = ஜீவனைக்காட்டிலும் அணுவாயுள்ளவன் — ஸ்ரீ ராமானுஜர்.

सर्वस्य धातारम् (ஸர்வஸ்ய தாதாரம்) = (1) எல்லா கர்மங்களின் பயனைப் பகிர்ந்துகொடுப்பவன்—ஸ்ரீ சங்கரர், (2) எல்லா ப்ரபஞ்சங்களையும் படைப்பவன் — ஸ்ரீ ராமானுஜர், (3) எல்லா ப்ரபஞ்சங்களையும் தாங்கிப் போஷிக்கிறவன் — ஸ்ரீ ராகவேந்த்ரர்.

आदित्यवर्णम् (ஆதித்யவர்ணம்) = அப்ராக்ருத, ஸ்வாபாவிக, அஸாதாரண திவ்ய ரூபமுடையவன்.

तमस: परस्तात् (தமஸ: பரஸ்தாத்) = (1) மோஹ இருளில் அகப்படாதவன் (ஸ்ரீ சங்கரர்), (2) மாயையை அல்லது ம்ருத்யுவைக் கடந்தவன் (ஸ்ரீ ராகவேந்தரர்)

परं पुरुषमुपैति (பரம் புருஷமுபைதி) = பரம புருஷனின் ஐச்வர்யத்தையொத்த ஐச்வர்யத்துடன் கூடிய உருவை அடைகிருன். (ஸ்ரீ ராமானுஜர்)

குறிப்பு: இவ்விரண்டு ச்லோகங்களில் பரப்ரஹ்மத்தைத் தியானிக்கத் தொடங்கும் முறை விவரிக்கப்படுகிறது. குறிப்பான ரூபம் பரமாத்மாவுக்குச் சொல்லக்கூடாது. எனவே இச்லோகங்களில் கூறப்பட்டபடி ப்ரஹ்மத்தின் குணங்களை தியானிக்கவேண்டுமென்பது கருத்து.]

यदक्षरं वेदविदो वदन्ति विशन्ति यद्यतयो वीतरागाः ।
यदिच्छन्तो ब्रह्मचर्यं चरन्ति तत्ते पदं संग्रहेण प्रवक्ष्ये ॥ ११

யதக்ஷரம் வேதவிதோ வதந்தி விசந்தி யத்யதயோ
வீதராகா: ।
யதிச்சந்தோ ப்ராஹ்மசர்யம் சரந்தி தத்தே பதம்
ஸம்க்ரஹேண ப்ரவக்ஷ்யே ॥ 11

வேதத்தின் பொருளை அறிந்தவர்கள், எதை அழிவற்றதெனச் சொல்கின்ருர்களோ, காம க்ரோதங்களை (ஆசை, கோபம்) விட்டிருக்கும் ஸன்யாஸிகள் எதை அடைகின்ருர்களோ, எதை அறிய விரும்பி ப்ரஹ்மசர்ய விரதத்தைக்

கடைப்பிடிக்கிறார்களோ அதை (அது எத்தகையது என்பதை) சுருக்கமாக உனக்குச் சொல்கிறேன்.

अक्षरम् (அக்ஷரம்)=ஸ்தூல ஸூக்ஷ்ம உருவங்களற்றதாக (ஸ்ரீ ராமானுஜர்)

तत् पदम् (தத்பதம்)=(1) மனதால் அறியத்தக்க என் ஸ்வரூபத்தை (ஸ்ரீ ராமானுஜர்), 2. என் ஸ்வரூபத்தை—ஸ்ரீ மத்வர்]

सर्वद्वाराणि संयम्य मनो हृदि निरुध्य च ।
मूर्ध्न्याधायात्मनः प्राणमास्थितो योगधारणाम् ॥ १२

ஸர்வத்வாராணி ஸம்யம்ய மனோ ஹ்ருதி நிருத்ய ச l
மூர்தன்யாதாயாத்மன: ப்ராணமாஸ்திதோ யோகதாரணாம் ll

ओमित्येकाक्षरं ब्रह्म व्याहरन् मामनुस्मरन् ।
यः प्रयाति त्यजन्देहं स याति परमां गतिम् ॥ १३

ஓமித்யேகாக்ஷரம் ப்ரஹ்ம வ்யாஹரன் மாமனுஸ்மரன் l
ய: ப்ரயாதி த்யஜந்தேஹம் ஸ யாதி பரமாம் கதிம் ll 13

எவன் தனது எல்லாப் புலன்களின் த்வாரங்களை (புலன்களை) அடக்கி, மனதை ஹ்ருதயத்தில் நிறுத்தி, தலையில் ப்ராண வாயுவை வைத்து, நிலையான யோகாப்யாஸத்தை அடைந்து, ப்ரஹ்மத்தைச் சொல்லும் 'ஓம்'. எனும் ஓரெழுத்தை உச்சரித்து என்னை (ப்ரஹ்மத்தை) இடைவிடாது நினைத்துக்கொண்டு, பூத உடலை விடுகிறானோ (மரணமடைகிறானோ) அவன் மேலான நற்கதியை அடைகிறான்.

[सर्वद्वाराणि (ஸர்வத்வாராணி) = (1) அறிவுப் புலன்களை (ஸ்ரீ ராமானுஜர்), (2) ஸுஷும்ன நாடி தவிர மற்ற நாடிகளை (ஸ்ரீ ராகவேந்த்ரர்).

हृदि (ஹ்ருதி) = ஹ்ருதயத்திலுள்ள என்னிடத்தில் (ஸ்ரீ ராமானுஜர், ஸ்ரீ மத்வர், ஸ்ரீ ராகவேந்த்ரர்)

मूर्ध्नि (மூர்த்னி)=(1) புருவங்களின் மத்தியில் (ஸ்ரீதரர்), பரஹ்மரந்த்ரத்தில் (ஸ்ரீ ராகவேந்த்ரர்)

योगधारणाम् (யோகதாரணும்) அகண்ட த்யானம் (ஸ்ரீ ராமானுஜர், ஸ்ரீ ராகவேந்த்ரர்).

परमां गतिम् =ப்ரக்ருதியினின்று விடுபட்டு. எனக்குச் சமமான உருவமுடையதை, மறுபிறவியற்ற ஆன்மாவை (ஸ்ரீ ராமானுஜர்)

अनन्यचेताः सततं यो मां स्मरति नित्यशः ।
तस्याहं सुलभः पार्थ नित्ययुक्तस्य योगिनः ॥ १४

அனன்யசேதா: ஸததம் யோ மாம் ஸ்மரதி நித்யச: ।
தஸ்யாஹம் ஸுலப: பார்த நித்யயுக்தஸ்ய யோகின: ॥ 14

ஓ அர்ஜுனு ! எப்போதும் வேறு பற்றில்லாது, எவன் என்னையே அன்ருடம் நினைக்கிருனே அப்படிப்பட்ட நிலையான மனதையுடைய யோகிக்கு அதிக முயற்சியின்றி நான் சுலபமாக அடையத்தகுந்தவன்.

[இதுவரை ஐச்வர்யம், விடுபட்ட ஆத்ம ஸ்வரூபம் ஆகியவற்றை விரும்பியவர்களுக்கு உபாஸனு மார்க்கம் சொல்லப்பட்டு இப்போது இச்லோகத்தினுல் ஞானியைப் பற்றி சொல்லப்படுகிறது.— ஸ்ரீ ராமானுஜர்]

मामुपेत्य पुनर्जन्म दुःखालयमशाश्वतम् ।
नाप्नुवन्ति महात्मानः संसिद्धिं परमां गतिम् ॥ १५

மாமுபேத்ய புனர்ஜன்ம து:காலயமசாச்வதம் ।
நாப்னுவந்தி மஹாத்மான: ஸம்ஸித்திம் பரமாம் கதிம் ॥ 15

மேம்பட்ட மோக்ஷத்தையடைந்த மஹான்கள், அப்படி என்னை அடைந்தபின், துயரங்களுக்கு இருப்பிடமும் நிலையற்றதுமான பிறவியை அடைகிறதில்லை.

[இந்த ச்லோகத்தினுல் மோக்ஷம் வேறு நான் (பகவான்) ப்ரஹ்மம் வேறு என்றும் தோன்றலாம். அப்படியல்ல. ப்ரஹ்மத்தையடைவதுதான் மோக்ஷம். "மோக்ஷமடைந்தவன் என்னை அடைந்தவனுகிருன்" என்று சொன்னதாகக் கொள்ளவேண்டும். விரிவுரை செய்துள்ள ஆசார்ய புருஷர்கள், "என்னையடைந்தபின் பிறப்படைகிறதில்லை. ஏனெனில் ச்ரேஷ்டமான மோக்ஷத்தை அடைந்தவர்களானதினுல்தான்" என்று பொருள் கூறியுள்ளனர். இதனுலும் முன் அத்யாயத்தில் சொல்லப்பட்டதிலிருந்தும் ப்ரஹ்மம்தான் மோக்ஷம் என்பது தெளிவு]

आब्रह्म भुवनाल्लोके पुनरावर्तिनोऽर्जुन ।
मामुपेत्य तु कौन्तेय पुनर्जन्म न विद्यते ॥ १६

ஆப்ரஹ்ம புவனுல்லோகே புனராவர்திர்னேஅர்ஜுன 1
மாமுபேத்ய து கௌந்தேய புனர்ஜன்ம ந வித்யதே 11 16

ஓ அர்ஜுன! பிரம்மலோகம் முதலான எல்லா உலகங்களும் மறுபடி உற்பத்தியை உடையன. ஓ குந்தியின் மகனே! என்னை அடைந்தாலோ மறுபிறவி கிடையாது.

[ஸ்ரீதரர்:— பிரம்மலோகத்தை முக்திக்கு வழியாகக் கொண்ட கிரமமுக்தியடையக்கூடியோருக்கு மறுபிறவி கிடையாது. அவர்களுக்கு மறுபிறவி சொல்லப்பட்டதாக எண்ணக்கூடாது.

ஸ்ரீ ராகவேந்த்ரர்:— பிரம்மலோகத்திற்கு கீழுள்ள உலகங்களுக்கும், அவ்விடத்து மக்களுக்கும் மறுபிறவி உண்டு. இப்படிச் சொல்வதால் பிரம்மலோகத்திலுள்ளோருக்கு மறுபிறவி இல்லை எனப்படும். "என்னை

அடைந்தவர்கட்கு மறுபிறவி இல்லை" என்று சொல்லியிருப்பதால் பிரம்மலோகத்திலுள்ளவர்களுக்கு மறுபிறவியுண்டெனத் தோன்றும். இது முறண்பாடாகக்கூடத் தோன்றும். "பிரம்மலோகத்திலுள்ள என்னை உபாஸிக்கிறவர்களுக்கு மறுபிறப்பில்லை" என்பது கருத்து. மற்றவர்களுக்கு அம்சமான பிறவியுண்டு.

குறிப்பு :— கிரமமுக்திக்குத் தகுதியற்றவர்கள், பிரம்மலோகத்தையோ, பிற எந்த உலகையோ அடைந்தாலும் மறுபடி பிறவி எய்துவர். மேலும் அந்த உலகமும் அழிவடையத்தக்கதே. அழிவடையக்கூடிய உலகையே புருஷார்த்தமாக எண்ணி அடைந்தவர்களும் அழிவடையத்தக்கவர்களே. எனவே மோக்ஷமடைந்தாலன்றி மறுபிறவி விடாது]

सहस्रयुगपर्यन्तमहर्यत् ब्रह्मणो विदुः ।
रात्रिं युगसहस्रान्तां तेऽहोरात्रविदो जनाः ॥ १७

ஸஹஸ்ரயுகபர்யந்தமஹர்யத் ப்ரஹ்மணோ விது: I
ராத்ரிம் யுகஸஹஸ்ராந்தாம் தேஅஹோராத்ரவிதோ ஜனா: II

பிரம்மாவுக்கு ஆயிரம் யுகங்கள் பகலென்றும், ஆயிரம் யுகங்கள் இரவென்றும் எந்த ஜனங்கள் அறிந்தவர்களோ அவர்களே இரவு பகல்களை அறிந்தவர்களாவர்.

[ஸ்ரீதரர் :— பிரம்மலோகம் வெகு காலம் நீடித்திருக்கிறதென்பதையும், மேம்பட்டதென்பதையும் தெரிவிக்கிறது இந்த ச்லோகம். ஆயிரம் யுகங்களென்றால் ஆயிரம் சதுர்யுகங்கள் (4 யுகங்கள் கொண்டது) எனப் பொருள்.

ஸ்ரீ சங்கரர் :— பிரம்மலோகங்கூட கால அளவை யுடையதாகையால் கால அளவுள்ளதெல்லாம் அழியத் தக்கவை என்பதைக் காட்டவே இந்த ச்லோகம் ஆரம்பிக்கப்பட்டது.

ஸ்ரீ மத்வர், ஸ்ரீ ராகவேந்த்ரர் :— ब्रह्मण: (ப்ரஹமண:) என்ற சொல்லிற்கு பரப்ரஹ்மத்தின் என்று பொருள்.

பரப்ரஹ்மத்திற்கு இப்படி அநேக ஆயிரம் சதுர்யுகங்கள் ஒரு பகலாகவும், அநேக ஆயிரம் சதுர்யுகங்கள் ஒரு இரவாகவும் அறிந்தவர்கள், இரவு பகலை அறிந்தவர்கள் என்றால் பிரம்மலோகம் முதல் அதற்குக் கீழ்பட்ட எல்லா உலகங்களும் பிரளயத்தில் மூழ்கும் காலயாகிய மஹா விஷ்ணுவின் யோகநித்ரை காலத்தை இரவாகவும், எல்லா உலகும் படைக்கப்படும் காலத்தைப் பகலாகவும் உப சாரமாகச் சொன்னதாகக் கொள்ளவேண்டும்.

குறிப்பு :— மனித வருடங்கள் 255520000000 (இருபத் தையாயிரத்து ஐநூற்றைம்பத்திரண்டு கோடி) கொண்டது பிரம்மாவின் ஆயுள். ஒரு பிரம்மாவின் ஆயுட்காலத்தில் உலகங்கள் 36000 முறை அழிந்து மறுபடி உண்டா கின்றன.

15 கண்ணிமைப்பொழுது = 1 காஷ்டை. 30 காஷ்டை = 1 கலை, 30 கலை = 1 முகூர்த்தம், 30 முகூர்த்தம் = 1 நாள், 15 நாள் = 1 பக்ஷம், 2 பக்ஷம் = 1 மாதம். 2 மாதம் = 1 ருது, 3 ருது = 1 அயனம், 2 அயனம் = 1 மனித வருஷம், 1 மனித வருடம் = 1 தேவ நாள். 360 தேவ நாட்கள் = 1 தேவ வருஷம். 4800 தேவ வருஷங்கள் (1728000 மனித வருஷங்கள்) கொண்டது. க்ருத யுகம், 3600 தே. வ. (1296000 ம. வ.) கொண்டது த்ரேதாயுகம், 2400 தே. வ. (864000 ம. வ.) கொண்டது. த்வாபரயுகம், 1200 தே வ. (432000 ம. வ.) கொண்டது கலியுகம். இப்படி நான்கு யுகங்களும் சேர்ந்தது ஒரு சதுர்யுகம். இத்தகைய சதுர் யுகம் 1000 கொண்டது நான்முக பிரம்மாவிள் ஒரு பகல், சதுர்யுகம் 1000 சேர்ந்து அவருக்கு ஓர் இரவு. இந்தக் கணக்கில் 360 நாள் கொண்டது பிரம்மாவுக்கு ஓர் ஆண்டு இப்படி 100 ஆண்டுகள் கொண்டது ஒரு பிரம்மாவின் ஆயுட்காலம். இந்த ஆயுட்காலமே பரா என்று சொல் லப்படும். இப்படி ஒரு கணக்குமுண்டு.]

अव्यक्ताद्व्यक्तयः सर्वाः प्रभवन्त्यहरागमे ।
रात्र्यागमे प्रलीयन्ते तत्रैवाव्यक्तसंज्ञके ॥ १८

அவ்யக்தாத்வ்யக்தய: ஸர்வா: ப்ரபவந்த்யஹராகமே l
ராத்ர்யாகமே ப்ரலீயந்தே தத்ரைவாவ்யக்தஸம்ஞகே ll 18

பிரம்மாவின் பகற்கால ஆரம்பத்தில், காணப்படாம லிருக்கிற சூக்ஷ்மப்ரக்ருதியிடத்திலிருந்து காணப்படுகிற ஸ்தூல (மானிடக் கண்ணுக்குப் புலப்படும்) ப்ரபஞ்சங்கள் (உலகங்கள்) உண்டாகின்றன. இரவு (ப்ரம்மாவின் இரவு) வரும்போது அப்ரக்ருதியிடத்திலேயே இந்த ஸ்தூலப்ரபஞ்சங்கள் அடங்கிவிடுகின்றன.

अव्यक्तात् (அவ்யக்தாத்)=(1) பிரம்மாவின் தூக்க நிலையிலிருந்து (மாயையிலிருந்து)— ஸ்ரீசங்கரர். (2) நான்முக பிரம்மாவின் உடலிலிருந்து— ஸ்ரீராமானுஜர், (3) விஷ்ணுவினிடமிருந்து— ஸ்ரீ மத்வர்.]

भूतग्रामः स एवायं भूत्वा भूत्वा प्रलीयते ।
रात्र्यागमेऽवशः पार्थ प्रभवत्यहरागमे ॥ १९

பூதக்ராம: ஸ ஏவாயம் பூத்வா பூத்வா ப்ரலீயதே l
ராத்ர்யாகமேஅவச: பார்த ப்ரபவத்யஹராகமே ll 19

ஓ அர்ஜுன! பூதக்கூட்டம் (உயிருள்ளவைகள் யாவும்) பராதீனமாம், பிரம்மாவின் பகலின் ஆரம்பத்தில் உண்டாகி இரவின் தொடக்கத்தில் அடங்குகிறது. அக்கூட்டம் பிறந்து பிறந்து அடங்குகிறது. (உலகங்கள் பிரளய காலத்தில் ஸூக்ஷ்மமாக அடங்கியிருந்து ஸ்ருஷ்டி (படைப்பு) காலத்தில் ஸ்தூலமாக வெளிப்படுகின்றன.)

[ஐச்வர்யத்தை வேண்டி பிரம்மலோகம் முதலிய உலகுகளையடைந்தவர்கள், அந்த லோகமும் அங்குள்ள ஐச்வர்யமும் அழிவை அடைகிறபடியால் மறுபடி பூவுலகில் பிறவி அடைகிறார்கள் எனக் கருத்து. (ஸ்ரீராமானுஜர்)

குறிப்பு:— இந்த அத். 16 முதல் 19 வரையுள்ள ச்லோகங்கள், எல்லா தேவர்களுக்கும் முதல்வனான நான்முக பிரம்மாவுக்கும்கூட கால அளவு உண்டு, பிரும்ம

லோகமும் அழியக்கூடியது என்றும், இதனுல் பிற உலகு களும் பிராணிகளும் எத்தகையது என்பதும் தெளிவு என்றும், எனவே விரக்தியடைந்து அழிவற்ற மோக்ஷத்தை அடைய முயற்சிக்கவேண்டுமென்பதைக் குறிப்பிடுகின்றன.

परस्तस्मात्तु भावोऽन्योऽव्यक्तोऽव्यक्तात्सनातनः ।
यः स सर्वेषु भूतेषु नश्यत्सु न विनश्यति ॥ २०

பரஸ்தஸ்மாத்து பாவோஅன்யோஅவ்யக்தோஅவ்யக்தாத் ஸனுதன: 1
ய: ஸ ஸர்வேஷு பூதேஷு நச்யத்ஸு ந வினச்யதி ll 20

எது ப்ரக்ருதியெனும் அவ்யக்தத்தைக்காட்டிலும் வேருனதாகவும், மேலானதாகவும், காணப்படாததாயும் ஆரம்பமற்றதாகவுமுள்ளதோ அந்த ப்ரஹ்மம் எல்லா ப்ரபஞ்சங்களும் அழிவடையும்போதும் அழிவடைவ தில்லை.

[ஸ்ரீசங்கரர்:— 19ஆம் ச்லோகத்தில் சொல்லப்பட்ட அவ்யக்தம் ப்ரக்ருதி என்றும், இந்த ச்லோகத்தில் சொல் லப்பட்டிருக்கும் அவ்யக்தம் பரப்ரஹ்மமென்றும் அறியப் பாலது. 13 முதல் 18 வரையுள்ள ச்லோகங்களில் அக்ஷர மெனும் ப்ரஹ்மத்தையடைய வழி சொல்லப்பட்டது. பிறகு இதுமுதல் அக்ஷரஸ்வரூபம் சொல்லப்படுகிறது.]

अव्यक्तोऽक्षर इत्युक्तस्तमाहुः परमां गतिम् ।
यं प्राप्य न निवर्तन्ते तद्धाम परमं मम ॥ २१

அவ்யக்தோஅக்ஷர இத்யுக்தஸ்தமாஹு: பரமாம் கதிம் 1
யம் ப்ராப்ய ந நிவர்தந்தே தத்தாம பரமம் மம ll 21

எவர் காணப்படாதவர் என்றும், அழிவற்றவரென் றும்,வேதத்தில் சொல்லப்பட்டிருக்கிருரோ அவரை மனித னின் மேலான பிரயோஜனமாக அவ் வேதங்களே கூறு

கின்றன. எதை அடைந்து ஒருவன் திரும்புகிறதில்லையோ (மறுபடி பிறக்கிறதில்லையோ) அந்த மேலான ஸ்வரூபம் என்னுடையது.

[20, 21, ச்லோகங்களையும் சேர்த்து ஸ்ரீ ராமானுஜரும், ஸ்ரீராகவேந்திரரும் உரை செய்துள்ளனர்.

ஸ்ரீராமானுஜர் :— அந்த அசேதன ப்ருக்ருதியைக் காட்டிலும், (நான்முகனின் உடலைக் காட்டிலும்) உத்தம ப்ரயோஜனமாயும், ஞானமயமானதால் வேருகவும். ஒரு ப்ரமாணத்தாலும் காணப்படாததாகவும், எஞ்ஞான்று முள்ளதாகவுமுள்ள எப்பொருள், கார்ய காரணங்களுடன் கூடிய பஞ்ச பூதங்கள் (பூமி, தண்ணீர், காற்று, நெருப்பு, ஆகாயம்) அழிவடையும்போதும் நாசமடைகிறதில் லையோ, அந்த சேதன ப்ரக்திருயான புருஷன் அழிவற் றவனுகச் சொல்லப்படுகிறுன். அவனே ப்ரக்ருதி விமுக் தாத்மஸ்வரூபமான உயர்ந்த அடையத்தக்கது என வேதமறிந்தவர்கள் சொல்கின்றனர். எந்த ஆத்மஸ்வ ரூபத்தை அடைந்து திரும்புகிறதில்லையோ அந்த ஸ்வ ரூபம் எனக்கு ஏவலுக்கு முக்யமானது,

ஸ்ரீ ராகவேந்த்ரர் :— அந்த பூதக்கூட்டங்களைக் காட் டிலும், வேறுபட்ட, சுதந்திரனுகவும், உத்தமனுகவும், ஆரம்பமற்றவனுகவும் எந்த பகவான், எல்லாப் பூதங் களும் அழிந்தபோதிலும், அழிவதில்லையோ, அவன்தான், அக்ஷரனெனச் சொல்லப்படுகிறுன். அவனே அடைய வேண்டிய மேம்பட்ட இடமென ஞானிகள் சொல் கிறுர்கள் எதை அடைந்து திரும்புகிறதில்லையோ, அது என்னுடைய மிகச் சிறந்த ஸ்வரூபம்.]

पुरुषः स परः पार्थ भक्त्या लभ्यस्त्वनन्यया ।
यस्यान्तः स्थानि भूतानि येन सर्वमिदं ततम् ॥ २२

புருஷ: ஸ பர: பார்த பக்த்யா லப்யஸ்த்வனன்யயா ।
யஸ்யாந்த: ஸ்தானி பூதானி யேன ஸர்வமிதம் ததம் ॥ 22

ஓ பார்த்தா! பிராணிகள் எவனுக்குள் அடங்கியிருக்கின்றனவோ, எவனால் இந்த எல்லா உலகங்களும் வ்யாபிக்கப்பட்டுள்ளனவோ, அந்த பரம புருஷன் (ப்ரஹ்மம்) வேறு பற்றில்லாப் பக்தியினால் அடையத்தக்கவன். [இந்த ச்லோகத்திற்கு ஸ்ரீ ராமானுஜர் பரமாத்மபரமாயும், முன் ச்லோகத்திற்கு முக்தாத்மபரமாயும் பொருள் கூறியுள்ளார்.]

यत्र काले त्वनावृत्तिमावृत्तिं चैव योगिनः ।
प्रयाता यान्ति तं कालं वक्ष्यामि भरतर्षभ ॥ २३

யத்ர காலே த்வனாவ்ருத்திமாவ்ருத்திம் சைவ யோகின: 1
ப்ரயாதா யாந்தி தம் காலம் வக்ஷ்யாமி பரதர்ஷப 11 23

ஓ அர்ஜுனா! எந்தக் காலத்தில் உடலை விட்டுப் போகும் யோகிகள் மறு பிறவி அடையார்களோ, எப்போது உடலை விட்டுப்போன யோகிகள் மறு பிறவி அடைவரோ, அந்தக் காலத்தைச் சொல்கிறேன் (கேள்).

[यत्र काले तु (யத்ர காலே து) = காலாபிமானி தேவதைகள் வசித்துவரும் உலகங்களின் வழியாக — ஸ்ரீதரர், ஸ்ரீ ராமானுஜர், ஸ்ரீமத்வர், ஸ்ரீ ராகவேந்த்ரர்.

योगिनः (யோகின:) = ஞான யோகிகள், கர்மயோகிகள் — ஸ்ரீ சங்கரர், ஸ்ரீதரர், ஸ்ரீ ராமானுஜர்.

तं कालम् (தம் காலம்) = காலாபிமானி தேவதைகள் வசிக்கும் உலகங்களின் வழியை — ஸ்ரீ சங்கரர், ஸ்ரீதரர், ஸ்ரீ ராமானுஜர்.]

अग्निर्ज्योतिरहः शुक्लः षण्मासा उत्तरायणम् ।
तत्र प्रयाता गच्छन्ति ब्रह्मविदो जनाः ॥ २४

அக்னிர்ஜ்யோதிரஹ: சுக்ல: ஷண்மாஸா உத்தராயணம் 1
தத்ர ப்ரயாதா கச்சந்தி ப்ரஹ்மவிதோ ஜனா: 11 24

அக்னிக்கும் (நெருப்பிற்கும்), பிரகாசமான ஒளிக்கும், பகற்காலத்திற்கும், சுக்ல பக்ஷத்திற்கும், ஆறு மாதங்களடங்கிய உத்தராயணத்திற்கும், அபிமானி தேவதைகளுடைய உலகங்களின் வழியே செல்லும் ஞானிகள் பரப்ரஹ்மத்தைக் கிரமமாக அடைகின்றனர்.

[சங்கரர், ஸ்ரீதரர் :— உபாஸகர்கள் கிரமமாக அந்தந்த உலகங்களையடைந்து, பிறகு ப்ரஹ்மத்தை அடைகின்றனர். இவர்கள்தான் க்ரமமுக்தியை அடைந்தவர்கள்]

धूमो रात्रिस्तथा कृष्णः षण्मासा दक्षिणायनम् ।
तत्र चान्द्रमसं ज्योतिर्योगी प्राप्य निवर्तते ॥ २५

தூமோ ராத்ரிஸ்ததா க்ருஷ்ண: ஷண்மாஸா தக்ஷிணாயனம் 1
தத்ர சாந்த்ரமஸம் ஜ்யோதிர்யோகீ ப்ராப்ய நிவர்ததே ll 25

புகைக்கும், இரவுக்கும், க்ருஷ்ண பக்ஷத்திற்கும், தக்ஷிணாயனத்திற்கும், அபிமானியான தேவதைகளின் உலகங்கள் வழியே செல்லும் யோகி சந்த்ர ஒளி வீசும் ஸ்வர்கத்தையடைந்து திரும்புகிறான். (மறு பிறவி எய்துகிறான்)

[ஸ்ரீராமானுஜர் :— இந்த புகை வழியில் பித்ருலோகம் முதலியனவும் சேர்ந்தனவாகக் கொள்க. ஸ்ரீ ராகவேந்த்ரர் :— முந்திய 24 ஆவது ச்லோகத்தில் சொல்லப்பட்ட அர்ச்சிஸ் முதலிய தேவதைகளின் வழியில் போகிறவன் மரண காலத்தில் ப்ரஹ்மத்தை நினைத்தவனாய் உடலை விடும் மோக்ஷத்தை அடையத்தக்கவன். இந்த ச்லோகத்தில் சொல்லப்பட்ட புகை முதலியனவற்றின் வழியே போகிறவன் கர்மயோகியாக இருந்து மரண காலத்தில் ப்ரஹ்மத்தை எண்ணாது உடலைவிடும் ஸ்வர்க்கம் முதலிய உலகங்களை யடையத்தக்கவன்.]

'सद्यो मुक्ति' என்ருல் இந்த பூதஉடல் போனவுடனே ஆத்ம ஸ்வரூபமாகிவிடுவது. இப்படி முக்தியடைபவர் களுக்குப் போகிற வழி என்பதே கிடையாது இருந்த இடத்திலேயே முக்தியை அடைந்து விடுவார்கள். 'क्रम मुक्ति' என்ருல் பயன் கருதா கர்மத்திலீடுபட்ட கர்மயோகிகள் முன் ச்லோகத்தில் (24) சொல்லப்பட்ட அர்ச்சில் முதலிய வழிகளே சென்று கடைசியில் பிரம்மா வின் உலகையடைந்து, அந்தப் பிரம்மா இருக்கும் வரை அங்கு இருந்து, பிறகு அந்தப் பிரம்மா முக்தியடைகிற போது அவருடன்கூட முக்தியடைவது.

பயன்கருதி புண்ய கர்மங்களைச் செய்தவர்கள் இந்த (25) ச்லோகத்தில் சொல்லப்பட்ட புகை முதலியவற்றின் வழியே ஸ்வர்க்கலோகம் வரை சென்று, வழியேயுள்ள அந்தந்த உலகங்களின் ஐச்வர்யம் முதலியவற்றை அனுபவித்து. பிறகு மறு பிறவி எடுக்கின்றனர். பாவச் செயல்களைப் புரிந்தவர் நரகத்தையடைந்து திரும்புகின் றனர். ஸ்வர்க்கத்தையடையத்தக்க புண்ய கர்மங் களையோ, நரகத்தையடைவதற்கான பாவச் செயல் களையோ செய்யாத க்ஷுத்ர கர்மங்களைச் செய்தவர்கள் ஸ்வர்க்கத்தையோ நரகத்தையோ அடைகிறதில்லை. அவரவர்களின் கர்ம பலனுக்குத் தக்கபடி இவ்வுலகிலேயே மறுபடி பிறப்படைகின்றனர் — ஆசிரியர்]

शुक्लकृष्णे गती ह्येते जगतः शाश्वते मते ।
एकया यात्यनावृत्तिमन्ययावर्तते पुनः ॥ २६

சுக்லக்ருஷ்ணே கதீ ஹ்யேதே ஜகத: சாச்வதே மதே 1
ஏகயா யாத்யனுவ்ருத்திமன்யயாவர்ததே புன: ll 26

முன் சொல்லப்பட்ட சுக்ல க்ருஷ்ண பக்ஷங்கள் முதலிய அபிமான தேவதைகளின் உலகுகளாகிய வழிகள் ஞானிகளுக்கும், கர்மிகளுக்கும் தனித்தனியே நிரந்தரமாக வுள்ளனவென்பது என் எண்ணம். முந்திய வழியில்

செல்லும் ஞானிகள் மறுபடி பிறவி எடுப்பதில்லை. பின் வழியில் செல்லும் பயன் கருதும் கர்மயோகிகள் மறு பிறவியை யடைகின்றனர்.

[शुक्ल (சுக்ல)=(1) ஞான ஒளி—ஸ்ரீ சங்கரர், (2) ஒளி யுடையது (ஸ்ரீதரர்) कृष्ण = (1) அறிவின்மை (அஞ் ஞானம்)— ஸ்ரீசங்கரர், (2) இருட்டடைந்த—ஸ்ரீதரர்]

नैते सृती पार्थ जानन्योगी मुह्यति कश्चन ।
तस्मात्सर्वेषु कालेषु योगयुक्तो भवार्जुन ॥ २७

நைதே ஸ்ருதீ பார்த்த ஜானன்யோகீ முஹ்யதி கஸ்சன 1
தஸ்மாத்ஸர்வேஷு காலேஷு யோகயுக்தோ பவார்ஜுன ll

ஓ பார்த்த! இந்த இரண்டு வழிகளையும் அறிந்துள்ள ஞானயோகி ஒருவனும் அஞ்ஞானத்தை(அறியாமையை) அடைகிறதில்லை. ஆகையால் அர்ஜுன! எக்காலத்திலும் ஞானயோகியாகக்கடவாய்! (மறுபிறவி யடையக்கூடிய பயன் கருதிக் கர்மம் செய்யாதே எனக் கருத்து).

குறிப்பு:— न मुह्यति (நமுஹ்யதி) = (1) ஸ்வர்க்கம் முதலிய ஸுகங்களை விரும்பாது பரமேச்வரத் தியானத் தில் நிலைத்து நிற்கிறன்—ஸ்ரீதரர். (2) மரண காலத்தில் பகவானை மறக்கிறதில்லை— ஸ்ரீராகவேந்த்ரர்.

योगयुक्तः (யோகயுக்த:)=(1) ஒளி வீசும் வழிகளில் போகவேண்டுமெனும் எண்ணமாகிய யோகத்துடன் கூடினவன்—ஸ்ரீ ராமானுஜர். (2) பக்தியுடன் ஞானம், கர்மம் இரண்டையும் பின்பற்றுபவன் — ஸ்ரீ ராகவேந்த்ரர்]

वेदेषु यज्ञेषु तपस्सु चैव दानेषु यत्पुण्यफलं प्रदिष्टम् ।
अत्येति तत्सर्वमिदं विदित्वा योगी परं स्थानमुपैति चाद्यम् ॥

வேதேஷு யஞ்ஞேஷு தபஸ்ஸு சைவ தானேஷு
யத்புண்யபலம் ப்ரதிஷ்டம் ।
அத்யேதி தத்ஸர்வமிதம் விதித்வா யோகீ பரம்
ஸ்தானமுபைதி சாத்யம் ॥ 28

வேதங்களிலும், வேள்விகளிலும், தவத்திலும், தானங்களிலும் (கொடையிலும்) எந்தெந்த புண்யபலன் சொல்லப்பட்டுள்ளதோ அந்த எல்லா புண்ய பலனையும், ஞானயோகி அற்பமாக நினைக்கிறான். பின்னும் இதைத் தெரிந்துகொண்டு, எல்லாவற்றிற்கும் மூலகாரணமாகவும், மேலானதுமான இடத்தை அடைகிறான்.

[इदं विदित्वा (இதம் விதித்வா)=(1) இந்த அத்யாயத்திலுள்ள அர்ஜுனனின் ஏழு கேள்விகளுக்குச் சொல்லப்பட்ட பதில்களைத் தெரிந்துகொண்டு— ஸ்ரீ சங்கரர், (2) எட்டுக் கேள்விகளின் பதில்களையறிந்து, அனுஷ்டித்து, ஞானியாகி—ஸ்ரீதரர். (3) கீதையின் ஏழாவது எட்டாவது அத்யாயங்களில் கூறப்பட்ட பகவத் மஹிமைகளை அறிந்து— ஸ்ரீ ராமானுஜர், அத்யாத்மம் முதலியவற்றையும், சுக்ல க்ருஷ்ண வழிகளையும் அறிந்து — ஸ்ரீ ராகவேந்த்ரர்.

परं स्थानम् (பரம் ஸ்தானம்)=(1) ப்ரஹ்மத்தை— ஸ்ரீ சங்கரர், (2) விஷ்ணுவின் பரமபத ஸ்தானத்தை— ஸ்ரீதரர், ஸ்ரீ ராகவேந்த்ரர்]

அக்ஷர பரப்ரஹ்மயோகமெனும் எட்டாவது அத்யாயம்
முற்றிற்று

ஒன்பதாவது அத்யாயம்

ராஜவித்யாராஜகுஹ்யயோகம்

इदं तु गुह्यतमं प्रवक्ष्याम्यनसूयवे ।
ज्ञानं विज्ञानसहितं यज्ज्ञात्वा मोक्ष्यसेऽशुभात् ॥ १

இதம் து குஹ்யதமம் ப்ரவக்ஷ்யாம்யனஸூயவே ।
ஞானம் விஞ்ஞானஸஹிதம் யஜ்ஞாத்வா மோக்ஷ்யஸே
அசுபாத் ॥ 1

எதை அறிவதால் ஸம்ஸாரக்கட்டிலிருந்து விடுபடுவாயோ அந்த மிக ரகஸ்யமான, உபாஸனையுடன் கூடின இந்த ப்ரஹ்மஞானத்தை அசூயையற்ற உனக்கு நன்ருகச் சொல்கிறேன் .

[अशुभात् (அசுபாத்) = என்னையடைய விரோதமாகவுள்ள பாபங்களிலிருந்து —(ஸ்ரீராமானுஜர்)

विज्ञानसहितम् (விஞ்ஞான ஸஹிதம்) = (1) அனுபவ அறிவுடன் கூடிய (ஸ்ரீ சங்கரர்), (2) உபாஸனை செய்ய வேண்டிய முறையின் அறிவுடன் கூடின (ஸ்ரீராமானுஜர்) (3) விசேஷமாக அறியவேண்டியதுடன் கூடிய (ஸ்ரீ ராகவேந்த்ரர்)

इदं ज्ञानम् (இதம்ஞானம்) = (1) இதுவரை சொல்லப்பட்டதும், இனி சொல்லப்போவதுமான ஞானத்தை (ஸ்ரீசங்கரர்), (2) பக்தி ரூபமான உபாஸனை எனும் அறிவை (ஸ்ரீ ராமானுஜர்), (3) இனி சொல்லப்போகும் ஞானத்தை (ஸ்ரீ ராகவேந்த்ரர்)]

राजविद्या राजगुह्यं पवित्रमिदमुत्तमम् ।
प्रत्यक्षावगमं धर्म्यं सुसुखं कर्तुमव्ययम् ॥ २

ராஜவித்யா ராஜகுஹ்யம் பவித்ரமிதமுத்தமம் ।
ப்ரத்யக்ஷாவகமம் தர்ம்யம் ஸுஸுகம் கர்துமவ்யயம் ॥ 2

இந்த ஞானம் (முன் ச்லோகத்தில் சொல்லப்பட்டது) வித்தைகளுள் (அறிவுக்களஞ்சியங்களுள்) மிக மேன்மையானது, ரஹஸ்யங்களுள் மேன்மையானது, பரிசுத்தமானது, பிரத்யக்ஷமாக (நேராக) அறியத்தக்கது, தர்மத்துடன் கூடியது, பின்பற்றவும் எளிது, அழிவற்ற பயனைக் கொடுக்கக்கூடியது.

[प्रत्यक्षावगमम् (ப்ரத்யக்ஷாவகமம்) = ப்ரத்யக்ஷமாக என்னை (பகவானை) காண்பிக்கத்தக்கது (ஸ்ரீ ராமானுஜர், ஸ்ரீமத்வர்).

धर्म्यं (தர்ம்யம்) = (1) மோக்ஷஸாதனம் (ஸ்ரீராமானுஜர்), (2) எல்லா உலகையும் தாங்குவதால், தர்மம் பகவான், பகவத் விஷயமான ஞானமாதலால் தர்ம்யமெனச் சொல்லப்பட்டது. —ஸ்ரீமத்வர், ஸ்ரீராகவேந்த்ரர்].

अश्रद्दधानाः पुरुषा धर्मस्यास्य परंतप ।
अप्राप्य मां निवर्तन्ते मृत्युसंसारवर्त्मनि ॥ ३

அச்ரத்ததானு: புருஷா தர்மஸ்யாஸ்ய பரம்தப ।
அப்ராப்ய மாம் நிவர்தந்தே ம்ருத்யுஸம்ஸாரவர்த்மனி ॥ 3

ஓ அர்ஜுனு! இந்த பக்தியுடன் கூடிய ஞானமாகிற தர்மத்தை நம்பாமலிருக்கும் மனிதர்கள் என்னையடையாது, அழிவுடன்(மரணத்துடன்)கூடிய ஸம்ஸார மார்க்கத்திற்குத் திரும்புகிறுர்கள் (துயரமாகிய பிறவிக்கடலில் மறுபடி பிறக்கின்றனர்).

[धर्मस्यास्य (தர்மஸ்யாஸ்ய) = (1) ஆத்மஞான ஸ்வரூப விஷயத்திலும் அதன் பலன் விஷயத்திலும் (ஸ்ரீ சங்கரர்), (2) இந்த உபாஸனு தர்மத்தில் (ஸ்ரீ ராமானுஜர்)]

मया ततमिदं सर्वं जगदव्यक्तमूर्तिना ।
मत्स्थानि सर्वभूतानि न चाहं तेष्ववस्थितः ॥ ४

மயா ததமிதம் ஸர்வம் ஜகதவ்யக்தமூர்த்திநா ।
மத்ஸ்தானி ஸர்வபூதானி ந சாஹம் தேஷ்வவஸ்தித: ॥ 4

न च मत्स्थानि भूतानि पश्य मे योगमैश्वरम् ।
भूतभृन्न च भूतस्थो ममात्मा भूतभावनः ॥ ५

ந ச மத்ஸ்தானி பூதானி பச்ய மே யோகமைச்வரம் ।
பூதப்ருன்ன ச பூதஸ்தோ மமாத்மா பூதபாவன: ॥ 5

தெரியாத உருவையுடைய நான் இந்த எல்லா உலகங்களையும் வ்யாபித்துள்ளேன். எல்லா பூதங்களும் என்னிடம் அடங்கியுள்ளன. நான் அவைகளிடம் இருப்பதில்லை. என் விநோதமான சக்தியைப் பார். என் ஸ்வரூபம் பூதங்களைத் தாங்கியும், அவைகளை உண்டாக்குகிறதும் அல்லது காப்பதுமாகியபோதிலும், அப்பூதங்களிடத்திலிருப்பதன்று.

[இந்த ச்லோகங்கள் ஒன்றுக்கொன்று முறண்பாடாகத் தோற்றும். ஆனால் உண்மையில் அப்படியில்லை. ப்ருஹ்மம் மாயா சக்தியின்மூலம் ப்ரபஞ்சங்களையும், பூதங்களையும் உண்டாக்கி, காப்பாற்றி அழிக்கின்றது. எனவே ப்ரபஞ்சங்கள் ப்ரஹ்மத்திற்குள்ளாகவேயுள்ளன. நிர்குணமான, அஸங்கமான ப்ருஹ்மஸ்வரூபத்திற்கும் மாயையின் கார்யங்களுக்கும் ஸம்பந்தமில்லையாதலால் பிற பொருள்கள் ப்ரஹ்மத்திடமில்லை, ப்ரஹ்மமும் அவைகளிடத்தே இல்லை.

குறிப்பு: (1) जगत् (ஜகத்) = அசைவுள்ள. அசைவற்ற எல்லா ப்ரபஞ்சமும் (ஸ்ரீ ராமானுஜர், ஸ்ரீ ராகவேந்த்ரர்)

(2) सर्वभूतानि (ஸர்வபூதானி) = சேதன, அசேதனமான எல்லா ப்ரபஞ்சங்கள் (ஸ்ரீ சங்கரர்)

मत्स्थानि (மத்ஸ்தானி) = என்னை ஆத்மாவாகக் கொண்டவை. (ஸ்ரீ சங்கரர்)

(2) ஊடுருவியுள்ள என் அதீனமான நிலையையுடையன. (ஸ்ரீ ராமானுஜர்)

(3) என் ஆதாரத்தின்மீது நிற்கின்றன. (ஸ்ரீ ராகவேந்த்ரர்)

न चाहं तेष्ववस्थितः (ந சாஹம் தேஷ்வவஸ்தித:) = (1) நான் (ஆகாசத்தைப்போல்) அவைகளில் ஒட்டுவதில்லை (ஸ்ரீ சங்கரர், ஸ்ரீதரர்), (2) என் இருப்புக்கு அவை ஆதாரமல்ல (ஸ்ரீ ராமானுஜர்) (3) தண்ணீர் எப்படி பூமியை ஆதாரமாக உடையதோ, அப்படி என் இருப்புக்கு ஆதாரம் தேவையில்லை. (ஸ்ரீமத்வர், ஸ்ரீராகவேந்த்ரர்)

न च मत्स्थानि भूतानि (நச மத்ஸ்தானி பூதானி) = (1) ஜலம் பூமியில் ஒட்டியிருப்பதுபோல் பூதங்கள் என்னிடம் ஒட்டியிருப்பதில்லை (ஸ்ரீ ராமானுஜர்) (2) அப்ராக்ருதனை என்னிடம் ப்ராக்ருதமான பூதங்கள் ஒட்டியிருப்பதில்லை. (ஸ்ரீ ராகவேந்த்ரர்)

योगं ऐश्वरम् (யோகம் ஐச்வரம்) = யோகமாயா வைபவம் அல்லது வேறெங்குமில்லாத யோகத்தை (ஸ்ரீதரர், ஸ்ரீ ராமானுஜர்)

मम आत्मा (மம ஆத்மா) = (1) என் திட்டம் (ஸ்ரீ ராமானுஜர்), (2) என்னுடைய உடல் (ஸ்ரீ ராகவேந்த்ரர்)]

यथाकाशस्थितो नित्यं वायुः सर्वत्रगो महान् ।
तथा सर्वाणि भूतानि मत्स्थानीत्युपधारय ॥ ६

யதாகாசஸ்திதோ நித்யம் வாயு: ஸர்வத்ரகோ மஹான் ।
ததா ஸர்வாணி பூதானி மத்ஸ்தானீத்யுபதாரய ॥ 6

எங்கும் வியாபித்தும், நிறைந்துமுள்ள காற்று எப்போதும் எப்படி ஆகாயத்தில் ஒட்டாதிருக்கிறதோ அது போல எல்லா பூதங்களும் என்னிடம் ஒட்டுகிறதில்லை எனத் தெரிந்துகொள்.

मत्स्थानीति (மத்ஸ்தானீதி) = காணப்படாத உருவையுடைய என்னிடமிருப்பதாக (ஸ்ரீ ராமானுஜர்)]

सर्वभूतानि कौन्तेय प्रकृतिं यान्ति मामिकाम् ।
कल्पक्षये पुनस्तानि कल्पादौ विसृजाम्यहम् ॥ ७

ஸர்வபூதானி கௌந்தேய ப்ரக்ருதிம் யாந்தி மாமிகாம் ।
கல்பக்ஷயே புனஸ்தானி கல்பாதௌ விஸ்ருஜாம் யஹம் ॥ 7

ஓ குந்தியின் மகனே! ப்ரளய காலத்தில் எல்லாப் பூதங்களும் என் மாயையில் லயத்தை அடைகின்றன. படைக்கும் காலத்தில் மறுபடி அவைகளை நான் படைக்கிறேன்.

[कल्पक्षये (கல்பக்ஷயே) = நான்முக ப்ரும்மாவின் முடிவு காலத்தில் (ஸ்ரீ ராமானுஜர்)]

प्रकृतिं स्वामवष्टभ्य विसृजामि पुनः पुनः ।
भूतग्रामं इमं कृत्स्नमवशं प्रकृतेर्वशात् ॥ ८

ப்ரக்ருதிம் ஸ்வாமவஷ்டப்ய விஸ்ருஜாமி புன: புன: ।
பூதக்ராமம் இமம் க்ருத்ஸ்னமவசம் ப்ரக்ருதேர்வசாத் ॥ 8

என் மாயையை ஆச்ரயித்து (எடுத்துக்கொண்டு) முன் பழைய கர்ம வசப்பட்ட எல்லா பூதங்களையும், அக்கர்மத்தைத் தழுவி திரும்பத் திரும்பப் படைக்கிறேன்.

ஸ்ரீ ராமானுஜர்:— என் வசமுள்ள ப்ரக்ருதியை எட்டு விதமாக விவரித்து, ப்ரக்ருதிக்கு வசமாகயிருப்பதால் பராதீனமாகவுள்ள இந்த தேவ, மனித, விலங்கு முதலிய எல்லா பூதங்களையும் திரும்பத்திரும்பப் படைக்கிறேன்.

[अवष्टभ्य (அவஷ்டப்ய) = (1) ப்ரக்ருதியை ஆச்ர யித்து, ஆச்ரயிக்கத்தேவையில்லை, ஆயினும் வலிமை யுள்ளவன் விளையாட்டாகக் கையில் ஒரு தடியைப் பிடித் துக்கொள்வதுபோல் (ஸ்ரீ மத்வர்) (2) உபாதான காரண மாக (ஸ்ரீ ராகவேந்த்ரர்) अवश (அவசம்) = (1) சுதந்திர மற்ற (ஸ்ரீ சங்கரர்) (2) ப்ரக்ருதிக்கு ஸ்வாதீனமானதால் பராதீனமான அல்லது விஷ்ணுவிற்கு ஸ்வாதீனமாக வுள்ள (ஸ்ரீ ராகவேந்த்ரர்)]

न च मां तानि कर्माणि निबध्नन्ति धनंजय ।
उदासीनवदासीनमसक्तं तेषु कर्मसु ॥ ९

நச மாம் தானி கர்மாணி நிபத்னந்தி தனஞ்ஜய ।
உதாஸீனவதாஸீனமஸக்தம் தேஷு கர்மஸு ॥ 9

ஓ தனஞ்ஜய! அப்படைப்புகளில் அபிமான மற்றும், கர்மங்களைச் செய்யாதவன்போலும். (தொடர்பற்றவன் போலும்) உள்ள என்னை அந்த ச்ருஷ்டி கர்மங்கள் கட்டுப்படுத்துகிறதில்லை.

[ஸ்ரீராமானுஜர் :— மேற்சொன்ன வகை ச்ருஷ்டி களால் வேற்றுமை புத்தியுள்ளவன் என்ற அபவாதம், பயனில் ஆசையோ, செயல்படுவதில் ஆசையோ இல் லாததால் எனக்கு ஏற்படுவதில்லை.

उदासीनवत् (உதாஸீனவத்) = கர்மங்களைச் செய்தா லும். செய்தவனுக்கு எப்படி பலனில்லையோ அதுபோல் எனக்குப் பலனில்லை. எனவே செய்தவன்போலுள்ள (ஸ்ரீ ராகவேந்த்ரர்) असक्तम् (அஸக்தம்) = கட்டுப்பட லுக்கு ஹேதுவான கர்ம பலனில் ஆசையோ. செயல் படும் ஆசையோ இல்லாமலிருக்கும். (ஸ்ரீ சங்கரர்)]

मयाध्यक्षेण प्रकृतिः सूयते सचराचरम् ।
हेतुनानेन कौन्तेय जगद्विपरिवर्तते ॥ १०

மயாத்யக்ஷேண ப்ரக்ருதி: ஸூயதே ஸசராசரம் ।
ஹேதுனானேன கௌந்தேய ஜகத்விபரிவர்ததே ॥ 10

ஓ குந்தியின் மகனே! சாக்ஷியாகவுள்ள என் முன்னிலையிலிருக்கும் விசேஷத்தால் மாயை அசைவற்றவை அசைவனவற்றுடன் கூடின இவ்வுலகை உண்டாக்குகின்றது. இந்த ஸந்நிதான விசேஷ நிமித்தத்தினால் உலகம் திரும்பத் திரும்ப உண்டாகிக்கொண்டு வருகிறது.

[मया अध्यक्षेण प्रकृतिः (மயா அத்யக்ஷேண ப்ரக்ருதி:) = (1) பிராணிகளின் முற்பிறவியின் கர்மத்தைத் தழுவி ஸத்ய ஸங்கல்பத்தோடு கூடிய என்னால் பார்க்கப்பட்ட ப்ரக்ருதி — ஸ்ரீ ராமானுஜர், (2) என்னால் ஏவப்பட்ட என் வசமுள்ள ப்ரக்ருதி அல்லது—ப்ரக்ருதி = ஸ்த்ரீ, மயா = புருஷனான என்னால், பிரபஞ்சத்தைப் பெறுகிறாள் — ஸ்ரீ ராகவேந்த்ரர்.]

अवजानन्ति मां मूढा मानुषीं तनुमाश्रितम् ।
परं भावमजानन्तो मम भूतमहेश्वरम् ॥ ११

அவஜானந்தி மாம் மூடா மானுஷீம் தனுமாச்ரிதம் ।
பரம் பாவமஜானந்தோ மம பூதமஹேச்வரம் ॥ 11

என் பரமாத்ம தத்வத்தை அறியாத மூடர்கள் பூதங்களுக்கும் மாபெரும் அதிபனாகவுள்ள என்னை மனித உடலை அடைந்துள்ளதாக அவமதிக்கிறார்கள். (அவதார ரூபங்களை மனித உருவங்களாக எண்ணுபவர் மூடர்கள்)

[परं भावम् (பரம் பாவம்) = 1. ஜனங்களின் நலனுக்காகத் தயவுடன் நான் எடுத்துள்ள இந்த அவதாரத்தின் கருத்தை — ஸ்ரீ ராமானுஜர், 2. என்னுடைய ச்ரேஷ்டமான தன்மையை — ஸ்ரீ ராகவேந்த்ரர்.]

मोघाशा मोघकर्माणो मोघज्ञाना विचेतसः ।
राक्षसीमासुरीं चैव प्रकृतिं मोहिनीं श्रिताः ॥ १२

மோகாசா மோககர்மாணோ மோகஞானா விசேதஸ: ।
ராக்ஷஸீமாஸுரீம் சைவ ப்ரக்ருதிம் மோஹினீம் ச்ரிதா:। 12

வீணான ஆசையையும், வீணான கர்மங்களையும், வீணான அறிவுகளையுமுடைய அறிவிலிகள் மோஹிக்கச் செய்யும் (புத்தி மாராட்டம் செய்யும்) அரக்க, அஸுர ஸ்வபாவத்தையே தழுவுவதால் என்னை அவமதிக்கின்றனர்.

[मोघाशा: (மோகாசா:) = 1. பிற தெய்வங்களைச் சரணடைவதால் விரைவில் பயன் கிட்டுமெனும் வீணான ஆசை — ஸ்ரீதரர், 2. தான் செய்யும் கருமமே பயன் தருமெனும் ஆசை — ஸ்ரீ மத்வர்.

मोघज्ञाना: (மோகஞானா:) = 1. தான் கற்ற சாஸ்திரம் முதலியவற்றின் அறிவை குயுக்தி வாதங்களால் வீணாக்குவது — ஸ்ரீதரர், 2. என் சேஷபூதமாயும், சரீரமாகவும் உள்ள எல்லா அசைவற்ற, அசைவுடைய ப்ரபஞ்சத்தில் விபரீத ஞானமுடைய — ஸ்ரீ ராமானுஜர்.

विचेतस:, राक्षसीं, आसुरीं (விசேதஸ:, ராக்ஷஸீம், ஆஸுரீம்) = 1. கெட்ட வழியில் செல்லும் மனத்தையுடையவர், பிறருக்குக் கெடுதி செய்யும் எண்ணமுள்ள தாமஸ ஸ்வபாவம், அதிக ஆசை, மமதை, கோபம் முதலியன கூடிய ராஜஸ ஸ்வபாவம் — ஸ்ரீதரர், 2. எல்லாவற்றிலும் உண்மையறிவற்றவர், என்னுடைய மஹத்தான குணங்களை மறக்கும் ஸ்வபாவம் — ஸ்ரீ ராமானுஜர்.

मोहिनीम् (மோஹினீம்) = 1. புத்தியைக் கெடுக்கிற — ஸ்ரீதரர், 2. மானிட அவதாரம் செய்துள்ள என் பூர்ண கருணை, உயர்வு முதலியவற்றை மறைக்கிற — ஸ்ரீ ராமானுஜர்.]

महात्मानस्तु मां पार्थ दैवीं प्रकृतिमाश्रिताः ।
भजन्त्यनन्यमनसो ज्ञात्वा भूतादिमव्ययम् ॥ १३

மஹாத்மானஸ்து மாம் பார்த்த தைவீம் ப்ரக்ருதிமாச்ரிதா: ।
பஜன்ந்த்யனன்யமனஸோ ஞாத்வா பூதாதிமவ்யயம் ॥ 13

ஓ அர்ஜுனா! மஹான்கள் ஸாத்விகமான ஸ்வபாவத்தையே தழுவி ப்ரபஞ்சத்திற்கு காரணமாகவும், அழிவற்றவுமான என்னையறிந்து, பிற தெய்வங்களிடத்தில் மனதை வைக்காது என்னிடமே மனதை நிறுத்தி என்னையே போற்றி ஸேவிக்கின்றனர்.

[ஸ்ரீ ராமானுஜர் :— अव्ययम् (அவ்யயம்) = மனம், வாக்கு, இவற்றிற்கெட்டாத நாம கர்மங்களையுடைய, ज्ञात्वा (ஞாத்வா) = முழு தயவோடு கூடி நல்லோரைக் காக்க மனித உருவில் அவதாரம் செய்துள்ள என்னை அறிந்து.]

सततं कीर्तयन्तो मां यतन्तश्च दृढव्रताः ।
नमस्यन्तश्च मां भक्त्या नित्ययुक्ता उपासते ॥ १४

ஸததம் கீர்தயந்தோ மாம் யதந்தஸ்ச த்ருடவ்ரதா: ।
நமஸ்யந்தஸ்ச மாம் பக்த்யா நித்யயுக்தா உபாஸதே ॥ 14

புலன்களையடக்கல், சமம், தமம், தயை முதலியவைகளுடன் கூடி, எப்போதும் ப்ரஹ்மஸ்வரூபியாகிய பகவானுன என்னைப்பற்றி பாடுபவர்களாக, சலிக்காத அசைவற்ற திடமான வ்ரதமுடையவர்களாக, ஜாக்கிரதையுடையவர்களாக, பக்தியுடன் என்னை நமஸ்காரம் செய்பவர்களாயும் என்னை (அவர்கள்) உபாஸிக்கின்றனர்.

[ஸ்ரீதரர் :— சிலர் பூஜை முதலியவற்றில் ஈடுபட்டும், சிலர் வ்ரதங்களுடையவர்களாகவும், சிலர் எப்போதும் என் குணங்களைப் பாடியும், சிலர் பக்தியால் என்னை நமஸ்கரித்தும் உபாஸிக்கின்றனர்.

ஸ்ரீ ராமானுஜர் :— எப்போதும் என் நாமங்களை (கிருஷ்ண, வாஸுதேவ போன்ற பெயர்களை) நினைப்ப

தால் ஏற்படும் மயிர்க்கூச்சல், நாவில் தழதழப்பு முதலிய வற்றுடன் உச்சரிக்கிறவர்களாய், என் ஆராதனம், கோயில் கட்டுவது போன்ற கார்யங்களில் தீவிர முயற்சி யுள்ளவர்களாய், பக்தியால், வணக்கமுடைய மனம் முதலிய எட்டு அங்கங்களால், கல், மண், முள் எனப் பாராது தெண்டனிட்டு நமஸ்காரம் செய்பவர்களாய், எப்போதும் என்னையே அடையவேண்டுமென்ற எண் ணத்துடன், தங்களையும், தங்கள் பொருள்களையும் பரமாத்மாவுக்கு அர்ப்பணம் செய்கிறேமென்ற நிச்சயத் துடன் என்னை உபாஸிக்கின்றனர்]

ज्ञानयज्ञेन चाप्यन्ये यजन्तो मामुपासते ।
एकत्वेन पृथक्त्वेन बहुधा विश्वतोमुखम् ॥ १५

ஞானயஜ்ஞேன சாப்யன்யே யஜந்தோ மாமுபாஸதே ।
ஏகத்வேன ப்ருதக்த்வேன பஹுதா விச்வதோமுகம் ॥ 15

மற்றும் சிலர் ஸர்வாத்மகனுன என்னை ஞானமாகிற வேள்வியால் பூஜித்தும், சிலர் வேற்றுமையற்றும் (அபேத பாவனையுடனும்), சிலர் பேத பாவனையுடனும் பலவிதமாக உபாஸிக்கின்றனர்.

[ஸ்ரீ ராமானுஜர்:— சில மஹான்கள் முன் ச்லோகப்படி கீர்த்தனம், நமஸ்காரம் முதலியவற்ருல் என்னை உபாஸிக் கின்றனர். ஜகதாகாரத்திஞல் ஸகல சேஷியான என்னை பலவிதமாக ஒன்றேயென்றறிந்து உபாஸிக்கிருர்கள். பக வான் வாஸுதேவன் நாமரூபமற்றிருந்த ஸூக்ஷ்ம, சித், அசித் பொருள்களை உடலாகக் கொண்டு, ஸ்தூல சிதசித் வஸ்துக்களின் தேஹியாகத் தாஞகவேண்டுமென திட்ட மிட்ட மாத்திரத்தில் தேவ, மனித, மிருக, பக்ஷி, அசை வற்ற இப்படிப் பல விநோதமானவற்றை உடலாகக் கொண்டு அவர் ஒருவரே இருக்கிருரென்று எண்ணி உபாஸிக்கின்றனர்.

ஸ்ரீ மத்வர், ஸ்ரீ ராகவேந்த்ரர் :— எங்கும் நிறைந்துள்ள நாராயணன் ஒருவர்தானெனச் சிலரும், அவர் பிற பொருள்களைக் காட்டிலும் வேறானவரெனச் சிலரும், அவர் பல உருவங்களையுடையவரெனச் சிலரும் உபாஸிக்கின்றனர்.

குறிப்பு :— ज्ञानयज्ञेन (ஞானயஜ்ஞேன) = 1. பகவத் விஷயஞானமாகிய யக்ஞத்தால் — ஸ்ரீ சங்கரர், 2. எல்லாம் ப்ரஹ்மஸ்வரூபமெனும் ஞானயக்ஞத்தால் — ஸ்ரீதரர்.

एकत्वेन (ஏகத்வேன) = 1. பரமாத்மா ஒருவனே எனும் அறிவால் — ஸ்ரீ சங்கரர், 2. தானே ப்ரஹ்மம், ப்ரஹ்மமே தான் எனும் வேற்றுமையற்ற அறிவால் — ஸ்ரீ மதுஸூதனர்.

पृथक्त्वेन (ப்ருதக்த்வேன) — 1. ஒரே விஷ்ணு, சூர்யன், சந்த்ரன் முதலிய எல்லா தேவதா உருவாக உள்ளார் என்ற எண்ணத்தால் — ஸ்ரீ சங்கரர், 2. நான் ஈச்வரனின் தாஸன் என்ற எண்ணத்தால் — ஸ்ரீதரர்.

बहुधा (பஹூதா) = ப்ரஹ்மா, ருத்ரன் முதலிய உருவங்களாக — ஸ்ரீதரர்.

विश्वतोमुखम् (விச்வதோமுகம்) = விச்வரூபியான — ஸ்ரீ ராமானுஜர்.]

अहं क्रतुरहं यज्ञः स्वधाहमहमौषधम् ।
मन्त्रोऽहमहमेवाज्यमहमग्निरहं हुतम् ॥ १६

அஹம் க்ரதுரஹம் யஜ்ஞ: ஸ்வதாஹமஹமௌஷதம் I
மந்த்ரோஅஹம் அஹமேவாஜ்யமஹமக்னிரஹம் ஹூதம் II

வேதத்தில் சொல்லப்பட்ட அக்நிஷ்டோமம் போன்ற வேள்விகள், ஐந்து மஹாயஞங்கள், பித்ருக்களுக்குச் செய்யப்படும் சடங்குகள், மருந்து அல்லது தான்யங்கள்,

வேத மந்த்ரங்கள், வேள்வி முதலியவற்றில் உபயோகிக்கப்படும் நெய், அக்னி, அதில் செய்யப்படும் ஹோமம் எல்லாம் நானே]

पिताहमस्य जगतो माता धाता पितामहः ।
वेद्यं पवित्रमोंकार ऋक्साम यजुरेव च ॥ १७

பிதாஹமஸ்ய ஜகதோ மாதா தாதா பிதாமஹ: I
வேத்யம் பவித்ரமோம்கார ருக்ஸாமயஜுரேவ ச II 17

இந்த ஜகத்திற்குத் தகப்பனும், தாயும், பாட்டனும், தாங்குபவனும், அறியவேண்டியதும், பரிசுத்தமானதும், ஓங்காரமும், ருக், யஜுர், ஸாம வேதங்களும் நானே.

குறிப்பு :— धाता (தாதா) = 1. विधाता (விதாதா) எனப் பாடம், கர்மபலனையுண்டாக்குபவன் — ஸ்ரீ சங்கரர், ஸ்ரீதரர், 2. ரக்ஷகன்–ஸ்ரீ ராகவேந்த்ரர். वेद्यम् (வேத்யம்) = வேதத்தினுலறியவேண்டியதும் — ஸ்ரீ ராமானுஜர்]

गतिर्भर्ता प्रभुः साक्षी निवासः शरणं सुहृत् ।
प्रभवः प्रलयः स्थानं निधानं बीजमव्ययम् ॥ १८

கதிர்பர்தா ப்ரபு: ஸாக்ஷீ நிவாஸ: சரணம் ஹுஹ்ருத் I
ப்ரபவ: ப்ரலய: ஸ்தானம் நிதானம் பீஜமவ்யயம் II 18

அடையத்தகுந்தவனும், போஷகனும், நியமிப்பவனும், சாக்ஷியும், இருப்பிடமும், சரணடையத்தக்கவனும், உபகாரஞ் செய்பவனும், படைப்பு, காத்தல், அழித்தலாகியவற்றைச் செய்பவனும், ஒடுங்குமிடமும், அழிவற்ற விதையும் (காரணமும்) நானே.

குறிப்பு :— [गतिः (கதி:) = 1. கர்மபலம்—ஸ்ரீ சங்கரர், ஸ்ரீதரர், 2. அடையவேண்டிய இடம் — ஸ்ரீ ராமானுஜர், 3. மோக்ஷத்தை விரும்புவோர் அறியத்தக்கது — ஸ்ரீ ராகவேந்த்ரர்.

साक्षी (ஸாக்ஷீ)=செய்வது செய்யாது விடுவது இவை களைப் பார்த்துக்கொண்டிருக்கிறவன் (ஸ்ரீ சங்கரர், ஸ்ரீதரர்). निवास: (நிவாஸ:)= (1) பிராணிகளுக்கிருப்பிடம் (ஸ்ரீ சங்கரர், ஸ்ரீ ராமானுஜர்), (2) ஆச்ரயன் (ஸ்ரீ ராகவேந்த்ரர்).

शरणम् (சரணம்) = (1) துயரத்தைப் போக்கடிப்பவன் (ஸ்ரீசங்கரர்), (2) ஆச்ரயிக்கத்தகுந்தவன் (ஸ்ரீராமானுஜர்), (3) ஆச்ரயன் (ஸ்ரீ மத்வர்) (4) ஸம்ஸார பயத்திலிருந்து காப்பவன் (ஸ்ரீ ராகவேந்த்ரர்).

सुहृत् (ஸுஹ்ருத்) = கைமாறு எதிர்பாராது உதவி செய்பவன் — ஸ்ரீ சங்கரர், ஸ்ரீ ராகவேந்த்ரர்.

निधानम् (நிதானம்) = (1) காலாந்தரத்தில் உபயோகப்படுவதாகையால் புதயலாகவுள்ள நிதிபோல் (ஸ்ரீசங்கரர்), (2) உண்டுபண்ணத்தக்க வஸ்துவும், அழிக்கப்படுகிறதும் (ஸ்ரீ ராமானுஜர்), ப்ரளய காலத்தில் எல்லாவற்றிற்குமிருப்பிடம் (ஸ்ரீ மத்வர், ஸ்ரீ ராகவேந்த்ரர்)].

तपाम्यहमहं वर्षं निगृह्णाम्युत्सृजामि च ।
अमृतं चैव मृत्युश्च सदसच्चाहमर्जुन ॥ १९

தபாம்யஹமஹம் வர்ஷம் நிக்ருஹ்ணும்யுத்ஸ்ருஜாமி ச 1
அம்ருதம் சைவ ம்ருத்யுஸ்ச ஸதஸச்சாஹமர்ஜுன 11 19

ஓ அர்ஜுன! தாபத்தை (வெப்பத்தை) உண்டாக்குபவன், மழையைப் பொழிகிறவன், பொழியாமல் தடுக்கிறவன், உயிர் வாழ்வதும், அழியக் காரணமும், ஸ்தூலம் (கண்ணுக்குப் புலப்படுவது), சூக்ஷ்மம் (புலப்படாதது) இவை எல்லாம் நானே.

[सदसत् च (ஸதஸத்ச) = (1) எப்பொருள் மற்றொன்றின் அதீனமாகவுள்ளதோ அது ஸத். அந்த மற்றொன்று அஸத் (ஸ்ரீ சங்கரர்), (2) தற்காலத்திலிருப்பவை ஸத். சென்றவை வரப்போவன அஸத் (ஸ்ரீ ராமானுஜர்),

(3) ஸத்=கார்யங்கள், அஸத்=காரணம் (ஸ்ரீ மத்வர், ஸ்ரீ ராகவேந்த்ரர்.]

त्रैविद्या मां सोमपाः पूतपापा यज्ञैरिष्ट्वा स्वर्गतिं प्रार्थयन्ते ।
ते पुण्यमासाद्य सुरेन्द्रलोकमश्नन्ति दिव्यान्दिवि देवभोगान् ॥

த்ரைவித்யா மாம் ஸோமபா: பூதபாபா யஜ்ஞைரிஷ்ட்வா
ஸ்வர்கதிம் ப்ரார்த்தயந்தே ।
தே புண்யமாஸாத்ய ஸுரேந்த்ரலோகமச்நந்தி திவ்யாந்திவி
தேவபோகான் ॥ 20

மூன்று வேதங்களை யறிந்தவர் யாகங்களால் என்னை பூஜித்து, ஸோமபானத்தைப் பருகி, பாவமற்றவர்களாய், ஸ்வர்கலோகத்தை விரும்புகின்றனர். அவர்கள் புண்யப் பயனாக இந்த்ரலோகமடைந்து, ஸ்வர்கத்தில் உயர்ந்த தேவபோகங்களை அனுபவிக்கின்றனர்.

[ஸ்ரீ சங்கரர் :— ஸ்வர்கம் முதலியவற்றில் ஆசையுள்ளவர் வேதத்தில் சொல்லியுள்ள யாகங்களால் வஸு முதலிய தேவதா உருவாக என்னை பூஜிக்கின்றனர்.

ஸ்ரீதரர் :— மூன்று வேதங்களையோ அல்லது வேதப் பொருளை அறிந்தவர் அவ்வேதங்களில் சொல்லியபடி யாகம் முதலியவற்றை அனுஷ்டித்து தேவதா ஸ்வரூபமாக நான் (பகவான்) இருக்கிறேனெனயறியாது பூஜிக்கின்றனர். ஸ்ரீ ராமானுஜர் :— வேதங்களை யறிந்தும், வேதாந்தத்தை அறியாது, வேதத்தில் சொல்லிய கர்மங்களைச் செய்து என்னை தேவதா ஸ்வரூபமாக அறியாது பூஜிக்கின்றனர். ஸ்ரீ ராகவேந்த்ரர் :—மூன்று வேதங்களை யறிந்தவர், விஷ்ணு ஸர்வோத்தமனெனத் தெரிந்தும், வேதத்தின் முற்பகுதியில் சொல்லப்பட்டுள்ள ஸ்வர்கம் முதலிய பயனை எண்ணி பிற தேவதைகளைக் குறித்து யாகம் செய்து, கடைசியில் விஷ்ணுவான எனக்கு ஸமர்ப்பணம் செய்து, ஸ்வர்கம் முதலியனவற்றையடைய என்னை வேண்டுகின்றனர்.]

ते तं भुक्त्वा स्वर्गलोकं विशालं क्षीणे पुण्ये मर्त्यलोकं विशन्ति ।
एवं त्रैधर्म्यमनुप्रपन्ना गतागतं कामकामा लभन्ते ॥ २१

தே தம் புக்த்வா ஸ்வர்கலோகம் விசாலம் க்ஷீணே
புண்யே மார்த்யலோகம் விசந்தி 1
ஏவம் த்ரைதர்ம்யமனுப்ரபன்ன கதாகதம் காமகாமா
லபந்தே ll 21

ஸ்வர்கலோகத்தை அடைந்தவர்கள் அகண்ட அந்த உலகை அனுபவித்து, புண்யமழிந்தபின் மனித உலகை அடைகின்றனர். இப்படி வேதத்தில் சொல்லப்பட்ட தர்மத்தை(இதை மட்டும்), பின்பற்றும் நல்லனுபவ ஆசை யுள்ளவர்கள் பிறவி, இறப்பு இவைகளையடைகின்றனர்.

अनन्याश्चिन्तयन्तो मां ये जनाः पर्युपासते ।
तेषां नित्याभियुक्तानां योगक्षेमं वहाम्यहम् ॥ २२

அனன்யாஸ்சிந்தயந்தோ மாம் யே ஜனு: பர்யுபாஸதே 1
தேஷாம் நித்யாபியுக்தானும் யோகக்ஷேமம் வஹாம்யஹம் ll

எவர் பிற தெய்வங்களைப் பூஜிக்காது, என்னையே நினைவில் இறுத்தி உபாஸிக்கிறுர்களோ, எப்போதும் நிலைத்த த்யானத்திலுள்ள அவர்களது யோக க்ஷேமத்தை (நலன்களையும் தேவைகளையும்) நான் கவனித்துக்கொள் கிறேன்.

[अनन्याः (அனன்யா:) = (1) நானே அவர்களின் ஆத்மாவென (ஸ்ரீ சங்கரர்) (2) என்னைத்தவிர வேறு எந்த ப்ரயோஜனத்தை விரும்பாது என்னையே பரமப்ர யோஜனமாக (ஸ்ரீ ராமானுஜர்) (3) வேறு நினைவற்று (ஸ்ரீ ராகவேந்த்ரர்)

नित्याभियुक्तानाम् (நித்யாபியுக்தானும்) = (1) பரமார்த்த தர்சனமுடையவர்களின் (ஸ்ரீ சங்கரர்), (2) எப்போதும்

என்னை அடையவேண்டுமென கருதுபவர்களின் (ஸ்ரீராமானுஜர்), (3) எஞ்ஞான்றும், எச் சூழ்நிலையிலும், என்னை மறவாதவர்களின் (ஸ்ரீ மத்வர்), (4) எப்போதும், எவ்விடத்தும், மனம், வாக்கு, உடல் முதலியவற்ருல் என்னை ஸேவிக்கிறவர்களின் (ஸ்ரீ ராகவேந்த்ரர்)

योगक्षेमम् (யோகக்ஷேமம்) = (1) அடையாததை யடைகிறது யோகம், அடைந்ததைக் காப்பது க்ஷேமம் (ஸ்ரீ சங்கரர்) (2) செல்வம் முதலியவற்றை அடைவது யோகம், அவைகளை ரக்ஷிப்பது க்ஷேமம்; அல்லது மோக்ஷத்தை (ஸ்ரீதரர்), (3) என்னையடைவது யோகம், மறுபடி பிறவியில்லாமற்போவது க்ஷேமம். (ஸ்ரீராமானுஜர்), (4) கிடையாதது கிடைப்பது யோகம், அதை ரக்ஷிப்பது க்ஷேமம்; அல்லது மோக்ஷத்தில் நிரந்தரமான இருப்பு என்பது யோக க்ஷேமம். (ஸ்ரீ ராகவேந்த்ரர்)]

येऽप्यन्यदेवताभक्ता यजन्ते श्रद्धयान्विताः ।
तेऽपि मामेव कौन्तेय यजन्त्यविधिपूर्वकम् ॥ २३

யேஅப்யன்யதேவதாபக்தா யஜந்தே ச்ரத்தயான்விதா: ।
தேஅபி மாமேவ கௌந்தேய யஜன்த்யவிதிபூர்வகம் ॥ 23

ஓ குந்தியின் மகனே! எவர் பிற தெய்வங்களைப் பக்தியுடன் ஆராதிக்கின்ருர்களோ, அவர்களும் சரியான வழியை விட்டு என்னையே ஆராதித்தவர்களாகிருர்கள்.

[ஸ்ரீ சங்கரர்:— பிற தெய்வங்களைப் போற்றுபவர்களும் என்னையே அஞ்ஞான வழியில் ஆராதிக்கிறவர்களாகின்றனர்: ஸ்ரீ ராமானுஜர்:— இந்த்ரன் முதலிய தேவதைகளை பக்தியுடன் ஸேவிக்கிறவர்களும் என்னையே ஆராதிக்கின்றனர். ஏன்? இந்த்ரன் முதலிய தெய்வங்கள் என் உடல். ஆனுல் அவர்கள் ஸாக்ஷாத்கார ஆத்மாவான என்னை ஆராதிக்கவில்லை, இந்த்ரன் முதலிய தேவர்கள் என் சரீரமெனத் தெரிந்தும் ஆராதிக்கவில்லை. எனவே முறையாக என்னை ஆராதிக்கவில்லை.]

अहं हि सर्वयज्ञानां भोक्ता च प्रभुरेव च ।
न तु मामभिजानन्ति तत्त्वेनातश्च्यवन्ति ते ॥ २४

அஹம் ஹி ஸர்வயஞானும் போக்தா ச ப்ரபுரேவ ச I
ந து மாமபிஜானந்தி தத்வேநாதஸ்ச்யவந்தி தே II 24

எல்லா வேள்விகளின் பயனை அனுபவிப்பவனும், பயனைக் கொடுக்கும் ஸ்வாமியும் நானே. ஜனங்கள் என்னை உள்ளது உள்ளபடி அறிகிறதில்லை. பிற தெய்வங்களைப் பூஜிக்கும் அவர்கள் நழுவிவிடுகிறார்கள் (மறு பிறவியையடைகின்றனர்).

यान्ति देवव्रता देवान् पितॄन्यान्ति पितृव्रताः ।
भूतानि यान्ति भूतेज्या यान्ति मद्याजिनोऽपि माम् ॥ २५

யாந்தி தேவவ்ரதா தேவாங் பித்ருங்யாந்தி பித்ருவ்ரதா: I
பூதாநி யாந்தி பூதேஜ்யா யாந்தி மத்யாஜிநோஅபி மாம் II 25

தேவதைகளை உத்தேசித்து விரதங்களை செய்பவர் தேவதைகளையும், தத்தம் முன்னோர்களைக் குறித்துச் சடங்குகள் செய்பவர், பித்ருக்களையும், பூதங்களைப் பூஜிப்பவர் அப் பூதங்களையும் அடைகின்றனர் (அந்தந்த உலகங்களை அடைகின்றனர்). என்னைப் பூஜிப்பவர் என்னையேயடைகின்றனர்.

[मद्याजिनोऽपि (மத்யாஜிஞேஅபி) = விஷ்ணு பக்தர்கள் —ஸ்ரீ சங்கரர்

माम् (மாம்) = அழிவற்ற பரமாத்ம ஸ்வரூபமான நாராயணனை என்னை —ஸ்ரீதரர்]

पत्रं पुष्पं फलं तोयं यो मे भक्त्या प्रयच्छति ।
तदहं भक्त्युपहृतमश्नामि प्रयतात्मनः ॥ २६

பத்ரம் புஷ்பம் ஃபலம் தோயம் யோ மே பக்த்யா ப்ரயச்சதி ।
ததஹம் பக்த்யுபஹ்ருதமச்ஞாமி ப்ரயதாத்மன: ॥ 26

எவன் என் பொருட்டு பக்தியுடன். இலை, புஷ்பம், பழம், தண்ணீர் இவைகளை அர்ப்பணிக்கிருனே, தூய மனத்துடன் கூடிய அவனுல் பக்தியுடன் கொடுக்கப்பட்டவைகளை நான் சாப்பிடுகிறேன் (அங்கீகரிக்கிறேன்).

[ஸ்ரீ ராமானுஜர் :— प्रयतात्मनः (ப்ரயதாத்மன:) = பகவானுக்கர்ப்பணம் செய்வதையே நோக்காகக் கொண்ட தூய உள்ளத்தையுடைய अहं अश्नामि = ஸர்வேச்வரனுயும், எந்த ஆசையுமற்றவனுக இருப்பினும், கிடைக்காத பொருள் கிடைத்ததுபோல் அங்கீகரிக்கிறேன்].

यत्करोषि यदश्नासि यज्जुहोषि ददासि यत् ।
यत्तपस्यसि कौन्तेय तत्कुरुष्व मदर्पणम् ॥ २७

யத்கரோஷி யதச்ஞஸி யஜ்ஜுஹோஷி ததாஸி யத் ।
யத்தபஸ்யஸி கௌந்தேய தத்குருஷ்வ மதர்ப்பணம் ॥ 27

ஓ குந்தியின் மகனே எதைச் செய்தாலும், எதைத் தின்ருலும், எந்த ஹோமம் செய்திடினும், எதைப் பிறருக்குக் கொடுத்தாலும், எத்தவம் செய்தாலும், அதை எனக்கு அர்ப்பணமாகச் செய்.

[ஸ்ரீதரர் :— எவனெவனுக்கு எது கிடைக்குமோ, எது முடியுமோ அதையெல்லாம் பகவானுக்கு அர்ப்பணம் செய்யலாமெனக் கருத்து.

ஸ்ரீ ராமானுஜர் :— லௌகிக வைதிகமான எல்லாக் கார்யங்களையும் பகவானுக்கு அர்ப்பணம் செய்.]

शुभाशुभफलैरेवं मोक्ष्यसे कर्मबन्धनैः ।
सन्यासयोगयुक्तात्मा विमुक्तो मामुपैष्यसि ॥ २८

சுபாசுபஃபலைரேவம் மோக்ஷ்யஸே கர்மபந்தனை: ।
ஸன்யாஸயோகயுக்தாத்மா விமுக்தோ மாமுபைஷ்யஸி ॥ 28

இவ்விதம் செய்யும் கார்யங்களை என்னிடம் ஒப்பு வித்தால், நல்ல, கெட்ட பயன்களுக்குக் காரணமான (புண்ய பாபங்கள்) கர்மக்கட்டிலிருந்து விடுபட்டு என்னை அடைவாய்.

[ஸ்ரீ ராமானுஜர் :— நீ என்னால் ஏவப்படுகிறவன் என அறிந்து, எல்லாக் கர்மங்களும் பகவதாராதனமென எண்ணி, அவற்றைச் செய்திடில் கட்டு விலகி மோக்ஷ மடைவாய்.

குறிப்பு : उपैष्यसि (உபைஷ்யஸி) = ஜீவன் முக்தனாக இருந்து, இந்த உடல் போனவுடன் என் ஸ்வ ரூபமாக ஆகிவிடுவாய்]

समोऽहं सर्वभूतेषु न मे द्वेष्योऽस्ति न प्रियः ।
ये भजन्ति तु मां भक्त्या मयि ते तेषु चाप्यहम् ॥ २९

ஸமோஅஹம் ஸர்வபூதேஷு ந மே த்வேஷ்யோஅஸ்தி ந ப்ரிய: ।
யே பஜந்தி து மாம் பக்த்யா மயிதே தேஷு சாப்யஹம் ॥ 29

நான் எல்லாப் பிராணிகளிடத்திலும் ஸமமாக உள்ளேன். எனக்கு எதிரியுமில்லை, நண்பனுமில்லை. யார் என்னை பக்தியுடன் ஸேவிக்கிறார்களோ அவர்கள் என்னிடமுள்ளனர். நானும் அவர்களிடமிருக்கிறேன்.

[ஸ்ரீ சங்கரர், ஸ்ரீதரர் :— ஈச்வரன் பக்தர்களுக்கு பலனைக் கொடுப்பது பாகுபாடல்லவா? இல்லை. நெருப்பு யாவருக்கும் பொதுவாயினும் அதனருகே போகிறவனுக்குக் குளிரைப் போக்குகிறது; கற்பக வ்ருக்ஷம் தன்னை விரும்பி வந்தவனுக்குப் பலனைக் கொடுப்பதுபோல், பகவானின் மஹிமை அவரையடுத்தவனைக் காக்கும்.

ஸ்ரீ ராமானுஜர் :— தேவதைகள் மேம்பட்டவர், மனிதன் தாழ்ந்தவன். மனிதன் மேலானவன், விலங்கு முதலியன தாழ்ந்தவை என்பது பகவானுக்கில்லை.

ஸ்ரீ மத்வர், ஸ்ரீ ராகவேந்த்ரர் :— அவரவர்களின் பக்தி, வெறுப்பு இவைகளுக்குத் தக்கபடி பலனைத்தருவதால் பகவான் பக்ஷபாதியல்ல.]

अपि चेत्सुदुराचारो भजते मां अनन्यभाक् ।
साधुरेव स मन्तव्यः सम्यग्व्यवसितो हि सः ॥ ३०

அபி சேத்ஸுதுராசாரோ பஜதே மாம் அனன்யபாக் 1
ஸாதுரேவ ஸ மந்தவ்ய: ஸம்யக்வ்யவஸிதோ ஹி ஸ: 11 30

மிகவும் கெட்ட ஆசாரமுடையவனுகிலும் (கெட்ட நடத்தையுடையவனுனாலும்) பிற தெய்வங்களைப் பஜிக்காமல் என்னைப் பஜிப்பானுகில் அவன் தெளிவான மனத்திடமுள்ளவனுனதால், மேம்பட்டவனெனத் தெரிந்து கொள்ளத்தக்கவன்.

[ஸ்ரீ ராமானுஜர் :— வர்ணாச்ரம தர்மங்களை விட்டு கெட்ட நடத்தையுள்ளவன்கூட நிச்சயபுத்தியுடன் நாராயணனை ஸேவித்தால் மேம்பட்டவனுகக் கருதத்தக்கவன்.

ஸ்ரீ மத்வர், ஸ்ரீ ராகவேந்த்ரர் :— தேவதைகளின் அம்சங்களான ரிஷிகள் முதலியோர் கெட்ட நடத்தைகளில் ஈடுபட்டாலும், வேறு தெய்வங்களை ஸேவிக்காது என்னையே (பகவானை) பஜிப்பார்களானுல், தத்வநிச்சயமுள்ள அவர்கள் மேலானோர்களே.

साधुरेव (ஸாதுரேவ) = நல்லொழுக்கமுள்ளவனுகவே —ஸ்ரீ சங்கரர்]

क्षिप्रं भवति धर्मात्मा शश्वच्छान्तिं निगच्छति ।
कौन्तेय प्रतिजानीहि न मे भक्तः प्रणश्यति ॥ ३१

க்ஷிப்ரம் பவதி தர்மாத்மா சச்வச்சாந்திம் நிகச்சதி 1
கௌந்தேய ப்ரதிஜானீஹி ந மே பக்த: ப்ரணச்யதி 11 31

முன் கூறப்பட்ட பக்தன் விரைவில் தர்மத்தில் மன முடையவனுகிருன். திடமான ப்ரஹ்ம நிஷ்டையை அடைகிருன். ஓ குந்தியின் மகனே! என் பக்தன் கெட்டுப்போவதில்லை என உறுதி செய். (ஸத்யம் செய்)

[शश्वच्छान्ति निगच्छति = (1) சாச்வதமான, மறு பிறவி யற்ற, என்னையடைவதற்குத் தடையான கெட்ட நடத்தையிலிருந்து விடுபடுகிருன் —ஸ்ரீ ராமானுஜர், (2) சாச்வதமான மோக்ஷத்தை அடைகிருன் —ஸ்ரீ ராகவேந்த்ரர்]

मां हि पार्थ व्यपाश्रित्य येऽपि स्युः पापयोनयः ।
स्त्रियो वैश्यास्तथा शूद्रास्तेऽपि यान्ति परां गतिम् ॥ ३२

மாம் ஹி பார்த வ்யபாச்ரித்ய யேஅபி ஸ்யு: பாபயோனய: 1
ஸ்த்ரியோ வைச்யாஸ் ததா சூத்ராஸ்தேஅபி யாந்தி
பராம் கதிம் 11 32

ஓ அர்ஜுன! பெண்டிரும். வைச்யர்களும், சூத்ரர் களும், மற்றும் கீழ்ப்பட்ட பிறவியினரும் என்னை ஆரா தித்து மேலான கதியை நிச்சயமடைகிருர்கள்.

[ஸ்ரீதரர் :— வேதமோதலில்லா ஸ்த்ரீகளும், சூத்ரரும், வ்யவசாயிகளும் எனப் பொருள். ஸ்ரீ சங்கரர், ஸ்ரீ ராமா னுஜர், ஸ்ரீ ராகவேந்த்ரர், பாபயோனய: என்பதை அடைமொழியாக வைத்து பொருள் செய்துள்ளனர்.

இயற்கையில் நல்லவர்களாக இருந்து பாவத்தினுல் ஸ்த்ரீ முதலிய பிறவிகளையடைந்தவர்கள் எனப் பொருளேயன்றி சுபாவத்திலேயே ஸ்த்ரீ முதலானோர் எனப் பொருள் இல்லை. —ஸ்ரீ ராகவேந்த்ரர்]

किं पुनर्ब्राह्मणाः पुण्या भक्ता राजर्षयस्तथा ।
अनित्यमसुखं लोकमिमं प्राप्य भजस्व माम् ॥ ३३

23

கிம் புநர்ப்ராஹ்மணா: புண்யா ராஜர்ஷயஸ்ததா I
அனித்யமஸுகம் லோகமிமம் ப்ராப்ய பஜஸ்வ மாம் II 33

புண்யத்தையும் பக்தியையுமுடைய அந்தணர் அப்படியே ராஜரிஷிகளும் மேலான கதியை அடைவரெனச் சொல்லத்தேவையில்லை. நிலையற்ற, ஸுகமற்ற இவ்வுலகையடைந்துள்ள நீ என்னைப் பஜனை செய்.

[इमं लोकम् (இமம் லோகம்) = ஸ்ரீ சங்கரர்:— இந்த மானிட உலகை; மனிதப்பிறவியை]

मन्मना भव मद्भक्तो मद्याजी मां नमस्कुरु ।
मामेवैष्यसि युक्त्वैवमात्मानं मत्परायणः ॥ ३४

மன்மனா பவ மத்பக்தோ மத்யாஜீ மாம் நமஸ்குரு I
மாமேவைஷ்யஸி யுக்த்வைவமாத்மானம் மத்பராயண: II 34

என்னிடம் மனதை வைத்து, என்னிடத்தில் பக்தியுடன், என்னை ஆராதிப்பவனாக ஆகக்கடவாய். என்னை வணங்கு. இப்படி சரணடைவதால் மனதை என்னிடம் வைத்தால் என்னையே அடைவாய்.

[मन्मना: =பலவித கல்யாண குணங்களுடைய, சரண் புகத் தகுந்த ஸர்வஸ்வதந்த்ரனாகிய பகவானிடம், ஒரு பாத்திரத்திலிருந்து மற்றொரு பாத்திரத்தில் விடப்படும் எண்ணெயின் தாரை எப்படி இரண்டு பாத்திரங்களுக்குமிடையே இடைவிடாது ஒரே தாரையாக இருப்பதுபோல் மனதை வைத்தவனாய்— ஸ்ரீ ராமானுஜர்.

आत्मानम् = உன் ஆத்மாவாகிய (ஸ்ரீ சங்கரர்)

मत्परायण: = (1) என்னைச் சரணமடைந்தவனாக— ஸ்ரீ சங்கரர், (2) என்னையே எப்போதும் ஆச்ரயித்தவனாக இரு —ஸ்ரீ ராமானுஜர்]

ராஜவித்யாராஜகுஹ்யயோகமெனும் ஒன்பதாவது அத்யாயம் முற்றிற்று.

பத்தாவது அத்யாயம்

விபூதியோகம்

श्री भगवानुवाच -

भूय एव महाबाहो श्रृणु मे परमं वचः ।
यत्तेऽहं प्रीयमाणाय वक्ष्यामि हितकाम्यया ॥ १

பூய ஏவ மஹாபாஹோ ச்ருணு மே பரமம் வச: I
யத்தேஅஹம் ப்ரீயமாணாய வக்ஷ்யாமி ஹிதகாம்யயா II 1

அர்ஜுனா! அன்புடன் கூடிய உன்னுடைய நன்மையைக் கருதி, மறுபடி உனக்குச் சொல்லப்போகும் மேலான என் வாக்யத்தைக் கேள்.

[प्रीयमाणाय (ப்ரீயமாணாய)=(1) என் சொல்லைக்கேட்டு அம்ருதமுண்டவன்போல் மகிழ்ச்சியடைகிற—ஸ்ரீ சங்கரர், (2) என் மேன்மையைக்கேட்டு மகிழ்ச்சியடைகிற—ஸ்ரீ ராமானுஜர், (3) என் சொல்லைக்கேட்டு ஸந்தோஷிக்கிற—ஸ்ரீ மத்வர், ஸ்ரீ ராகவேந்த்ரர்.

परमम् (பரமம்)=(1) பரமாத்மஸ்வரூபத்தை ப்ரகாசமாக்கும்— ஸ்ரீ சங்கரர், (2) என்னுடைய ஏற்றத்தை அதிகம் வெளிப்படுத்தும் —ஸ்ரீ ராமானுஜர்].

न मे विदुः सुरगणाः प्रभवं न महर्षयः ।
अहमादिर्हि देवानां महर्षीणां च सर्वशः ॥ २

ந மே விது: ஸுரகணா: ப்ரபவம் ந மஹர்ஷய: I
அஹமாதிர்ஹி தேவாநாம் மஹர்ஷீணாம் ச ஸர்வச: II 2

என் மேம்பட்ட அவதார மஹிமையைத் தேவதைகளும், மஹரிஷிகளும் அறியவில்லை. ஏனெனில் நான் அவர்களுக்கு எவ்வகையிலும் காரணமாகவுள்ளேன்.

[ஸ்ரீ ராமானுஜர் :— நான் தேவதைகள் ரிஷிகளுக்கு ஆதிகாரணன். என்னால் கொடுக்கப்பட்ட அவர்களுடைய அறிவு அற்பமானது, என் மஹிமையை அறியப் போதுமானதல்ல.]

यो मामजमनादिं च वेत्ति लोकमहेश्वरम् ।
असंमूढः स मर्त्येषु सर्वपापैः प्रमुच्यते ॥ ३

யோ மாமஜமனாதிம் ச வேத்தி லோகமஹேச்வரம் ।
அஸம்மூட: ஸ மர்த்யேஷு ஸர்வபாபை: ப்ரமுச்யதே ॥ 3

எவன் என்னை ஆதியற்றவன், பிறப்பற்றவன். எல்லா உலகிற்குமீசன் என அறிகிறானோ, அவன் மானிடருள் அஞானமற்றவன், எல்லாப் பாவங்களிலிருந்தும் விடுபடுகிறான். (கர்மங்களின் கட்டிலிருந்து விடுபடுவான்)

[अजम् (அஜம்) = பிறப்பற்ற, உற்பத்தியுடைய அசேதனப் பொருள்கள், ஸம்ஸாரியான சேதனப்பொருள்களுக்கும் வேறானவன்.

लोकमहेश्वरम् (லோக மஹேச்வரம்) = பகவான் அனாதியாக, எல்லா உலகங்களுக்கும், அவைகளின் அதிபர்களுக்கும் ஈச்வரன் —ஸ்ரீராமானுஜர்.]

बुद्धिर्ज्ञानमसंमोहः क्षमा सत्यं दमः शमः ।
सुखं दुःखं भवोऽभावो भयं च अभयमेव च ॥ ४

புத்திர்ஞானமஸம்மோஹ: க்ஷமா ஸத்யம் தம: சம: ।
ஸுகம் து:கம் பவோஅபாவோ பயம் ச அபயமேவ ச ॥ 4

अहिंसा समता तुष्टिस्तपो दानं यशोऽयशः ।
भवन्ति भावा भूतानां मत्त एव पृथग्विधाः ॥ ५

அஹிம்ஸா ஸமதா துஷ்டிஸ்தபோ தானம் யசோஅயச: ।
பவந்தி பாவா பூதானாம் மத்த ஏவ ப்ருதக்விதா: ॥ 5

புத்தி, அறிவு, மோஹமின்மை, பொறுமை, உண்மை, புலன்களையடக்கல், அந்தக்கரண நிக்ரஹம் (மனதை யடக்கல்), ஸுகம், துயரம், உற்பத்தி, அழிவு, பயம், பயமின்மை, துன்பம் செய்யாமை, ஸம நிலையிலிருத்தல், கிடைத்தவரையில் மகிழ்ச்சி, தவம், தானம் (கொடை), புகழ், அபகீர்த்தி இவை யாவும் பிராணிகளுக்கு (உயி ருள்ளவற்றிற்கு) என்னாலேயே ஏற்படுகின்றன.

[असंमोहः (அஸம்மோஹ:) (1) அறியவேண்டிய வற்றை செவ்வனே தெரிந்துகொள்ளல்— ஸ்ரீ சங்கரர், (2) பிரமை நீக்கம்— ஸ்ரீ ராமானுஜர், (3) கார்யங்களில் ஆசையின்மை அல்லது மித்யாஞானமின்மை —ஸ்ரீ ராக வேந்த்ரர்.

सत्यम् (ஸத்யம்)=(1) தான் கேட்டு, பார்த்து, அனுப வித்ததைப் பிறருக்குச் சரியாகச் சொல்வது —ஸ்ரீசங்கரர், ஸ்ரீ ராமானுஜர். (2) உண்மை அறிவுடன் கூடிய அனுஷ் டானம் செய்தல் அல்லது உண்மைப் பேச்சு —ஸ்ரீ ராக வேந்த்ரர்.

शमः (சம:) பகவன்னிஷ்டை —ஸ்ரீ மத்வர், ஸ்ரீராக வேந்த்ரர்.

तपः (தப:)=(1) புலன்களையடக்கி உடலை வருத்தும் வ்ரதங்களைச் செய்தல்—ஸ்ரீ சங்கரர், (2) ஏற்பட்டுள்ள போகங்களைக் குறைத்துச் சாத்திரப்படி வ்ரதங்களால் உடலை வருந்தச் செய்தல் —ஸ்ரீ ராமானுஜர். (3) ப்ரம்ம சர்யம் முதலிய வ்ரதங்கள் —ஸ்ரீ ராகவேந்த்ரர்.

दानम् (தானம்)=(1) தனக்குரிய பொருள்களுள் தன் சக்திக்கியன்ற மட்டில் பிறருக்குக் கொடுத்தல் —ஸ்ரீசங் கரர், (2) தனக்கு இன்பம் தரும் தன் பொருள்களைப் பிறருக்குக் கொடுத்தல்— ஸ்ரீ ராமானுஜர். (3) நேர்மை யான வழியில் தான் ஈட்டிய பொருளைப் பிறருக்குக் கொடுத்தல் —ஸ்ரீ ராகவேந்த்ரர்.

यशः (யச:) = (1) புண்யத்தாலுண்டான புகழ்— ஸ்ரீ சங்கரர், (2) பிறர் நல்லவன் எனச் சொல்லுதல்— ஸ்ரீ ராமானுஜர்]

महर्षयः सप्त पूर्वे चत्वारो मनवस्तथा ।
मद्भावा मानसा जाता येषां लोक इमाः प्रजाः ॥ ६

மஹர்ஷய: ஸப்த பூர்வே சத்வாரோ மனவஸ்ததா I
மத்பவா மானஸா ஜாதா யேஷாம் லோக இமா: ப்ரஜா: II 6

பூர்வ காலத்தில் ஏழு ரிஷிகளும், நான்கு மனுக்களும் என் மனதின் ஸங்கல்பத்தினுலுண்டானவர்கள்; என்னைத் தியானிப்பவர்கள் (அல்லது என் விஷ்ணு ஸம்பந்தமான ஸாமர்த்யமுடையவர்). அவர்களாலேயே இவ்வுலகிலுள்ள எல்லா ப்ரஜைகளுமுண்டானுர்கள்.

[ஸ்ரீதரர்.— உலகிலுள்ள ப்ரஜைகள் யாவரும் எவர்களிடமிருந்து உண்டானுர்களோ அந்த 7 ரிஷிகளும், ஸனகாதியர் நால்வரும், ஸ்வாயம்புவர் முதலிய மனுக்களும், என் மஹிமையையுடையவர்கள். ஹிரண்யகர்ப ரூபனுன என் மன எண்ணத்தாலுண்டானவர்கள். இவர்களே, மகன், மகனின் மகன், குரு, சீடன் என்ற கிரமத்தில் உலக மக்களைப் படைத்தார்கள்.

ஸ்ரீ ராமானுஜர் :— பழங்காலம் முதல், ப்ருகு முதலிய 7 ரிஷிகளை ச்ருஷ்டிக்கவும், ச்ருஷ்டிக்கப்பட்டவர்களை ரக்ஷிக்க 4 மனுக்களை பிரும்மா மனதால் படைத்தார். அக்காலம் முதல் பிரளயம் வரை படைப்பையும், காத்தலையும் செய்துவரும் இவர்கள் என் ஸங்கல்பத்தைத் தழுவி நடப்பவர்கள்.

ஸ்ரீ மத்வர், ஸ்ரீ ராகவேந்த்ரர் :— பூர்வீகர்களான மரீசி, அத்ரி, அங்கிரஸ், புலஸ்த்யர், புலகர், இரது. வசிஷ்டர் என்ற 7 ரிஷிகளும், ஸ்வாயம்புவ, ஸ்வாரோசிஷ, ரைவத, உத்தம என்ற 4 மனுக்களும், என்

மனத் திட்டத்தால் பிரும்மாவின் அந்தர்யாமியான என்ஞல் பிரும்மாவின் மூலம் உண்டாக்கப்பட்டனர்.

குறிப்பு:— மனுக்கள் 14 என விஷ்ணு புராணத்தில் (அம்சம் 1. அத். 2) சொல்லப்பட்டுள்ளது]

एतां विभूतिं योगं च मम यो वेत्ति तत्त्वतः ।
सोऽविकम्पेन योगेन युज्यते नात्र संशयः ॥ ७

ஏதாம் விபூதிம் யோகம் ச மம யோ வேத்தி தத்த்வத: 1
ஸோஅவிகம்பேன யோகேன யுஜ்யதே நாத்ர ஸம்சய: 11 7

மேற் சொல்லப்பட்ட என் விபூதி ' ருபத்தையும் (மஹிமையின் உருவையும்) யோகைச்வர்யத்தையும் உண்மையாக எவன் அறிகிருனே அவன் நிச்சயமான அறிவோடு கூடியவன். இதில் ஐயமில்லை.

[योगम् (யோகம்) = (1) யுக்தி, யோகைச்வர்ய ஸாமர்த்யம் அல்லது எல்லாம் அறியும் தன்மை —ஸ்ரீ சங்கரர், (2) முடிவற்ற கல்யாண குணங்கள் —ஸ்ரீ ராமானுஜர், (3) புத்தி முதலியவற்றை படைக்கும் திறமை —ஸ்ரீ ராகவேந்த்ரர்.

योगेन (யோகேன) = (1) மெய்யறிவோடு —ஸ்ரீ சங்கரர், (2) பக்தி யோகத்தோடு —ஸ்ரீராமானுஜர், (3) தியான உபாயத்தோடு —ஸ்ரீ ராகவேந்த்ரர்].

अहं सर्वस्य प्रभवो मत्तः सर्वं प्रवर्तते ।
इति मत्वा भजन्ते मां बुधा भावसमन्विताः ॥ ८

அஹம் ஸர்வஸ்ய ப்ரபவோ மத்த: ஸர்வம் ப்ரவர்ததே 1
இதி மத்வா பஜந்தே மாம் புதா பாவஸமன்விதா: 11 8

நான் எல்லா உலகின் உற்பத்திக்குக் காரணம். எல்லாம் என்னுலேயே உண்டாகின்றது. இப்படி

அறிந்து, விவேகிகள் அன்புடன் என்னை ஸேவிக்கின்றனர்.

[अहम् (அஹம்)=வாஸுதேவனெனும் பரப்ருஹ்மமான நான் —ஸ்ரீ சங்கரர்.

प्रभव: (ப்ரபவ:)=ப்ருகு, மனு முதலியோரின் மூலம் உற்பத்தி காரணம் —ஸ்ரீதரர்.

सर्वम् (ஸர்வம்)=(1) இருப்பு, அழிவு, கர்மம், கர்ம பலன், அவைகளின் அனுபவம் முதலிய விகாரமடைந்த ஜகத்— ஸ்ரீ சங்கரர், (2) புத்திஞ்ஞானம், அஸம்மோஹம் முதலியன —ஸ்ரீதரர்.

बुधा: (புதா:)=(1) பரமார்த்த தத்வத்தையறிந்தவர் —ஸ்ரீ சங்கரர், (2) ஞானிகள் —ஸ்ரீ ராமானுஜர், ஸ்ரீ ராகவேந்த்ரர்]

मच्चित्ता मद्गतप्राणा बोधयन्तः परस्परम् ।
कथयन्तश्च मां नित्यं तुष्यन्ति च रमन्ति च ॥ ९

மச்சித்தா மத்கதப்ராணா போதயந்த: பரஸ்பரம் ।
கதயந்தஸ்ச மாம் நித்யம் துஷ்யந்தி ச ஸ்மரந்தி ச ॥ 9

முன் சொல்லப்பட்ட விவேகிகள், மனதையும், புலன்களையும் அல்லது ப்ராணன்களையும் என்னிடம் வைத்து, என்னைப்பற்றி ஒருவருக்கொருவர் போதனைசெய்து கொண்டும், என்னைப்பற்றி போற்றி பாடிக்கொண்டும், எப்போதும் மகிழ்ச்சியையும் ஸுகத்தையும் அடைகின்றனர்.

[तुष्यन्ति (துஷ்யந்தி)=(1) பகவத் குணங்களைச் சொல்வதால் மகிழ்ச்சி அடைகின்றனர் —ஸ்ரீ ராமானுஜர், (2) புலன்களுக்குரிய பொருள்களிலிருந்து விடுதலையடைகின்றனர் —ஸ்ரீராகவேந்த்ரர்.]

तेषां सततयुक्तानां भजतां प्रीतिपूर्वकम् ।
ददामि बुद्धियोगं तं येन मामुपयान्ति ते ॥ १०

தேஷாம் ஸததயுக்தானும் பஜதாம் ப்ரீதிபூர்வகம் ।
ததாமி புத்தியோகம் தம் யேன மாமுபயாந்தி தே ॥ 10

எதனுல் விவேகிகள் என்னையடைவார்களோ, அந்த புத்தியோகத்தை, எப்போதும் என்னிடம் மனம் வைத்த வர்களாக அன்புடன் என்னைப் பஜிக்கிறவர்கட்குக் கொடுக்கிறேன்.

[बुद्धियोगम् (புத்தியோகம்)=(1) ஆத்ம தத்வ விஷய மான நிச்சய அறிவின் பற்றுதல் —ஸ்ரீ சங்கரர், (2) ஞான யோகத்தை —ஸ்ரீதரர், (3) பக்குவமான நிலையையடைந் துள்ள புத்தியோகத்தை —ஸ்ரீ ராமானுஜர், (4) ஞானரூப மாகிற முக்தியினுபாயத்தை —ஸ்ரீ ராகவேந்த்ரர்.]

तेषामेवानुकम्पार्थमहमज्ञानजं तमः ।
नाशयाम्यात्मभावस्थो ज्ञानदीपेन भास्वता ॥ ११

தேஷாமேவானுகம்பார்தமஹமஞானஜம் தம: ।
நாசயாம்யாத்மபாவஸ்தோ ஞானதீபேன பாஸ்வதா ॥ 11

பக்தர்களின் அறியாமையாலுண்டாயிருக்கும் ஸம் ஸாரமாகிய இருளை பிரகாசிக்கும் ஞானமெனும் (அறி வெனும்) விளக்கினுல், அருள் புரியும் வகையில் அவர் களின் (விவேகிகளின்) புத்தியிலிருந்துகொண்டு போக் கடிக்கிறேன்.

[तमः (தம:)=(1) உண்மையற்றதை உண்மையாக எடுத்துக்கொள்ளும் புத்தி மாருட்டமான இருளை —ஸ்ரீசங் கரர், (2) வெகு நாளாக அனுஸரித்து வந்த விஷயாபி மானமாகிய அறியாமையை —ஸ்ரீ ராமானுஜர், (3) ஸூக துக்க ரூபமான கட்டை —ஸ்ரீ ராகவேந்த்ரர்.

ஸ்ரீ சங்கரர் :— ஞானதீபமென்பது—பக்தியான எண்ணெய், தியானிக்கவேண்டுமெனும் ஏவுதலான காற்று, ப்ரஹ்மசர்யம் முதலான ஸம்ஸ்காரத்தினுலுண்டான விவேகமாகிற திரி, விரக்தியுடைய மனதான பாத்ரம் (விளக்கு), விஷயங்களில் பற்றற்ற, விருப்பு வெறுப் பற்ற எண்ணமான காற்று அதிகம் வீசாத இடம், நிலேத்த தியானத்தாலுண்டாகும் நிச்சய ஞானமாகிற ஒளி, இவைகளுடன் கூடிய தீபம்]

अर्जुन उवाच -

परं ब्रह्म परं धाम पवित्रं परमं भवान् ।
पुरुषं शाश्वतं दिव्यमादिदेवमजं विभुम् ॥ १२

அர்ஜுன உவாச -

பரம் ப்ரஹ்ம பரம் தாம பவித்ரம் பரமம் பவான் ।
புருஷம் சாச்வதம் திவ்யமாதிதேவமஜம் விபும் ॥ 12

आहुस्त्वामृषयः सर्वे देवर्षिर्नारदस्तथा ।
असितो देवलो व्यासः स्वयं चैव ब्रवीषि मे ॥ १३

ஆஹுஸ்த்வாம்ருஷய: ஸர்வே தேவர்ஷிர்நாரதஸ்ததா ।
அஸிதோ தேவலோ வ்யாஸ: ஸ்வயம் சைவ ப்ரவீஷி மே ॥

அர்ஜுனன் சொல்வது :— பரப்ரஹ்மமும், மேலான அடையுமிடமும், உத்தமமான பரிசுத்தமான பொருளும், நீரே. உம்மை நித்யனுகவும் (அழிவற்றவனுகவும்) ஒளி மயமான உருவுடையவராகவும், தெய்வங்களின் ஆதியாகவும், பிறப்பற்றவனுகவும், எங்கும் வியாபித்தவராகவும், புருஷனுகவும், எல்லா முனிவர்களும், தேவரிஷியான நாரதரும், அஸிதர், தேவலர், வ்யாஸர் ஆகிய முனிவர்களும் சொல்லியிருக்கின்றனர். அப்படியே நீரும் எனக்குச் சொல்கிறீர்.

[परं धाम (பரம் தாம)=உத்தமமான தேஜஸ் —ஸ்ரீ சங்கரர், ஸ்ரீ ராமானுஜர்.

विभुं (விபும்) (1) ஆளும் தன்மையுடையவர் —ஸ்ரீ சங்கரர், (2) பலவித உருவங்களாகக் காண்பவர் —ஸ்ரீமத்வர், (3) எல்லாவற்றிலும் வியாபித்தும், வெவ்வேருகவுமிருப்பதால் விபு— ஸ்ரீராகவேந்த்ரர்]

सर्वमेतदृतं मन्ये यन्मां वदसि केशव ।
न हि ते भगवन्व्यक्तिं विदुर्देवा न दानवाः ॥ १४

ஸர்வமேதத்ருதம் மன்யே யன்மாம் வதஸி கேசவ ।
ந ஹி தே பகவன்வ்யக்திம் விதுர்தேவா ந தானவா: ॥ 14

ஓ ! கேசவா ! என்னிடம் எதையெல்லாம் சொல்கிறீரோ அவை யாவும் உண்மை என அறிகிறேன். ஓ ! பகவானே ! உம்முடைய அவதார மஹிமையைத் தேவர்கள் அறியவில்லை. அரக்கர்களும் அறியவில்லை. (தங்களின் நன்மைக்காக அவதாரமெனத் தேவர்களும், தங்கள் அழிவுக்கென அரக்கர்களும் அறியவில்லை).

स्वयमेवात्मनात्मानं वेत्थ त्वं पुरुषोत्तम ।
भूतभावन भूतेश देवदेव जगत्पते ॥ १५

ஸ்வயமேவாத்மனுத்மானம் வேத்த த்வம் புருஷோத்தம ।
பூதபாவன பூதேச தேவதேவ ஜகத்பதே ॥ 15

மானிடருள் மேலோனும், பூதங்களை (பஞ்ச பூதங்களை) உண்டாக்கியவரும், பிராணிகளைப் படைப்பவரும், ஸூர்யன் முதலிய தேவதைகளை ஒளி மயமாக்குபவரும், எல்லா உலகையும் பரிபாலிப்பவருமான நீர், உம்மாலேயே நீரே அறிகிறீர். [உம்முடைய ஞானம், சக்தி, திறமை, முதலியவற்றை முழுவதும் அறிய ஒருவருக்கும் சக்தி கிடையாது. எனவே உம்மை அறிந்தவர் நீரே எனக்கருத்து —ஸ்ரீசங்கரர்].

वक्तुमर्हस्यशेषेण दिव्या ह्यात्म विभूतयः ।
याभिर्विभूतिभिर्लोकानिमांस्त्वं व्याप्य तिष्ठसि ॥ १६

வக்துமர்ஹஸ்யசேஷேண திவ்யா ஹ்யாத்ம விபூதய: 1
யாபிர்விபூதிபிர்லோகானிமாம்ஸ்த்வம் வ்யாப்ய திஷ்டஸி 11

உம்முடைய விபூதி ரூபங்கள் (மேன்மையின் உருவங்கள்) மிக அற்புதமானவையல்லவா? எந்த விபூதி ரூபங்களால் இவ்வுலகங்களை வியாபித்துக்கொண்டுள்ளீரோ, அவை முழுவதையும் சொல்ல நீரே தகுந்தவர்.

[याभिः विभूतिभिः (யாபி: விபூதிபி:)=(1) எந்த ஆத்மாவின் மேன்மையினை பரப்பினுல் —ஸ்ரீ சங்கரர், (2) எந்த நியமன விசேஷங்களால் —ஸ்ரீ ராமானுஜர், (3) ராமன், கிருஷ்ணன் போன்ற மகிமை தரும் விஷ்ணு உருவங்களால் —ஸ்ரீ ராகவேந்த்ரர்].

कथं विद्यामहं योगिंस्त्वां सदा परिचिन्तयन् ।
केषु केषु च भावेषु चिन्त्योऽसि भगवन्मया ॥ १७

கதம் வித்யாமஹம் யோகிம்ஸ்த்வாம் ஸதா பரிசிந்தயன் 1
கேஷு கேஷு ச பாவேஷு சிந்த்யோஅஸி பகவன்மயா117

எல்லாச் செல்வமும் முழுதும் படைத்த பகவானே! எப்படி எப்போதும் தியானித்து உம்மையறிவேன்? எந்தெந்தப் பொருள்களில் என்னுல் தியானிக்கத் தகுந்தவராக இருக்கின்றீர்?

[ஸ்ரீ ராமானுஜர்:— பக்தி யோகத்துடன் கூடி, உம்மை எப்போதும் நினைக்க ஆரம்பித்துள்ள நான், பூர்ணமான ஐச்வர்யத்தைப் படைத்த உம்மை எப்படி அறிவேன்? முன் நீர் சொன்ன புத்தி, ஞானம், அஸம்மோஹம் முதலியவற்றைக் காட்டிலும் வேருன எந்த எந்த பொருள்களில் எவ்விதம் ஏவுகின்றவனுய், என்னுல் தியானிக்கத்தக்கவராக இருக்கிறீர்]

विस्तरेणात्मनो योगं विभूतिं च जनार्दन ।
भूयः कथय तृप्तिर्हि शृण्वतो नास्ति मेऽमृतम् ॥ १८

விஸ்தரேணாத்மனோ யோகம் விபூதிம் ச ஜனார்தன 1
பூய: கதய த்ருப்திர்ஹி ச்ருண்வதோ நாஸ்தி மேஅம்ருதம் ll

ஓ! ஜனார்த்தன! உம்முடைய யோகத்தையும், மஹிமையையும் விரிவாக மறுபடி சொல்லும். உம் வார்த்தைகளான அம்ருதத்தைக் கேட்டும் எனக்கு போது மென்ற எண்ணம் ஏற்படுவதில்லை.

[योगम् (யோகம்)=(1) யோகம் எனும் ஐச்வர்யமாகிற எல்லாச் சக்திகளும் —ஸ்ரீ சங்கரர், (2) ச்ருஷ்டித்திறனை —ஸ்ரீ ராமானுஜர்.

विभूतिम् (விபூதிம்)=(1) தியானம் செய்யவேண்டிய வஸ்துக்களின் கூட்டத்தை —ஸ்ரீ சங்கரர், (2) நியமனத்தை —ஸ்ரீ ராமானுஜர், (3) வஸ்துக்களுக்கு யோக்யதை கொடுக்கிறதும், பலவிதமாயுமிருக்கிற பரமாத்ம ஸ்வரூபத்தை —ஸ்ரீ ராகவேந்த்ரர்]

श्री भगवानुवाच -

हन्त ते कथयिष्यामि दिव्या ह्यात्मविभूतयः ।
प्राधान्यतः कुरुश्रेष्ठ नास्त्यन्तो विस्तरस्य मे ॥ १९

ஸ்ரீ பகவானுவாச -

ஹந்த தே கதயிஷ்யாமி திவ்யா ஹ்யாத்மவிபூதய: 1
ப்ராதான்யத: குருச்ரேஷ்ட நாஸ்த்யந்தோ விஸ்தரஸ்ய மே ll

ஸ்ரீ பகவான் சொல்வது:— ஓ! குருகுலத்தின் மேலோனே! தயவுக்குத் தகுதியான உனக்கு அற்புத மான என் விபூதி ரூபங்களில் (மஹிமையுடன் கூடிய

ரூபங்களில்) முக்யமானவற்றை சொல்கிறேன். ஏனெனில் என்னுடைய விபூதி ரூபங்களின் அளவுக்கு முடிவோ எல்லேயோ கிடையாது.

[हन्त (ஹந்த) = (1) இப்போது —ஸ்ரீ சங்கரர், (2) மகிழ்ச்சி — ஸ்ரீ ராகவேந்த்ரர்.

प्राधान्यत: (ப்ராதான்யத:) = ஸ்ரீ சங்கரர்— எந்தெந்த வஸ்துக்களில் விசேஷமான மஹிமைகள் எவைகளோ அவற்றை]

अहमात्मा गुडाकेश सर्वभूताशयस्थितः ।
अहमादिश्च मध्यं च भूतानामन्त एव च ॥ २०

அஹமாத்மா குடாகேச ஸர்வபூதாசயஸ்தித: I
அஹமாதிஸ்ச மத்யம்ச பூதானுமந்த ஏவ ச II 20

தூக்கத்தை வென்ற அர்ஜுன! எல்லாப் பிராணிகளின் ஹ்ருதயத்திலிருந்து கொண்டு ஏவுகிற பரமாத்மா நானே. பூதங்களின் ஆரம்பம், இடை முடிவுகளும் நானே.

[ஸ்ரீ சங்கரர் :— ஹ்ருதயத்திலிருப்பவனுக என்னே தியானம் செய்யவேண்டும். அது முடியாதவன் படைப்பு, காத்தல், அழித்தல் ஆகியவற்றிற்குக் காரணமாக என்னேத் தியானிக்கலாம்.

ஸ்ரீ ராமானுஜர் :— பிராணிகளின் உடலுக்கு ஆதாரமாகவும், நியாமகனுகவும், சேஷியாகவுமிருக்கிறேன். இப்படியுள்ள எல்லாப் பிராணிகளுக்கும், உற்பத்தி, இருப்பு, அழிவுக்குக் காரணமாகவுமுள்ளேன்].

आदित्यानामहं विष्णुर्ज्योतिषां रविरंशुमान् ।
मरीचिर्मरुतामस्मि नक्षत्राणामहं शशी ॥ २१

ஆதித்யானுமஹம் விஷ்ணுர்ஜ்யோதிஷாம் ரவிரம்சுமான் I
மரீசிர்மருதாமஸ்மி நக்ஷத்ராணுமஹம் சசீ II 21

பன்னிரண்டு ஸூர்யர்களுள் நான் விஷ்ணுவெனும் மேலான ஸூர்யன். ஒளி மிகு பொருள்களுள் நான் எங்கும் பரவிய கிரணங்களையுடைய ஸூர்யன். நக்ஷத்ரங்களுக்குள் நான் சந்திரன். ஏழு வகைக்காற்றுகளுள் நான் மரீசி எனும் காற்று (அல்லது மருத் எனும் காற்றே நான்).

[ஸ்ரீ ராமானுஜர்:— எல்லாப் பதங்களுக்கும் 'மேலான' என்ற அடைமொழி சேர்த்துக்கொள்ளவும். நக்ஷத்ரங்களுக்கு எஜமானனுன சந்திரன் நானே.

ஸ்ரீ ராகவேந்த்ரர்:— இந்த ச்லோகத்தில் சொல்லப் பட்டுள்ள விஷ்ணு ஸர்வ வ்யாபியாகவும், எல்லாவற்றிலும் அந்தர்யாமியாக (உட்புகுந்தும்) உள்ள மஹா விஷ்ணு.]

वेदानां सामवेदोऽस्मि देवानामस्मि वासवः ।
इन्द्रियाणां मनश्चास्मि भूतानामस्मि चेतना ॥ २२

வேதாநாம் ஸாமவேதோஅஸ்மி தேவாநாமஸ்மி வாஸவ: ।
இந்த்ரியாணாம் மனஸ்சாஸ்மி பூதாநாமஸ்மி சேதனு ॥ 22

வேதங்களுள் ஸாமவேதமும், தேவர்களுள் இந்த்ரனும், புலன்களில் மனதும், பூதங்களில் அறிவும் நானே.

[ஸ்ரீ ராமானுஜர்:— பூதங்களுக்குள் அறிவு படைத்தவைகளின் அறிவும் நானே (பூதானும் சேதனு)]

रुद्राणां शङ्करश्चास्मि वित्तेशो यक्षरक्षसाम् ।
वसूनां पावकश्चास्मि मेरुः शिखरिणामहम् ॥ २३

ருத்ராணாம் சங்கரஸ்சாஸ்மி வித்தேசோ யக்ஷரக்ஷஸாம் ।
வஸூனும் பாவகஸ்சாஸ்மி மேரு: சிகரிணுமஹம் ॥ 23

ருத்ரர்களுக்குள் சங்கரரும், யக்ஷர் அரக்கர் இவர்களுக்குள் குபேரனும், வஸுக்களுள் அக்னியும், மலைச் சிகரங்களுள் மேரு சிகரமும் நானே.

[குறிப்பு: 11 ருத்ரர்கள்:— அஜன், ஏகபாதன், அஹிர்புத்ன்யன், த்வஷ்டா, ருத்ரன், ஹரன், சம்பு, த்ரயம்பகன், அபராஜிதன், ஈசானன், த்ரிபுவனன். இவர்களுள் சம்புதான் சங்கரன் எனப்படுகிறுன்.]

पुरोधसां च मुख्यं मां विद्धि पार्थ बृहस्पतिम् ।
सेनानीनामहं स्कन्दः सरसामस्मि सागरः ॥ २४

புரோதஸாம் ச முக்யம் மாம் வித்தி பார்த ப்ருஹஸ்பதிம் ।
ஸேனானீனாமஹம் ஸ்கந்த: ஸரஸாமஸ்மி ஸாகர: ॥ 24

ஓ! அர்ஜுன! புரோகிதர்களுள் சிரேஷ்டரான ப்ரஹஸ்பதி நான் என அறி. படைத்தலைவர்களுள் ஸ்கந்தனாகவும் (முருகனாகவும்), நீர் நிலையங்களுள் கடலாகவும் நான் இருக்கிறேன்.

महर्षीणां भृगुरहं गिरामस्म्येकमक्षरम् ।
यज्ञानां जपयज्ञोऽस्मि स्थावराणां हिमालयः ॥ २५

மஹர்ஷீணாம் ப்ருகுரஹம் கிராமஸ்ம்யேகமக்ஷரம்
யஞ்ஞானாம் ஜபயஞ்ஞோஅஸ்மி ஸ்தாவராணாம் ஹிமாலய: ॥

மாமுனிவருள் ப்ருகுமுனிவராயும், சொற்களுள் ஒரெழுத்துள்ள ஓம்காரமாகவும், அசைவற்றனவற்றுள் இமய மலையாகவும் நான் இருக்கிறேன்.

अश्वत्थः सर्ववृक्षाणां देवर्षीणां च नारदः ।
गन्धर्वाणां चित्ररथः सिद्धानां कपिलो मुनिः ॥ २६

அச்வத்த: ஸர்வவ்ருக்ஷாணாம் தேவர்ஷீணாம் ச நாரத: ।
கந்தர்வாணாம் சித்ரரத: ஸித்தானாம் கபிலோ முனி: ॥ 26

उच्चैःश्रवसमश्वानां विद्धिमाममृतोद्भवम् ।
ऐरावतं गजेन्द्राणां नराणां च नराधिपम् ॥ २७

உச்சை:ச்ரவஸமச்வாநாம் வித்திமாம்அம்ருதோத்பவம் ।
ஐராவதம் கஜேந்த்ராணும் நராணும் ச நராதிபம் ॥ 27

மரங்களுக்குள் அரச மரமாகவும், தேவ ரிஷிகளுள் நாரதராகவும், கந்தர்வர்களுள் சித்ரரதனுகவும், ஸித்தர் களுள் கபில முனியாகவும், குதிரைகளுள் உச்சைச்ரவஸ் என்ற குதிரையாகவும், மேலான யானைகளுள் ஐராவத மாகவும், மானிடருள் அரசனுகவும், நானிருப்பதை அறிந்துகொள்.

[सिद्धानाम् (ஸித்தானும்)=பிறவி முதல் தர்மம், ஞானம், ஐச்வர்யாதிசயம் ஆகியவற்றையுடயவர்களுள் —ஸ்ரீ சங்கரர்.]

आयुधानामहं वज्रं धेनूनामस्मि कामधुक् ।
प्रजनश्चास्मि कन्दर्पः सर्पाणामस्मि वासुकिः ॥ २८

ஆயுதாநுமஹம் வஜ்ரம் தேனூநாமஸ்மி காமதுக் ।
ப்ரஜனஸ்சாஸ்மி கந்தர்ப: ஸர்பாணுமஸ்மி வாஸுகி: ॥ 28

ஆயுதங்களுள் வஜ்ராயுதமும், பசுக்களுள் காமதேனு வும், மக்களின் உற்பத்திக்குக் காரணமான மன்மதனும், பாம்புகளுள் வாஸுகியும் நானே.

[விஷ்ணு சக்ரம் முதலியனவற்றை சொல்லாது வஜ்ராயுதம் சொல்லப்பட்டது ஏனெனில் உண்டாக்கப் பட்ட போர் கருவிகளில் வஜ்ராயுதம் மேலானது— ஸ்ரீ ராமானுஜர். வஜ்ராயுதம் ததீசி முனிவரின் முது கெலும்பால் செய்யப்பட்டது —ஸ்ரீ சங்கரர்.

[सर्पाणाम् (ஸர்பாணும்)=(1) விஷமுள்ள பாம்புகளுள் —ஸ்ரீ சங்கரர், (2) ஒரு தலைப்பாம்புகளுள் —ஸ்ரீ ராமா னுஜர், ஸ்ரீ ராகவேந்த்ரர்]

अनन्तश्चास्मि नागानां वरुणो यादसामहम् ।
पितॄणां अर्यमा चास्मि यमः संयमतामहम् ॥ २९

அனந்தஸ்சாஸ்மி நாகானும் வருணோ யாதஸாமஹம் 1
பித்ருணும் அர்யமா சாஸ்மி யம: ஸம்யமதாமஹம் 11 29

நான், நாகப் பாம்புகளுள் ஆதிசேஷனுகவும், ஜலத்தி லுள்ள பிராணிகளுள் வருணனுகவும், பித்ரு தேவதை களுள் அர்யமனுகவும், தண்டிப்பவர்களுள் யமனுகவும் இருக்கிறேன்.

[नागानाम् (நாகானும்)=(1) விஷமில்லாத பாம்புகளுள் —ஸ்ரீதரர், (2) ஒன்றுக்கதிகமான தலைகளுள்ள பாம்புகளுள் —ஸ்ரீ ராமானுஜர், ஸ்ரீ ராகவேந்த்ரர்.

குறிப்பு:— பாம்புகளுள் நல்ல பாம்பு, நாகப்பாம்பு என இரு விசேஷ வகைகள் சொல்லப்படுவதுண்டு. புராணங் களின்படி நாகப்பாம்புகள் நாகலோகத்தில் வசிப்பன வெனக் கூறப்படுகின்றன].

प्रह्लादश्चास्मि दैत्यानां कालः कलयतामहम् ।
मृगाणां च मृगेन्द्रोऽहं वैनतेयश्च पक्षिणाम् ॥ ३०

ப்ரஹ்லாதஸ்சாஸ்மி தைத்யானும் கால: கலயதாமஹம் 1
ம்ருகாணும் ச ம்ருகேந்த்ரோஅஹம் வைநதேயஸ்ச
பக்ஷிணும் 11 30

அரக்கர்களுள் ப்ரஹ்லாதனும், கணக்கிடுவோர்களுள் காலமும், விலங்குகளுள் விலங்கரசனுன சிங்கமும், பக்ஷி களுக்குள் கருடனும் நானே.

[कलयतां कालः (கலயதாம் கால:)=(1) ஜனங்களுக்குத் துன்பம் இழைப்பவர்களுள் ம்ருத்யு —ஸ்ரீ ராமானுஜர், கட்டுப்படுத்தவர்களுள் காலன்— ஸ்ரீ ராகவேந்த்ரர்.

पवनः पवतामस्मि रामः शस्त्रभृतामहम् ।
झषाणां मकरश्चास्मि स्रोतसामस्मि जाह्नवी ३१

பவன: பவதாமஸ்மி ராம: சஸ்த்ரப்ருதாமஹம் 1
ஜஷாணும் மகரஸ்சாஸ்மி ஸ்ரோதஸாமஸ்மி ஜாஹ்னவீ ll

சுத்தம் செய்பவனற்றுள் காற்ருகவும், போர் கருவிகளேந்தி நிற்கும் வீரர்களுள் ராமனுகவும், மீன்களுக்குள் மகர மீனுகவும், ஆறுகளுள் கங்கையாகவும் நான் இருக்கிறேன்.

सर्गाणामादिरन्तश्च मध्यं चैवाहमर्जुन ।
अध्यात्मविद्या विद्यानां वादः प्रवदतामहम् ॥ ३२

ஸர்காணுமாதிரந்தஸ்ச மத்யம் சைவாஹமர்ஜுன 1
அத்யாத்மவித்யா வித்யாணும் வாத: ப்ரவததாமஹம் ll 32

ஓ! அர்ஜுனு! ஆகாயம் முதலிய பூதங்களுக்கு, உற்பத்தி, இருப்பு, அழிவு ஆகியனவும், கல்விகளுக்குள் ஆத்மஸ்வருபத்தைத் தெரிவிப்பதும், வாதாடுபவர்களின் வாதமும் நானே.

[ஸ்ரீ சங்கரர்:— இந்த அத்யாயத்தின் 20-ஆவது ச்லோகத்தில் சொல்லப்பட்டுள்ள பூத உற்பத்தி முதலியன பிராணிகளைப் பற்றியவை. இந்த (32) ச்லோகத்தில் சொல்லப்படும் உற்பத்தி முதலியன எல்லா உலகிற்கும் உரியவை. ஸ்ரீ ராமானுஜர்:— பிராணிகளைப் படைப்பவர், ரக்ஷிப்பவர், அழிப்பவர் யாரோ அவர்களும் நானே.]

अक्षराणामकारोऽस्मि द्वन्द्वः सामासिकस्य च ।
अहमेवाक्षयः कालो धाताऽहं विश्वतोमुखः ॥ ३३

அக்ஷராணுமகாரோஅஸ்மி த்வந்த்வ: ஸாமாஸிகஸ்யச 1
அஹமேவாக்ஷய: காலோ தாதாஅஹம் விச்வதோமுக: ll 33

எழுத்துக்களுள் அகாரமும், ஸமாஸங்களுள் (ஸம்ஸ்க்ருத மொழியில் சில சொற்களைச் சேர்த்து ஒரு கூட்டுச் சொல்லாக்குவது ஸமாஸமெனப்படும்) த்வந்த்வஸமாஸமும், நாசமற்ற காலமல்லது பரமேச்வரனும், கர்ம பலனைத்தரும் பிரம்மாவும் நானே.

[ஸ்ரீதரர்:— 30ஆவது ச்லோகத்தில் சொல்லப்பட்ட காலம் அழிவடையும் காலம். இங்கு அழிவற்ற காலமென்றதால் ஓடிக்கொண்டேயுள்ள அழிவற்ற காலமெனப் பொருள். धाता विश्वतोमुखः (தாதா விச்வதோமுக:) =(1) பல முகங்களுடனிருந்து பயன் தருபவன்— ஸ்ரீதரர், (2) சிருஷ்டி செய்யும் நான்முகப் பிரம்மா —ஸ்ரீராமானுஜர், (3) தாங்குபவனும் காப்பவனுமாகவுள்ள எங்கும் வியாபித்த முகம் முதலியன உள்ளவன்— ஸ்ரீ ராகவேந்த்ரர்].

मृत्युः सर्वहरश्चाहं उद्भवश्च भविष्यताम् ।
कीर्तिः श्रीर्वाक्च नारीणां स्मृतिर्मेधा धृतिः क्षमा ॥ ३४

ம்ருத்யு: ஸர்வஹரஸ்சாஹம் உத்பவஸ்ச பவிஷ்யதாம் 1
கீர்தி: ச்ரீர்வாக்ச நாரீணும் ஸ்ம்ருதிர்மேதா த்ருதி: க்ஷமா ll

எல்லாவற்றையும் அழிக்கும் ம்ருத்யுவும், பிறப்பனவற்றுள் பிறப்பும், பெண்டிருள் கீர்த்தியபிமானி தேவதையும், ஐச்வர்யாபிமானி தேவதையான லக்ஷ்மியும், வாக்தேவதையான ஸரஸ்வதியும், ஞாபகம், தைர்யம், பொறுமை இவைகளின் தேவதைகளும் நானே.

[मृत्युः सर्वहरः (ம்ருத்யு: ஸர்வஹர:) = (1) செல்வம், பிராணன் ஆகியவற்றை பரித்துச்செல்லும் இருவகை ம்ருத்யுவும்— ஸ்ரீ சங்கரர், (2) ஸம்ஹரிப்பவர்களுள் ஸர்வஸம்ஹாரனை ம்ருத்யுவும்— ஸ்ரீதரர், (3) எல்லாப் பிராணிகளையும் அபகரிக்கும் ம்ருத்யுவும்— ஸ்ரீ ராமானுஜர், (4) ம்ருத்யுவினுள்ளிருந்து எல்லாவற்றையும் அழிப்பவனும்— ஸ்ரீ ராகவேந்த்ரர்]

बृहत्साम तथा साम्नां गायत्री छन्दसामहम् ।
मासानां मार्गशीर्षोऽहमृतूनां कुसुमाकरः ॥ ३५

ப்ருஹத்ஸாம ததா ஸாம்னும் காயத்ரீ சந்தஸாமஹம் 1
மாஸானும் மார்கசீர்ஷோஅஹம்ருதூனும் குஸுமாகர: 11

ஸாமவேத கானங்களில் (ஸாமவேதப் பாட்டுகளுள்) ப்ருஹத்ஸாமமும், சந்தஸ்களில் (செய்யுள் இலக்கணம்) காயத்ரியும் நானே. அப்படியே மாதங்களில் மார்கழியும், ருதுக்களில் (பர்வ காலங்கள்) வஸந்த ருதுவும் நானே.

[குறிப்பு:— மார்கசீர்ஷமெனப்படும் மார்கழி மாதத்திற்கு ஆக்ரஹாயணிகமெனப் பெயருண்டு. அதன் பொருள் வருஷத்தைத் தொடங்கும் முதல் மாதம் என்பது. முற்காலத்தில் 'மார்கசீரிஷம்' முதல் மாதமாக இருந்தது]

द्यूतं छलयतामस्मि तेजस्तेजस्विनामहम् ।
जयोऽस्मि व्यवसायोऽस्मि सत्वं सत्ववतामहम् ॥ ३६

த்யூதம் சலயதாமஸ்மி தேஜஸ்தேஜஸ்விஞமஹம் 1
ஜயோஅஸ்மி வ்யவஸாயோஅஸ்மி ஸத்வம்
ஸத்வவதாமஹம் 11 36

பல வித மோசச் செயல்களுள் சூதாடலாகவும், காந்தியுடையவர்களின் காந்தியாகவும், ஜயமுடையவர்களின் ஜயமாகவும், முயற்சியுடையவர்களின் முயற்சியாகவும், ஸாதுக்களின் ஸத்வகுணமாகவும் நான் இருக்கிறேன்.

वृष्णीनां वासुदेवोऽस्मि पाण्डवानां धनंजयः ।
मुनीनामप्यहं व्यासः कवीनामुशना कविः ॥ ३७

வ்ருஷ்ணீனும் வாஸுதேவோஅஸ்மி பாண்டவானும்
தனம்ஜய: 1
முனீனுமப்யஹம் வ்யாஸ: கவீனுமுசஞ கவி: 11 37

யாதவர்களுள் வாஸுதேவனும், பாண்டவர்களுள் அர்ஜுனனும், முனிவர்களுள் வ்யாஸரும், கவிகளுள் சுக்ராசார்யரும் நானே.

[कवीनाम् (கவீனும்)=(1) ஸாதாரண புத்திக்கெட்டாத விஷயங்களை அறிகிறவர்களுள்— ஸ்ரீ சங்கரர், (2) வித்வான்களுள் —ஸ்ரீ ராமானுஜர்.]

दण्डो दमयतामस्मि नीतिरस्मि जिगीषताम् ।
मौनं चैवास्मि गुह्यानां ज्ञानं ज्ञानवतामहम् ॥ ३८

தண்டோ தமயதாமஸ்மி நீதிரஸ்மி ஜிகீஷதாம் ।
மௌனம் சைவாஸ்மி குஹ்யானும் ஞானம்
ஞானவதாமஹம் ॥ 38

தண்டிக்கிறவர்களின் தண்டனையும், வெல்வதற்காசையுள்ளவர்களின் நான்குவித உபாயங்களும், ரஹஸ்யங்களுள் மௌனமும் (பேசாதிருத்தலும்), தத்வஞானிகளின் அறிவும் நானே.

यच्चापि सर्वभूतानां बीजं तदहमर्जुन ।
न तदस्ति विना यत्स्यान्मया भूतं चराचरम् ॥ ३९

யச்சாபி ஸர்வபூதானும் பீஜம் ததஹமர்ஜுன ।
ந ததஸ்தி விஞ யத்ஸ்யாந்மயா பூதம் சராசரம் ॥ 39

ஓ! அர்ஜுனு! எல்லா பூதங்களுக்கும் காரணமெதுவோ அது நான். அசைவுள்ள, அசைவற்ற எது உள்ளதோ அது எதுவும் என்னையின்றிக்கிடையாது.

[ஸ்ரீ சங்கரர் :— நானில்லாமல் (பகவானில்லாமல்) பொருள்கள் எதுவும் கிடையாது, எல்லாம் நானே எனக் கருத்து.]

नान्तोऽस्ति मम दिव्यानां विभूतीनां परंतप ।
एष तूद्देशतः प्रोक्तो विभूतेर्विस्तरो मया ॥ ४०

நாந்தோஅஸ்தி மம திவ்யானும் விபூதீனும் பரம்தப ।
ஏஷ தூத்தேசத: ப்ரோக்தோ விபூதேர்விஸ்தரோ மயா ॥ 40

ஓ! அர்ஜுனு! விநோதமான என் விபூதி ரூபங்களுக்கு (மஹத்வ உருவங்களுக்கு) முடிவே கிடையாது. விஸ்தாரமான விபூதி ரூபம் உனக்கு என்னுல் சுருக்கமாகச் சொல்லப்பட்டது.

यद्यद्विभूतिमत्सत्त्वं श्रीमदूर्जितमेव वा ।
तत्तदेवावगच्छ त्वं मम तेजोंऽशसंभवम् ॥ ४१

யத்யத்விபூதிமத்ஸத்வம் ஸ்ரீமதூர்ஜிதமேவ வா ।
தத்ததேவாவகச்ச த்வம் மம தேஜோம்சஸம்பவம் ॥ 41

ஐச்வர்யம், காந்தி, குணுதிசயங்கள் ஆகியவற்றையுடைய பொருள்கள் எவை எவையோ, அவையெல்லாம் எனது தேஜஸின் (காந்தியின்) பாகத்திறுல் (அணுவினுல்) உண்டானதென அறி.

[श्रीमत् (ஸ்ரீமத்) = ஸம்பத்துடையதும் —ஸ்ரீதரர், ஸ்ரீ ராமானுஜர், ஸ்ரீ ராகவேந்த்ரர்.

ऊर्जितमेव वा (ஊர்ஜிதமேவ வா)=(1) ஊக்கத்தோடு கூடியவும்— ஸ்ரீ சங்கரர், (2) நற்கார்யங்களைச் செய்ய முயற்சியுடையவும் —ஸ்ரீ ராமானுஜர், (3) வளர்ச்சியுடையவும்— ஸ்ரீ ராகவேந்த்ரர்]

अथवा बहुनैतेन किं ज्ञातेन तवार्जुन ।
विष्टभ्याहमिदं कृत्स्नमेकांशेन स्थितो जगत् ॥ ४२

அதவா பஹுனைதேன கிம் ஞாதேன தவார்ஜுன 1
விஷ்டப்யாஹமிதம் க்ருத்ஸ்னமேகாம்சேன ஸ்திதோ
ஜகத் 11 42

ஓ! அர்ஜுன! சுருக்கமாய் அல்லது விவரமாகத் தெரியப்பட்ட இந்த விபூதிகளினால் (மஹிமைகளால்) உனக்கு யாது பயன்? நான் எல்லா உலகையும் ஓர் அம்சத்தினால் வியாபித்துக்கொண்டு (தாங்கிக்கொண்டு) இருக்கிறேன்.

[ஸ்ரீ சங்கரர்:— "பாதோஸ்ய விச்வாபூதானி" என்ற வேத வாக்யத்தின் பொருளின்படி இந்த ஜகத்தை ஒரு அம்சத்தினால் நிலைக்கும்படி செய்கிறேன்.

ஸ்ரீ ராமானுஜர்:— என் கோடிக்கணக்கான அம்சங்களுள் ஒன்றினால் இந்தப் பிரபஞ்சம் வியாபிக்கப்பட்டு விளங்குகின்றது என அறிந்து உபாஸிப்பாயானால் அது தான் முக்கிய பயன் எனக் கருத்து.]

விபூதியோகமெனும் பத்தாவது அத்யாயம்
முற்றிற்று.

பதினொன்ருவது அத்யாயம்

விச்வருபதர்சனயோகம்

अर्जुन उवाच

मदनुग्रहाय परमं गुह्यमध्यात्मसंज्ञितम् ।
यत्त्वयोक्तं वचस्तेन मोहोऽयं विगतो मम ॥ १

அர்ஜுன உவாச

மதனுக்ரஹாய பரமம் குஹ்யம் அத்யாத்மஸம்ஞிதம் ।
யத்த்வயோக்தம் வசஸ்தேன மோஹோஅயம் விகதோ மம ॥

அர்ஜுனன் சொல்வது :—

எனக்கருள் செய்ய மேலானதும், இரஹஸ்யமானதும், ஆத்மஸ்வருபத்தை விளக்குவதுமான எந்தச் சொற்களை நீர் சொன்னீர்களோ, அவைகளால் என் இந்த மோஹம் (புத்தி மாருட்டம்) நீங்கிவிட்டது. (என்னுடைய உறவினர், ஆசான் முதலியோரைக் கொல்வதால் பாவம் கிட்டும், சுகமில்லை என முன்னர் ஏற்பட்ட மோஹம், கொல்பவன் நானல்ல, கொல்லப்படுபவரும் எனக்குத் தொடர்புள்ளவரல்ல, செயல்படுவதென்பது ஆன்மாவுக்கில்லை என்ற ஞானேபதேசத்தைக் கேட்டதால் நீங்கி விட்டது)

[अध्यात्मसंज्ञितम् (அத்யாத்மஸம்ஞிதம்) = (1) ஆத்மானுத்ம விவேகமுண்டாக்கப்பட்டதும் —ஸ்ரீ சங்கரர், (2) ஆத்மவிஷயமானதும் —ஸ்ரீ ராமானுஜர், (3) பகவானைக் குறித்துச் சொல்லப்படும் —ஸ்ரீ ராகவேந்த்ரர்.

मोह: (மோஹ:) = (1) விவேகமற்ற புத்தி —ஸ்ரீ சங்கரர், (2) உடலே ஆன்மாவென்கிற அபிமான ருபமான மோஹம் —ஸ்ரீ ராமானுஜர், (3) உறவினன், நண்பன் உருவான மோஹம்— ஸ்ரீ ராகவேந்த்ரர்.]

भवाप्ययौ हि भूतानां श्रुतौ विस्तरशो मया ।
त्वत्तः कमलपत्राक्ष माहात्म्यमपि चाव्ययम् ॥ २

பவாப்யயௌ ஹி பூதாநாம் ச்ருதௌ விஸ்தரசோ மயா ।
த்வத்த: கமலபத்ராக்ஷ மாஹாத்ம்யமபி சாவ்யயம் ॥ 2

ஓ ! செந்தாமரைக் கண்ணா ! பிராணிகளின் உற்பத்தி அழிவுகளும், அழிவற்ற உம்முடைய மேன்மையும் உம்மிடமிருந்து என்னால் கேட்கப்பட்டன.

[माहात्म्यमपि (மாஹாத்ம்யமபி) (1) படைப்பு, காத்தலழித்தல் ஆகியவற்றிற்குக்காரணமாயும், கட்டுறுதல், மோக்ஷம் இவற்றிற்குக் காரணமாயும், இருப்பினும் இவைகளால் விகாரமடையாது, பக்ஷபாதமற்று, பற்றுதலற்று பலவித மாகாத்ம்யத்தையும் —ஸ்ரீதரர், (2) சேதனாசேதன சேஷித்வம், ஞானம், வலிமை, சக்தி, முதலிய குணங்களால் மேன்மையும், எல்லாவற்றிற்குமாதாரமாகவுள்ளது போன்ற மஹிமையும் —ஸ்ரீ ராமானுஜர்].

एवमेतद्यथात्थ त्वमात्मानं परमेश्वर ।
द्रष्टुमिच्छामि ते रूपमैश्वरं पुरुषोत्तम ॥ ३

ஏவமேதத்யதாத்த த்வமாத்மானம் பரமேச்வர ।
த்ரஷ்டுமிச்சாமி தே ரூபமைச்வரம் புருஷோத்தம ॥ 3

ஓ ! பரமேச்வரா ! நீர் உம்முடைய மஹிமை எப்படிப்பட்டதெனக் கூறினீரோ அந்தப்படி சரியாக இருக்கட்டும். ஓ ! புருஷோத்தம ! உம்முடைய பலவான மஹிமைகளுடன் கூடிய உருவத்தைப் பார்க்க விரும்புகிறேன்.

[ऐश्वरं रूपम् (ஐச்வரம் ரூபம்)=(1) ஞானம், ஐச்வர்யம், வலிமை, சக்தி, வீர்யம், தேஜஸ் முதலிய குணங்களுடன் கூடிய விஷ்ணு ரூபத்தை— ஸ்ரீ சங்கரர், ஸ்ரீதரர், (2) படைக்கிற, தண்டிக்கிற, காக்கின்ற, நியமிக்கும்,

ப்ரபுவாகவும், உத்தமராயும், எப்பொருளுக்கும் விலக்ஷணமாகவுமுள்ள உம்முடைய உருவத்தை —ஸ்ரீ ராமானுஜர், (3) நினைக்கமுடியாத சக்தியுடைய ருபத்தை— ஸ்ரீ ராகவேந்த்ரர்.]

मन्यसे यदि तच्छक्यं मया द्रष्टुमिति प्रभो ।
योगेश्वर ततो मे त्वं दर्शयात्मानमव्ययम् ॥ ४

மங்யஸே யதி தச்சக்யம் மயா த்ரஷ்டுமிதி ப்ரபோ ।
யோகேச்வர ததோ மே த்வம் தர்சயாத்மானமவ்யயம் ॥ 4

ஓ! ப்ரபுவே! யோகிகளுக்கெல்லாமீசனே! அந்த ருபத்தை நான் பார்க்கமுடியுமென நீர் நினைத்தால், அழிவற்ற உம்முடைய ருபத்தை எனக்குக் காண்பியும்.

श्रीभगवानुवाच

पश्य मे पार्थ रूपाणि शतशोऽथ सहस्रशः ।
नानाविधानि दिव्यानि नानावर्णाकृतीनि च ॥ ५

பச்ய மே பார்த ருபாணி சதசோஅத ஸஹஸ்ரச: ।
நாநாவிதானி திவ்யானி நாநாவர்ணாக்ருதீனி ச ॥ 5

ஸ்ரீ பகவான் சொல்வது :—

ஓ! குந்தியின் மகனே! பலவிதமாகவும், உலகத்தினின்று வேறுபட்டதாயும், பல வர்ணங்கள், பல அவயவங்கள் முதலியன உள்ளனவாயும் நூறு விதங்களாயும், மேலும் அநேக விதங்களாயும் உள்ள என் உருவங்களைப் பார்.

पश्यादित्यान्वसून्रुद्रानश्विनौ मरुतस्तथा ।
बहून्यदृष्टपूर्वाणि पश्याश्चर्याणि भारत ॥ ६

பச்யாதித்யான்வஸூன்ருத்ரானச்வினௌ மருதஸ்ததா ।
பஹூன்யத்ருஷ்டபூர்வாணி பச்யாஸ்சர்யாணி பாரத ॥ 6

ஓ! பாரத! ஆதித்தர்களையும், வஸுக்களையும், ருத்ரர்களையும், அச்வினி தேவதைகளையும், மருத்களையும், மற்றும் பல முன் பார்க்கப்படாதவைகளாகவுமுள்ள ஆச்சர்யங்களையும் என் விச்வரூபமான உடலில் பார்.

इहैकस्थं जगत्कृत्स्नं पश्याद्य सचराचरम् ।
मम देहे गुडाकेश यच्चान्यद्द्रष्टुमिच्छसि ॥ ७

இஹைகஸ்தம் ஜகத்க்ருத்ஸ்னம் பச்யாத்ய ஸசராசரம் ।
மம தேஹே குடாகேச யச்சான்யத் த்ரஷ்டுமிச்சஸி ॥ 7

ஓ! அர்ஜுனா! அசைவன, அசைவற்றவனவுடன் கூடிய எல்லா உலகையும், வேறு எதைக்காண விரும்புகின்றாயோ அதையும், இந்த என் உடலில் ஓரிடத்தில் இருக்கிறதை இப்போது பார்க்கவும்.

[अन्यत् (அன்யத்) = இப்போரில் உண்டாகப்போகும் வெற்றி, தோல்வி முதலியவற்றையும் —ஸ்ரீ சங்கரர், ஸ்ரீதரர்.

एकस्थम् (ஏகஸ்தம்) = (1) அவயவமாக ஓரிடத்திலிருப்பதாக —ஸ்ரீதரர், (2) அவயவத்தின் ஓர் பகுதியிலிருப்பதாக —ஸ்ரீ ராமானுஜர்.]

न तु मां शक्यसे द्रष्टुमनेनैव स्वचक्षुषा ।
दिव्यं ददामि ते चक्षुः पश्य मे योगमैश्वरम् ॥ ८

ந து மாம் சக்யஸே த்ரஷ்டுமனேனைவ ஸ்வசக்ஷுஷா ।
திவ்யம் ததாமி தே சக்ஷு: பச்ய மே யோகமைச்வரம் ॥ 8

உன்னுடைய இந்த ஸாதாரணக் கண்ணினால் விச்வரூபியான என்னை உன்னால் பார்க்கமுடியாது. எனவே ஞான உருவான கண்ணை உனக்குத் தருகிறேன். அதைக் கொண்டு நினைத்துப் பார்க்கமுடியாத என் சக்தி விநோதத்தைப் பார்.

[योगमैश्वरम् (யோகமைச்வரம்) = (1) அகடிதகடனு சாமர்த்யம் (உண்டு பண்ணப்படாத படைக்கும் திறன்) —ஸ்ரீதரர், (2) எல்லையற்ற ஞான யோகத்தையும், முடிவற்ற விபூதி (மஹிமை) யோகத்தையும் —ஸ்ரீ ராமானுஜர், (3) நானும் பரமசிவனும் ஒன்றே என்ற சிவ விஷ்ணு அபேதத்தையும் —ஆசிரியர்]

संजय उवाच

एवमुक्त्वा ततो राजन्महायोगेश्वरो हरिः ।
दर्शयामास पार्थाय परमं रूपमैश्वरम् ॥ ९

ஸஞ்சய உவாச—

ஏவமுக்த்வா ததோ ராஜன் மஹாயோகேச்வரோ ஹரி: ।
தர்சயாமாஸ பார்தாய பரமம் ரூபமைச்வரம் ॥ 9

अनेकवक्त्रनयनमनेकाद्भुतदर्शनम् ।
अनेकदिव्याभरणं दिव्यानेकोद्यतायुधम् ॥ १०

அநேகவக்த்ரநயனம் அனேகாத்புத தர்சனம் ।
அநேகதிவ்யாபரணம் திவ்யாநேகோத்யதாயுதம் ॥ 10

दिव्यमाल्याम्बरधरं दिव्यगन्धानुलेपनम् ।
सर्वाश्चर्यमयं देवमनन्तं विश्वतोमुखम् ॥ ११

திவ்யமால்யாம்பரதரம் திவ்யகந்தானுலேபனம் ।
ஸர்வாஸ்சர்யமயம் தேவமனந்தம் விச்வதோமுகம் ॥ 11

ஸஞ்சயன் திருதராஷ்ட்ர மன்னனைப் பார்த்துச் சொல்வது :—

ஓ ! மஹாராஜனே ! மஹாத்மாவாகவும், யோகிகளுக்கெல்லாம் ஈசனுகவுமுள்ள ஸ்ரீ கிருஷ்ண பகவான், இவ்

விதம் (முன் 5 முதல் 8 வரை ச்லோகங்களில் உள்ளபடி) சொன்ன பிறகு, பல முகங்களையும், பல கண்களையும் கொண்டவும், அநேக விநோதமான காக்ஷிகளையுடைய வும், பல ஒளி வீசும் அணிகலன்களைப் பூண்டும், திவ்யமான உயரே தூக்கப்பட்ட ஆயுதங்களுடனும் (கருவிகளுடனும்), திவ்யமான மாலைகளையும், ஆடைகளை யும் அணிந்தும், மேலான வாஸனைப் பொருள்களைப் பூசிக்கொண்டும், எல்லோருக்கும் வியப்பையுண்டாக்கு கின்ற, ஒளி வீசும், முடிவற்றதான எல்லாத் திசைகளி லும் முகங்களையுடைய மேலான விச்வருபத்தை அர்ஜுனனுக்குக் காண்பித்தார்.

[अनन्तम् (அநந்தம்) = எக்காலத்திலுமுள்ள, எல்லாப் பொருள்களுக்கும் அடிப்படையாகவுள்ளதால், எல்லா உலகிலும் எக்காலத்திலும் வியாபித்திருக்கிற —ஸ்ரீதரர், ஸ்ரீ ராமானுஜர், ஸ்ரீ ராகவேந்த்ரர்.]

दिवि सूर्यसहस्रस्य भवेद्युगपदुत्थिता ।
यदि भाः सदृशी सा स्याद्भासस्तस्य महात्मनः ॥ १२

திவி ஸூர்யஸஹஸ்ரஸ்ய பவேத்யுகபதுத்திதா ।
யதி பா: ஸத்ருசீ ஸா ஸ்யாத்பாஸஸ்தஸ்ய மஹாத்மன: ॥ 12

ஆகாயத்தில் பல்லாயிரம் ஸூர்யர்களின் ஒளி ஒரே காலத்தில் உண்டானால், அத்தகைய ஒளி, அந்த விச்வ ரூபத்தை எடுத்துக்கொண்ட மஹாத்மாவின் (ஸ்ரீ க்ருஷ்ண பகவானின்) காந்திக்கு ஸமானமாகும்.

तत्रैकस्थं जगत्कृत्स्नं प्रविभक्तमनेकधा ।
अपश्यद्देवदेवस्य शरीरे पाण्डवस्तदा ॥ १३

தத்ரைகஸ்தம் ஜகத்க்ருத்ஸ்னம் ப்ரவிபக்தமனேகதா ।
அபச்யத்தேவதேவஸ்ய சரீரே பாண்டவஸ்ததா ॥ 13

அப்போது பலவிதமாகவும், தனித்தனியேயுமாகவுள்ள எல்லா உலகையும் தேவர்களுக்கெல்லாம் தேவனுன க்ருஷ்ண பகவானின் அந்த விச்வரூபத்தில் ஓரிடத்திலிருப்பதாக அர்ஜுனன் பார்த்தான்.

[अनेकधा (அநேகதா)=தேவ, பித்ரு, மானிடன் முதலிய வேற்றுமைகளால் பலவிதமாக — ஸ்ரீ சங்கரர்.

ஸ்ரீ ராமானுஜர் ச்லோகத்தின் முன் பாதிக்குத்தரும் பொருள்:— பிரம்மா முதலிய பலவித விநோதமான தேவர், மனிதர், விலங்குகள், தாவரங்கள் முதலிய சேதனங்களின் கூட்டமும், பூமி, அந்தரிக்ஷம், ஸ்வர்கம் பாதாளம் போன்ற போக ஸ்தானங்களாகவும், போகத்துக்குரிய பல பொருள்களாகவும், போக ஸாதனங்களான பலவித உடல்கள், புலன்களாகவும் தனித்தனியேயுள்ள எல்லா உலகங்களையும் ஏதோ ஒரு பகுதியிலிருப்பதாக]

ततः स विस्मयाविष्टो हृष्टरोमा धनंजयः ।
प्रणम्य शिरसा देवं कृताञ्जलिरभाषत ॥ १४

தத: ஸ விஸ்மயாவிஷ்டோ ஹ்ருஷ்டரோமா தனம்ஜய: ।
ப்ரணம்ய சிரஸா தேவம் க்ருதாஞ்ஜலிரபாஷத ॥ **14**

அத்தகைய விச்வரூபத்தைப் பார்த்தவுடன், ஆச்சர்யமடைந்தவனாய், மயிர்கூச்சலுள்ளவனாய், அர்ஜுனன் விச்வரூபத்தைத் தரித்திருக்கும் தேவனைப் பார்த்து தலை தாழ்த்தி வணங்கி கைகூப்பிக்கொண்டு பேச ஆரம்பித்தான்.

अर्जुन उवाच -

पश्यामि देवांस्तव देव देहे सर्वांस्तथा भूतविशेषसंघान् ।
ब्रह्माणमीशं कमलासनस्थमृषींश्च सर्वानुरगांश्च दिव्यान् ॥ १५

அர்ஜுன உவாச—

பச்யாமி தேவாம்ஸ்தவ தேவதேஹே ஸர்வாம்ஸ்ததா
பூதவிசேஷஸங்கான் ।
ப்ரஹ்மாணமீசம் கமலாஸனஸ்தம்ருஷீம்ஸ்ச ஸர்வானு-
ரகாம்ஸ்ச திவ்யான் ॥ 15

அர்ஜுனன் சொல்வது—

ஓ! தேவனே! உம்முடைய விச்வரூப உடலில் இந்த்ரன் முதலிய தேவர்களையும், தேவதைகளின் அதிபனான தாமரையில் வீற்றிருக்கும் நான்முக ப்ரும்மாவையும், எல்லா முனிவர்களையும், பலவித அசைவன அசைவற்றனவான பூதக்கூட்டங்களையும், விநோதமான பாம்புகளையும் காண்கிறேன்.

[कमलासनस्थम् (கமலாஸனஸ்தம்)=(1) தாமரைப் பூப் போன்ற பூமியில் காயைப் போலுள்ள மேரு மலையில் வஸிக்கும் —ஸ்ரீ சங்கரர், ஸ்ரீதரர், (2) அல்லது விஷ்ணுவின் தொப்புளில் இருக்கையையுடைய —ஸ்ரீதரர், (3) கமலாஸனனான ப்ரும்மாவின் அதீனத்திலிருக்கும் —ஸ்ரீராமானுஜர்.

ईशम् (ஈசம்)=(1) மக்களுக்கெல்லாம் அதிபனையும் —ஸ்ரீ சங்கரர், (2) ருத்ரனையும் —ஸ்ரீராமானுஜர்.

भूतविशेषसंघान् (பூதவிசேஷஸங்கான்) = கருப்பையிலிருந்து பிறக்கும் மனிதன் முதலிய பிராணிகள், முட்டைகளிலிருந்து பிறக்கும் பக்ஷி, பாம்பு போன்றவை, வியர்வையிலிருந்துண்டாகும் பூச்சிகள், பூமியில் உண்டாகும் செடி கொடிகள் —ஸ்ரீதரர்.]

अनेकबाहूदरवक्त्रनेत्रं पश्यामि त्वां सर्वतोऽनन्तरूपम् ।
नान्तं न मध्यं न पुनस्तवादिं पश्यामिविश्वेश्वर विश्वरूप ॥ १६

அநேக பாஹூதரவக்த்ரநேத்ரம் பச்யாமி த்வா ஸர்வதோ
அனந்தரூபம் ।
நாந்தம் ந மத்யம் ந புனஸ்தவாதிம் பச்யாமி விச்வேச்வர
விச்வரூப ॥ 16

ஓ! அண்டங்களுக்கெல்லாம் ஈசனே! விச்வரூபத்துடனிருப்பவரே! பல கைகள், பல வயிறுகள், பல முகங்கள், பல கண்கள், ஆகியவற்றுடன், பல உருவங்களுடன் கூடிய உம்மை எல்லா இடங்களிலும் பார்க்கின்றேன், உம்முடைய ஆதி, மைய்யம், முடிவு இவைகளை நான் காணவில்லை.

[விச்வ ரூபத்தில் இடுப்பு அளவற்ற விஸ்தாரமுடையது. இடுப்பிற்குமேல் அநேக வயிறுகள் முதலியனவும், கீழாக அநேக கால் முதலியனவும் தோன்றின எனக் கருத்து— ஸ்ரீ ராமானுஜர்.]

किरीटिनं गदिनं चक्रिणं च तेजोराशिं सर्वतो दीप्तिमन्तम् ।
पश्यामि त्वां दुर्निरीक्ष्यं समन्ताद्दीप्तानलार्कद्युतिमप्रमेयम् ॥१७

கிரீடினம் கதினம் சக்ரிணம் ச தேஜோராசிம் ஸர்வதோ
தீப்திமந்தம் ।
பச்யாமி த்வாம் துர்நிரீக்ஷ்யம் ஸமந்தாத்தீப்தான-
லார்கத்யுதிமப்ரமேயம் ॥ 17

தலையில் மகுடத்துடனும், கதை, சக்ரம் முதலிய ஆயுதங்களுடனும், ஒளிக் கதிர்களின் கூட்டமாயும், எங்கும் பரவிய காந்தியுடனும், பார்க்கமுடியாததும் (பார்க்கக் கூசுவதும்), பிரகாசிக்கும் ஸூர்யன், அக்னி இவைகளை யொத்த ஒளியையுடையவும், அளவிட முடியாத (அதிக ப்ரகாசமுள்ள) உம்மை (பகவானை) எங்கு பார்த்தாலும் காண்கிறேன்.

त्वमक्षरं परमं वेदितव्यं त्वमस्य विश्वस्य परं निधानम् ।
त्वमव्ययः शाश्वतधर्मगोप्ता सनातनस्त्वं पुरुषो मतो मे ॥१८

த்வமக்ஷரம் பரமம் வேதிதவ்யம் த்வமஸ்ய விச்வஸ்ய பரம்
நிதானம் ।
த்வமவ்யய: சாச்வததர்மகோப்தா ஸநாதனஸ்த்வம்
புருஷோ மதோ மே ॥ 18

நீர் மோக்ஷத்தில் விருப்பமுள்ளவர்களாலறியத்தகுந்த பரப்ரஹ்மம், இந்த எல்லா உலகிற்கும் மேலான ஆதாரம், அழிவற்றவர், நிலையான தர்மத்தைக் காப்பவர் (வைதிக தர்மங்களை ரக்ஷிப்பவர்), எப்போதும் நிரந்தரமாகவுள்ள பரம புருஷன் என எனக்கு நிச்சயமாகத் தோன்றுகிறது.

[वेदितव्यम् (வேதிதவ்யம்) = வேதாந்தத்தில் அறியப் படவேண்டியவராகச் சொல்லப்பட்டுள்ளவர்— ஸ்ரீராமானுஜர்.

अव्यय: (அவ்யய;)=(1) ஸ்வரூப விபவகுணங்களுக்கு நாசமில்லாதவர் —ஸ்ரீ ராமானுஜர், (2) குறைதலற்றவர் —ஸ்ரீராகவேந்த்ரர்]

अनादिमध्यान्तमनन्तवीर्यमनन्तबाहुं शशिसूर्यनेत्रम् ।
पश्यामि त्वां दीप्तहुताशवक्त्रं स्वतेजसा विश्वमिदं तपन्तम् ॥१९

அநாதிமத்யாந்தமனந்தவீர்யமனந்தபாஹு^ம்
சசிஸூர்யநேத்ரம் ।
பச்யாமி த்வாம் தீப்தஹு^தாசவக்த்ரம் ஸ்வதேஜஸா
விச்வமிதம் தபந்தம் ॥ 19

உற்பத்தி, இருப்பு, அழிவுகளற்றவராகவும், எல்லையற்ற திறமையுடனும், அதிக வீர்யமுடைய அநேக கைகளுடனும், ஒளி வீசும் அக்னியை முகமாகக்கொண்டும் (பிரளய காலத்திய அக்னியை) உள்ள உம்முடைய

காந்தியினுல் இந்த எல்லா உலகையும் எரிக்கும் உம்மைப் பார்க்கிறேன்.

[अनन्तवीर्यम् (அநந்தவீர்யம்) = ஞானம், வலிமை, ஐச்வர்யம், சக்தி, வீர்யம், காந்தி முதலியவைகளின் இருப்பிடமாக —ஸ்ரீராமானுஜர்.

शशिसूर्यनेत्रम् (சசிஸூர்யநேத்ரம்) = (1) பக்தர்களுக்கு (தேவதைகள் போன்றவற்கு) சந்திரனைப் போன்ற குளிர்ந்ததும், தன்னை வெறுக்கிற அஸுரர் போன்றவர்களுக்கு ஸூர்யனைப்போல் தாபத்தைத் தரும் கண்களையுடையவராக — ஸ்ரீ ராமானுஜர், (2) சந்திரனும் ஸூர்யனும் பரமாத்மாவின் கண்களிலுண்டானவர்களாகையால் அவர்களே கண்களென உபசாரமாகச் சொல்லப்பட்டது; அவர்கள் கண்களல்ல; —ஸ்ரீமத்வர், ஸ்ரீ ராகவேந்த்ரர்]

द्यावापृथिव्योरिदमन्तरं हि व्याप्तं त्वयैकेन दिशश्च सर्वाः ।
दृष्ट्वाद्भुतं रूपमुग्रं तवेदं लोकत्रयं प्रव्यथितं महात्मन् ॥ २०

த்யாவாப்ருதிவ்யோரிதமந்தரம் ஹி வ்யாப்தம் த்வயைகேன
திசஸ்ச ஸர்வா: I
த்ருஷ்ட்வாத்புதம் ரூபமுக்ரம் தவேதம் லோகத்ரயம்
ப்ரவ்யதிதம் மஹாத்மன் II 20

ஓ ! பரமாத்மா ! ஆகாயம், பூமி இவைகளிடையேயுள்ள பிரதேசம் (அந்தரிக்ஷம்), உம் ஒருவராலேயே வ்யாபிக்கப்பட்டுள்ளது, பயத்தைத் தருவதாயும், ஆச்சர்யமாயுமுள்ள உம்முடைய இந்த விச்வருபத்தைக் கண்டு, மூவுலகும் மிகப் பயமடைந்துள்ளன. (மூவுலகின் மக்கள் பயந்துள்ளதைக் காண்கிறேன் —ஆசிரியர்) (1) தேவர்கள், அஸுரர்கள், யக்ஷர்கள் இவர்களில் சிலர் பாண்டவர் கட்சியிலும், சிலர் துர்யோதனன் கட்சியிலும், சிலர் இரு கட்சிகளிலும் சேராது தனித்துமிருந்தனர். இம் மூவகையரும் பகவானுல் ஞானக்கண் பெற்று, பார்த்துப்

பயந்தனர் —ஸ்ரீ ராமானுஜர், (2) மூவுலகிலுமுள்ள பக்தர்கள் பார்த்து, அல்லது மனதால் தியானித்துப் பயந்தார்களென அர்ஜுனன் நினைக்கிறான்— ஸ்ரீராகவேந்த்ரர்.]

अमी हि त्वां सुरसङ्घा विशन्ति
केचिद्भीताः प्राञ्जलयो गृणन्ति ।
स्वस्तीत्युक्त्वा महर्षिसिद्धसङ्घाः
स्तुवन्ति त्वां स्तुतिभिः पुष्कलाभिः ॥ २१

அமீ ஹி த்வாம் ஸுரஸங்கா விசந்தி
கேசித்பீதா: ப்ராஞ்ஜலயோ க்ருணந்தி ।
ஸ்வஸ்தீத்யுக்த்வா மஹர்ஷிஸித்தஸங்கா:
ஸ்துவந்தி த்வாம் ஸ்துதிபி: புஷ்கலாபி: ॥ 21

இத் தேவக்கூட்டங்கள் உம்மைச் சரணடைகின்றனர். சிலர் பயந்து கைகூப்பி (எட்ட இருந்து) காப்பாற்றும்படி வேண்டுகின்றனர். மாமுனிவர்களும் ஸித்தர்களும் கூட்டங்களாக உலகிற்கு நன்மையுண்டாகட்டுமெனச் சொல்லிக்கொண்டு முழுமையான துதிகளால் உம்மைப் போற்றுகின்றனர்.

[ஸ்ரீ சங்கரர் :— இப் போர்க்களத்தில், பகவான் க்ருஷ்ணவதாரம் செய்யும்போது அவருடைய கட்டளைப்படி மனிதர்களாகப் பிறந்துள்ள தேவதைகளே இங்கு ஸுரஸங்கா: (தேவர்களின் கூட்டங்கள்) எனப்படுகின்றனர். இவர்கள் பகவானின் உடலில் நுழைவதாகக் காணப்படுகின்றனர். ஓட சக்தியற்ற சிலர் பயத்துடன் கைகூப்பித் துதிக்கின்றனர். மாமுனிவர்களும், ஸித்தர்களும் இக்காலத்தில் தோன்றும் கெட்ட நிமித்தங்களைக் கண்டு, உலகிற்கு நலமுண்டாக விசேஷமாகப் பகவானைத் துதிக்கின்றனர்.

ஸ்ரீ ராமானுஜர் :— இந்தத் தேவக்கூட்டங்கள் எல்லாவற்றிற்கும் ஆதாரமாகவுள்ள விச்வரூபத்துடன் கூடிய

உம்மை (பகவானை) பார்த்து, உம் அருகே வருகின்றனர். சிலர் உம்மைப் பார்த்துப் பயந்து கைகூப்பித் துதிக்கின்றனர். இக்கூட்டத்தில் சேராத முனிவர்களும், ஸித்தர்களும் நடக்கப்போகும் கேடுகளை யறிந்து, நலமுண்டாகட்டுமென அதிகமாக உம்மைப் போற்றித் துதிக்கின்றனர்.]

रुद्रादित्या वसवो ये च साध्या
विश्वेऽश्विनौ मरुतश्चोष्मपाश्च ।
गन्धर्वयक्षासुरसिद्धसङ्घा
वीक्षन्ते त्वां विस्मिताश्चैव सर्वे ॥ २२

ருத்ராதித்யா வஸவோ யே ச ஸாத்யா
விச்வேஅச்வினௌ மருதஸ்சோஷ்மபாஸ்ச 1
கந்தர்வயக்ஷாஸுரஸித்தஸங்கா
வீக்ஷந்தே த்வாம் விஸ்மிதாஸ்சைவ ஸர்வே 11 22

பதினொரு ருத்ரர்கள், பன்னிரண்டு ஆதித்யர்கள், வஸுக்கள், ஸாத்ய தேவதைகள், மருத்கள், பித்ரு தேவதைகள், கந்தர்வ, யக்ஷ, அஸுர, ஸித்தர் கூட்டங்கள் ஆகிய எல்லோரும் ஆச்சர்யமடைந்து உம்மை இடைவிடாது பார்க்கின்றனர்,

[ऊष्मपाः (ஊஷ்மபா:) = உணவு வகைகள் சூடாகவுள்ளபோது சாப்பிடுகின்றவர் ஊஷ்மபர் எனப்படுவர். அப்படிச் சூடாகச் சாப்பிடுபவர் பித்ருதேவதைகள் —ஸ்ரீதரர்.

ஸ்ரீ சங்கரர்:— கந்தர்வர்கள் = ஹாஹா, ஹூஹூ முதலியோர். யக்ஷர் = குபேரன் முதலானோர். அஸுரர் = விரோசனன் முதலியனர். ஸித்தர் = கபிலர் முதலியோர்.]

रूपं महत्ते बहुवक्त्रनेत्रं महाबाहो बहुबाहूरुपादं ।
बहूदरं बहुदंष्ट्राकरालं दृष्ट्वा लोकाः प्रव्यथितास्तथाहम् ॥ २३

ரூபம் மஹத்தே பஹு வக்த்ரநேத்ரம் மஹாபாஹோ
பஹுபாஹூருபாதம் ।
பஹூதரம் பஹுதம்ஷ்ட்ராகராலம் த்ருஷ்ட்வா லோகா:
ப்ரவ்யதிதாஸ்ததாஹம் ॥ 23

ஓ! பெருந்தோளுடையாய்! பல முகங்கள், பல கைகள், பல துடைகள், பல கால்கள், பல வயிறுகள், பல பயங்கரமான பற்கள் இவைகளுடன் கூடிய பயங்கரமான உம்முடைய இம்மாபெரும் உருவத்தைப் பார்த்து, மக்கள் மிகவும் பயத்தை அடைந்துள்ளார்கள். நானும் பயப்படுகிறேன்.

नभःस्पृशं दीप्तमनेकवर्णं
व्यात्ताननं दीप्तविशालनेत्रम् ।
दृष्ट्वा हि त्वां प्रव्यथितान्तरात्मा
धृतिं न विन्दामि शमं च विष्णो ॥ २४

நப:ஸ்ப்ருசம் தீப்தமனேகவர்ணம்
வ்யாத்தானனம் தீப்தவிசாலநேத்ரம் ।
த்ருஷ்ட்வா ஹி த்வாம் ப்ரவ்யதிதாந்தராத்மா
த்ருதிம் ந விந்தாமி சமம் ச விஷ்ணோ ॥ 24

ஓ! மஹாவிஷ்ணுவே! ஆகாயத்தை அளாவிநிற்கும், ஒளிவீசிக்கொண்டிருக்கும் பல வர்ணங்களுடனிருக்கும், திறந்துள்ள வாய்களுடனிருக்கும், மலர்ந்த ஒளி வீசும் கண்களுடனிருக்கும் உம்மைப் பார்த்து, மிகப் பயந்துள்ள நான், தைர்யத்தையும் மனச்சாந்தியையும் அடையவில்லை.

[नभः (நப:)=ப்ரக்ருதிக்கப்பாற்பட்ட ஆகாசம் (ப்ரக்ருதியினுலுண்டான யாவும் இந்த விச்வரூபத்திலடங்கிவிட்டதால் ப்ரக்ருதியினுலுண்டான ப்ரபஞ்சத்திற்கப்பாற்பட்ட பரமாகாசம் —ஸ்ரீராமானுஜர்.

अनेकवर्णम् (அநேக வர்ணம்)=அநேக பயங்கரமான அவயவங்களுடைய —ஸ்ரீசங்கரர்.

धृतिं शमं च न विन्दामि (த்ருதிம் சமம் ச நவிந்தாமி)= மயக்கமடைந்து, புலன்களின் சக்தியை இழந்தவனுக வுள்ளேன் —ஸ்ரீராமானுஜர்.

शमम् (சமம்)=(1) ஸந்தோஷத்தை —ஸ்ரீ சங்கரர், (2) ஸுகத்தையும் —ஸ்ரீராகவேந்த்ரர்.]

दंष्ट्राकरालानि च ते मुखानि
  दृष्ट्वैव कालानलसन्निभानि ।
दिशो न जाने न लभे च शर्म
  प्रसीद देवेश जगन्निवास ॥ २५

தம்ஷ்ட்ராகராலானி ச தே முகானி
  த்ருஷ்ட்வைவ காலானலஸன்னிபானி 1
திசோ ந ஜானே ந லபே ச சர்ம
  ப்ரஸீத தேவேச ஜகந்நிவாஸ 11 25

ஓ! தேவர்களின் ஈசனே! ஜகத்தின் (உலகங்களின்) அடிப்படையே! பயங்கரமான பற்களுடன், ப்ரளய காலப் பெரும் தீக்கு ஒப்பான உம்முடைய முகங்களைப் பார்த்து நான் திசையறியமுடியவில்லை, இன்பத்தையு மடையவில்லை. பயங்கரமான உருவமில்லாமல் எனக்கு நற்காட்சியளிப்பீராக.

अमी च त्वां धृतराष्ट्रस्य पुत्राः
  सर्वे सहैवावनिपालसङ्घैः ।

भीष्मो द्रोणः सूतपुत्रस्तथासौ
सहास्मदीयैरपि योधमुख्यैः ॥ २६

அமீ ச த்வாம் த்ருதராஷ்ட்ரஸ்ய புத்ரா:
ஸர்வே ஸஹைவாவனிபாலஸங்கை: 1
பீஷ்மோ த்ரோண: ஸூதபுத்ரஸ்ததாஸௌ
ஸஹாஸ்மதீயைரபி யோதமுக்யை: 1 26

वक्त्राणि ते त्वरमाणा विशन्ति
दंष्ट्राकरालानि भयानकानि ।
केचिद्विलग्ना दशनान्तरेषु
संदृश्यन्ते चूर्णितैरुत्तमाङ्गैः ॥ २७

வக்த்ராணி தே த்வரமாணு விசந்தி
தம்ஷ்ட்ராகராலானி பயானகானி 1
கேசித்விலக்ஞ தசனுந்தரேஷு
ஸம்த்ருச்யந்தே சூர்ணிதைருத்தமாங்கை: ll 27

திருதிராஷ்டிர மன்னனின் மகன்கள் யாவரும், பீஷ்மரும், துரோணரும், தேரோட்டி மகனுன கர்ணனும் மற்றும் அவர்கள் கட்சியைச் சேர்ந்த அரசர் கூட்டங்களும் அப்படியே எங்களைச் சேர்ந்த யுத்த வீரர்களும், தலைவர்களும், விரைவாக, பயங்கரமான பற்களையுடைய பயங்கரமான உம்முடைய வாயில் விழுந்துகொண்டிருப்பதையும், மற்றும் சிலர் உமது பற்களின் ஊடேயுள்ள சந்துகளில் அகப்பட்டு தூளாகிய தலைகளுடன் இருப்பவர்களாயும் பார்க்க முடிகிறது.

यथा नदीनां बहवोऽम्बुवेगाः
समुद्रमेवाभिमुखा द्रवन्ति ।
तथा तवामी नरलोकवीरा
विशन्ति वक्त्राण्यभिविज्वलन्ति ॥ २८

யதா நதீனும் பஹவோஅம்புவேகா:
ஸமுத்ரமேவாபிமுகா த்ரவந்தி 1
ததா தவாமீ நரலோகவீரா
விசந்தி வக்த்ராண்யபிவிஜ்வலந்தி 11 28

ஆறுகளின் அதிகமான வெள்ளப்பெருக்கு கடலை நோக்கி எப்படி அடித்துச் செல்லப்படுமோ அதுபோல் மானிடவுலகிலுள்ள வீரர்கள் உம்முடைய ப்ரகாசமான ஒளிவீசும் வாய்களில் விழுகின்றனர்.

यथा प्रदीप्तं ज्वलनं पतङ्गा
विशन्ति नाशाय समृद्धवेगाः ।
तथैव नाशाय विशन्ति लोका
स्तवापि वक्त्राणि समृद्धवेगाः ॥ २९

யதா ப்ரதீப்தம் ஜ்வலனம் பதங்கா
விசந்தி நாசாய ஸம்ருத்தவேகா: 1
ததைவ நாசாய விசந்தி லோகா
ஸ்தவாபி வக்த்ராணி ஸம்ருத்தவேகா: 11 29

விட்டில் பூச்சிகள் தங்கள் அழிவின் பொருட்டு ஒளி வீசும் விளக்கையோ நெருப்பையோ எப்படி விரைவாக அடைகின்றனவோ அப்படியே இந்த ஜனங்கள் தங்கள் அழிவைத்தேடி உம்முடைய வாயில் நுழைகின்றனர்.

लेलिह्यसे ग्रसमानः समन्ता-
ल्लोकान्समग्रान्वदनैर्ज्वलद्भिः ।
तेजोभिरापूर्य जगत्समग्रं
भासस्तवोग्राः प्रतपन्ति विष्णो ॥ ३०

லேலிஹ்யஸே க்ரஸமான: ஸமந்தா
ல்லோகான்ஸமக்ரான்வதனைர்ஜ்வலத்பி: 1
தேஜோபிராபூர்ய ஜகத்ஸமக்ரம்
பாஸஸ்தவோக்ரா: ப்ரதபந்தி விஷ்ணோ 11 30

ஓ விஷ்ணுவே ! ஒளியாலும் காந்தியாலும் ப்ரபஞ்சம் முழுதையும் வியாபித்து, எல்லா ஜனங்களையும் ஒளி வீசும் வாய்களினல் நாலா பக்கங்களிலும் சாப்பிட்டு ருசி பார்த்துக்கொண்டுள்ளீர். உம்முடைய கொடுமையான காந்தி எல்லாவற்றையும் எரிக்கின்றது.

आख्याहि मे को भवानुग्ररूपो
नमोऽस्तु ते देववर प्रसीद ।
विज्ञातुमिच्छामि भवन्तमाद्यं
न हि प्रजानामि तव प्रवृत्तिम् ॥ ३१

ஆக்யாஹி மே கோ பவானுக்ரரூபோ
நமோஅஸ்து தே தேவவர ப்ரஸீத I
விஞாதுமிச்சாமி பவந்தமாத்யம்
ந ஹி ப்ரஜாநாமி தவ ப்ரவ்ருத்திம் II 31

தேவர்களில் மேலோனே! பயங்கரமான உருவத்தையுடைய நீர் யார்? எனக்குச் சொல்லுங்கள். உம்மை நமஸ்கரிக்கின்றேன். பயங்கரமற்ற பழய உருவத்தையடைவீராக. எல்லாவற்றிற்கும் ஆதியாகவிருக்கும் உம்மைப்பற்றி விரிவாக அறிய விரும்புகிறேன். உம் செயலை நான் அறியவே இல்லை.

श्रीभगवानुवाच

कालोऽस्मि लोकक्षयकृत्प्रवृद्धो
लोकान्समाहर्तुमिह प्रवृत्तः ।
ऋतेऽपि त्वां न भविष्यन्ति सर्वे
येऽवस्थिताः प्रत्यनीकेषु योधाः ॥ ३२

ஸ்ரீபகவானுவாச

காலோஅஸ்மி லோகக்ஷயக்ருத்ப்ரவ்ருத்தோ
லோகான்ஸமாஹர்துமிஹ ப்ரவ்ருத்த: I
ருதேஅபி த்வாம் ந பவிஷ்யந்தி ஸர்வே
யேஅவஸ்திதா: ப்ரத்யனீகேஷு யோதா: II 32

ஸ்ரீ கிருஷ்ண பகவான் சொல்வது—

ஜனங்களை அழிக்கும் மிகக்கொடிய காலனாக நான் இருக்கிறேன். ஜனங்களைக் கொல்ல இப்போது ஈடுபட்டுள்ளேன். இந்த இரண்டு போர் அணிகளிலும் போர் புரிபவர்கள் எவர் இருக்கின்றார்களோ, அந்த யாவரும் உன்னுடைய முயற்சி இல்லாது போனாலும்கூட பிழைத்திருக்கப்போவதில்லை (நாசமடையப்போகின்றனர்).

[प्रवृत्तः (ப்ரவ்ருத்த:) = (1) மிகவும் பெருகியுள்ள —ஸ்ரீ சங்கரர், (2) பூர்ணமாகியுள்ள —ஸ்ரீ மத்வர், ஸ்ரீ ராகவேந்த்ரர்.

कालः अस्मि (கால: அஸ்மி) = பூர்ணமான குணங்களோடு கூடியிருக்கிறேன்— ஸ்ரீ ராமானுஜர்.

इह (இஹ)=இந்த லோகத்தில், இக்காலத்தில் —ஸ்ரீ சங்கரர், ஸ்ரீதரர்.]

तस्मात्त्वमुत्तिष्ठ यशो लभस्व
जित्वा शत्रून् भुङ्क्ष्व राज्यं समृद्धम् ।
मयैवैते निहताः पूर्वमेव
निमित्तमात्रं भव सव्यसाचिन् ॥ ३३

தஸ்மாத்த்வமுத்திஷ்ட யசோ லபஸ்வ
ஜித்வா சத்ரூன் புங்க்ஷ்வ ராஜ்யம் ஸம்ருத்தம் ।
மயைவைதே நிஹதா: பூர்வமேவ
நிமித்தமாத்ரம் பவ ஸவ்யஸாசின் ॥ 33

அழிக்கும் செயல் என்னுடையதாக இருப்பதால் நீ போர் செய்ய எழு. எதிரிகளை வென்று புகழை எய்து, எல்லா சுகங்களையும் கொண்ட இந்த ராஜ்யத்தை அனுபவி. இப்படைகளிலுள்ளவர்கள் என்னால் முன்னரே கொல்லப்பட்டுள்ளார்கள். எனவே நிமித்தமாக மட்டிலிருந்து போர் செய்.

[यशः (யச:) தேவர்களாலுங்கூட வெல்லமுடியாத பீஷ்மர், துரோணர் ஆகியோரை வென்ற புகழை — ஸ்ரீ சங்கரர், ஸ்ரீதரர்.]

द्रोणं च भीष्मं च जयद्रथं च
कर्णं तथान्यानपि योधवीरान् ।
मया हतांस्त्वं जहि मा व्यथिष्ठा
युध्यस्व जेतासि रणे सपत्नान् ॥ ३४

த்ரோணம் ச பீஷ்மம் ச ஜயத்ரதம் ச
கர்ணம் ததான்யானபி யோதவீரான் I
மயா ஹதாம்ஸ்த்வம் ஜஹி மா வ்யதிஷ்டா
யுத்யஸ்வ ஜேதாஸி ரணே ஸபத்நுன் II 34

என்னுல் (முன்னதாகவே) கொல்லப்பட்டிருக்கிற துரோணர், பீஷ்மர், ஜயத்ரதன், கர்ணன், அதேபோல் பிற யுத்த வீரர்கள் ஆகியோரை நீ கொல்வாயாக. துயரடையாதே, போர் புரி, போரில் எதிரிகளை வெல்வாய்.

[ஸ்ரீ ராமானுஜர் :— துரோணர் குருவென்றும், பீஷ்மர் பந்துவானதினுலும் அவர்களைப் போரில் கொல்ல நீ பயந்தாயல்லவா? அவர்கள் எதிரிப்படையிலிருப்பதாலும் உனக்குப் பல தீங்குகளைச்செய்பவர்களாக இருப்பதாலும் அவர்களை நானே கொல்லத் தீர்மானித்துவிட்டேன்.

குறிப்பு :— துரோணர், பீஷ்மர், ஜயத்ரதன், கர்ணன் இந்நால்வரை ஜயிக்கும் விஷயத்தில் அர்ஜுனனுக்கு ஐயமுண்டு. ஏனெனில்—

(1) துரோணர் போரில் நிபுணர்; க்ஷத்ரிய வம்சங்களுக்குக் காலனுன பரசுராமரின் சீடர், அர்ஜுனனுக்கே குரு.

(2) பீஷ்மர் தான் விரும்பியபோது தன் உயிரை நீத்துக்கொள்ள வரம் பெற்றவர். பரசுராமரை ஆசானுக்கொண்டு அவரையே போரில் வென்றவர். பாட்டனுரான இவரை ஜயிப்பதில் அர்ஜுனனுக்கு ஐயம்.

(3) ஜயத்ரதனின் தகப்பன், தன் மகன் ஜயத்ரதனின் தலையை எவன் அறுத்து பூமியில் தள்ளுகிருனே அவனுடைய தலை ஆயிரம் துண்டுகளாக வெடித்து அவன் மரணமடைவானென வரம் பெற்றவர். அத்தகைய ஜயத்ரதனின் தலையைப் பூமியில் விழாது எப்படி கொல்கிறது என அர்ஜுனனுக்குப் பயம்.

(4) கர்ணன், இந்திரனிடமிருந்து எவன் மீது ஏவப்படுமோ அவனைக் கொல்லாது விடாத சக்தி என்ற ஆயுதத்தைப் பெற்று அதனை அர்ஜுனன்மீது ஏவவே வைத்துள்ளான். கர்ணனின் சக்தி ஆயுதத்தினின்று தப்புவது எப்படி என அர்ஜுனனின் பயம்.]

संजय उवाच

एतच्छ्रुत्वा वचनं केशवस्य
कृताञ्जलिर्वेपमानः किरीटी ।
नमस्कृत्वा भूय एवाह कृष्णं
सगद्गदं भीतभीतः प्रणम्य ॥ ३५

ஏதச்ச்ருத்வா வசனம் கேசவஸ்ய
க்ருதாஞ்ஜலிர்வேபமான: கிரீடீ ।
நமஸ்க்ருத்வா பூய ஏவாஹ க்ருஷ்ணம்
ஸகத்கதம் பீதபீத: ப்ரணம்ய ॥ 35

ஸஞ்ஜயன் திருதிராஷ்ட்ரனை நோக்கிச் சொல்வது—

நடுங்கிக்கொண்டிருக்கும் அர்ஜுனன் க்ருஷ்ண பகவானின் வார்த்தைகளைக் கேட்டு, கைகூப்பிப் பகவானை நமஸ்கரித்து மிகுந்த பயத்துடனும் வணக்கத்துடனும் தழதழத்த குரலில் சொல்கிருன்.

अर्जुन उवाच

स्थाने हृषीकेश तव प्रकीर्त्या
जगत्प्रहृष्यत्यनुरज्यते च ।

रक्षांसि भीतानि दिशो द्रवन्ति
सर्वे नमस्यन्ति च सिद्धसङ्घाः ॥ ३६

ஸ்தானே ஹ்ருஷீகேச தவ ப்ரகீர்த்யா
ஜகத்ப்ரஹ்ருஷ்யத்யனுரஜ்யதே ச ।
ரக்ஷாம்ஸி பீதானி திசோ த்ரவந்தி
ஸர்வே நமஸ்யந்தி ச ஸித்தஸங்கா: ॥ 36

அர்ஜுனன் சொல்வது:—

க்ருஷ்ணஸ்வாமியே! உம்முடைய மாபெரும் புகழினல் ப்ரபஞ்சம் மிகவும் மகிழ்ச்சியடைகிறது மாத்திரமல்ல, மிக அன்புடனும் கூடியுள்ளது. அரக்கர்கள் பயந்தோடுகின்றனர். ஸித்தர்குழாம் தங்களை நமஸ்கரிக்கின்றனர். இவை உம் மேன்மைக்குத்தக்கவைகளே.

[कीर्त्या (கீர்த்யா)=(1) மேன்மையைப் பாடுவதினல்—ஸ்ரீதரர், (2) மேன்மையைக் கேட்பதினல் —ஸ்ரீ சங்கரர்.

जगत् (ஜகத்)=போரைப் பார்க்க வந்துள்ள எல்லா தேவதைகள், கந்தர்வர், ஸித்தர்கள், யக்ஷர், கின்னரர், கிம்புருஷர் முதலியவர்களடங்கிய ஜகத்—ஸ்ரீராமானுஜர்.]

कस्माच्च ते न नमेरन्महात्मन्
गरीयसे ब्रह्मणोऽप्यादिकर्त्रे ।
अनन्त देवेश जगन्निवास
त्वमक्षरं सदसत्तत्परं यत् ॥ ३७

கஸ்மாச்ச தே ந நமேரன்மஹாத்மன்
கரீயஸே ப்ரஹ்மணோப்யாதிகர்த்ரே ।
அனந்த தேவேச ஜகந்நிவாஸ
த்வமக்ஷரம் ஸதஸத்தத்பரம் யத் ॥ 37

ஓ மகாத்மாவே! (பூர்ணாத்மாவே), அழிவற்றவரே, தேவர்களின் ஈசனே, ஜகத்திற்காதாரமானவரே, ஸ்தூல

மும் ஸூக்ஷ்மமும் எதோ அதற்கு மூலகாரணமான பரப்ரஹ்மமும் நீரே. மேலான நான்முக பிரமனுக்குங்கூட ஆதிகாரணமான உம்மை ஏன் வணங்காமலிருப்பார்கள்?

[ஸ்ரீ சங்கரர் :— மஹாத்மாவே! மேம்பட்டவராகவும், பிரம்மதேவனுக்கு ஆதிகாரணமாகவுமுள்ள உம்மை ஏன் நமஸ்கரிக்காமலிருப்பார்கள்? தேவர்களுக்குத் தேவரும், அழிவற்றவரும், ஜகத்திற்காதாரமாகவும் உள்ள ஸ்வாமி! அழிவற்றதும், இருக்கிறதென்றும், இல்லையென்றும் சொல்லப்படுவதும், இதற்கு வேறானதும் எல்லாம் நீரே.

ஸ்ரீ ராமானுஜர் :— त्वमक्षरं सदसत्तत्परं यत् (த்வமக்ஷரம் ஸதஸத்தத்பரம் யத்) = அழிவற்ற ஜீவாத்மதத்வமும், பெயர் உருவம் முதலிய வேறுபாடுகளுடன் கூடிய கார்யமான பொருளும், நாமரூப விகாரமற்ற காரண ப்ரக்ருதி உருவும், ப்ரக்ருதி, ப்ரக்ருதித் தொடர்புகொண்ட ஜீவதத்வமிவைகளைக் காட்டிலும் வேறான முக்தாத்மதத்வம் ஆகிய யாவும் நீரே.]

त्वमादिदेवः पुरुषः पुराण-
स्त्वमस्य विश्वस्य परं निधानम् ।
वेत्तासि वेद्यं च परं च धाम
त्वया ततं विश्वमनन्तरूप ॥ ३८

த்வமாதிதேவ: புருஷ: புராண
ஸ்த்வமஸ்ய விச்வஸ்ய பரம் நிதானம் ।
வேத்தாஸி வேத்யம் ச பரம் ச தாம
த்வயா ததம் விச்வமனந்தரூப ॥ 38

விச்வரூபத்தையுடையவரே! தேவர்களுக்காதியான ஆதிபுருஷனும் நீரே. பிரளய காலத்தில் இப்பிரபஞ்சத்திற்கு கிடைக்கும் மேம்பட்ட இடமும், அறிகின்றவனும், அறியத்தக்க பொருளும், மேம்பட்ட விஷ்ணுவான இடமும் நீரே. எல்லாப் பிரபஞ்சமும் உம்மால் வ்யாபிக்கப் பட்டுள்ளது.

[अस्य विश्वस्य (அஸ்ய விச்வஸ்ய) இந்த உம் சரீரமான ப்ரபஞ்சத்திற்கு —ஸ்ரீ ராமானுஜர்.

निधानम् (நிதானம்)=(1) ஆதாரமாகவும் —ஸ்ரீ ராமானுஜர், (2) ஆச்ரயமாகவும் —ஸ்ரீ ராகவேந்த்ரர்.]

वायुर्यमोऽग्निर्वरुणः शशाङ्कः
प्रजापतिस्त्वं प्रपितामहश्च ।
नमो नमस्तेऽस्तु सहस्रकृत्वः
पुनश्च भूयोऽपि नमो नमस्ते ॥ ३९

வாயுர்யமோஅக்னிர்வருண: சசாங்க:
ப்ரஜாபதிஸ்த்வம் ப்ரபிதாமஹஸ்ச ।
நமோ நமஸ்தேஅஸ்து ஸஹஸ்ரக்ருத்வ:
புனஸ்ச பூயோஅபி நமோ நமஸ்தே ॥ 39

வாயு, யமன், அக்னி, வருணன், சந்த்ரன், நான்முகப் ப்ரம்மா, அப் பிரம்மனின் தகப்பன் இவர்கள் யாவரும் நீரே. உம்மைக் குறித்து ஆயிரம் நமஸ்காரம். மறுபடியும் உமக்கு ஆயிரம் தடவை வணக்கம்.

[प्रजापतिः (ப்ரஜாபதி:) = காச்யபர் முதலிய ப்ரஜாபதிகள் —ஸ்ரீ சங்கரர்.]

नमः पुरस्तादथ पृष्ठतस्ते
नमोऽस्तु ते सर्वत एव सर्व ।
अनन्तवीर्यामितविक्रमस्त्वं
सर्वं समाप्नोषि ततोऽसि सर्वः ॥ ४०

நம: புரஸ்தாதத ப்ருஷ்டதஸ்தே
நமோஅஸ்து தே ஸர்வத ஏவ ஸர்வ ।
அனந்தவீர்யாமிதவிக்ரமஸ்த்வம்
ஸர்வம் ஸமாப்னோஷி ததோஅஸி ஸர்வ: ॥ 40

அதிகமான ஸாமர்த்யமுடையவரே! முன் பக்கத்திலும், பின்புறமும் உமக்கு நமஸ்காரம். அப்படியே எல்லாத் திக்குகளிலும் உம் பொருட்டு நமஸ்காரம். ஸர்வாத்மாவே! அளவற்ற பராக்ரமமுடைய நீர் எல்லாவற்றிலும் வியாபித்துள்ளீர். அதனால் எல்லா உருவாகவுமுள்ளீர்.

[ஸ்ரீ ராமானுஜர்:- சித், அசித் எனும் பொருள்களாலான எல்லா பிரபஞ்சமும் உமக்கு உடலானதால், எல்லாம் உம் அம்சமாக (சேஷம்) இருப்பதால், நீர் அழிவற்று சாச்வதமாக இருப்பதாலும், ஸர்வம் (எல்லாம்) என்று நீர் அழைக்கப்படுகிறீர்.

ஸ்ரீ ராகவேந்த்ரர் ;— எல்லாம் ப்ரஹ்மமென்று பொருளில்லை. ஸர்வாச்ரயம் ப்ரஹ்மமென்பது பொருள்.]

सखेति मत्वा प्रसभं यदुक्तं
हे कृष्ण हे यादव हे सखेति ।
अजानता महिमानं तवेदं
मया प्रमादात्प्रणयेन वापि ॥ ४१

ஸகேதி மத்வா ப்ரஸபம் யதுக்தம்
ஹே க்ருஷ்ண ஹே யாதவ ஹே ஸகேதி ।
அஜானதா மஹிமானம் தவேதம்
மயா ப்ரமாதாத்ப்ரணயேந வாபி ॥ 41

यच्चावहासार्थमसत्कृतोऽसि
विहारशय्यासनभोजनेषु ।
एकोऽथवाप्यच्युत तत्समक्षं
तत्क्षामये त्वामहमप्रमेयम् ॥ ४२

யச்சாவஹாஸார்தமஸத்க்ருதோஅஸி
விஹாரசய்யாஸனபோஜனேஷு ।
ஏகோஅதவாப்யச்யுத தத்ஸமக்ஷம்
தத்க்ஷாமயே த்வாமஹமப்ரமேயம் ॥ 42

ஓ! அச்யுதா! உம்முடைய மேன்மையையும் இந்த விச்வரூபத்தையும் அறியாது, அறிவின்மையாலாவது, நட்பினுலாவது அலக்ஷ்யமாகத் தோழனென் றெண்ணி ஓ கிருஷ்ண, யாதவனே, நண்பனே என் றெல்லாம் நான் உம்மை விளையாடும்போதோ, படுக்கும் போதோ, உட்காரும்போதோ, உண்ணும்போதோ, தனிமையிலோ, பலர் முன்னே, பரிகாஸமாக அழைத் திருப்பேனுனல், அவைகள் யாவற்றையும் மறந்து என்னை மன்னிக்கும்படி மாபெரும் மேன்மையுடைய தங்களைப் பிரார்த்திக்கிறேன்.

[प्रसभं (ப்ரஸபம்)=(1) ஆராய்ந்து பாராது —ஸ்ரீ சங்கரர், (2) வணக்கமின்றி— ஸ்ரீராமானுஜர்.

एकः (ஏக:)=(1) புறம்பிலாவது —ஸ்ரீ சங்கரர், (2) ஸர்வோத்தமனுக இருந்தும் —ஸ்ரீ ராகவேந்த்ரர்.

तत्समक्षं (தத்ஸமக்ஷம்)=(1) எதிரிலாவது —ஸ்ரீசங்கரர், ஸ்ரீ ராமானுஜர், (2) அந்த அபராதத்தை உம்மெதிராகவே —ஸ்ரீ ராகவேந்த்ரர்.]

पितासि लोकस्य चराचरस्य
त्वमस्य पूज्यश्च गुरुर्गरीयान् ।
न त्वत्समोऽस्त्यभ्यधिकः कुतोऽन्यो
लोकत्रयेऽप्यप्रतिमप्रभाव ॥ ४३

பிதாஸி லோகஸ்ய சராசரஸ்ய
த்வமஸ்ய பூஜ்யஸ்ச குருர்கரீயான் ।
ந த்வத்ஸமோஅஸ்த்யப்யதிக: குதோஅன்யோ
லோகத்ரயேஅப்யப்ரதிமப்ரபாவ ॥ 43

ஒப்பற்ற மேன்மையுடையவரே! நீர் அசைவுள்ள, அசைவற்ற பொருள்களைக் கொண்ட இந்த உலகின் தந்தையாகவும், பூஜிக்கத்தக்கவரும், குருவும், குருவைக் காட்டிலும் மேம்பட்டவராகவும் இருக்கிறீர். மூவுலகங்களிலும் உமக்கு ஈடானவர் கிடையாது. உம்மைக்காட்டிலும் மேம்பட்டவர் ஏது?

तस्मात्प्रणम्य प्रणिधाय कायं
प्रसादये त्वामहमीशमीड्यम् ।
पितेव पुत्रस्य सखेव सख्युः
प्रियः प्रियायार्हसि देव सोढुम् ॥ ४४

தஸ்மாத்ப்ரணம்ய ப்ரணிதாய காயம்
ப்ரஸாதயே த்வாமஹமீசமீட்யம் 1
பிதேவ புத்ரஸ்ய ஸகேவ ஸக்யு:
ப்ரிய: ப்ரியாயார்ஹஸி தேவ ஸோடும் 11 44

ஆகையால் (உமக்கு ஸமமாகவோ, மேலாகவோ யாருமில்லாததால்), எல்லாவற்றிற்கும் அதிபனுகவும், புகழத்தக்கவராகவுமுள்ள உம்மை உடல் முழுதாலும் வணங்கி மன்னிக்கும்படி வேண்டுகிறேன். பிழை செய்த மகனைத் தகப்பனும், நண்பனை நண்பனும், பிரியமுள்ள மனைவியைக் கணவனும் மன்னிப்பதுபோல், என்னுடைய பிழைகளை நீர் பொருத்தருள வேண்டுகிறேன்.

[प्रियः प्रियायार्हसि (ப்ரிய: ப்ரியாயார்ஹஸி) = பிரியனுன என் பொருட்டு, ப்ரியமுள்ள நீர், பிழைகளை மன்னிக்கத் தகுதியுடையவராக இருக்கிறீர்— ஸ்ரீராமானுஜர்]

अदृष्टपूर्वं हृषितोऽस्मि दृष्ट्वा
भयेन च प्रव्यथितं मनो मे ।
तदेव मे दर्शय देव रूपं
प्रसीद देवेश जगन्निवास ॥ ४५

அத்ருஷ்டபூர்வம் ஹ்ருஷிதோஅஸ்மி த்ருஷ்ட்வா
பயேன ச ப்ரவ்யதிதம் மனோ மே 1
ததேவ மே தர்சய தேவ ரூபம்
ப்ரஸீத தேவேச ஜகந்நிவாஸ 11 45

இதுவரை காணாத விச்வரூபத்தைப் பார்த்து மகிழ்ச்சியடைந்தவனாக இருக்கிறேன். பயத்தினாலும் என் மனம் நடுக்கமடைந்துள்ளது. தேவர்களின் ஈசனே! ஜகத்திற்கெல்லாம் (உலகிற்கெல்லாம்) ஆதாரமாக (பிடிப்பாக) உள்ளவரே! ஸ்வாமி! உம்முடைய முன் உருவத்தையே எனக்குக் காண்பித்தருளும்.

किरीटिनं गदिनं चक्रहस्त-
मिच्छामि त्वां द्रष्टुमहं तथैव ।
तेनैव रूपेण चतुर्भुजेन
सहस्रबाहो भव विश्वमूर्ते ॥ ४६

கிரீடினம் கதினம் சக்ரஹஸ்த-
மிச்சாமி த்வாம் த்ரஷ்டுமஹம் ததைவ I
தேனைவ ரூபேண சதுர்புஜேன
ஸஹஸ்ரபாஹோ பவ விச்வமூர்தே II 46

முன்போலவே உம்மைக் கிரீடத்துடனும், கதை, சக்ரம் முதலிய ஆயுதங்களுடன் கூடிய கைகளுடனும் காண நான் விரும்புகிறேன். பல கைகளையுடையவரே! விச்வரூபத்தையுடையவரே! நான்கு கைகளுடன் கூடிய அந்த முன் உருவத்துடனேயே காட்சியளிப்பீராக.

[ஸ்ரீ ராமானுஜர்:— இந்த ச்லோகத்திலிருந்து, விச்வரூபமெடுக்குமுன்னர் ஸ்ரீ க்ருஷ்ண பகவான் சங்கு, சக்ரம், கதை முதலியவைகளையேந்திய நான்கு கைகளுடன் காணப்பட்டார் எனத் தெரிகிறது. பகவான் தேவகியின் கர்பத்திலிருந்து பிறந்தபோது, தேவகிக்கும் வஸுதேவருக்கும் நான்கு கைகளுடன் காக்ஷியளித்ததும், பிறகு ருக்மிணி கல்யாண காலத்தில் சிசுபாலன் தியானித்தபடி ரூபம் சங்க சக்ரங்களுடன் கூடிய நான்கு கைகளையுடையது எனவும் பாகவதத்தில் காணப்படுகிறது. இங்கு அர்ஜுனனும் அப்படியே சொல்லியுள்ளான்.]

श्री भगवानुवाच -

मया प्रसन्नेन तवार्जुनेदं
रूपं परं दर्शितमात्मयोगात् ।
तेजोमयं विश्वमनन्तमाद्यं
यन्मे त्वदन्येन न दृष्टपूर्वम् ॥ ४७

ஸ்ரீ பகவானுவாச -

மயா ப்ரஸன்னேன தவார்ஜுனேதம்
ரூபம் பரம் தர்சிதமாத்மயோகாத் ।
தேஜோமயம் விச்வமனந்தமாத்யம்
யன்மே த்வதன்யேன ந த்ருஷ்டபூர்வம் ॥ 47

ஸ்ரீ க்ருஷ்ண பகவான் சொல்வது :—

அர்ஜுனா! ஒளிமயமான, எல்லா உலகையும் வியாபித்த, அழிவற்ற, ஆதிமுதலுள்ள, உன்னைத்தவிர மற்றொருவராலும் முன்னர் பார்க்கப்படாத, என்னுடைய இந்த மேலான உருவம், உனக்கு அருளவேண்டுமென்ற விருப்பத்தையுடைய என்னால், உனக்கு என் மாயா சக்தியால் காண்பிக்கப்பட்டது.

[आत्मयोगात् (ஆத்மயோகாத்) = (1) என் ஈச்வரத் தொடர்புள்ள திறனால்— ஸ்ரீ சங்கரர். (2) என்னுடைய ஸத்ய ஸங்கல்பத்தினால் —ஸ்ரீ ராமானுஜர், (3) ஸ்வரூப ஸாமர்த்யத்தால் —ஸ்ரீ ராகவேந்த்ரர்.

विश्व (விச்வம்)=(1) எல்லாவற்றிற்கும் ஆத்மாவானதும் —ஸ்ரீ ராமானுஜர், (2) பூர்ணமானதும் —ஸ்ரீ ராகவேந்த்ரர்.

अनन्तम् (அனந்தம்)=(1) ஆதி, நடுவு, முடிவில்லாததும்— ஸ்ரீராமானுஜர், (2) எல்லா இடங்களிலும், எக்காலத்திலும் உள்ள —ஸ்ரீ ராகவேந்த்ரர்.]

न देव यज्ञाध्ययनैर्न दानै-
र्न च क्रियाभिर्न तपोभिरुग्रैः ।
एवंरूपः शक्य अहं नृलोके
द्रष्टुं त्वदन्येन कुरुप्रवीर ॥ ४८

ந தேவயஞாத்யயனைர்ந தானை-
ர்ன ச க்ரியாபிர்ன தபோபிருக்ரை: ।
ஏவம்ரூப: சக்ய அஹம் ந்ருலோகே
த்ரஷ்டும் த்வதன்யேன குருப்ரவீர ॥ 48

குரு வம்சத்தின் மேலோனே! மானிடவுலகில் உன்னைத் தவிர பிறரால் இந்த விச்வரூபத்தை அடைந்த என்னை வேதங்கள், சாத்திரங்கள் இவைகளின் பயிற்சியினாலாவது, தானங்களினாலாவது, யாகங்களினாலாவது, கொடுமையான தவத்தினாலாவது பார்க்க இயலாது.

मा ते व्यथा मा च विमूढभावो
दृष्ट्वा रूपं घोरमीदृङ्ममेदम् ।
व्यपेतभीः प्रीतमनाः पुनस्त्वं
तदेव मे रूपमिदं प्रपश्य ॥ ४९

மா தே வ்யதா மா ச விமூடபாவோ
த்ருஷ்ட்வா ரூபம் கோரமீத்ருங்மமேதம் ।
வ்யபேதபீ: ப்ரீதமனா: புனஸ்த்வம்
ததேவ மே ரூபமிதம் ப்ரபச்ய ॥ 49

இத்தகைய பயங்கரமான என் இந்த விச்வரூபத்தைப் பார்த்து நீ பயப்படவேண்டாம். அறிவின்மையும் வேண்டாம். பயத்தை விட்டு மனமகிழ்ச்சியுடன் இப்போது நான் கொள்ளப்போகும் முன்னிருந்த (விச்வரூபத்திற்கு முன்னுள்ள) உருவத்தை மறுபடி செவ்வனே பார்.

संजय उवाच -

इत्यर्जुनं वासुदेवस्तथोक्त्वा
स्वकं रूपं दर्शयामास भूयः ।
आश्वासयामास च भीतमेनं
भूत्वा पुनः सौम्यवपुर्महात्मा ॥ ५०

ஸஞ்சய உவாச -

இத்யர்ஜுனம் வாஸுதேவஸ்ததோக்த்வா
ஸ்வகம் ரூபம் தர்சயாமாஸ பூய: ।
ஆச்வாஸயாமாஸ ச பீதமேனம்
பூத்வா புன: ஸௌம்யவபுர்மஹாத்மா ॥ 50

ஸஞ்ஜயன் த்ருதிராஷ்டிரனை நோக்கிச் சொல்வது—

கிருஷ்ண பகவான் அர்ஜுனனைப் பார்த்து இவ்விதம் கூறி, அப்படியே வஸுதேவ குமாரனின் உருவமான (நான்கு கைகளுடைய) தன் முன் உருவத்தைக் காண்பித்தார். மிக அதிக தயவுடைய பகவான் அமைதியான உருவத்துடன், பயந்திருந்த அர்ஜுனனை மறுபடி ஸமாதானப்படுத்தினர்.

अर्जुन उवाच -

दृष्ट्वेदं मानुषं रूपं तव सौम्यं जनार्दन ।
इदानीमस्मि संवृत्तः सचेताः प्रकृतिं गतः ॥ ५१

அர்ஜுன உவாச-

த்ருஷ்ட்வேதம் மானுஷம் ரூபம் தவ ஸௌம்யம் ஜனார்தன ।
இதானீமஸ்மி ஸம்வ்ருத்த: ஸசேதா: ப்ரக்ருதிம் கத: ॥ 51

அர்ஜுனன் ஸ்ரீ கிருஷ்ணனை நோக்கிச் சொல்வது—

ஓ ஜனார்தன! உம்முடைய அழகிய இந்த மானிட உருவத்தைப்பார்த்து, இப்போது மகிழ்ச்சியடைந்த மனதுடன் கூடியவனாகவும், இயற்கையான நிலையையடைந்தவனாகவும் நான் ஆகியுள்ளேன்.

श्रीभगवानुवाच -
सुदुर्दर्शमिदं रूपं दृष्टवानसि यन्मम ।
देवा अप्यस्य रूपस्य नित्यं दर्शनकाङ्क्षिणः ॥ ५२

ஸ்ரீபகவானுவாச-

ஸுதுர்தர்சமிதம் ரூபம் த்ருஷ்டவானஸி யன்மம 1
தேவா அப்யஸ்ய ரூபஸ்ய நித்யம் தர்சனகாங்க்ஷிண: ll 52

பகவான் அர்ஜுனனுக்குச் சொல்வது :—

என்னுடைய விச்வ ரூபத்தைப் பார்த்தாய். இந்த விச்வரூபம் சுத்தமாகக் காணக் கிடைக்காதது. தேவதைகள் கூட இந்த ரூபத்தைக்காண விரும்புகிறார்கள். (ஆனால் காண்கிறதில்லை).

नाहं वेदैर्न तपसा न दानेन न चेज्यया ।
शक्य एवंविधो द्रष्टुं दृष्टवानसि मां यथा ॥ ५३

நாஹம் வேதைர்ன தபஸா ந தானேன ந சேஜ்யயா 1
சக்ய ஏவம்விதோ த்ரஷ்டும் த்ருஷ்டவானஸி மாம் யதா ll53

நீ என்னை எப்படிப் பார்த்தாயோ, அவ்விதமாக வேதங்களினாலோ, தவத்தினாலோ, தானத்தினாலோ, யாகத்தினாலோ என்னைப் பார்ப்பது ஸாத்யமல்ல.

[ஸ்ரீ ராமானுஜர்— பக்தியின்றி வேதாத்யயனம், தானம், தவம், ச்ரவணம், ஹோமம் முதலியவற்றால் காண்பது ஸாத்தியமல்ல எனக் கருத்து.]

भक्त्या त्वनन्यया शक्य अहमेवंविधोऽर्जुन ।
ज्ञातुं द्रष्टुं च तत्त्वेन प्रवेष्टुं च परंतप ॥ ५४

பக்த்யா த்வனன்யயா சக்ய அஹமேவம்விதோஅர்ஜுன 1
ஞாதும் த்ரஷ்டும் ச தத்த்வேன ப்ரவேஷ்டும் ச பரம்தப ll

ஓ அர்ஜுன! இந்த விச்வ ரூபத்துடன் கூடிய என்னிடம், வைக்கப்பட்ட பக்தியினுலேயே உண்மையாக அறிவடையவும், பார்க்கவும், என் ஸ்வரூபத்தை அடையவும் நான் தகுந்தவனுக இருக்கிறேன் (பக்தியினுலேயே என்னை அறியவும், உண்மை ஞானம் பெறவும், என்னையடையவும் முடியும்.)

[अनन्यया (அனன்யயா)=(1) எல்லாப் புலன்களுக்கும் வாஸுதேவனன்றி வேறு யாதும் விஷயமாகாததாகவுள்ள பேதமற்ற —ஸ்ரீ சங்கரர், (2) பிறருக்கு ஸாதாரணமானதல்லாத —ஸ்ரீ ராகவேந்த்ரர்.

प्रवेष्टुं च (ப்ரவேஷ்டும் ச)=(1) மோக்ஷத்தையடையவும் —ஸ்ரீ ராமானுஜர், (2) ஸாயுஜ்யமடையவும் —ஸ்ரீ ராகவேந்த்ரர்.]

मत्कर्मकृन्मत्परमो मद्भक्तः सङ्गवर्जितः ।
निर्वैरः सर्वभूतेषु यः स मामेति पाण्डव ॥ ५५

மத்கர்மக்ருன்மத்பரமோ மத்பக்த: ஸங்கவர்ஜித: ।
நிர்வைர: ஸர்வபூதேஷு ய: ஸ மாமேதி பாண்டவ ॥ 55

ஓ பாண்டவ! என் பொருட்டுக் கர்மங்களைச் செய்பவனும், என்னையே பரமபுருஷார்த்தமென (உயரிய இலக்காக) நம்பியிருக்கிறவனும், என்னிடத்தில் திடமான (நிலையான) பக்தியையுடையவனும், எல்லாப் புலன்களுக்குரிய இன்பங்களை விட்டவனும், எல்லாப் பிராணிகளிடத்திலும் வெறுப்பற்றவனும் எவனோ அவன் என்னை அடைகிறுன்.

[ஸ்ரீ ராமானுஜர் :— எல்லாக் கர்மங்களையும் என் ஆராதனை ரூபமாகச் செய்பவன், எல்லாக் கார்யங்களுக்கும் என்னையே உத்தேசித்தவன், அதிக அன்போடு என்னைக் கீர்த்தனம், ஸ்தோத்திரம், த்யானம், அர்ச்சனை,

நமஸ்காரம் இவைகளை எப்போதும் செய்தாலன்றி தனக்கு உயிரில்லை என்றுள்ளவன், என்னிடம் அதிகப் பிரியமுள்ளவனுய், வேறு விஷயங்களில் ஈடுபாடில்லா தவன், என்னைச் சார்ந்திருக்கிறது சுகம், என்னை விட்டி ருப்பது துக்கம் என்றும், தனக்குத் துயரமேற்பட்டால் அது தனது அபராதத்தாலேற்பட்டது என்றும், எல்லாப் பிராணிகளும் ஈச்வராதீனம் என எப்போதும் எண்ணுவ தால் வெறுப்பிற்குக் காரணமில்லை எனவே த்வேஷமற்ற வனும் என்னை அடைகிருன்.

ஸ்ரீ சங்கரர் :— கர்மங்களைச்செய்து பலனை எனக்கு அர்ப்பணிப்பவன், என்னையே பரமகதி என நம்பியுள்ள வன், எவ்விதத்திலும் ஒரே நம்பிக்கையுடனும் மகிழ்ச்சி யுடனும் என்னை பூஜிப்பவன், தன் பிள்ளை, மனைவி, நண்பன், உறவினன், செல்வம், போகம் முதலியவை களில் ஆசையை விட்டவன், தன் விரோதிகளிடத்திலும் கூட த்வேஷமில்லாதவன் என்னை அடைகிருன்.]

விச்வரூபதர்சனமெனும் பதினேராவது அத்யாயம் முற்றிற்று.

பன்னிரண்டாவது அத்யாயம்

பக்தியோகம்

अर्जुन उवाच -

एवं सततयुक्ता ये भक्तास्त्वां पर्युपासते ।
ये चाप्यक्षरमव्यक्तं तेषां के योगवित्तमाः ॥ १

ஏவம் ஸததயுக்தா யே பக்தாஸ்த்வாம் பர்யுபாஸதே ।
யே சாப்யக்ஷரமவ்யக்தம் தேஷாம் கே யோகவித்தமா: ॥ 1

அர்ஜுனன் சொல்வது:—

இப்படி எப்போதும் உம்மிடத்தில் மனதையுடைய எந்த பக்தர்கள் உம்மை உபாஸிக்கின்றனரோ, எவர் காணக்கூடாத அழிவற்ற ப்ரஹ்மத்தைத் தியானிக்கிருர்களோ, அவர்களுள் யார் யோகத்தை அறிந்தவர்களுள் மேலானவர்?

[ஸ்ரீதரர்— அத்யாயங்கள் 11, 9 இவைகளில் பக்தி யோகத்துடன் கூடியவன் மேலானவன் என்றும், அத்யாயங்கள் 4, 7, இவைகளில் ஞானநிஷ்டன் மேம்பட்டவன் எனவும், சொல்லப்பட்டதால் இவ்விரு வகையரும் மேலானவராஞலும், இந்த ஸகுணோபாஸகர், நிர்குணோபாஸகர்களுள் யார் மேலானவர் என்பது அர்ஜுனனின் கேள்வி.

ஸ்ரீசங்கரர்— அத்யாயம் 2 முதல் 10 வரை, அழிவற்ற மாயையைக் கடந்த பரமாத்மாவான நிர்குண ப்ரஹ்மத்தின் உபாஸனையும், விச்வரூபோத்யாயத்தில் (11) விச்வரூபம், ஸகுணோபாஸனையின் பொருட்டே உம்மால் காண்பிக்கப்பட்டது. இந்த இரண்டு உபாஸனை வழிகளில் எது மேலானது என அறிய அர்ஜுனன் விரும்புகிருன்.

ஸ்ரீ ராமானுஜர் :— அர்ஜுனனுக்குக் காண்பிக்கப் பட்ட விச்வரூபமும், ஞானமும் பக்தியினுலேயே யடை யத் தகுந்ததேயன்றி வேறென்றினுலல்ல என முன்னர் சொல்லப்பட்டது. இப்போது ஆத்ம ப்ராப்திக்கு ஸாதன மான ஆத்மபோதனைகளைக்காட்டிலும், பக்தி ரூபமான பகவத் உபாஸனை, ஆத்ம ப்ராப்தியை சீக்கிரமாகவும், எளிதாகவும் ஏற்படுத்துவதால், பகவத் உபாஸனையின் மேன்மையும், அதற்கு உபாயமும், அதில் சக்தியற்ற வனுக்கு அக்ஷர உபாஸனையும் அதற்கான ஸாதனங் களும் சொல்லப்படுகின்றன.

ஸ்ரீ மத்வர் :— இந்த ச்லோகத்தின் முதல் பாகம் பர மாத்மாவான ஸ்ரீ நாராயணனைப்பற்றியது. பின் பாகம் ஸ்ரீதேவியான லக்ஷ்மியைப்பற்றியது. எவர் ப்ரஹ்ம மாகிய உம்மை உபாஸிக்கின்ருர்களோ, எவர் அவ்யக் தம், அக்ஷரமெனச் சொல்லப்படும் லக்ஷ்மியை உபாஸிக் கிருர்களோ அவர்களில் எவர் மேம்பட்டவர் என்பது அர்ஜுனன் கேள்வி.]

श्रीभगवानुवाच -

मय्यावेश्य मनो ये मां नित्ययुक्ता उपासते ।
श्रद्धया परयोपेतास्ते मे युक्ततमा मताः ॥ २

ஸ்ரீபகவானுவாச -

மய்யாவேச்ய மனோ யே மாம் நித்யயுக்தா உபாஸதே ।
ச்ரத்தயா பரயோபேதாஸ்தே மே யுக்ததமா மதா: ॥ 2

ஸ்ரீ பகவான் சொல்வது—

பரமேச்வரனுகிய என்னிடம் மனதை நிறுத்தி, எல் லாக் கருமங்களையும் என் பொருட்டுச் செய்து, பலனை எனக்கு அர்ப்பணம் செய்தும், மேலான அக்கரையுட னும் எவர் என்னை உபாஸிக்கிருர்களோ அவர்கள் மேம் பட்டவர்களென்பது என் கருத்து.

[नित्ययुक्ता: (நித்யயுக்தா:)=(1) என்னிடம் எப்போதும் தியானத்திலீடுபட்டு —ஸ்ரீ சங்கரர்: (2) எப்போதும் என்னிடம் இருக்கவேண்டுமென்ற அபிப்பிராயமுடையவனுக —ஸ்ரீ ராமானுஜர், (3) கர்மயோக, த்யான யோகங்களுடன் கூடிய —ஸ்ரீ ராகவேந்த்ரர்.]

ये त्वक्षरमनिर्देश्यमव्यक्तं पर्युपासते ।
सर्वत्रगमचिन्त्यं च कूटस्थमचलं ध्रुवम् ॥ ३

யே த்வக்ஷரமனிர்தேச்யமவ்யக்தம் பர்யுபாஸதே ।
ஸர்வத்ரகமசிந்த்யம் ச கூடஸ்தமசலம் த்ருவம் ॥ 3

संनियम्येन्द्रियग्रामं सर्वत्र समबुद्धयः ।
ते प्राप्नुवन्ति मामेव सर्वभूतहिते रताः ॥ ४

ஸம்நியம்யேந்த்ரியக்ராமம் ஸர்வத்ர ஸமபுத்தய: ।
தே ப்ராப்னுவந்தி மாமேவ ஸர்வபூதஹிதே ரதா: ॥ 4

புலன்களை செவ்வனே அடக்கி, எல்லாவற்றிலும் ஸம புத்தியை உடைய, எல்லா ப்ராணிகளுக்கும் நன்மையை வேண்டுகிற எவர்கள் வாயினல் வர்ணிக்க முடியாததும், கண்களால் காணக்கூடாததும், மனத்தால் நினைக்கக்கூடாததும், மாய உலகிற்கு ஆதாரமாகவும், அசைவு அல்லது வளர்ச்சி, குறைதலற்ற, சாச்வதமானவும், எல்லாவற்றிலும் வியாபித்துள்ள நிர்குண ப்ரஹ்மத்தை உபாஸிக்கிருர்களோ அவர்கள் என்னையே அடைகின்றனர்.

[ஸ்ரீ மத்வர் :— இந்த இரண்டு ச்லோகங்களிலுள்ள அநிர்தேச்யம், அவ்யக்தம். அசிந்த்யம், கூடஸ்தம், அசலம், த்ருவம், ஸர்வத்ரகம், அக்ஷரம் என்று எட்டுச் சொற்களும் லக்ஷ்மியைக் குறித்தவைகளே.

ஸ்ரீ ராகவேந்த்ரர்:— அவ்யக்த லக்ஷ்மியின் உபாஸனையைவிட என்னை (பகவானை) உபாஸிப்பது மேல். அவ்யக்த உபாஸனைக்கும் மோக்ஷம் கிடைக்குமானாலும், அது கஷ்டத்தால் அடையக்கூடியது. என்னை உபாஸிப்பதால் மோக்ஷத்தை எளிதில் அடையலாம்.]

क्लेशोऽधिकतरस्तेषामव्यक्तासक्तचेतसाम् ।
अव्यक्ता हि गतिर्दुःखं देहवद्भिरवाप्यते ॥ ५

க்லேசோஅதிகதரஸ்தேஷாம் அவ்யக்தாஸக்தசேதஸாம் ।
அவ்யக்தா ஹி கதிர்து:கம் தேஹவத்பிரவாப்யதே ॥ 5

நிர்குண ப்ரஹ்மத்திடம் மனதை நிறுத்தி தியானிக்க விரும்புகிறவர்களுக்கு ப்ரயாஸை (முயற்சி) அதிகம் தேவை. ஏனெனில் நிர்குண ப்ரஹ்மநிஷ்டை உடல் முதலியவற்றில் அபிமானமுள்ளவர்களால் அடைவது கடினம்.

[ஸ்ரீ மத்வர்:— எல்லாப்புலன்களையடக்கல், ஸர்வ ஸம புத்தி, எல்லா பிராணிகளிடமும் ஹிதமான நோக்கு, நல்ல ஆசாரம், திடமான விஷ்ணு பக்தி, இவை போன்ற ஸாதனங்களன்றி ஸ்ரீதேவீ (லக்ஷ்மி) ப்ரத்யக்ஷமாகிறதில்லையாகையால் ஸ்ரீயுபாஸனை அதிகடினம்.

ஸ்ரீ ராகவேந்த்ரர்:— விஷ்ணு ஸம்பந்தமில்லாமல், ஸ்ரீயை மட்டும் உபாஸித்து அதனால் விஷ்ணுவையடைவது கடினம். ஏனெனில் இந்த்ரியநிக்ரஹம், ஸமபுத்தி, ஆசாரம் முதலியவை வேண்டும்.]

ये तु सर्वाणि कर्माणि मयि सन्यस्य मत्पराः ।
अनन्येनैव योगेन मां ध्यायन्त उपासते ॥ ६

யே து ஸர்வாணி கர்மாணி மயி ஸன்யஸ்ய மத்பரா: ।
அனன்யேனைவ யோகேன மாம் த்யாயந்த உபாஸதே ॥ 6

तेषामहं समुद्धर्ता मृत्युसंसारसागरात् ।
भवामि न चिरात्पार्थ मय्यावेशितचेतसाम् ॥ ७

தேஷாமஹம் ஸமுத்தர்தா ம்ருத்யுஸம்ஸாரஸாகராத் I
பவாமி ந சிராத்பார்த மய்யாவேசிதசேதஸாம் II 7

ஓ அர்ஜுனா! எவர்கள் எல்லாக் கர்மங்களையும் என்னிடம் அர்ப்பணித்து, என்னைச் சரணடைந்து, ஒரேவிதமான பக்தியோகத்தினால், என்னை எப்போதும் தியானம் செய்து, உபாஸிக்கிறார்களோ, என்னிடம் வைக்கப்பட்ட மனதையுடைய அவர்களை, மிருத்யுவாகிய (யமன் போன்ற) ஸம்ஸாரஸாகரத்திலிருந்து (பிறவிக் கடலிலிருந்து) விரைவில் நான் கரையேற்றுகிறேன்.

[ஸ்ரீ ராகவேந்த்ரர்:— பகவத் உபாஸனையில் அவ்வளவு சிரமமும் பிரயாஸையுமில்லை என்று சொல்லப்படுகிறது. லக்ஷ்மி முதலிய பரிவார தேவதைகளுடன் பகவானை உபாஸிக்க வேண்டுமென்றும், அப்படி உபாஸிப்பவர்கள் சீக்கிரத்தில் மோக்ஷமடைவார்கள் எனக் கருத்து.

सर्वाणि कर्माणि (ஸர்வாணி கர்மாணி)=உடல் முதலியவற்றைக் காக்க உணவு முதலிய கர்மங்களையும், யாகம், தானம், தவம், ஹோமம், ஜபம் முதலிய வைதிக கர்மங்களையும் —ஸ்ரீ ராமானுஜர்.

अनन्येनैव योगेन (அனன்யேனைவ யோகேன) = (1) விச்வரூபியாக உள்ள என்னைத் தவிர வேறு ஒன்றையும் ஆச்ரயிக்காமலிருக்கும் ஸமாதியினால் —ஸ்ரீ சங்கரர், (2) என்னைத் தவிர வேறு பிரயோஜனமில்லாத பக்தியினால்— ஸ்ரீ ராமானுஜர்.

उपासते (உபாஸதே)=த்யானம், அர்ச்சனை, சிரவணம், கீர்த்தனம், ஸ்துதி, நமஸ்காரம் முதலியன செய்வது —ஸ்ரீ ராமானுஜர்.

मृत्युसंसारसागरात् (ம்ருத்யுஸம்ஸாரஸாகராத்)= (1) ம்ருத்யுவுடன் கூடின ஸம்ஸாரமாகிற கடலிலிருந்து —ஸ்ரீதரர், ஸ்ரீ சங்கரர், (2) என்னையடைய விரோதமாக வுள்ள ஸம்ஸாரமெனும் கடலிலிருந்து —ஸ்ரீ ராமானுஜர்.]

मय्येव मन आधत्स्व मयि बुद्धिं निवेशय ।
निवसिष्यसि मय्येव अत ऊर्ध्वं न संशयः ८

மய்யேவ மன ஆதத்ஸ்வ மயி புத்திம் நிவேசய ।
நிவஸிஷ்யஸி மய்யேவ அத ஊர்த்வம் ந ஸம்சய: ॥ 8

என்னிடமே மனதை திடமாக நிறுத்து, என்னிடமே புத்தியை நிறுத்து, அதற்குமேல் என்னிடமே நீ வஸித்திருப்பாய் என்பதில் ஐயமில்லை.

[अथ ऊर्ध्वं (அத ஊர்த்வம்)=(1) இந்த உடல் போன பின்— ஸ்ரீ சங்கரர், ஸ்ரீதரர், (2) அதன் பிறகு—ஸ்ரீ ராமானுஜர், ஸ்ரீ ராகவேந்த்ரர்,

मय्येव निवसिष्यसि (மய்யேவநிவஸிஷ்யஸி)=(1) என் ஸ்வரூபமாக இருப்பாய் —ஸ்ரீ சங்கரர், ஸ்ரீதரர், (2) என்னிடம் நித்யமுக்தனாக இருப்பாய் —ஸ்ரீ மத்வர், (3) துக்கமற்ற ஆனந்தானுபவ ஸ்வரூபமான இருப்பை அடைவாய் —ஸ்ரீ ராகவேந்த்ரர்.]

अथ चित्तं समाधातुं न शक्नोषि मयि स्थिरम् ।
अभ्यासयोगेन ततो मामिच्छाप्तुं धनंजय ॥ ९

அத சித்தம் ஸமாதாதும் ந சக்னோஷி மயி ஸ்திரம் ।
அப்யாஸயோகேன ததோ மாமிச்சாப்தும் தனம்ஜய ॥ 9

அர்ஜுனா! மனதை என்னிடம் உறுதியாக நிறுத்த முடியாவிடில், பிறகு தொடற்சியான பழக்கத்தால் (அப்யாஸத்தால்) என்னை அடைய முயற்சிக்க விரும்பு.

अभ्यासेऽप्यसमर्थोऽसि मत्कर्मपरमो भव ।
मदर्थमपि कर्माणि कुर्वन्सिद्धिमवाप्स्यसि ॥ १०

அப்யாஸேஅப்யஸமர்தோஅஸி மத்கர்மபரமோ பவ l
மதர்தமபி கர்மாணி குர்வன்ஸித்திமவாப்ஸ்யஸி ll 10

முன் சொன்ன அப்யாஸத்திலும் திறமையற்றவனாக யிருப்பாயாகில், எனக்கு மகிழ்ச்சியைத் தரும் கர்மங்களே மேலானவை என அறிந்து, கடைப்பிடிக்கவும். என் மகிழ்ச்சிக்காகவே கர்மங்களைச் செய்து வந்தால் மோக்ஷமடைவாய் (சித்தசுத்தியால் ஏற்படும் ஞானத்தால் மோக்ஷமடைவாய்.)

[मत्कर्मपरमः (மத்கர்மபரம:)=(1) எனக்காகச் செய்ய வேண்டிய கர்மங்களை முக்யமாக ஆச்ரயித்தவனாக —ஸ்ரீ சங்கரர், (2) ஏகாதசி உபவாஸம், வ்ருதானுஷ்டானம், நாமஸங்கீர்த்தனம் முதலிய கர்மங்களை உத்தமம் என அறிந்து— ஸ்ரீ ராமானுஜர். (3) ஆலய நிர்மாணம். நந்தவனம் அமைத்தல், தீபம் ஏற்றல், புஷ்பம் முதலியன தேவதாராதனத்துக்காக கொண்டுவருதல், பூஜை நடப்பித்தல், நாம ஸங்கீர்த்தனம், பிரதக்ஷிணம், ஸ்தோத்ரம், நமஸ்காரம் முதலியவற்றில் ஈடுபட்டு —ஸ்ரீ ராகவேந்த்ரர்]

अथैतदप्यशक्तोऽसि कर्तुं मद्योगमाश्रितः ।
सर्वकर्मफलत्यागं ततः कुरु यतात्मवान् ॥ ११

அதைததப்யசக்தோஅஸி கர்தும் மத்யோகமாச்ரித: l
ஸர்வகர்மஃபலத்யாகம் தத: குரு யதாத்மவான் ll 11

எனக்குப் பிரியமான கார்யங்களைக்கூடச் செய்யச் சக்தியற்றவனாக இருப்பாயாகில், என்னைச் சரணமடைந்து உறுதியான மனதுடன் உன்னுடைய எல்லாக் கர்மங்களுடைய பலனை ஈச்வரார்ப்பணம் செய்யும் த்யாகத்தை மேற்கொள்வாயாக.

[मद्योगमाश्रितः (மத்யோகமாச்ரித:)=(1) செய்யும் கர்மங்கள் அனைத்தையும் என்னிடம் ஸமர்ப்பித்துச் செய்வதைக் கடைப்பிடித்தவனாக— ஸ்ரீ சங்கரர், (2) என்னுடைய குணங்களை மனதில் எண்ணி, எண்ணி. எனக்குப் பிரியமான பக்தியோகத்தைக் கடைப்பிடித்தவனாக— ஸ்ரீ ராமானுஜர், (3) பிற தேவதைகளைக் குறித்துக் கர்மங்களைச் செய்து, அதை எனக்கு அர்ப்பணம் செய்யும் யோகத்தைக் கடைப்பிடித்தவனாக —ஸ்ரீராகவேந்த்ரர்.

குறிப்பு:— இதில் சொல்லப்பட்ட வழி எல்லோரும் கடைப்பிடிக்கவும் ஸுலபமாகவும், விரைவிலும் மோக்ஷ பலனை அடைய வழியாகும். ஆஸ்திக புத்தியுடன், ஒவ்வொரு நாளும், பிரதி நிமிடமும், ஒருவன் செய்யும் வைதிக, லௌகிக கர்மங்கள் அனைத்தையும், தனக்கோ தன்னைச் சார்ந்தவர்களுக்கோ ப்ரயோஜனமாகும் நோக்குடன் செய்யாது ஈச்வரார்ப்பணம் செய்வது என்ற தியாக புத்தி இதில் குறிப்பிடப்படுகிறது. (உதாரணம் எனக்காகச் செய்யப்படும் அன்னம் பகவானின் நிவேதனத்துக்குரியது, நான் கேட்டு ரஸிக்கும் இசை பகவத்ப்ரீதியாகட்டும்.) கெட்ட கர்மங்கள் செய்யாமல், நற்கர்மங்களின் பயனை பகவானுக்கு அர்ப்பணம் செய்வதையே இந்த ச்லோகம் குறிப்பிடுகிறது.]

श्रेयो हि ज्ञानमभ्यासाज्ज्ञानाद्ध्यानं विशिष्यते ।
ध्यानात्कर्मफलत्यागस्त्यागाच्छान्तिरनन्तरम् ॥ १२

ச்ரேயோ ஹி ஞானமப்யாஸாத்ஞானாத்யானம் விசிஷ்யதே ।
த்யானாத்கர்மஃபலத்யாகஸ்த்யாகாச்சாந்திரனந்தரம் ॥ 12

மனதை மறுபடி மறுபடி உறுதி செய்து நிறுத்தும் அப்யாஸத்தைக்காட்டிலும் ஞானமும், ஞானத்தைப் பார்க்கிலும் த்யானமும், த்யானத்தைக்காட்டிலும் கர்மபல த்யாகமும் மேலானவை. கர்மபல த்யாகத்தால் விரைவில் கட்டிலிருந்து விடுபடலாம்.

[ஸ்ரீ சங்கரர் :— விவேகமற்று செய்யும் அப்யாஸத்தைக்காட்டிலும் ஞானமடைவது மேல், ஞானத்தைவிட ஞானத்துடன் செய்யும் த்யானம் மேலானது. ஞானமடைந்தவனுக்குத் தியானத்தைக் காட்டிலும் கர்ம பல த்யாகம் மேலானது. இந்த விசேஷங்களுடன் கூடிய கர்ம பல த்யாகமே விரைவில் பிறப்பு இறப்புக் கடலிலிருந்து விடுபட ஹேதுவாகும். இப்படி அனுஷ்டிக்கச் சக்தியற்ற அஞானிக்கே எல்லா கர்மபல த்யாகம் சொல்லப்பட்டது தியாகமே முதன்மையானதல்ல. ஒன்றுக்கு மேல் ஒன்று விசேஷமாகச் சொல்லப்பட்டுக் கடைசியில் தியாகம் சொல்லப்பட்டது. முன் சொல்லப்பட்டவைகளான ஸாதனங்களை அனுஷ்டிக்கச் சக்தியற்றவர்களே கர்மபல த்யாகத்தை அனுஷ்டிக்கவேண்டியது.

ஸ்ரீ ராமானுஜர் :— கர்மபல த்யாகத்தினுல் பாவம் நீங்கும். அப்படி நீங்குவதால் மனச் சாந்தியும், அதனுல் ஆத்ம த்யானமும் திடப்படும். ஆத்ம த்யானத் திடத்தால் ஆத்ம அபரோக்ஷ ஞானமுண்டாகும். அதிலிருந்து திட பக்தியேற்படும். திடபக்தியால் மோக்ஷமடையலாம் என்பது கருத்தேயன்றி கர்ம பல த்யாகத்தினுலேயே உடன் மோக்ஷம் கிடைத்துவிடு மென்பது அல்ல. மோக்ஷத்திற்கு கர்மபல த்யாகம் ஆதிகாரணமென்பது கருத்து.

ஸ்ரீ மத்வர் :— ஞானமில்லாத அப்யாஸம், அப்யாஸத்துடன் கூடிய ஞானம், ஞானத்துடன் த்யானம், இவை ஒன்றுக்கொன்று மேலானது. த்யானத்தைவிட அபரோக்ஷஞானம் மேலானது. இது மோக்ஷத்தைக் கொடுக்கும். இவை யாவற்றுக்கும் நிஷ்காம கர்மம் செய்து பலனை ஈச்வரார்ப்பணம் செய்யும் தியாகம் ஆதி காரணம். இந்த தியாகம் மோக்ஷ ஸாதனமென ஸாதாரணமாக ஸ்தோத்ரமாகச் சொல்லப்பட்டது.]

अद्वेष्टा सर्वभूतानां मैत्रः करुण एव च ।
निर्ममो निरहंकारः समदुःखसुखः क्षमी ॥ १३

அத்வேஷ்டா ஸர்வபூதானும் மைத்ர: கருண ஏவ ச ।
நிர்மமோ நிரஹங்கார: ஸமது:கஸுக: க்ஷமீ ॥ 13

संतुष्टः सततं योगी यतात्मा दृढनिश्चयः ।
मय्यर्पितमनोबुद्धिर्यो मद्भक्तः स मे प्रियः ॥ १४

ஸந்துஷ்ட: ஸததம் யோகீ யதாத்மா த்ருடநிஸ்சய: l
மய்யர்பிதமனோபுத்திர்யோ மத்பக்த: ஸ மே ப்ரிய: ll 14

எல்லா ப்ராணிகளிடத்திலும் வெறுப்பில்லாமலும், அவைகளிடம் நட்புடனும், கருணையுடனும், தன்னுடையது, தான் என்ற நினைப்புகளற்றும், ஸுகம் துயரமிவைகளை ஸம நோக்குடன் பார்த்தும், பொறுமையுடனும், எப்போதும் மகிழ்ச்சியுடனும், எப்போதும் தியானம் செய்து கொண்டும், மனதையடக்கும் இயற்கையுடனும் என்னுடைய ஸ்வரூபத்தில் திடமான புத்தியுடனும், மனம், புத்தி ஆகியவற்றை என்னிடத்தில் அர்ப்பணம் செய்தும் இருக்கும் என் பக்தன் எவனோ அவன் எனக்கு மிகவும் விருப்பமுள்ளவன்.

[अद्वेष्टा (அத்வேஷ்டா) = (1) தனக்குத் தீங்கிழைத்தவனையும் வெறுக்காதவன் —ஸ்ரீ சங்கரர், (2) உத்தமனிடம் த்வேஷமில்லாதவனாய் —ஸ்ரீதரர், (3) உபகாரி, அபகாரி, த்வேஷி இவர்களிடத்தில் த்வேஷமற்றவன்— ஸ்ரீ ராமானுஜர், (4) ஒருவருக்கும் பிரியமற்றதைச் செய்யாதவன்— ஸ்ரீ ராகவேந்த்ரர்.

मैत्रः (மைத்ர:) = (1) தனக்கு ஸமமானவர்களிடம் அன்புள்ளவன் —ஸ்ரீதரர், (2) எல்லோரிடத்திலும் ப்ரியமுள்ளவன் —ஸ்ரீ ராமானுஜர், (3) ஒருவனுக்கு வரக்கூடிய ஆபத்தைச் சொல்லி அதினின்று அவனைக் காப்பாற்றுபவன்— ஸ்ரீ ராகவேந்த்ரர்.

करुणः (கருண:) = (1) தாழ்ந்தவர்களிடத்தில் கருணையுள்ளவன் —ஸ்ரீதரர், (2) துக்கப்படுபவர்களிடம் கருணைகாட்டுபவன் —ஸ்ரீ ராமானுஜர், (3) எப்போதும் எல்லோரிடமும் கருணையுடையவன் —ஸ்ரீ ராகவேந்த்ரர்.

निरहंकार: (நிரஹங்காரः)=(1) உடலே தான் என்ற அபிமானமற்றவன் —ஸ்ரீ ராமானுஜர், (2) தன்னிடமில்லாத குணங்களைத்தானடைந்துள்ளதாக எண்ணும் அஞானமடையாதவன்.

समदु:खसुख: (ஸமது:கஸுக:) = (1) ஸுகத்தில் மகிழ்ச்சியும் துயரத்தில் வெறுப்புமில்லாதவன்-ஸ்ரீசங்கரர், ஸ்ரீ ராமானுஜர், (2) பிறருடைய ஸுக துக்கங்களைத் தன்னுடையதுபோல் நினைப்பவன் —ஸ்ரீதரர், (3) புலன்களுக்கின்பம் தரும் விஷய ஸுகமானது எவனுக்குத் துயரத்திற்கு ஸமானமோ அவன் — ஸ்ரீ ராகவேந்த்ரர்.

संतुष्ट: (ஸம்துஷ்ட:)=(1) உடலைக்காக்க கிடைத்தது அற்பமானாலும் அதுவே போதுமெனும் திருப்தியுடனும், கிடைத்தது நல்லதாயினும் தீயதாயினும் அதனால் மகிழ்ச்சியடைபவன் —ஸ்ரீ சங்கரர், (2) கிடைத்தால் மகிழ்ச்சியும், கிடைக்காவிடில் துக்கமுமின்றி திருப்தியுடனிருப்பவன் —ஸ்ரீதரர், (3) முயற்சியின்றி உடலைக் காக்க எது கிடைக்குமோ அதைக்கொண்டு திருப்தியடைபவன் —ஸ்ரீராமானுஜர், (4) திருப்தியுள்ளவன்—ஸ்ரீராகவேந்த்ரர்.

योगी (யோகீ) = (1) சித்தஸமாதானமுள்ளவன்—ஸ்ரீ சங்கரர், (2) தவறுதவன் —ஸ்ரீதரர், (3) ப்ரக்ருதியில்லாததன் ஸ்வரூபத்தைக் காண்பதில் ஈடுபட்டவன்—ஸ்ரீ ராமானுஜர், (4) கர்மம், த்யானம் ஆகிய ஞான உபாயமுள்ளவன் —ஸ்ரீ ராகவேந்த்ரர்.

दृढनिश्चय: (த்ருடநிச்சய:)=(1) ஆத்மதத்வ நிச்சயத்தியுள்ளவன் — ஸ்ரீ சங்கரர், (2) வேதாந்த சாத்திரங்களில் திடமான நம்பிக்கையுடன் அதன்படி நடப்பவன்—ஸ்ரீ ராமானுஜர், (3) அப்ரமாணமெனும் ஐயமற்ற தத்வ நிச்சயமுடையவன் — ஸ்ரீராகவேந்த்ரர்.

मद्भक्त: (மத்பக்த:)=கர்மயோகத்தால் என்னை ஆராதிக்கும் பக்தன் — ஸ்ரீ ராமானுஜர்.

यस्मान्नोद्विजते लोको लोकान्नोद्विजते च यः ।
हर्षामर्षभयोद्वेगैर्मुक्तो यः स च मे प्रियः ॥ १५

யஸ்மான்னோத்விஜதே லோகோ லோகான்னோத்விஜதே
ச ய: 1
ஹர்ஷாமர்ஷபயோத்வேகைர்முக்தோ ய: ஸ ச மே ப்ரிய: 11

எவனிடத்திலிருந்து ஜனங்கள் பயமடைகிறதில்லையோ, ஜனங்களிடத்திலிருந்தும் எவன் பயமடைகிறதில்லையோ, மகிழ்ச்சி, கோபம், பயம், மனக்கலக்கம் ஆகியனவற்றிலிருந்து எவன் விடுபட்டவனோ அவனுமெனக்குப் பிரியமானவன்.

[यस्मात् (யஸ்மாத்) = (1) எந்த ஸன்யாஸியிடமிருந்து —ஸ்ரீ சங்கரர், (2) எந்த கர்மநிஷ்டன் நிமித்தமாக— ஸ்ரீ ராமானுஜர்.

हर्षः (ஹர்ஷ:) = (1) விரும்பியதை அடைவதால் ஏற்படும் மயிர் கூச்சல், ஆனந்தக் கண்ணீர் முதலியவற்றால் ஏற்படும் மனதின் நிலை — ஸ்ரீ சங்கரர், (2) உற்சாகம் —ஸ்ரீதரர், (3) மதத்தினால் அதர்மமான விஷயங்களில் ஈடுபடுதல் — ஸ்ரீ ராகவேந்த்ரர்.

अमर्षः (அமர்ஷ:) = (1) பொறாமை —ஸ்ரீதரர், (2) ரோஷம் — ஸ்ரீ ராகவேந்த்ரர்.

उद्वेगः (உத்வேக: = (1) பய முதலியவற்றால் ஏற்படும் மனக்கலக்கம்-ஸ்ரீதரர், (2) மன நடுக்கம்-ஸ்ரீராகவேந்த்ரர்.

हर्षामर्षभयोद्वेगैः (ஹர்ஷாமர்ஷபயோத்வேகை:) = இவன் ஒருவனுக்கும் விரோதியல்லவாகையால், ஒருவனைக் குறித்து ஸந்தோஷம், ஒருவனைக் குறித்துப் பொறாமை, ஒருவனைக் குறித்து பயம், ஒருவனைக்குறித்து மனக் கலக்கம் ஆகியவைகளால் — ஸ்ரீராமானுஜர்.]

अनपेक्षः शुचिर्दक्ष उदासीनो गतव्यथः ।
सर्वारम्भपरित्यागी यो मद्भक्तः स मे प्रियः ॥ १६

அனபேக்ஷ: சுசிர்தக்ஷ உதாஸீனே கதவ்யத: l
ஸர்வாரம்ப பரித்யாகீ யோ மத்பக்த: ஸ மே ப்ரிய: ll 16

ஒன்றிலும் ஆசையற்றும், சுத்தமாகவும், சோம்பலின்றியும், பக்ஷபாதம் (விருப்பு வெறுப்புற்று) இல்லாதும், மனநோயற்றும், எல்லா முயற்சிகளையும் (கார்யங்கள் செய்வதை) விட்டவனுகவும் இருக்கிற என் பக்தன் எவனே அவனும் எனக்குப் பிரியமானவன்.

अनपेक्षः (அனபேக்ஷ:) = (1) உடல் புலன்கள் முதலியவற்றில் ஆசையில்லாதவன் —ஸ்ரீ சங்கரர், (2) தன் முயற்சியின்றி கிடைத்த பொருள்களிலுங்கூட விருப்பமற்றவன் —ஸ்ரீதரர், (3) ஆன்மாவைத் தவிர பிற பொருள்களில் விருப்பமற்றவன், — ஸ்ரீ ராமானுஜர், (4) பகவானின் ப்ரீதியையடையவேண்டுமென்பதைத் தவிர மற்றவைகளில் ஆசையற்றவன் — ஸ்ரீ ராகவேந்த்ரர்.

शुचिः (சுசி:) = (1) உள்ளும் புறமும் சுத்தமானவன் (மன அழுக்கு, உடலழுக்கற்றவன்) —ஸ்ரீசங்கரர், ஸ்ரீதரர், (2) சாத்திர விதிகளின்படி கிடைக்கப்பெற்ற உணவு முதலியவற்ருல் உடலை வளர்க்கிறவன் —ஸ்ரீ ராமானுஜர்.

दक्षः (தக்ஷ:) = (1) விரைவில் நேரிட்ட கார்யத்தை உடன் ஆராய்ந்தறிபவன் — ஸ்ரீ சங்கரர், (2) பிற கர்மங்களில் பற்றற்று சாத்திரங்களில் சொல்லப்படும் கர்மங்களைச் செய்வதில் ஊக்கமுள்ளவன் — ஸ்ரீ ராமானுஜர், (3) பகவத் ப்ரீதியாகவுள்ள கர்மாக்களைச் செய்வதில் ஊக்கமுள்ளவன் — ஸ்ரீ ராகவேந்த்ரர்.

उदासीनः (உதாஸீன:) = (1) நண்பர்களின் விஷயத்திலுங்கூட பற்றற்றவன் — ஸ்ரீ சங்கரர், (2) தனக்குதவி, கெடுதி செய்தவர்களிடத்திலும் உபேக்ஷயாக இருப்பவன் — ஸ்ரீ ராகவேந்த்ரர்.

गतव्यथ: (கதவ்யத:) = (1) பயமற்றவன் — ஸ்ரீ சங்கரர், (2) சாஸ்த்ரோக்த கர்மாக்களைச் செய்வதில் சீதம், உஷ்ணம் முதலியவற்ருல் துயரமடையாதவன் —ஸ்ரீ ராமானுஜர், (3) பிறர் செய்த தீங்கால் மன வருத்தமடையாதவன் — ஸ்ரீ ராகவேந்த்ரர்.

सर्वारम्भपरित्यागी (ஸர்வாரம்பபரித்யாகீ) = (1) இஹபர விஷயங்களைப் பற்றிய காம்ய கர்மங்களை விட்டவன் — ஸ்ரீ சங்கரர், (2) பார்க்கக்கூடிய, பார்க்க முடியாத பொருள்களைப்பற்றி முயற்சி செய்யாதவன் — ஸ்ரீதரர், (3) சாஸ்திரங்களில் சொல்லப்பட்டது தவிர பிற கர்மங்களை விட்டவன் — ஸ்ரீ ராமானுஜர், (4) விஷ்ணுவின் தொடர்பற்ற கர்மங்களை விட்டவன் — ஸ்ரீ ராகவேந்த்ரர்.]

यो न हृष्यति न द्वेष्टि न शोचति न काङ्क्षति ।
शुभाशुभपरित्यागी भक्तिमान्यः स मे प्रियः ॥ १७

யோ ந ஹ்ருஷ்யதி ந த்வேஷ்டி ந சோசதி ந காங்க்ஷதி 1
சுபாசுபபரித்யாகீ பக்திமான்ய: ஸ மே ப்ரிய: ll 17

எவன் மகிழ்ச்சி, துவேஷம், துயரம், விருப்பு இவைகளில்லாமல், நல்லது கெட்டது இவைகளில் பற்றற்றவனுய், பக்தியோடு இருக்கிருனே அவன் எனக்குப் பிரியமானவன்.

[शुभाशुभपरित्यागी (சுபாசுபபரித்யாகீ) = (1) பாவத்தைப்போல் புண்யமும் கட்டிற்குக் காரணமாகையால் பாவ புண்யங்களிரண்டையும் விட்டுவிடுகிறவன் — ஸ்ரீ ராமானுஜர், (2) ஞானம், பக்தி, வைராக்யம் இவைகளன்றி பிற நல்லது கெட்டதுகளைத் தியாகம் செய்தவன் —ஸ்ரீராகவேந்த்ரர்.]

समः शत्रौ च मित्रे च तथा मानापमानयोः ।
शीतोष्णसुखदुःखेषु समः सङ्गविवर्जितः ॥ १८

ஸம: சத்ரௌ ச மித்ரே ச ததா மானுபமானயோ: 1
சீதோஷ்ண ஸுகது:கேஷு ஸம: ஸங்க விவர்ஜித: ll 18

तुल्यनिन्दास्तुतिर्मौनी संतुष्टो येन केनचित् ।
अनिकेतः स्थिरमतिर्भक्तिमान्मे प्रियो नरः ॥ १९

துல்யநிந்தாஸ்துதிர்மௌனீ ஸம்துஷ்டோ யேன கேனசித் ।
அனிகேத: ஸ்திரமதிர்பக்திமான்மே ப்ரியோ நர: ॥ 19

எதிரி, நண்பன், மானுவமானங்கள், சீதோஷ்ண ஸுக துக்கங்கள், இவைகளில் ஒரே நிலையில் (ஸமமாக) உள்ளவனும், ஒன்றிலும் பற்றில்லாதவனும், தன்னைப் பிறர் நிந்தனை செய்தாலும், துதித்தாலும் ஸம நிலையிலுள்ளவனும், பேசாது மோனமாக இருப்பவனும் (பேச்சையடக்கினவனும்), எவ்வளவு கிடைத்தாலும் அதில் மகிழ்ச்சியடைந்தவனும், ஸ்திரமான இருப்பிடமில்லாதவனும், ஸ்திரமான (அசைவற்ற) புத்தியையுடையவனும் எனக்குப் பிரியமானவன்.

[तुल्यनिन्दास्तुतिः (துல்யநிந்தாஸ்துதி:) = துதியை நிந்தைபோலெண்ணுபவன் —ஸ்ரீ ராகவேந்த்ரர்.

स्थिरमतिः (ஸ்திரமதி:) = (1) பரமாத்மாவின் விஷயத்தில் அசைவற்ற திடமான மனதையுடையவன் —ஸ்ரீ சங்கரர், (2) வீணான தர்க்க வாதத்தினால் சலிக்காத மனமுடையவன்—ஸ்ரீராகவேந்த்ரர்.

ஸ்ரீ சங்கரர்:— தானாகக் கிடைத்த எத்தவிதமான துணிகளை உடுத்துவதும், எது கிடைத்ததோ அதை உண்பதும், தூக்கம் எங்கு வருகிறதோ அந்த இடத்தை எத்தகையது எனக் கவனியாது அவ்விடத்தில் படுக்கிறதுமாகவுள்ளவனை ப்ரஹ்மஞானி எனச் சொல்வார்கள்.]

ये तु धर्म्यामृतमिदं यथोक्तं पर्युपासते ।
श्रद्दधाना मत्परमा भक्तास्तेऽतीव मे प्रियाः ॥ २०

யேது தர்ம்யாம்ருதமிதம் யதோக்தம் பர்யுபாஸதே ।
ச்ரத்ததானு மத்பரமா பக்தாஸ்தேஅதீவ மே ப்ரியா: ॥ 20

முன் கூறப்பட்ட த்வேஷமற்ற தன்மை முதலிய தர்மங்களான மோக்ஷ ஸாதனங்களை நம்பியவர்களாகவும், என்னையே உத்தமனென்றடைந்தவர்களாகவும் எவர்கள் உள்ளார்களோ அந்த பக்தர்கள் எனக்கு மிகவும் விருப்பமுள்ளவர்கள்.

[धर्म्यामृतम् (தர்ம்யாம்ருதம்)=(1) 13 முதல் 19 வரை 7 ச்லோகங்களில் சொல்லப்பட்ட தர்மங்கள் மோக்ஷ ஸாதனங்களாதலால் அம்ருதமானவை— ஸ்ரீதரர், (2) தர்மத்தோடு கூடினதாக மோக்ஷத்திற்குக் காரணமானது —ஸ்ரீசங்கரர், (3) மரணம் முதலான எல்லா துக்கங்களையும் போக்கடித்து முக்தியைக் கொடுக்கக்கூடியதாகையால் அம்ருதமெனப்பட்டது —ஸ்ரீ ராகவேந்த்ரர்.]

பக்தியோகமெனும் பன்னிரண்டாவது அத்யாயம் முற்றிற்று.

பதிமூன்ருவது அத்யாயம்

க்ஷேத்ர க்ஷேத்ரஜ்ஞ விபாகயோகம்

अर्जुन उवाच -

प्रकृतिं पुरुषं चैव क्षेत्रं क्षेत्रज्ञमेव च ।
एतद्वेदितुं इच्छामि ज्ञानं ज्ञेयं च केशव ॥ १

அர்ஜுன உவாச—

ப்ரக்ருதிம் புருஷம் சைவ க்ஷேத்ரம் க்ஷேத்ரஜ்ஞமேவச।
ஏதத்வேதிதும் இச்சாமி ஞானம் ஞேயம்ச கேசவ॥ 1

அர்ஜுனன் ஸ்ரீ பகவானை நோக்கிச் சொல்வது—

ஓ கேசவா! ப்ரக்ருதியையும், புருஷனையும், க்ஷேத்ரத்தையும், க்ஷேத்ரஜ்ஞனையும், ஞானத்தையும், அறிய வேண்டியதையும், தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

[இந்த ச்லோகம் ஸ்ரீ ராமானுஜர், ஸ்ரீதரர், ஸ்ரீ ராகவேந்திரர் ஆகியோரின் விரிவுரைகளுள்ள பகவத்கீதைப் புத்தகங்களில் கிடையாது. சென்னையில் தமிழ் லிபியில் அச்சிடப்பட்டுள்ள சங்கரபாஷ்யத்துடன் கூடிய சில புத்தகங்களிலும், பம்பாய், வங்காளம் ஆகிய ராஜ்யங்களிலுள்ள தேவநாகரி லிபியிலுள்ள சில அச்சுப்ரதிகளிலும் கல்கத்தாவில் அச்சாகியுள்ள மஹாபாரத நூலிலும் காணப்படுகிறது. சங்கரபாஷ்ய பீடிகையில் பகவத்கீதை 700 ச்லோகங்களெனச் சொல்லப்பட்டுள்ளது. எனவே இந்த ச்லோகம் புதிதாகச் சேர்க்கப்பட்டிருக்கவேண்டுமெனத் தோன்றுகிறது.]

श्रीभगवानुवाच -

इदं शरीरं कौन्तेय क्षेत्रमित्यभिधीयते ।

एतद्यो वेत्ति तं प्राहुः क्षेत्रज्ञ इति तद्विदः ॥ २

ஸ்ரீ பகவானுவாச —

இதம் சரீரம் கௌந்தேய க்ஷேத்ரமித்யபிதீயதே ।

ஏதத்யோ வேத்தி தம் ப்ராஹு: க்ஷேத்ரஞ இதி தத்வித :॥ 2

ஸ்ரீ பகவான் அர்ஜுனனுக்குச் சொல்வது—

குந்தியின் மகனே! போகத்திற்குக் காரணமான இந்த பூத உடல் க்ஷேத்ரமெனவும், எவன் இவ்வுடலைத் தன்னுடையதாக எண்ணுகிறனே அவனை க்ஷேத்ரஞன் எனவும் க்ஷேத்ர க்ஷேத்ரஞ அறிவுள்ளவர் கூறுகின்றனர்.

[ஸ்ரீசங்கரர் :— முன்னர் 7ஆவது அத்யாயத்தில் (4, 5) ஈச்வரனுடைய இரு இயல்புகள் கூறப்பட்டன. ஸம்ஸாரத்திற்குக் காரணமாகவும், எட்டுவிதமாகக் கூறப்பட்டதும், முக்குணங்களையுடையதுமான அபரப்ரக்ருதி ஒருவகை. இதுதான் க்ஷேத்ரமெனப்படுகிறது. மற்றென்று பரப்ரக்ருதி. அதாவது ஜீவபாவத்தை யடைந்த ஈச்வர ஸ்வரூபமாக இருக்கிறது. இவ்விரண்டு ப்ரக்ருதிகளால் ஈச்வரன் ஜகத்தின் உற்பத்தி, ஸ்திதி, லயங்களுக்குக் காரணமாகிறர். முக்குணங்களுடன் கூடிய ப்ருக்ருதி கார்ய காரண உருவமடைந்து உடல் புலன்களுடன் மனிதனுக்குப் போகம், மோக்ஷம் இவைகளேற்படுவதற்காக க்ஷேத்ரமாகிறது. (பூமி பயிர் வகைகளைத் தருவது போல் கர்ம பலனைத் தருவதால் க்ஷேத்ரமெனப்பட்டது) ஸ்வபாவ அறிவினலோ உபதேச ஞானத்தினலோ தன் உடல் எத்தகையது என அறிபவன் க்ஷேத்ரஞனென க்ஷேத்ரம் க்ஷேத்ரஞன் இவற்றைத் தனித்தனியே அறிந்தவர் கூறுவர்.

ஸ்ரீ ராமானுஜர் :— போகத்திற்குக் காரணம் தேஹம் போகத்தை அனுபவிப்பவன் ஜீவன். தேஹமும், ஆத்மாவும் வெவ்வேருனலும் அறிவிலிகள் தேஹத்தை ஆன்மாவுடன் சேர்த்தே பேசுவார்கள். எவன் இப் பூதவுடல் தன்னுடையதெனவும் தேஹமே தான் என்றும் நினைக்கிருனே அவனைதேஹம் வேறு ஆன்மா வேறு என அறிந்தவர்கள் க்ஷேத்ரஞன் என்பார்கள்.

ஸ்ரீ ராகவேந்த்ரர் :— புரிந்துகொள்ள முடியாத மஹததஹங்காரங்கள் அடங்கிய பூத உடல் க்ஷேத்ரம். அவை க்ஷேத்ரஞராகிய பகவானுக்கிருப்பிடமாகையால் அவற்றிற்கு க்ஷேத்ரமெனப் பெயர். இந்த அவ்யக்தமான வற்றை அறிகிற பகவான் க்ஷேத்ரஞரென க்ஷேத்ரம் க்ஷேத்ரஞன் ஆகியவற்றை யறிந்தவர் சொல்கிருர்கள்.

क्षेत्रज्ञं चापि मां विद्धि सर्वक्षेत्रेषु भारत ।
क्षेत्रक्षेत्रज्ञयोर्ज्ञानं यत्तज्ज्ञानं मतं मम ॥ ३

க்ஷேத்ரஞும் சாபி மாம் வித்தி ஸர்வ க்ஷேத்ரேஷு பாரத ।
க்ஷேத்ர க்ஷேத்ரஞயோர்ஞானம் யத்தஜ்ஞானம் மதம் மம ॥ 3

அர்ஜுன! எல்லா தேஹங்களிலும் என்னையே க்ஷேத்ரஞனுக அறிந்துகொள். தேஹம், ஆன்மா இவை களுடைய ஞானம் எதுவோ (ஆன்மா இத்தகையது தேஹம் இத்தகையது என்ற பகுத்தறிவு), அதுவே ஞானம் என்பது என் துணிபு.

[ஸ்ரீதரர் :— எப்படிப் பயன்கருதாக் கர்மமே கர்மம், மற்றவை கர்மமல்லவோ, அதேபோல் மோக்ஷ ஸாதன மான ஆத்மானுத்ம ஞானமே உண்மையான ஞானம். மற்றவை அறிவின்மையே. சித்ஸ்வரூபமாகவும் எல்லா பூதவுடல்களிலும் தொடர்ச்சியாகவுள்ளது எதோ அது தான் ஆத்மா. அப்படி ஆத்மாவை அறிவதுதான் ஞானம்.

ஸ்ரீசங்கரர்:— க்ஷேத்ரஜ்ஞன் நானென்று சொன்னதால் ஈச்வரனுக்கே ஸம்ஸார பந்தமும் மோக்ஷமும் உண்டெனத் தோன்றுகிறது. ஈச்வரனுக்கு ஸம்ஸாரமென்பது ஏது? எனவே ஈச்வரன் க்ஷேத்ரஜ்ஞன் என்று சொல்வது சரியல்ல எனத்தோன்றலாம். அப்படித் தோன்றுவது சரியல்ல. கானலில் ஜலமும், கிளிஞ்சலில் வெள்ளியும், பழுதையில் பாம்பும் இருப்பதாக எப்படி அறிவின்மையால் மனதில் தோன்றுகின்றதோ, அதே போல்தான் அறிவின்மையால் ஈச்வரனிடத்தில் ஸம்ஸாரம் முதலியவை ஏற்றிவைக்கப்படுகின்றன. கண்ணில் கெடுதி இருந்தால், இரண்டு சந்த்ரபிம்பங்கள் கண்ணுக்குத் தெரியும். கண்ணிலுள்ள கெடுதியை நீக்கிவிட்டால் ஒரு சந்த்ரனே தெரியும். சந்திரன் இரண்டெனத் தோன்றியது மனதில் ஏற்றி வைக்கப்பட்ட விஷயம். அதேபோல் ஸம்ஸாரபந்தமோ, மோக்ஷமோ ஆத்மாவிற்கில்லை ஆத்மா ஒன்றை விடவேண்டியதோ. பிற ஒன்றை அடையவேண்டியதோ இல்லை. அறிவின்மையால் ஆத்மாவிடம் ஸம்ஸாரம் ஏற்றி வைக்கப்படுகிறது. இதற்குக்காரணம் அறிவின்மையே என்று அறிவதே ஞானமென்பது என்னுடைய (ஸ்ரீபகவானுடைய) எண்ணம்.

ஸ்ரீ ராமானுஜர்:— க்ஷேத்ரஜ்ஞன் ஜீவனென்று முன் ச்லோகத்தில் சொல்லப்பட்டது. க்ஷேத்ரஜ்ஞன் நான் (பகவான்) என இந்த ச்லோகத்தில் சொல்லப்படுகிறது. ஆனால் இப்படிக் கூறுவது முரண்பாடல்ல. ஜீவன் பகவானின் உடல் ஜீவனுக்குப் பகவான் சரீரி. ஜீவனும் பகவானும் வேருனாலும், ஜீவனைவிட்டுப் பரமாத்மாவும், பரமாத்மாவைவிட்டு ஜீவனும் பிரியாதுள்ள அப்ருதக்ஸ்தி தத்வத்தினுலேயும், சரீர சரீரி பாவத்தினுலும் விசேஷண விசேஷ்ய பாவத்தினுலேயும் ஜீவனை நானென்றே பகவான் சொன்னார். தேஹமும் ஆத்மாவும் வேருக யிருக்க அந்த தேஹத்தையே நான் என்று சொல்கிறது போல் பகவானையும் ஜீவனையும் அபேதமாகச் சொல்லப் பட்டது ஆதலால் பகவான் தன்னை க்ஷேத்ரஜ்ஞனென்றும்

சொல்கிருர். க்ஷேத்ரம், க்ஷேத்ரஞன் ஆகியவற்றின் ஸ்வரூபபேதத்தையும், அவை பரமாத்மாவை ஆத்மாவாக உடையன வென்பதையும் அறிவதுதான் உத்தமமான ஞானமென இங்கு சொல்லப்பட்டுள்ளது.

ஸ்ரீ ராகவேந்த்ரர்:— ஜீவனுக்கு குறைந்த அளவு க்ஷேத்ரஞானமிருப்பதினுல் அவனை க்ஷேத்ரஞனெனச் சொல்லக்கூடாது. அவ்யக்த மஹதாதி எல்லா க்ஷேத்ரத்திலும் என்னை க்ஷேத்ரஞனுக அறிந்துகொள் எனப் பொருள். க்ஷேத்ரஞன் ஜீவனல்ல. இப்படித் தெரிந்து கொள்வதுதான் உண்மை ஞானம்.

तत्क्षेत्रं यच्च यादृक्च यद्विकारि यतश्च यत् ।
स च यो यत्प्रभावश्च तत्समासेन मे श्रृणु ॥ ४

தத்க்ஷேத்ரம் யச்ச யாத்ருக்ச யத்விகாரி யதஸ்ச யத் l
ஸ ச யோ யத்ப்ரபாவஸ்ச தத்ஸமாஸேன மே ச்ருணு ll 4

அந்த க்ஷேத்ரம் எவ்வித ஸ்வரூப முள்ளதோ எத்தகைய குணங்களை யுடையதோ, எவ்வித விகாரத்தை யுடையதோ, எதிலுலுண்டானதோ, அந்த க்ஷேத்ரஞன் எவ்வித ஸ்வரூபமுடையவனே, எத்தகைய மேன்மைகளை யுடைவனே அவைகளைச் சுருக்கமாக என்னிடமிருந்து கேட்டுக்கொள்.

[यतश्च यत् (யதஸ்ச யத்)=(1) என்ன பிரயோஜனத் திற்காக உண்டானது, எப்படிப்பட்ட ஸ்வரூபமுள்ளதோ (ஸ்ரீராமானுஜர்). (2) எந்தப் புருஷனுல் நடத்தப்படுகிற தாக உள்ளதோ (ஸ்ரீமத்வர், ஸ்ரீ ராகவேந்த்ரர்).

तत् (தத்) = க்ஷேத்ர, க்ஷேத்ரஞர்களுடைய ஸ்வரூபத்தை (ஸ்ரீ சங்கரர்).

ऋषिभिर्बहुधा गीतं छन्दोभिर्विविधैः पृथक् ।
ब्रह्मसूत्रपदैश्चैव हेतुमद्भिर्विनिश्चितैः ५

ருஷிபிர்பஹுதா கீதம் சந்தோபிர்விவிதை: ப்ருதக் l
ப்ரஹ்ம ஸூத்ரபதை ஸ்சைவ ஹேதுமத்பிர்விநிஸ்சிதை : ll

க்ஷேத்ர க்ஷேத்ரஜ்ஞர்களுடைய ஸ்வரூபம், பலவிதமாக முனிவர்களாலும், தனிப்பட்டு பலவிதமான வேதங்களினாலேயும், யுக்தியுடன் கூடின ஸந்தேகமின்றி பொருள்களை விளக்குகின்ற ப்ரஹ்ம ஸூத்ரங்களாலும் சொல்லப்பட்டுள்ளது.

[ஸ்ரீதரர் — 'ப்ரஹ்ம ஸூத்ரபதங்கள்'-ப்ரஹ்ம ஸூத்ரமென்றால் ப்ரஹ்மத்தின் ஸ்வரூபத்தைக் காண்பிக்கும் உபநிடதங்களின் தடஸ்தலக்ஷணங்களாகிய, यतो वा इमानि भूतानि जायन्ते முதலிய வாக்யங்கள். பதமென்பது ஸ்வரூப லக்ஷணங்களாகிய, 'सत्यं ज्ञानमनन्तं' முதலிய வாக்யங்கள். அல்லது வேத வ்யாஸர் செய்துள்ள வேதாந்த ஸூத்ரங்களிலுள்ள பதங்கள்.

ஸ்ரீ ராமானுஜர்:— க்ஷேத்ர க்ஷேத்ரஜ்ஞ ஸ்வரூபம் பராசரர் முதலிய ரிஷிகளால் பலவிதமாகச் சொல்லப் பட்டிருக்கிறது (விஷ்ணு புராணத்தில் 2ஆவது அம்சம் 13ஆவது அத்யாயம் பார்க்க). விஷ்ணு ஸஹஸ்ர நாமத்தில் 'वासुदेवात्मकान्याहु: क्षेत्रं क्षेत्रज्ञमेव च ।' என்றதினால் இந்த்ரியம், க்ஷேத்ரம், க்ஷேத்ரஜ்ஞன் முதலிய யாவும் வாஸுதேவனின் ஸ்வரூபமென்றும் பலவிதமாக ரிஷிகளால் சொல்லப்பட்டுள்ளது. ருக், யஜுஸ், ஸாமம், அதர்வணம் ஆகிய வேதங்களால் க்ஷேத்ர க்ஷேத்ரஜ்ஞ ஸ்வரூபம் வெவ்வேறாகச் சொல்லப்பட்டுள்ளது.

महाभूतान्यहंकारो बुद्धिरव्यक्तमेव च ।
इन्द्रियाणि दशैकं च पञ्च चेन्द्रियगोचराः ॥ ६

மஹா பூதான்யஹங்காரோ புத்திரவ்யக்தமேவ ச l
இந்த்ரியாணி தசைகம்ச பஞ்ச சேந்த்ரிய கோசரா: ll 6

इच्छा द्वेषः सुखं दुःखं सङ्घातश्चेतना धृतिः ।
एतत्क्षेत्रं समासेन सविकारमुदाहृतम् ॥ ७

இச்சா த்வேஷ: ஸுகம் து:கம் ஸங்காதஸ்சேதனா த்ருதி: ।
ஏதத் க்ஷேத்ரம் ஸமாஸேன ஸவிகார முதாஹ்ருதம் ॥ 7

ஆகாயம் முதலிய ஐந்து மஹா பூதங்கள், அஹங்கார தத்வம், மஹத்தத்வம், மாயை ஞானேந்த்ரிய கர்மேந்த்ரியங்கள் பத்து, மனது ஒன்று புலன்கள் ஐந்து, ஆசை, துவேஷம், ஸுகம், துக்கம், உடல், ஞானமென்ற மனோவ்ருத்தி, தைர்யம், இத்தகைய விகாரங்களுடன் கூடிய இந்த க்ஷேத்ரம் (தேஹம் = உடல்) சுருக்கமாகச் சொல்லப்பட்டது.

[ஸ்ரீதரர் :— இச்சை முதல் தைர்யம் வரையுள்ளவை மனதைச் சேர்ந்தவை. அவை ஆத்மாவைச் சேர்ந்தவையல்ல.

ஸ்ரீ சங்கரர் :— மஹா பூதங்கள் என்று சொல்லப்பட்டது ஏனெனில் அவை எல்லாவித விகாரத்திலும் வியாபித்துள்ளதால், புலன்களுக்குக் காணப்படுவது இனி சொல்லப்படுவதால் இவ்விடத்தில் ஸூக்ஷ்ம பூதங்களைச் சொன்னதாகக்கொள்ள வேண்டியது. மனதுள்பட இந்த்ரியங்கள் பதினொன்று. விஷயங்கள் ஐந்து. இச்சைமுதல் தைர்யம் வரையுள்ள ஏழு குணங்களும் ஆத்மாவைச் சேர்ந்தவை என தார்க்க வாதிகள் சொல்வர். அப்படியல்ல. வேத வாக்யப்படி இவை மனதைச் சேர்ந்தனவென்று பகவான் சொன்னதாகவே கொள்ளவேண்டியது.

ஸ்ரீ ராமானுஜர் :— சரீரமே (உடலே) க்ஷேத்ரம். மஹா பூதாதிகள் க்ஷேத்ரமென்பர் சிலர். அவை க்ஷேத்ரமல்ல. பஞ்ச மஹா பூதங்கள், அஹங்கார தத்வம், மஹத்தத்வம், ப்ரக்ருதி ஆகிய எட்டினாலும் சரீர முண்டானபடியினால்

அந்த எட்டு தத்வங்களையும் க்ஷேத்ரமென உபசாரமாகச் சொல்லப்பட்டதாகக் கொள்ளவேண்டியது. இந்த்ரியங்கள், மனம், விஷயங்கள் ஆகிய இப்பதினாலும் க்ஷேத்ரத்தை ஆச்ரயித்துள்ளவை. இச்சை, த்வேஷம், ஸுகம், துக்கம் இவை நான்கும் தேஹத்தினால் (உடலினால்) உண்டாக்கப் பட்டவை. இவை ஆத்மாவைச் சேர்ந்தவை. தேஹத்தைச் சார்ந்தவையல்லவாயினும், ஆன்மா தேஹத்தையடைந்த பின்னரே அவனுக்கு இச்சை முதலிய குணங்களுண்டாகிறபடியால் தேஹத்தைச் சார்ந்தனவாகச் சொல்லப் பட்டிருக்கின்றன.

ஸ்ரீமத்வர், ஸ்ரீ ராகவேந்த்ரர் :— இச்சை முதலியன க்ஷேத்திரத்தின் விகாரங்கள்].

अमानित्वमदम्भित्वमहिंसा क्षान्तिरार्जवम् ।
आचार्योपासनं शौचं स्थैर्यमात्मविनिग्रहः ॥ ८

அமானித்வமதம்பித்வமஹிம்ஸா க்ஷாந்திரார்ஜவம் ।
ஆசார்யோபாஸனம் சௌசம் ஸ்தைர்யமாத்மவிநிக்ரஹ : ॥

इन्द्रियार्थेषु वैराग्यमनहंकार एव च ।
जन्ममृत्युजराव्याधिदुःखदोषानुदर्शनम् ॥ ९

இந்த்ரியார்த்தேஷு வைராக்யமனஹம்கார ஏவ ச ।
ஜன்மம்ருத்யுஜராவ்யாதிதுஃகதோஷானுதர்சனம் ॥ 9

असक्तिरनभिष्वङ्गः पुत्रदारगृहादिषु ।
नित्यं च समचित्तत्वमिष्टानिष्टोपपत्तिषु ॥ १०

அஸக்திரனபிஷ்வங்க : புத்ரதாரக்ருஹாதிஷு ।
நித்யம் ச ஸமசித்தத்வமிஷ்டானிஷ்டோபபத்திஷு ॥ 10

मयि चानन्ययोगेन भक्तिरव्यभिचारिणी ।
विविक्तदेशसेवित्वमरतिर्जनसंसदि ॥ ११

மயி சானன்யயோகேன பக்திரவ்யபிசாரிணீ ।
விவிக்ததேசஸேவித்வமரதிர்ஜனஸம்ஸதி ॥ 11

अध्यात्मज्ञाननित्यत्वं तत्त्वज्ञानार्थदर्शनम् ।
एतज्ज्ञानमिति प्रोक्तमज्ञानं यदतोऽन्यथा ॥ १२

அத்யாத்மஞானநித்யத்வம் தத்வஞானார்ததர்சனம் ।
ஏதஜ்ஞானமிதி ப்ரோக்தமஞானம் யததோ அன்யதா ॥ 12

தற்புகழ்ச்சியின்மை, டம்பமின்மை, பிறருக்குத் துன்பம் செய்யாமை, கபடமின்மை, நல்ல குருவிற்கு ஸேவை செய்தல், மனம் சரீரமிவைகளின் தூய்மை, நல்ல கார்யங்களில் விடா முயற்சி, உடலைக்கட்டுப்படுத்தல், புலன்களின் விஷயங்களில் வெறுப்படைதல், தான் என்ற அகங்காரமின்மை, பிறப்பு, இறப்பு, மூப்பு இவைகளில் துக்கம், தோஷம் ஆகியவற்றை அறிதல், பிள்ளை, மனைவி, வீடு இவைகளில் அன்பற்றிருத்தல், அபிமானமில்லாமலிருத்தல், தனக்கு பிடித்தமானது நிகழ்ந்தாலும், பிடிக்காதது நிகழ்ந்தாலும் ஒரே விதமான மனத்துடன் இருத்தல், எல்லாம் ஆத்மஸ்வரூபமென அறிந்து பரமேச்வரனுகிய என்னிடம் திடமான பக்தியுடன் இருத்தல், ஜனங்களில்லாத இடத்தில் வசித்தல், அறிவிலிகளான (அவிவேகிகளான) ஜனங்களின் கூட்டத்தில் சேராமலிருத்தல், ஆத்மதத்வ ஞானத்தில் எப்போதும் நிலைத்திருத்தல், தத்வஞானத்தின் உயர்ந்த பயன் மோக்ஷமென்றறிதல், இந்த இருபதும் ஞானமென்பதாகச் சொல்லப்பட்டிருக்கின்றன. இவைகளுக்குப் புறம்பானது அறிவின்மையே (அஞானமே).

अदम्भित्वम् (அதம்பித்வம்) = (1) தன் தர்மங்களைப் பிரகடனம் செய்யாமை —ஸ்ரீசங்கரர். (2) தான

தர்மங்கள் செய்பவனென்று ஜனங்களிடம் புகழடைய வேண்டுமென்று நினைத்து தர்மம் செய்வது டம்பம். அதில்லாது தர்மம் செய்தல் —ஸ்ரீ ராமானுஜர். (3) தான் அற்பனுனுலும் மிகவும் தெரிந்தவனுகக் காட்டிக் கொள்ளாமை — ஸ்ரீமத்வர், ஸ்ரீராகவேந்த்ரர்.

अहिंसा (அஹிம்ஸா) = சொல், மனம், உடல் ஆகிய வற்ருல் பிறருக்குக் கெடுதி செய்யாமை—ஸ்ரீ ராமானுஜர்.

आर्जवम् (ஆர்ஜவம்) = (1) நேரான வழியைக் கடைப் பிடித்தல் — ஸ்ரீதரர், ஸ்ரீ சங்கரர். (2) பிறர் விஷயத்தில், சொல், மனம், உடல் இவற்ருல் ஒரேவிதமாக நடத்தல் —ஸ்ரீராமானுஜர், ஸ்ரீமத்வர். (3) நல்ல வழியில் செல்லும் போது (ஸன்மார்க்கத்தில்) மனம், வாக்கு, காயம் இவை களால் ஒரே விதமாக நடத்தல் — ஸ்ரீ ராகவேந்த்ரர்.

आचार्योपासनम् (ஆசார்யோபாஸனம்) = (1) மோக்ஷத் திற்கு ஸாதனமான ஞானத்தை உபதேசித்த குருவின் ஸேவை—ஸ்ரீ சங்கரர். (2) தனக்கு ஞானேபதேசம் செய்த குருவிற்கு நமஸ்காரம்செய்து, அவருக்குத்தன்ஞல் செய்யப்படவேண்டிய பணிவிடைகளைக் கேட்டறிந்து அவருடைய பணியில் ஈடுபடுவது—ஸ்ரீ ராமானுஜர். (3) ஞானிகளுக்கு பணிவிடை புரிதல்—ஸ்ரீராகவேந்த்ரர்.

शौचम् (சௌசம்) = (1) மண்ணிஞலும், தண்ணீராலும் உடலின் அழுக்குகளைச் சுத்தப்படுத்திக் கொள்வதும், மனதிலுள்ள ஆசை, வெகுளி போன்றவற்றைவிட்டு தூய்மை யடைதலும்—ஸ்ரீ சங்கரர். (2) தண்ணீர் முதலிய வற்ருல் உடலின் சுத்தம், ஆசை முதலியவற்றை விடுவ தால் மனத் தூய்மை — ஸ்ரீதரர். ஆத்ம ஞானத்தையும் அதற்காகத் தேடவேண்டிய மனம், வாக்கு, உடல் இவைகளுக்கு உண்டாக வேண்டிய சாத்திரங்களில் சொல்லப்பட்ட தூய்மை — ஸ்ரீ ராமானுஜர்.

स्थैर्यम् (ஸ்தைர்யம்) = (1) மோக்ஷ ஸாதனமான முயற்சியிலேயே திடமாக இருத்தல் —ஸ்ரீ சங்கரர். (2) வேதாந்த சாஸ்திரத்தின் பொருளில் எப்போதும் திடமான நம்பிக்கையுடனிருத்தல் — ஸ்ரீ ராமானுஜர். (3) பயம் போன்றவைகளினுல் தன் தர்மத்தை விடாமலிருத்தல்.

आत्मनिग्रहः (ஆத்ம நிக்ரஹ:) = (1) புலன்களை அடக்கி உடலை மோக்ஷ ஸாதனமான கார்யத்தில் உபயோகித்தல் —ஸ்ரீ சங்கரர். (2) ஆத்ம ஸ்வரூபத்தைவிட வேருன விஷயத்திலுள்ள மனதை கட்டுப்படுத்தி ஆத்மாவிடத்திலேயே வைத்தல் — ஸ்ரீ ராமானுஜர். (3) விசேஷமான மனதை அடக்கல் — ஸ்ரீ ராகவேந்த்ரர்.

इन्द्रियार्थेषु वैराग्यम् (இந்த்ரியார்த்தேஷு வைராக்யம்) = (1) பிரியமான இம்மை மருமை பற்றிய கார்யங்களில் ஆசையற்றிருத்தல்—ஸ்ரீ சங்கரர். (2) ஆத்மாவன்றிய விஷயங்களிலுள்ள கெடுதலை யறிந்து அது தனக்குக் கெடுதியானதெனத் தெரிந்துகொண்டு பயத்துடன் எப்போதும் அதில் பற்றில்லாமலிருத்தல்—ஸ்ரீராமானுஜர்.

जन्ममृत्युजराव्याधिदुःखदोषानुदर्शनम् (ஜன்மம்ருத்யு ஜராவ்யாதிதுஃகதோஷானு தர்சனம்) = (1) பிறப்பு, இறப்பு, மூப்பு, நோய், துயரம் ஆகியவற்றில் கெடுதியை அறிந்துகொள்ளுதல், பிறப்பில் கர்பவாஸம், இறப்பில் மரண வேதனை, மூப்பில் ஞாபகக் குறைவு, பலஹீனம், நோயில் கண், தலை முதலியவற்றில் வியாதிகளால் துன்பங்கள், துக்கத்தில் ஆத்யாத்மிக, ஆதிபௌதிக, ஆதிதெய்விகம் முதலிய துயரங்கள்—ஸ்ரீசங்கரர். (2) உடலுள்ளவரை பிறப்பு, இறப்பு, மூப்பு, நோய், துக்கம் இவைவிடா என்ற எண்ணத்துடன் இருத்தல் — ஸ்ரீ ராமானுஜர்.

अनभिष्वङ्गः (அனபிஷ்வங்க:) = (1) சாஸ்த்ரங்களில் கூறப்பட்ட கர்மானுஷ்டானங்களைத்தவிர மற்ற விஷயமான கர்மங்களில் ஈடுபடாது இருத்தல்—ஸ்ரீ ராமானுஜர்.

(2) மகன், மனைவி போன்றவர்களிடத்தில் விசேஷ பிரிய மற்றிருப்பது—ஸ்ரீமத்வர், ஸ்ரீ ராகவேந்த்ரர்.

अनन्ययोगेन (அனன்யயோகேன) = (1) வாஸு தேவனைத் தவிர வேறு மேன்மையான பொருள் இல்லை என்ற திடமான புத்தியோடு கூடின அபேத ஸமாதியினால் —ஸ்ரீசங்கரர். (2) ஏகாந்த யோகத்தினாலே—ஸ்ரீராமானுஜர். (3) லக்ஷ்மி, ப்ரும்மா முதலிய யாவரும் ஸ்வதந்த்ரர்களல்ல. ஈச்வரனே ஸ்வதந்த்ரனென்கிற ஏகாந்த பக்தி செய்வதினால் —ஸ்ரீ ராகவேந்த்ரர்.

विविक्तदेशसेवित्वम् (விவிக்ததேசஸேவித்வம்) = (1) சித்த சுத்தியை யுண்டாக்கும் இடத்தில் வசித்தல் —ஸ்ரீதரர். (2) இயற்கையாகவே அல்லது சுத்தம் செய்யப் படுவதாலாவது தூய்மையாகவுள்ளதும், திருடர்கள், துஷ்டப் பிராணிகள் முதலியன இல்லாததும், காடு, நதிக் கரை, மணல் திட்டு, கோயில் முதலிய இடங்களில் வஸித்தல்—ஸ்ரீ சங்கரர். (3) ரஹஸ்யமான (பிறரறியாத) இடத்தில் வசித்தல்—ஸ்ரீ ராமானுஜர். (4) ஜனங்களில்லாத சுத்தமான இடத்தில் வசித்தல்—ஸ்ரீ ராகவேந்த்ரர்.

तत्वज्ञानार्थदर्शनम् (தத்வஞானார்த்ததர்சனம்)=(1) முன்னர் அமானித்வம் முதல் (ச்லோகம் 8) சொல்லப் பட்டவைகளாலுண்டாகும் தத்வ ஞானத்திற்கு உத்தம பலன் மோக்ஷமென அறிதல்—ஸ்ரீ சங்கரர். (2) எப்போதும் தத்வஞானத்தின் பயனைப்பற்றி எண்ணுதல் -ஸ்ரீராமானு ஜர். (3) தத்வஞானத்தை யடைய சாஸ்திரங்களில் பயிற்சி யடைதல்—ஸ்ரீ மத்வர். (4) சாஸ்த்ரவிசாரம் செய்தல். அல்லது தத்வஞானத்திற்கு விஷயனாகவுள்ள விஷ்ணுவின் தர்சனம்—ஸ்ரீ ராகவேந்த்ரர்.

ஸ்ரீ சங்கரர் :— அமானித்வம் முதலிய இருபதும் ஞானத்திற்குக் காரணங்களாகையால் அவைகளை அனுஷ்டிக்க வேண்டுமென உறுதி செய்யும் பொருட்டு அவைகளை ஞானமெனவே சொல்லப்பட்டன.

ஸ்ரீதரர் :— ஞான ஸாதனமானது என.

ஸ்ரீ ராமானுஜர் :— அமானித்வம் முதலியன ஆத்ம ஞானத்திற்குக் காரணமாகையால், ஞானமென்றே சொல்லப்பட்டன—ஸ்ரீ ராகவேந்த்ரர். அமானித்வம் முதலியன ஞானமும் ஞானஸாதனங்களும் ஆகும்.]

ज्ञेयं यत्तत्प्रवक्ष्यामि यज्ज्ञात्वामृतमश्नुते ।
अनादिमत्परं ब्रह्म न सत्तन्नासदुच्यते ॥ १३

ஞேயம் யத்தத்ப்ரவக்ஷ்யாமி யஜ்ஞாத்வாம்ருதமச்னுதே ।
அனாதிமத்பரம் ப்ரஹ்ம ந ஸத்தன்னாஸதுச்யதே ॥ 13

எதையறிந்து ஜீவன் மோக்ஷமடைவானோ அதைச் சொல்கிறேன். ஆதியற்ற ப்ரஹ்மம் ஸத்தாகவோ அஸத்தாகவோ சொல்லப்படுகிறதில்லை. (ஏனெனில் அது விதிகளுக்கப்பாற்பட்டது) ஸத் என்றால் இருக்கிறது. அஸத் என்றால் இருக்காதது.

[ஸ்ரீதரர் : – अनादिमत् परंब्रह्म (அனாதிமத் பரம் ப்ரஹ்ம) ஆதியற்றதென்கிற பொருள் அனாதி என்கிற சொல்லினாலேயே கிடைத்திருக்கையில் 'மத்' என்ற சொல்லிற்கு அவசியமோ உபயோகமோ இல்லாவிடினும், வேதத்தில் சில சொற்கள் அவசியமில்லாது உபயோகிக்கப்படுவது போல் இங்கும் உபயோகிக்கப்பட்டதாகக்கொள்ளலாம். அல்லது अनादि (அனாதி) = ஆதியற்ற, मत् परं (மத்பரம்) = விஷ்ணுவான ஸகுணனாயிருக்கும் என்னுடைய நிர்குண ஸ்வரூபம், ब्रह्म = ப்ரஹ்மம் என்று பதங்களைப் பிரித்துப் பொருள் கொள்ளவேண்டியது.

ஸ்ரீ சங்கரர் :— अनादिमत् परंब्रह्म (அனாதிமத் பரம் ப்ரஹ்ம) என்பதற்குச் சிலர் अनादि (அனாதி) = ஆதியற்ற, मत् (மத்) = வாஸுதேவனான நானே, परं (பரம்) = உத்தமான சக்தியாக, यस्य (யஸ்ய) = எதற்கிருக்கிறதோ, तत् (தத்) = அது, ब्रह्म (ப்ரஹ்ம) = ப்ரஹ்மமென்று பொருள் கூறி

யுள்ளனர். இதனுல் வாஸுதேவனுகிய என்னை உத்தம சக்தியாக உடைத்தாயிருப்பது ப்ரஹ்மமென்ருகிறது. அதாவது சக்தியுடன் கூடிய ஸகுணத்தைச் சொன்னதாகிறது. இந்தப்பொருள் சரியல்ல. ஏனெனில் இந்த வார்த்தைகளுக்குப் பின் नसत्तन्नासदुच्यते (நஸத்தன்னஸதுச்யதே) என்று சொல்லியிருக்கிறது இதனுல் நிர்குண ப்ரஹ்மம் குறிக்கப்படுகிறதேயன்றி ஸகுணமல்ல. எனவே मत् (மத்) என்ற சொல் ச்லோக பூர்த்திக்காகச் சேர்க்கப்பட்டுள்ளதே யன்றி அதற்கு விசேஷமான பொருள் கிடையாது.

இதில் 'ஸத்' என்ருல் இருக்கிறது. 'அஸத்' என்ருல் இல்லாதது. எனவே இருப்பதும் ப்ரஹ்மமல்ல, இல்லாததும் ப்ரஹ்மமல்ல என்று சொன்னதாக ஆகும். இது சரிதானென்று பலச்ருதி (வேத) வாக்கியங்களைக்கொண்டு நிருபிக்கலாம்.

உதாரணமாக: 1 स एषः नेतिनेत्यात्मा । 2 अगृह्यो न हि गृह्यते । 3 असङ्गो हि सज्जते இதுபோன்ற வேத வாக்யங்களினுல் ப்ரஹ்மம் புலன்களுக்கெட்டாதாகின்றது. இருக்கிறது (ஸத்) என்பதற்கும் இல்லையென்பதற்கும் (அஸத்) புலன்கள்தான் காரணம். 'குடம்' என்ற பொருள் இருக்கிறது என்ருல் கண் அதைப்பார்ப்பதால்தான். அதுவே இல்லையென்பது கண் அதைப்பார்க்காததால் தான். இப்படி ப்ரஹ்மத்தை இருப்பதாகவோ இல்லை யெனவோ கூற இயலாது. ஒரு பொருளை என்றும் பாராமலும், அதைப்பற்றி கேட்காமலுமிருந்தால், அது இல்லையென்று மாத்திரம் சொல்லலாமா? இருக்கு என்று சொல்லலாமா? புலன்களாலறியக் கூடாத 'பரஹ்மம்' சப்தத்தினுல் (வேதத்தின் ஒலியால்) அறியத்தகுந்தது.

மற்றும் 'ப்ரஹ்மம்' தெரிந்த பொருளுக்கும் தெரியாத பொருளுக்கும் வேருனது எனக் கேனுேபநிஷத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. மேலும் செய்கை, குணம் முதலியவற்றுடன் இணைத்தும் ப்ரஹ்மத்தைச் சொல்வதற்

கில்லை ஏனெனில் அது ஒன்றே யாகையால் மற்றென்றுடன் தொடர்புபடுத்திக் கூறுவதற்கில்லை. ஆகையால் மனம் வாக்கு இவைகளுக் கெட்டாதது 'ப்ரஹ்மம்' ("एकमेवाद्वितीयं ब्रह्म। यतो वाचो निवर्त्तन्ते। अप्राप्य मनसा सह।").

ஸ்ரீ ராமானுஜர்:- ज्ञेयम् (ஜ்ஞேயம்) என்பது அனாதித்வம் (ஆதியற்றது) முதலியவைகளால் அறியத்தக்க ஜீவ ஸ்வரூபம். எந்த ஸ்வரூபத்தை அறிந்தால் பிறப்பிறப்பு முதலிய ப்ரக்ருதித் தொடர்பிலிருந்து விடுபட்டு சுத்தாத்ம ஸ்வரூபத்தை அடைவானோ அந்த அறியவேண்டிய முக்தாத்ம ஸ்வரூபம் ஆரம்பமற்றது; எனவே முடிவுமற்றது. ச்ருதி (வேதம்) வாக்யங்களால், ஆத்மாவும் (ஜீவனும்), ஜடவஸ்துக்களும், பரமாத்மாவின் சரீரமென்றும், பரமாத்மா ஜீவாத்மாக்களுக்கு ஸ்வாமியே என்றும் சொல்லப்பட்டுள்ளது. ஆத்மாவிற்கு பல சரீரங்களுக்குள் ளடங்கிய குறைந்த அளவானது இயற்கையில் வந்தது. கர்மத்தின் கட்டிலிருந்து விடுபட்டவன் மாபெரும் அளவையுடைய உருவை (ஸ்வரூபத்தை) அடைகிறான். ஆத்மா பூர்ணத்வம் (முழுமை) அல்லது மஹத்தத்வம் உடையவனாகையால் ஆத்மாவுக்கு 'பரஹ்மம்' என்ற சொல் உபயோகப்படுத்தப்பட்டுள்ளது. (அத்யாயம். 14, ச்லோகம் — 26, 27) (அத்யாயம். 18. ச்லோகம் 54).

सत् (ஸத்) என்றால் கார்யம் असत् (அஸத்) என்றால் காரணம். ஜீவன் ப்ரக்ருதியிலிருந்து விடுபட்டு ஆத்ம ஸ்வரூபத்தை அடைந்தால், அவனைக் கார்யம் (ஸத்) அல்லது காரணமென்றோ (அஸத்) சொல்லக்கூடாது. கார்ய காரண நிலை, கர்ம உருவான அஞ்ஞானத்தின் தொடர்பால் ஏற்படுவதேயன்றி இயற்கையானதல்ல. ஆகையால் 'ஸத், அஸத்' என்ற சொற்களினால் ஆத்ம ஸ்வரூபம் சொல்லப்படுகிறதில்லை.

ஸ்ரீ ராகவேந்த்ரர் :— ப்ராக்ருதமான தேஹம் (உடல்) புலன்கள் முதலியனவற்றையுடையது, आदिमत् (ஆதிமத்)

எனக்கூறப்படுகிறது. இவை இல்லாதது अनादिमत् (அனுதிமத்) எனப்படும். தெரிந்துகொள்ளத்தக்கது பரமாத்மாவே. அந்த பரமாத்மா கார்யமாகிற (ஸத்) ப்ரபஞ்சத்தில் சேர்ந்தவருமல்ல, காரணமான விவரம் தெரியாதவைகளில் சேர்ந்தவருமல்ல. இரண்டுக்கும் வேறுபட்டவராகையால், 'ஸத்', 'அஸத்' என்று சொல்லக்கூடாது; அல்லது உருவுள்ளவற்றுக்கும் உருவற்றதற்கும் அப்பாற்பட்டவராதலால், 'ஸத்' என்ருே 'அஸத்' என்ருே சொல்லக்கூடாது.

குறிப்பு:— முன்னர் 9 அத். 19 ச்லோகத்தில் பகவான் 'ஸத்', 'அஸத்' இரண்டும் தான் என்று சொல்லியிருக்கிருர், அத். 11, 37ஆவது ச்லோகத்தில் அர்ஜுனன் 'ஸத்'. 'அஸத்' இவைகளைக் காட்டிலும் வேருன அக்ஷரமாக (ப்ரஹ்மமாக) இருப்பது பகவான்தான் என்று கூறியிருக்கிருன். ஆனுல் இந்த 13ஆவது அத்யாயம் 13ஆவது ச்லோகத்தில் ப்ரஹ்மத்தை 'ஸத்' என்ருே, 'அஸத்' என்ருே சொல்லக்கூடாதெனச் சொல்லப்படுகிறது. இப்படிச் சொல்வது முன்னுக்குப்பின் முரணுகத்தோன்றும். ஆனுல் அது முரணல்ல என்பதைத்தான் மேலே விரைவுரைக்காரர்களான ஆசார்ய புருஷர்கள் வேதவாக்யப் பிரமாணங்களுடன் எடுத்துக்காட்டியுள்ளனர்.]

सर्वतःपाणिपादं तत्सर्वतोऽक्षिशिरोमुखम् ।
सर्वतःश्रुतिमल्लोके सर्वमावृत्य तिष्ठति ॥ १४

ஸர்வத: பாணிபாதம் தத்ஸர்வதோ அக்ஷிசிரோமுகம் ।
ஸர்வத:ச்ருதிமல்லோகே ஸர்வமாவ்ருத்ய திஷ்டதி ॥ 14

முன்னர் அறிய வேண்டியதாகச் சொல்லப்பட்ட அந்த ப்ரஹ்மம் எவ்விடத்திலும் கைகளையும், கால்களையும், தலைகளையும், முகங்களையும், காதுகளையும் உடையது. உலகில் யாவற்றையும் வியாபித்துக் கொண்டுள்ளது.

[ஸ்ரீதரர்:— ச்ருதி வாக்யங்கள் பல எல்லாப் பொருள்களும் ப்ரஹ்மம் எனக்கூறுகின்றன. உலகிலுள்ள பொருள்கள் ஸத்தாகவோ அஸத்தாகவோ இருக்க வேண்டும். ஆகையால் ப்ரஹ்மம் ஸத்தாகவோ அஸத்தாகவே இருக்கவேண்டுமென்ருகிறது. 'परास्यशक्तिः विविधैवश्रूयते' முதலிய வேத வாக்யங்களால் ப்ரஹ்மம், எண்ணிப்பார்க்க முடியாத சக்தியை யுடையதென்று தெளிவாகையால் ப்ரஹ்மம் உபாதியினுல் ஸத், அஸத் என்று சொல்லப்படுகிறதென்பது இதனுல் தெளிவு.

ஸ்ரீ சங்கரர்:— ப்ரஹ்மம் ஸத்திற்கு விஷயமல்ல எனச்சொல்லப்பட்டது. அதனுல் அஸத் என எண்ணக் கூடாது. இங்கு ப்ரஹ்மம் எல்லாப் பிராணிகளின் உடல் இந்த்ரியாதி கரணங்களாகிற உபாதி மூலமாயிருக்கிற தெனச் சொல்லப்படுகிறது. இந்த உபாதி கல்பிதம் அதாவாது ஏற்படுத்திக் கொள்ளப்பட்டது. ஆகையால் அந்த உபாதி பொய். அந்த உபாதியை நீக்கி தூயமான ப்ரஹ்மத்தைத் தெரிவிக்க இப்படி சொல்ல ஆரம்பிக்கப் பட்டது.

ஸ்ரீ ராமானுஜர்:— பரிசுத்தாத்மாவிற்கு கை, கால், காது இவை உள்ளன என்பது பொருளல்ல. எப்படி எங்கும் இவ்வயவங்களிருந்தால் அவைகளினுல் செய்து கொள்ளக்கூடிய கார்யங்களை எப்படி செய்து கொள்ள முடியுமோ, அதுபோல் ப்ரக்ருதி விமுக்தாத்ம ஸ்வரூபத்தை யடைந்த ஜீவன் அவயங்களின்றியே அக் கார்யங்களைச் செய்து கொள்ள சக்தியுள்ளவனென் பதும், அந்த முக்தாத்ம ஜீவன் எல்லாவற்றையும் வியாபிக்கிருன் எனக்கருத்து. பரமாத்மா காலில்லாமலே நடப்பான், காதுகளில்லாது கேட்பவனென ச்ருதிவாக்யம் இருக்கிறது. எப்படி ஜீவாத்மாவுக்கு இவ்வித சக்திகளைக் கூறலாம் எனில் ப்ரக்ருதி விமுக்தாத்மாவுக்கு பரமாத்மா வுடன் எல்லாவிதத்திலும் ஒற்றுமை சொல்லப்பட்டிருப் பதால்தான்.

ஸ்ரீ ராகவேந்த்ரர் :— எல்லா இந்த்ரியங்களுடைய கர்மங்களையும், எல்லா இந்த்ரியங்களினாலேயும் அறிகிறதும், செய்கிறதும் ப்ரஹ்மமென்பதே. பரமாத்மா எல்லா உலகிலும் கண், தலை, முகம், காது முதலியவற்றுடன் எல்லாவற்றையும் வ்யாபித்துள்ளார்.

सर्वेन्द्रियगुणाभासं सर्वेन्द्रियविवर्जितम् ।
असक्तं सर्वभृच्चैव निर्गुणं गुणभोक्तृ च ॥ १५

ஸர்வேந்த்ரிய குணாபாஸம் ஸர்வேந்த்ரியவிவர்ஜிதம் ।
அஸக்தம் ஸர்வப்ருச்சைவ நிர்குணம் குணபோக்த்ரு ச ॥

बहिरन्तश्च भूतानामचरं चरमेव च ।
सूक्ष्मत्वात्तदविज्ञेयं दूरस्थं चान्तिके च तत् ॥ १६

பஹிரந்தஸ்ச பூதானாமசரம் சரமேவ ச ।
ஸூக்ஷ்மத்வாத்ததவிஞேயம் தூரஸ்தம் சாந்திகே ச தத் ॥

अविभक्तं च भूतेषु विभक्तमिव च स्थितम् ।
भूतभर्तृ च तज्ज्ञेयं ग्रसिष्णु प्रभविष्णु च ॥ १७

அவிபக்தம் ச பூதேஷு விபக்தமிவ ச ஸ்திதம் ।
பூதபர்த்ரு ச தஜ்ஞேயம் க்ரஸிஷ்ணு ப்ரபவிஷ்ணு ச ॥ 17

ज्योतिषामपि तज्ज्योतिस्तमसः परमुच्यते ।
ज्ञानं ज्ञेयं ज्ञानगम्यं हृदि सर्वस्य विष्ठितम् ॥ १८

ஜ்யோதிஷாமபி தஜ்ஜ்யோதிஸ்தமஸ : பரமுச்யதே ।
ஞானம் ஞேயம் ஞானகம்யம் ஹ்ருதி ஸர்வஸ்ய விஷ்டிதம் ॥

அந்த அறியத்தக்கப் பொருள் ப்ரஹ்மம். அது எல்லா இந்த்ரியங்களின் விஷயமாகவுள்ள தொழில்களில்

அந்தந்த விஷயமாக விளங்குவதாகவும், அல்லது எல்லா இந்த்ரியங்களையும், குணங்களையும் அததின் விஷயங்களையும் ப்ரகாசமடையச் செய்கிறதாகவும், எல்லாவித இந்த்ரியங்களில்லாமலும், ஒன்றிலும் ஒட்டாததாகவும், எல்லாவற்றிற்குமாதாரமாகவும், ஸத்வம் முதலிய குணங்களற்றதாகவும், ஸத்வம் முதலிய குணங்களை காப்பதாகவும், அசைவுள்ள அசைவற்ற பொருள்களுக்கு வெளியிலும், உள்ளும் இருக்கிறதாகவும், அசையாததாயும், அசைவதாகவும், உருவம் முதலியவை இல்லாததால் புலன்களாலறியக் கூடாததாகவும், அறிவிலிகளுக்குத் தூரத்திலிருக்கிறதாகவும், ஞானிகளுக்கு அருகாமையிலுள்ளதாகவும், அசைவற்றவை, அசைவன என்ற பிரிவற்றதானாலும், பிரிந்ததுபோல் தோற்றமுடையதாயும், பூதங்களை ரக்ஷிக்கிறதாயும், எல்லாவற்றையும் விழுங்குகிறதாயும், எல்லாவற்றையும் உண்டு பண்ணுகிறதாயும், ஸூர்யன், சந்த்ரன் முதலியவற்றிற்கு ஒளி தருவதாயும், அறிவின்மைக்கப்பாற்பட்டதாகவும், ஞானவுருவாகவும், ஞானத்தினலறியத் தகுந்ததாகவும், அடையத் தகுந்ததாகவும், எல்லாப் பிராணிகளின் ஹ்ருதயத்தில் விசேஷமாக இருப்பதாகவும் சொல்லப் படுகிறது.

15. [सर्वेन्द्रियगुणाभासम् (ஸர்வேந்த்ரியகுணா பாஸம்) = (1) ஞானேந்த்ரிய கர்மேந்த்ரியங்கள், மனம் புத்தி இவைகளின் செய்கைகளாகிய நிச்சயம், உத்தேசம், ச்ரவணம் முதலானவைகளால் ஈடுபடுத்தப்பட்டிருப்பது போல் காணப்படுகின்றன—ஸ்ரீ சங்கரர். (2) ப்ரஹ்மம் எல்லா இந்த்ரியங்களையும், விஷயங்களையும் ஒளியடையச் செய்கிறது—ஸ்ரீ மத்வர், ஸ்ரீ ராகவேந்த்ரர்.

सर्वेन्द्रियविवर्जितम (ஸர்வேந்த்ரியவிவர்ஜிதம்) = (1) ப்ருஹ்மத்திற்கு கை, கால் முதலிய அவயவங்களில்லை என வேதம் கூறுகிறது. ஆயினும் நடக்கிறது, கேட்கிறது முதலிய சொல்லப்பட்டிருக்கிறதே என்றால் அந்த ச்ருதி

உபாதியை மேற்கொண்டு சொல்லப்பட்டது. உண்மையில் ப்ரஹ்மத்திற்கு நடப்பது, கேட்பது போன்ற செய்கை கிடையாது—ஸ்ரீசங்கரர். (2) ப்ரகிருதங்களாயும், பின்னங்களாயும் உள்ள இந்த்ரியங்களற்றது—ஸ்ரீ ராகவேந்த்ரர்.

सर्वभृच्चैव (ஸர்வப்ருச்சைவ) = (1) குணங்களை அனுபவிப்பதுபோலுள்ளது—ஸ்ரீ சங்கரர். (2) ஸத்வாதி குணங்களாலுண்டாகும் போகத்தை அனுபவிக்க வல்லமையுள்ளது—ஸ்ரீ ராமானுஜர். (3) எல்லா நல்ல மங்களமான குணங்களையுடையவன்—ஸ்ரீ ராகவேந்த்ரர்.

निर्गुणम् (நிர்குணம்)=(1) ஸத்வம் முதலிய குணங்களற்றதானாலும்—ஸ்ரீசங்கரர் (2) ஸ்வரூபத்தினுல் ஸத்வம் முதலிய குணங்களற்றது—ஸ்ரீராமானுஜர்.

16. बहि: अन्तश्च (பஹி: அந்தஸ்ச) = உள்ளும், வெளியிலும், மத்தியிலுமிருக்கிறது. மத்தியிலிருப்பது சராசரமாகையால் (அசைவது அசைவற்றதாகையால்), மத்தியும் சேர்க்கப்பட்டது—ஸ்ரீ சங்கரர்.

सूक्ष्मत्वात् अविज्ञेयं ஸூக்ஷ்மத்வாத் அவிஜ்ஞேயம்)=(1) ஆகாசம்போல் ஸூக்ஷ்மம் (மிக நுண்ணியது) என்பதால் அறிவிலிகளால் அறிய முடியாததாகவும் — ஸ்ரீ சங்கரர். (2) ஸ்வரூபம் ஸூக்ஷ்மமானதால் ஸம்ஸாரியால் உடலுக்கு அப்பாற்பட்டது என்று அறியப்படாததாகவும் —ஸ்ரீ ராமானுஜர். (3) ஸூக்ஷ்மமானதால் புலன்களுக்குப் புலப்படாதது—ஸ்ரீ ராகவேந்த்ரர்.

दूरस्थञ्च अन्तिकेच (தூரஸ்தஞ்ச அந்திகேச) = (1) ஈசோபனிஷத் வாக்யப்படி, அது (ப்ரஹ்மம்) அலைகிறது, அலைகிறதில்லை. தியானமற்றவற்குத் தூரத்திலிருந்தாலும், தியானிப்பவர்கட்கு அருகிலுள்ளது—ஸ்ரீதரர். (2) அமாநித்வாதி குணங்களில்லாத அறிவிலிகளால், அந்த ஆத்மா உடலினுள்ளேயே இருந்தபோதிலும் தூரத்திலிருப்பதாக

எண்ணப்படத்தக்கவன். அமாநித்வாதி குணங்களுள்ளோருக்கு அருகில் உள்ளவனாக அறியத்தக்கவன்—ஸ்ரீராமானுஜர். (3) ப்ரஹ்மம் எவ்விடத்திலுமிருப்பதால் தூரத்திலும் அருகிலுமிருக்கிறதாகச் சொல்லப்பட்டது.

17. अविभक्तं च विभक्तमिव स्थितम् (அவிபக்தம் ச விபக்தமிவ ஸ்திதம்) = (1) எல்லாப் பூதங்களிலும் ஆகாசமெப்படி ஒன்ருக இருக்கிறதோ, அதுபோல் ப்ரஹ்மம் பிரிபடாது ஒன்ருக இருக்கிறது. உடல் முதலிய உபாதிகளால் பிரிபட்டிருப்பதுபோல் காணப்படுகிறது—ஸ்ரீ சங்கரர். (2) தேவர்களின் அல்லது மனிதரின் உடல்களிலிருந்தாலும் ஸ்வரூபம் ஒரேவிதமாகையால் ஞானிகளுக்கு ஞானவடிவாய் ஒன்ருகத் தோன்றும். அறிவிலிகளுக்கு தேவமனித உடல்களுடன் கூடியிருக்கையில் பலவாகத் தோன்றும்—ஸ்ரீராமானுஜர். (3) எல்லா பூதங்களிலும் தொடர்ச்சியாக இருந்தாலும் அறிவிலிகளுக்குத் தனித் தனியாகத்தோன்றும்—ஸ்ரீ ராகவேந்த்ரர்.

भूतभर्तृ च ग्रसिष्णु प्रभविष्णु च (பூதபர்த்ரு ச க்ரஸிஷ்ணு ப்ரபவிஷ்ணு ச)=(1) படைத்தல், காத்தல், அழித்தல் என்பதெல்லாம் கற்பனை. பழுதையில் பாம்பு என்பதை மனதின் பிரமையால் காண்பதுபோல்—ஸ்ரீ சங்கரர். (2) பூதங்களைத் தாங்கி நிற்பது, உற்பத்திசெய்வது இவை ஜீவனற்ற உடலுக்குக் கிடையாவாகையால் அவைகளுக்கு காரணம் உடலல்ல என்பது நிச்சயம் ஆகையால் அவற்றிற்கு ஆத்மாவே ஏது?—ஸ்ரீ ராமானுஜர்.

18. ज्योतिषामपि (ஜ்யோதிஷாமபி) = ஸூர்யன், சந்திரன் போன்றவை கண்களுக்கும் விஷயங்களுக்கும் (கண் பார்க்கும் பொருள்களுக்கும்) இடையேயுள்ள தொடர்பை மறைக்கும் இருளைமட்டும் போக்கவல்லன. ஆத்மாவோ ஸூர்யன், சந்திரன் போன்றவைகளுக்கே ஒளியைத் தரவல்லது ஆத்மாவின் ப்ரகாசமான ஞானந் தான் ஸூர்யன், சந்த்ரன் முதலியவற்றை ப்ரகாசமாக்குகின்றது—ஸ்ரீராமானுஜர்.

ज्ञानं ज्ञेयं च (ஞானம் ஞேயம் ச)=(1) அமானித்வம் முதலியது ஞானம். எது அறியப்படவேண்டுமோ அதைப் பார்க்கிறேன் என்று சொல்லப்படுவது ஞேயம் —ஸ்ரீசங்கரர். (2) ஆத்மா ஞானத்தையே ஸ்வரூபமாயுடையவனென்று அறிவது—ஸ்ரீ ராமானுஜர். (3) ப்ரகாச ஸ்வரூபமானது ஞானம். தன்னாலேயே தன்னை அறியும் தானே ப்ரகாசமாகவுள்ள உருவம் ஞேயம் —ஸ்ரீ ராகவேந்த்ரர்.

குறிப்பு:— ஸ்ரீ ராமானுஜர் 15—18, நான்கு ச்லோகங்களுக்கும் ஜீவபரமாகவே பொருள் சொல்லியிருப்பதாக அறியத்தக்கது.]

इति क्षेत्रं तथा ज्ञानं ज्ञेयं चोक्तं समासतः ।
मद्भक्त एतद्विज्ञाय मद्भावायोपपद्यते ॥ १९

இதி க்ஷேத்ரம் ததா ஞானம் ஞேயம் சோக்தம் ஸமாஸத: 1
மத்பக்த ஏதத்விஞாய மத்பாவாயோபபத்யதே 11 19

இவ்விதம் க்ஷேத்ரமும் அப்படியே ஞானமும் ஞேயமும் சுருக்கமாகச் சொல்லப்பட்டது. என்னுடைய பக்தன் இதையறிந்து என் ஸ்வரூபமாக (ப்ரஹ்மம்) ஆவதற்குத் தகுதியாகிறான்.

[मद्भावाय (மத்பாவாய)=(1) மோக்ஷத்திற்கு-ஸ்ரீசங்கரர். (2) என்னைப்போல் ஸம்ஸாரமற்ற தர்மத்தையடைய —ஸ்ரீ ராமானுஜர். (3) என்னிடம் இருப்பை அடைய—ஸ்ரீ ராகவேந்த்ரர்]

प्रकृतिं पुरुषं चैव विद्ध्यनादी उभावपि ।
विकारांश्च गुणांश्चैव विद्धि प्रकृतिसंभवान् ॥ २०

ப்ரக்ருதிம் புருஷம் சைவ வித்த்யனாதீ உபாவபி 1
விகாராம்ஸ்ச குணாம்ஸ்சைவ வித்தி ப்ரக்ருதி ஸம்பவான் 11

ப்ரக்ருதியையும், புருஷனையும்கூட ஆரம்பமற்றவை களென அறிந்துகொள். உடல் புலன்களின் வேறுபாடு களையும் (விகாரங்களையும்) இன்ப, துன்ப, மோஹங்களை யும் ப்ரக்ருதியிலிருந்து (மாயை) உண்டானவையெனத் தெரிந்துகொள்.

[ஸ்ரீதரர்:- உண்டானதாகச் சொல்லப்படுவதெல்லாம் ப்ரக்ருதியினலுண்டானவை. இது அனுதியானது. புருஷனுன ஜீவன், ப்ருஹ்மத்தின் அம்சமானதாலும், அழிவற்றவனுதலாலும், அவனும் ஆரம்பமற்றவன்.

ஸ்ரீ சங்கரர் :— ஈச்வரனை அழிவற்ற ஆரம்பமற்றதாக ஒப்புக்கொண்ட நாம், புருஷனுன ஜீவனையும், ப்ரக்ருதி யான மாயையையும் ஆரம்பமற்றதாக ஒப்புக்கொள்ள வேண்டும். ப்ரக்ருதி புருஷர்களையுடையவனே ஈச்வரன்.

ஸ்ரீ ராமானுஜர் :— ஒருவருக்கொருவர் பற்றுதலுள்ள ப்ரக்ருதியையும் புருஷனையும் ஆரம்பமற்றவைகளென அறி. மோக்ஷ ஹேதுவான அமானித்வம் முதலிய குணங்கள் ப்ரக்ருதியிலிருந்து உண்டானவைகளே.

ஸ்ரீ ராகவேந்த்ரர்:— ப்ரக்ருதி என்பது 25 தத்வங்களுடையது அல்லது ஜகத்காரணமான பரமாத்மா. புருஷன் என்பது ஜீவன். இவ்விரண்டும் ஆரம்பமற்றவை என அறி.

कार्यकरणकर्तृत्वे हेतुः प्रकृतिरुच्यते ।
पुरुषः सुखदुःखानां भोक्तृत्वे हेतुरुच्यते ॥ २१

கார்ய கரணகர்த்ருத்வே ஹேது: ப்ரக்ருதிருச்யதே I
புருஷ: ஸுகது:கானும் போக்த்ருத்வே ஹேதுருச்யதே II 21

உடலையும் புலன்களையும் உண்டுபண்ணும் விஷயத்தில் மாயை காரணமாகச் சொல்லப்படுகிறது. இன்ப துன்பங்களை அனுபவிக்கும் விஷயத்தில் ஜீவன் காரணமாகச் சொல்லப்படுகிருன்.

[மாயை வேறுபாடுகளையடைந்து ஜீவனுக்கு உபயோகமாக உடல் புலன்களாக ஆகின்றது. ஜீவனுக்கு தவும் பல பொருள்களாக பரிமாணமடைவதால் ப்ரக்ருதி காரணமாகச் சொல்லப்பட்டது. ஜீவனுக்கு உடல் புலன்களால் விஷய ஞானம் ஏற்படுகிறது. ஸுக துக்க விஷய ஞானமடைவதால் ஜீவன் ஸுகதுக்கங்களை அனுபவிக்க ஹேதுவாகச் சொல்லப்படுகிறான். புருஷ ஸந்நிதானத்தால் ப்ரக்ருதிக்குச் செய்யும் தன்மையும் (கர்த்ருத்வம்) ப்ரக்ருதியின் சேர்க்கையால் புருஷனுக்கு அனுபவமும் (போக்த்ருத்வம்) உண்டாகிறதெனக் கருத்து —ஸ்ரீதரர்.

உடல் என்பது கார்யம், புலன்கள், மனம், புத்தி, அஹங்காரம் ஆகிய பதின்மூன்றும் உடலுக்குக் கரணங்கள். அல்லது பூதங்களும் விஷயங்களும் கார்யம். ஸத்வம் முதலிய மூன்று குணங்களும் காரணங்கள். காரணமான ப்ரக்ருதியைத் தழுவியதால் குணங்கள் கரணமாகச் சொல்லப்பட்டன. இவ்வித கார்யகாரணமிரண்டிற்கும் மூலம் மாயை. ஆகையால் அந்தமாயை கர்த்தாவெனச் சொல்லப்பட்டது. ஸுகதுக்கங்களை அறிகிறவன் ஜீவன். எனவே அவன் போக்தாவாகச் சொல்லப்பட்டான்—ஸ்ரீ சங்கரர்.

கார்யம் என்றால் உடல். காரணமென்றால் ஞான கர்மேந்த்ரியங்களும், மனதும்-கர்த்ருத்வம் உடல் இந்திரியங்களின் செய்கை கார்ய காரணங்களுக்கு செயல்படும் தன்மையை உண்டாக்குவது ப்ரக்ருதியாகையால் கர்த்தா ப்ருக்ருதியெனப்பட்டது. செயல்களுக்குக் காரணமான உடலை ஜீவன் அடைந்திருப்பதாலும், இந்த இருப்பை அடைய முயற்சிசெய்வதாலும், ஜீவன் கர்த்தாவெனவும், இன்ப துன்ப அனுபவத்திற்கு ஜீவனே ஹேதுவாகவும் சொல்லப்பட்டது—ஸ்ரீ ராமானுஜர்.

உடல்புலன்களின் செயல்பாட்டிற்குக் காரணம் சித் ப்ரக்ருதி (லக்ஷ்மி). ஜீவன் ப்ரக்ருதியினுலான ஸுக

துக்கங்களை அனுபவிக்க புருஷனுன பகவான் ஹேது வாகச் சொல்லப்படுகிருர். அல்லது பரக்ருதி என்பது ஜடப்ரக்ருதி. புருஷனென்பது ஜீவன். தேஹேந்த்திரிய வியாபாரத்திற்குக்காரணம் ஜடப்ருக்ருதி என்றும், இன்ப துன்ப அனுபவத்திற்குக் காரணம் ஜீவன் என்றும் சொல்லப்படுகிறது--ஸ்ரீ ராகவேந்த்ரர்.]

पुरुषः प्रकृतिस्थो हि भुङ्क्ते प्रकृतिजान्गुणान् ।

कारणं गुणसङ्गोऽस्य सदसद्योनिजन्मसु ॥ २२

புருஷ: ப்ரக்ருதிஸ்தோ ஹி புங்க்தே ப்ரக்ருதிஜான் குணன் l
காரணம் குணஸங்கோ அஸ்ய ஸதஸத்யோனிஜன்மஸு ll

ப்ரக்ருதி கார்யமான பூத உடலில் (உடலே தான் எனும் எண்ணத்துடன்) உள்ள ஜீவன், இவ்வுடலினல் உண்டாகும் இன்ப துன்பங்களை அனுபவிக்கிருன். எது நல்ல அல்லது தீய செய்கைகளைச் செய்கிறதோ அந்த இந்த்ரியத் தொடர்பு ஜீவனுக்கு தேவ ம்ருக (உயர்ந்த, தாழ்ந்த) இனங்களில் பிறவி எய்தக் காரணமாகிறது.

[ஸ்ரீசங்கரர் :— இந்த ச்லோகத்தின் நோக்கம் குண ஸம்பந்தமான எல்லாவற்றையும் அனுபவிக்கும் ஜீவன் ப்ரக்ருதியின் தன்மையை அறிந்து பந்தத்திலிருந்து விடுபட முயற்சி செய்யவேண்டுமென்பதே.

ஸ்ரீ ராகவேந்த்ரர் :— உடலினலுண்டாகும் இன்ப துன்பங்களை ஜீவன் அனுபவிக்கிருன் என்பது பொய் அல்லவெனத் தெரிவிக்கவே हि (ஹி) என்ற பதப்ர யோகம்.]

उपद्रष्टानुमन्ता च भर्ता भोक्ता महेश्वरः ।

परमात्मेति चाप्युक्तो देहेऽस्मिन्पुरुषः परः ॥ २३

உபத்ரஷ்டானுமந்தா ச பர்தா போக்தா மஹேச்வர: l
பரமாத்மேதி சாப்யுக்தோ தேஹேஅஸ்மின்புருஷ: பர: ll 23

ஜீவன் இந்த பூத உடலிலிருந்தாலும், உடலிலிருந்து வேறுபட்டவனுகவும், அருகிலிருந்து பார்க்கும் மேற் பார்வையாளனுகவும், ஆமோதிக்கிறவனுகவும் (உடலும் புலன்களும் செய்வதற்குச்சம்மதம் கொடுக்கிறவனுகவும்), உடலைப் பூண்டவனுயும், இன்ப துன்பங்களை யறிகின்ற வனுகவும், பிரம்மா முதலியோருக்கு எஜமானனுகவும், பரமாத்மாவாயும் சொல்லப்படுகிருன்.

उपद्रष्टा (உபத்ரஷ்டா) = (1) அருகிலிருந்து பார்க்கிறவன் —ஸ்ரீதரர். (2) யாகத்தில் யஜமானன், ரித்விக் முதலியோர் களின் செயல்களின் குண தோஷங்களை அன்னியனைப் போலப் பார்த்துக்கொண்டிருப்பவன் — ஸ்ரீ சங்கரர். (3) தேஹப்ருவ்ருத்திக்கு உதவியாக ஸங்கல்பாதி ரூபத்தினுல் பார்த்துக்கொண்டிருப்பவன்—ஸ்ரீ ராமானுஜர். (4) எல்லாவற்றிற்கும் மேலாக ஸர்வோத்தமனுயிருந்து பார்க்கிறவன் — ஸ்ரீ ராகவேந்த்ரர்.

अनुमन्ता च (அனுமந்தாச) = (1) தேஹம் இந்த்ரியம் இவைகளின் கார்யங்களில் தான் ஈடுபாடற்றவனுகிலும், ஈடுபாடுள்ளவன்போல் தோற்றப்பட்டவன் அல்லது தேஹேந்திரயங்களின் ஈடுபாட்டிற்குச் சாக்ஷியாக இருக்கிறவன் (அவைகளைச் செய்யாது தடுக்காதவன்) —ஸ்ரீ சங்கரர். (2) உடல் புலன்களின் செய்கைகளை ஆமோதிப்பவன் — ஸ்ரீ ராமானுஜர். (3) செவ்வனே ஏவுகிறவன்—ஸ்ரீமத்வர். (4) செயல்களுக்கு ஆலோசனை சொல்பவன் அல்லது புத்தி பூர்வமாக உதவுபவன் —ஸ்ரீ ராகவேந்த்ரர்.

भर्ता (பர்தா) = (1) ஈச்வர ரூபத்தில் ஜகத்தை (உலகை) தாங்குபவன் — ஸ்ரீதரர். (2) உண்மையான தன் ஸ்வரூபத் தினுல் பொய்யான, உடல், புலன்கள், மனம், புத்தி ஆகியவற்றைத் தாங்கி நிற்பவன் — ஸ்ரீ சங்கரர். (3) காப்பாற்றுபவன் — ஸ்ரீராகவேந்த்ரர்.

भोक्ता (போக்தா)=(1) ஆட்சிசெய்து காப்பாற்றுபவன்—ஸ்ரீதரர். (2) அனுபவிக்கின்றவன். ஆன்மா இன்ப துன்பங்களில் தொடர்பற்றவனானாலும், உடல், புலன்களின் தொடர்பால் அனுபவிப்பன்போல் காணப் படுவதாகச் சொல்லப்படுகிறான்—ஸ்ரீ சங்கரர். (3) உடல் புலன்களின் ஈடுபாட்டினாலுண்டாகும் இன்ப துன்பங்களை அனுபவிப்பவன்—ஸ்ரீராமானுஜர். (4) ஸர்வ கர்மங்களின் பயன்களின் ஸாரத்தை அடைபவன்—ஸ்ரீ ராகவேந்த்ரர்.

महेश्वर: (மஹேச்வர:) = (1) எல்லாவற்றிற்கும் ஆன்மாவாகவும் சுதந்திரமாகவுமுள்ளவன்—ஸ்ரீ சங்கரர். (2) உடலை ஏவுதல், தாங்குதல், உடலுக்கு மீதமான தாயுளல் (சேஷியாக இருத்தல்), இவைகளால் தேஹம், இந்த்ரியம், மனம் முதலியவற்றிற்கு எஜமானாக இருக்கிறான் — ஸ்ரீ ராமானுஜர். (3) மாபெரும் சக்தியுள்ளவன் — ஸ்ரீ ராகவேந்த்ரர்.]

य एवं वेत्ति पुरुषं प्रकृतिं च गुणैः सह ।
सर्वथा वर्तमानोऽपि न स भूयोऽभिजायते ॥ २४

ய ஏவம் வேத்தி புருஷம் ப்ரக்ருதிம் ச குணை: ஸஹ I
ஸர்வதா வர்தமானேஅபி ந ஸ பூயோ அபிஜாயதே II 24

இவ்விதம் (முன் ச்லோகப்படி) புருஷனையும், இன்ப துன்பங்களோடு கூடிய ப்ரக்ருதியையும் (உலகையும்) எவன் அறிகிறானோ அவன் விதிகளைக் கடந்து நடந்தாலும் மறுபடி பிறவியை அடைகிறதில்லை.

[ஸ்ரீ சங்கரர்:— புருஷனாகிய ப்ரஹ்மம் தானென்றும், ஸுகதுஃகங்களுடன் கூடிய ப்ரக்ருதி ஞானத்தினால் அழிந்ததென்றும், எவன் அறிகிறானோ அந்த ஞானி விதியைக் கடந்தவனானாலும் பிறவியை யடைகிறதில்லை எனச் சொல்லப்பட்டது. ஞானம் எல்லாக் கர்மங்களையும் நாசமாக்கிவிடுமென்று தெளிவாகிறபடியால், மறுபடி பிறப்பிற்குக் காரணமில்லையெனக் கருத்து.

ஸ்ரீ ராமானுஜர் :— முன் சொல்லப்பட்ட ஸ்வபாவத்தோடு கூடிய இந்த புருஷனையும் இனி சொல்லப்போகும் ஸ்வபாத்தையுடைய ஸத்வம் முதலிய குணங்களுடன் கூடிய ப்ரக்ருதியையும், எவன் விவேகத்தினால் அறிகிறானோ அவன் தேவர் முதலிய சரீரங்களில் மிக அபிமானத்துடனிருந்தபோதிலும், மறுபடி கட்டுக்குள் அகப்பட்டுக் கொள்வதில்லை. இந்த உடல் போனபின் ப்ரக்ருதி விமுக்தாத்ம ஸ்வரூபத்தை அடைகிறான்.

ஸ்ரீ ராகவேந்த்ரர்:- ஜீவன், பரன் என்கிற இருவகைப் புருஷர்களையும், ஜடம், அஜடம் (சித், அசித்) என்ற இரு ப்ரக்ருதிகளையும், அவை அவற்றின் குணங்களோடு கூட ப்ரத்யக்ஷமாக எவன் அறிகின்றானோ அவன் கவனக் குறைவினால் வழி தப்பி நடந்தபோதிலும் மறுபடி பிறப்பதில்லை.]

ध्यानेनात्मनि पश्यन्ति केचिदात्मानमात्मना ।
अन्ये सांख्येन योगेन कर्मयोगेन चापरे ॥ २५

த்யானேனாத்மனி பச்யந்தி கேசிதாத்மானமாத்மனா ।
அன்யே ஸாம்க்யேன யோகேன கர்மயோகேன சாபரே ॥ 25

பரமாத்மாவைச் சிலர் தியானத்தினாலேயும் உடலினுள் மனதினாலும் சிலர் ஸாங்க்ய யோகத்தினாலும் (ப்ரக்ருதி புருஷர்களை பகுத்தறிந்து அஷ்டாங்க யோகம் முதலியன செய்து), சிலர் கர்ம யோகத்தினாலும் அறிகிறார்கள்.

[ஸ்ரீ சங்கரர்:— சிலர் விஷயங்களிலிருந்து புலன்களை இழுத்து மனதுடன் சேர்த்து அதை ஆன்மாவிடத்தில் இடைவிடாதும், அசைவற்றும் நிறுத்தி புத்தியினால் தன்னையே பரமாத்மாவாக அறிகின்றனர். சிலர் குணங்களின் கார்யங்களான செயல்களுக்குத் தான் சாக்ஷியே யன்றி அவை தன்னைச்சேர்ந்தனவல்ல, தான் அவைகளினின்று வேறுபட்டவனென எண்ணும் ஸாங்க்ய யோகத்தினால் தன்னைத்தானே அறிகிறார்கள். மற்றும் சிலர்

ஈச்வரார்ப்பணமாகச் செய்யும் கர்மயோகத்தினுல் சித்த சுத்தியும், அதனுல் ஞானமும் அடைந்து தன்னைத்தானே அறிகிருர்கள்.

ஸ்ரீ ராமானுஜர்:— யோக நிஷ்டையை யடைந்த சிலர் சரீரத்திலுள்ள ஜீவனை மனதினுல் தியானித்து அறிகிருர்கள். இப்படி செய்யமுடியாத சிலர் ஞான யோகத்தினுல் மனதைத் தகுதியாக்கிக் கொண்டு, தியானிக்க முயன்று ஆன்மாவை அறிகிருர்கள். சிலர் சுலபமாகக் கர்ம யோகத்தினுல், அக் கர்மத்திலடங்கியுள்ள ஞானத்தைத்தேடிக்கொண்டு அதனுல் ஆன்மாவை அறிகின்றனர்.

ஸ்ரீமத்வர்:— கர்மயோகிக்கு கர்மயோகம், ஸாங்க்ய யோகம், த்யான யோகம் ஆகிய மூன்றும் அவசியம் தேவை. ஸாங்க்யயோகி வேதத்தில் கூறப்படும் ஈச்வர ரூபத்தைக் கேட்டும், பார்த்தும், எண்ணியும், தியானித்தும் அறிய வேண்டியது.

ஸ்ரீ ராகவேந்த்ரர்:— சிலர் தியானத்தினுலும், புத்தியாலும் பகவானைத் தன் உடலில் பார்க்கின்றனர். சிலர் வேதத்தில் சொல்லப்பட்ட பகவத் ஸ்வரூப அபரோக்ஷ (நேரில் பார்த்தல்) ஞானத்தினுலும், தியானத்தினுலும் பார்க்கிருர்கள். நற்செயலாலுண்டாவது பகவத் பிரஸாதம், அதனுலுண்டாகும் கேட்டல், மனனம் செய்தல், தியானம் முதலியவற்ருல் பரமாத்மாவை அறிகிருர்கள். தியானிக்கமுடியாதவர், ஸாங்க்யத்தை அடைவதால் தியானத்தைப்பெற்று பார்க்கின்றனர். அதுவும் முடியாதவர்கள் கர்ம உபாயத்தால் கேட்டல் முதலியவற்றை பெற்று பரமாத்மாவைப் பார்க்கின்றனர்.

குறிப்பு:— இந்த ச்லோகத்தில் உபாஸகர்களின் தராதரங்கள் கூறப்படுகின்றன.]

अन्ये त्वेवमजानन्तः श्रुत्वान्येभ्य उपासते ।
तेऽपि चातितरन्त्येव मृत्युं श्रुतिपरायणाः ॥ २६

அன்யே த்வேவமஜானந்த: ச்ருத்வான்யேப்ய உபாஸதே ।
தேஅபி சாதிதரந்த்யேவ ம்ருத்யும் ச்ருதிபராயணா: ॥ 26

இவ்விதம் (ஆன்மா அருகிலிருந்து மேற்பார்வையிடுபவன் முதலிய தன்மையுடையவன் என்பதாய்) தெரியாத மற்றுஞ் சிலர் குரு முதலானோரின் உபதேசம் பெற்று தியானிக்கின்றனர். அவர்களும் குருவின் உபதேசத்தைக் கடைப்பிடித்துப் பிறவிக் கடலைத்தாண்டி விடுதலையடைகின்றனர்.

यावत्संजायते किंचित्सत्त्वं स्थावरजङ्गमम् ।
क्षेत्रक्षेत्रज्ञसंयोगात्तद्विद्धि भरतर्षभ ॥ ௨௭

யாவத்ஸம்ஜாயதே கிம்சித்ஸத்த்வம் ஸ்தாவரஜங்கமம் ।
க்ஷேத்ரக்ஷேத்ரஞஸம்யோகாத்தத்வித்தி பரதர்ஷப ॥ 27

ஒ பரதகுல சிரேஷ்டனே! அசைவற்ற, அசைவனவாயுள்ள எப்பொருள்கள் உண்டாகின்றனவோ, அவை யாவற்றையும், க்ஷேத்ர க்ஷேத்ரஞயரின் தொடர்பினாலே உண்டாகின்றவை என அறிந்துகொள்.

[ஸ்ரீதரர்:— அறிவின்மையால் உடல் முதலியவற்றில் ஆத்மபுத்திதான் க்ஷேத்ர க்ஷேத்ரஞ ஸம்பந்தமென சொல்லப்படுகிறது. ஸ்ரீ சங்கரர்:— ஸம்யோக மென்பது க்ஷேத்ரத்தின் இயற்கையான தர்மங்களை க்ஷேத்ரஞனிடத்தும், க்ஷேத்ரஞனின் இயற்கையான தர்மங்களை க்ஷேத்திரத்தினிடத்தும் ஏற்றிவைப்பதான 'அத்யாஸம்' எனும் தொடர்பு. தன்னுடைய தர்மங்களான ஞானம் முதலியவற்றை உடலுக்குள்ளவை போல எண்ணுவதே அத்யாஸம். இதற்கு அறிவின்மையே காரணம். கயிற்றில் பாம்பும், கிளிஞ்சலில் வெள்ளியும் எப்படி பிரமையினாலுண்டாகின்றனவோ அப்படியே ஆன்மாவே தேஹம் போல் எண்ணுவது.

ஸ்ரீ ராகவேந்த்ரர்:— எல்லா உலகும் சித்ப்ரக்ருதி (லக்ஷ்மி) பரமாத்மா இவர்களின் ஸம்பந்தத்தினாலேயே யுண்டாகிறது. முக்ய காரணம் பரமாத்மா எனக்கருத்து.]

समं सर्वेषु भूतेषु तिष्ठन्तं परमेश्वरम् ।
विनश्यत्स्वविनश्यन्तं यः पश्यति स पश्यति ॥ २८

ஸமம் ஸர்வேஷு பூதேஷு திஷ்டந்தம் பரமேச்வரம் ।
வினச்யத்ஸ்வவினச்யந்தம் ய: பச்யதி ஸ பச்யதி ॥ 28

அசைவற்ற அசைவுள்ள எல்லா பூதங்களிலும் ஸமமாக நிலவும் பரமேச்வரனே, அந்த பூதங்கள் அழிவடைந்தபோதிலும், அழியாதவரென்று எவன் அறிகிருனே அவனே அறிவடைந்தவன்.

[ஸ்ரீ சங்கரர்:— அறிவின்மையின் நீங்குதலுக்காக முன்னர் சொல்லப்பட்ட ஆத்ம ஸ்வரூப ஞானம் வேறு வார்த்தைகளினுல் இப்போது சொல்லப்படுகிறது. உடல், புலன்கள், மனம், புத்தி, அவ்யக்தம், ஆத்மா இவைகளைக் காட்டிலும் வேறுபட்டவராகவும் நியந்தாவாகவுமிருக்கிற தால் பரமேச்வரனெனச் சொல்லப்பட்டது. நான்முகன் முதல் அசைவற்ற பொருள் வரையுள்ள எல்லா பூதங்களிலும் ஸமமாக இருப்பவர். இப்பொருள்கள் யாவும் அழிந்தாலும் பரமேச்வரன் நாசமடைவதில்லை. இத்தகைய பரமேச்வரனும் தானும் ஒன்றேயெனவும், ஆத்மா அநேகமல்லவெனவும், ஜீவேச்வரர்களை வேறல்லாது எவன் அறிகிருனே அவனே விஸ்தாரமாயறிந்தவன். அப்படியின்றி இரண்டாகப் பார்க்கிறவன் அவனிடமுள்ள அவித்யா (அறிவின்மை) ஸம்பந்தத்தினுல் இரண்டாகப் பார்க்கின்ருன்.

ஸ்ரீ ராமானுஜர்:— ப்ரக்ருதி புருஷர்களாலுண்டான தேவர், மானிடர், விலங்குகள், பக்ஷிகள் முதலியவற்றின் உடல்களிலுள்ள ஜீவாத்மாக்கள் எத்துடன் தொடர்பு கொண்டிருக்கிருர்களோ அந்த அவித்யையை நீக்கிப் பார்த்தால் வேற்றுமையின்றி ஞானகாரத்தில் (அறிவு ரீதியில்) ஸமமாயிருக்கிருர்கள். உடல், புலன், மனம், புத்தி ஆகியவற்றிலிருந்து வேறுபட்டும் அதற்கு எஜமானர்

களாயுமிருப்பதால் பரமேச்வரராக இருக்கின்றனர். அப்படிப்பட்ட தன்னை, உடல் முதலியன அழிந்தாலும், நாசமடையாத தன்மையுடையவனென அறிந்தவன் தன்னைச் சரியாக அறிந்தவன். உடல் முதல் அழிவது போல ஆன்மாவும் அழியக் கூடியதென்றும், உடல் முதலியவற்றிலிருப்பதுபோல் ஆன்மாவும் பல வேற்றுமைகளுடன் கூடியவனெனவும் அறிகிறவன் சரியாக அறிந்தவனல்ல. ஆகையால் அவன் ஸம்ஸாரக் கட்டுதலுக்குரியவன்.

ஸ்ரீ ராகவேந்த்ரர்:— உயர்ந்த, தாழ்ந்த எல்லாப் பிராணிகளிலுமுள்ள பரமாத்மாவை, எங்கும் ஒரேவிதமாக இருப்பதாயும், பிறப்பு, இறப்பு, துயரம் முதலிய தோஷங்களுடன் கூடினப் பிராணிகளிலிருக்கும் பரமாத்மாவுக்குப் பிராணிகளின் தோஷங்களில் ஸம்பந்தமில்லையென்றும் எவன் அறிகிறானோ அவனே உண்மையான ஞானி.]

सम पश्यन्हि सर्वत्र समवस्थितमीश्वरम् ।
न हिनस्त्यात्मनात्मानं ततो याति परां गतिम् ॥ २९

ஸமம் பச்யன்ஹி ஸர்வத்ர ஸமவஸ்திதமீச்வரம் ।
ந ஹினஸ்த்யாத்மனாத்மானம் ததோ யாதி பராம் கதிம் ॥ 29

எல்லாப் பிராணிகளிடத்திலும் ஒரே விதமாக அழிவற்ற ஸ்வரூபியாகவுள்ள ஈச்வரனை அறிந்தவன், தன்னால் தன்னைக் கெடுத்துக்கொள்வதில்லை. பிறகு மோக்ஷத்தை அடைகிறான்.

[ஸ்ரீ தரர்:— எவனிவ்விதம் அறிகிறானோ அவன் ஸச்சிதானந்த உருவாகிய தன்னைக் கெடுத்துக்கொள்கிறதில்லை. இப்படி யறியாதவன் உடலே ஆன்மாவென அறிந்தவனாகையால், அவன் உடலைப்போல் ஆன்மாவையும் கெடுத்துக்கொள்கிறான்.

ஸ்ரீ சங்கரர் :— உண்மையாகத் தன் ஆத்ம ஸ்வரூபத்தை யறியாது வேறுவிதமாக அறிந்தவன் தன்னைத்தானே பிறப்பு, இறப்புக்கட்டுதலில் தள்ளிக் கொள்கிறான்.

ஸ்ரீ ராமானுஜர் :— இப்படி அறிந்தவன் தன்னை காத்துக்கொள்கிறான், விடுதலையடைகிறான். இப்படி அறிவதால் கட்டிலிருந்து விடுபட்டு அடையத்தகுந்த ஸ்வரூபத்தை அடைகிறான். இப்படி அறியாதவன் தன்னை பிறவிக்கடலில் மூழ்கடித்துக்கொள்கிறான்.

ஸ்ரீ ராகவேந்த்ரர் :— பரமாத்மாவை ஸமமாய் பார்ப்பவன் தன்னை நரகத்தில் விழும்படி செய்துகொள்கிறதில்லை.]

प्रकृत्यैव च कर्माणि क्रियमाणानि सर्वशः ।
यः पश्यति तथात्मानमकर्तारं स पश्यति ॥ ३०

ப்ரக்ருத்யைவ ச கர்மாணி க்ரியமாணானி ஸர்வச: I
ய: பச்யதி ததாத்மானமகர்தாரம் ஸ பச்யதி II 30

பலவிதமான கர்மங்கள் உடல், புலன்கள் முதலிய உருவமாகவுள்ள ப்ரக்ருதியினாலேயே (மாயையால்) செய்யப்படுகிறதென்றும், அப்படியே ஆத்மாவை கர்மங்களுக்கு கர்த்தா (செய்பவன்) அல்லவென்று எவன் அறிகிறானோ அவன் செவ்வனே அறிபவன்.

[ஸ்ரீ தரர் :— ஆன்மாவுக்குச் செயல்படும் தன்மை உடலபிமானத்தினாலேயே யன்றி இயற்கையில் கிடையாது.

ஸ்ரீ சங்கரர் :— மாயை, உடல், புலன்களின் உருவாக இருந்து கர்மங்களைச் செய்கிறது. ஆத்மாவாகிய தான் கர்மங்களைச் செய்வதில்லை. அவன் சுத்தன், குணமற்றவன் என எவன் எப்போது அறிகிறானோ, அப்போது தான் அவன் பரமாத்மாவை அறிந்தவனாகச் சொல்லப் படுகிறான்.

ஸ்ரீராமானுஜர்:— எல்லாக் கார்யங்களையும் செய்வது மாயை, தானல்ல. தான் ஞான உருவானவன், தனக்கு மாயையின் தொடர்பும், அதில் இருப்பும், அதன் வழியே இன்ப துன்பங்களின் அனுபவமும் கர்ம உருவான அறிவின்மையாலுண்டாகிறதென அறிகிறவன் அறிய வேண்டிய தன் ஆன்மாவை உள்ளபடி அறிந்தவன்.

ஸ்ரீ ராகவேந்த்ரர் :— தான் செய்யும் எல்லாக் கர்மங்களையும், தன் முன்கர்மத்தை யொட்டியே, ஈச்வரன் செய்விக்கிருனெனவும், ஈச்வரனுக்குக் கர்த்தா (யஜமானன்) வேறு யாருமில்லை எனவும் அறிகிறவனே ஈச்வரனைக் காண்கிருன். ஈச்வரன் ஜீவனின் முன் கர்மத்தைத் தழுவி அந்தந்தக் கர்மத்திற்கேற்ப கார்யங்களைச் செய்விக்கிறபடியால் அவரிடத்தில் பக்ஷபாதம் (விருப்பு, வெறுப்பு) இல்லை.

यदा भूतपृथग्भावमेकस्थमनुपश्यति ।
तत एव च विस्तारं ब्रह्म संपद्यते तदा ॥ ३१

யதா பூதப்ருதக்பாவமேகஸ்தமனுபச்யதி ।
தத ஏவ ச விஸ்தாரம் ப்ரஹ்ம ஸம்பத்யதே ததா ॥ 31

ப்ரக்ருதியிலிருந்துண்டான பலவித வேற்றுமைகளுள்ள ப்ரபஞ்சத்தை (உலகை) பிரளய காலத்தில் ப்ரக்ருதியுடன் லயித்து ஒன்ருயிருக்கிறதாகவும், அந்த ப்ரக்ருதியிலிருந்தே விரிவடைவதாகவும் (ச்ருஷ்டி காலத்தில் உற்பத்தியாவதாகவும்) எப்போது பார்க்கிருனே அப்போது ப்ரஹ்மத்தை யடைகிருன். (ப்ரஹ்மமாக ஆகிருன்.)

[ப்ரக்ருதி புருஷனிவற்றுள் ப்ரக்ருதி தேவர், மனிதர் உருவாயிருக்கிறதென்றும், அந்தந்த உடல்களிலுள்ள தேவத் தன்மை, மானிடத்தன்மை, வளர்தல், குறைதல் ஆகியவை உடலைச் சார்ந்தவை, ஆத்மாவைச் சார்ந்தவை யல்ல என்றும், ப்ரக்ருதி உருவான உடல்களிலிருந்தே,

மகன், பேரன் முதலியவைகளாய் உலகம் வளர்ச்சியடைகிறது என்றும், எப்போது எவன் அறிகிருனே அப்போது அவன் முழுமையான அறிவின் ஒளியோடு கூடின ப்ரக்ருதியினின்று விடுபட்ட தன் உண்மையான ஸ்வரூபத்தை அடைகிருன்—ஸ்ரீ ராமானுஜர்.]

अनादित्वान्निर्गुणत्वात्परमात्मायमव्ययः ।
शरीरस्थोऽपि कौन्तेय न करोति न लिप्यते ॥ ३२

அனுதித்வான்நிர்குணத்வாத்பரமாத்மாயமவ்யய: ।
சரீரஸ்தோஅபி கௌந்தேய ந கரோதி ந லிப்யதே ॥ 32

ஓ! குந்தியின் மகனே! ஆரம்ப மற்றது என்பதினுலும், குணமற்றதானதாலும், அழிவற்ற இந்த பரமாத்மா உடலுள் இருந்தபோதிலும், ஒன்றும் செய்கிறதில்லை, ஒன்றிலுமொட்டுகிறதுமில்லை.

[ஸ்ரீ சங்கரர்:— கர்மம் செய்வதும், இன்ப துன்பப் பயன்களை அனுபவிப்பதும் ஆன்மாவல்ல, ப்ரக்ருதி தானெனவும், ஆரம்பமற்ற அறிவின்மையால் செயல் புரியும் தன்மை முதலியன ஆன்மாவிடத்தில் ஏற்றப் பட்டது என நிச்சயிக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீ ராகவேந்த்ரர்:— அழிவற்ற இந்த விஷ்ணு உடலுடன் தொடர்பு கொண்டிருந்தாலும், ஆரம்பமற்ற வராதலாலும், குணமற்றவராதலாலும், உலகத்திலுள்ளவர்போல ஒன்றும் செய்வதில்லை, துக்கங்களையும் அடைகிறதில்லை.

यथा सर्वगतं सौक्ष्म्यादाकाशं नोपलिप्यते ।
सर्वत्रावस्थितो देहे तथात्मा नोपलिप्यते ॥ ३३

யதா ஸர்வகதம் ஸௌக்ஷ்ம்யாதாகாசம் நோபலிப்யதே ।
ஸர்வத்ராவஸ்திதோ தேஹே ததாத்மா நோபலிப்யதே ॥ 33

சேறு முதலிய எல்லாவிடங்களிலும் பரவிநிற்கும் ஆகாயம் ஸூக்ஷ்மமாக இருப்பதால் எப்படி அந்த சேறு முதலியவற்றுடன் ஒட்டுகிறதில்லையோ, அதுபோல எல்லா உடல்களிலுமுள்ள ஆன்மா ஒன்றிலும் ஒட்டுவதில்லை. (உடல்களின் குணங்களிலோ, செயல்களிலோ ஆன்மாவுக்கு பற்றுதலில்லை எனக்கருத்து.)

[ஸ்ரீ ராமானுஜர்:— அந்தந்த உடலின் தன்மை ஆன்மாவுக்கு ஒட்டுகிறதில்லை அல்லது பற்றுகிறதில்லை]

यथा प्रकाशयत्येकः कृत्स्नं लोकमिमं रविः ।
क्षेत्रं क्षेत्री तथा कृत्स्नं प्रकाशयति भारत ॥ ३४

யதா ப்ரகாசயத்யேக: க்ருத்ஸ்னம் லோகமிமம் ரவி : I
க்ஷேத்ரம் க்ஷேத்ரீ ததா க்ருத்ஸ்னம் ப்ரகாசயதி பாரத II 34

ஓ! பாரதா! ஒரே ஸூர்யன் இவ்வுலகம் முழுதையும் எப்படி ஒளி மயமாக்குகிறானோ அப்படியே க்ஷேத்ரஞன் (பரமாத்மா) எல்லா உடல்களையும் ப்ரகாசமடையச் செய்கிறான்.

[ஸ்ரீ சங்கரர் :— ஒரே ஸூர்யன் உலகம் முழுதைவும் ப்ரகாச மடையும்படி செய்வதுபோல் பரமாத்மா எல்லா மாயப்ரபஞ்சத்தையும் ப்ரகாசமடையும்படி செய்கிறார். ஸூர்யனின் ஒளி எந்தப்பொருளில் பட்டபோதிலும் அப்பொருளின் குணம் எப்படி ஸூர்யனில் ஒட்டாதோ அதுபோல ஆன்மா எந்த உடலிலிருந்தாலும் அந்த உடலின் தன்மையோ குணங்களோ ஆன்மாவை ஒட்டுவதில்லை. ஒரே ஆத்மா எல்லா உலகையும் ஒளி மயமாக்குகிறானென உதாரணத்திலிருந்து அறியத்தக்கது.

ஸ்ரீ ராமானுஜர் :— ஒரே ஸூர்யன் உலக முழுதும் ப்ரகாசமடையும்படி செய்வது போல், ஆன்மா உடல் முழுதும் தன் ஞானத்தினால் உள்ளும் வெளியும் பிரகாசமடையும்படி செய்கிறான். இதனால் ஸூர்ய ஒளியினால்

ப்ரகாசமடையும் பொருள்களைக்காட்டிலும் ஸூர்யன் எப்படி வேருனவனே அதுபோல் உடலைக்காட்டிலும் அவ்வுடலை ப்ரகாசமடையும்படிசெய்யும் ஆத்மா (ஜீவன்) வேறு என வெளியாகிறது.]

क्षेत्रक्षेत्रज्ञयोरेवमन्तरं ज्ञानचक्षुषा ।
भूतप्रकृतिमोक्षं च ये विदुर्यान्ति ते परम् ॥ ३५

க்ஷேத்ரக்ஷேத்ரஞயோரேவமந்தரம் ஞானசக்ஷுஷா ।
பூதப்ரக்ருதிமோக்ஷம் ச யே விதுர்யாந்தி தே பரம் ॥ 35

ஞானமாகிற கண்ணுலே க்ஷேத்ர க்ஷேத்ரஞர்களின் இவ்விதமான வேற்றுமையையும், பூதங்களுக்கு (பிராணிகளுக்கு) காரணமான மாயையினின்று விடுபடுவதையும் எவர்கள் அறிகின்ருர்களோ அவர்கள் பரமபதத்தை யடைகின்றனர். (மறுபடி பிறவி யடைகிறதில்லை).

க்ஷேத்ர-க்ஷேத்ரஞ-விபாகயோக மெனும்
பதின்மூன்ருவது அத்யாயம்
முற்றிற்று.

பதினுன்காவது அத்யாயம்

குணத்ரயவிபாகயோகம்

श्री भगवानुवाच -

परं भूयः प्रवक्ष्यामि ज्ञानानां ज्ञानमुत्तमम् ।
यज्ज्ञात्वा मुनयः सर्वे परां सिद्धिमितो गताः ॥ १

ஸ்ரீ பகவானுவாச-

பரம் பூய: ப்ரவக்ஷ்யாமி ஞானும் ஞானமுத்தமம் l
யஜ்ஞாத்வா முனய: ஸர்வே பராம் ஸித்திமிதோ கதா: ll 1

ஸ்ரீ க்ருஷ்ண பகவான் அர்ஜுனனுக்குச் சொல்வது —

எதையறிந்து எல்லா ஞானிகளும் கட்டிலிருந்து விடுபட்டு மோக்ஷத்தையடைந்தார்களோ, அத்தகைய ப்ரஹ்மத்தைத் தெரிவிக்கும் பலவித ஞானங்களில் மேன்மையான ஞானத்தை மறுபடியும் சொல்கிறேன்.

इदं ज्ञानमुपाश्रित्य मम साधर्म्यमागताः ।
सर्गेऽपि नोपजायन्ते प्रलये न व्यथन्ति च ॥ २

இதம் ஞானமுபாச்ரித்ய மம ஸாதர்ம்யமாகதா: l
ஸர்கேஅபி நோபஜாயந்தே ப்ரளயே ந வ்யதந்தி ச ll 2

இந்த ஞானேபாயத்தைக் கடைப்பிடித்து என் ஸ்வரூபத்தை யடைந்தவர்கள், படைக்கும் காலத்தில் பிறவி யடைகிறதில்லை. ப்ரளய காலத்தில் துயரமுமடைகிறதில்லை. (பிறப் பிறப்பில்லை எனக் கருத்து.)

मम योनिर्महद्ब्रह्म तस्मिन्गर्भं दधाम्यहम् ।
संभवः सर्वभूतानां ततो भवति भारत ॥ ३

மம யோனிர்மஹத்ப்ரஹ்ம தஸ்மின்கர்பம் ததாம்யஹம் l
ஸம்பவ: ஸர்வபூதானும் ததோ பவதி பாரத ll 3

ஓ! பாரதா! எல்லா இடங்களிலும் எக்காலத்திலும் வியாபித்துள்ள ப்ரக்ருதி எனக்கு கருவை (கர்பம்) வைக்க இடமாகவுள்ளது. அதில் நான் கருவை வைக்கிறேன். அதனுல் நான்முகன் முதலிய எல்லாப் பிராணிகளின் உற்பத்தி ஏற்படுகிறது.

[ஸ்ரீதரர்:— எல்லா ப்ரபஞ்சத்தின் உற்பத்திக்குக் காரணமான ப்ரஹ்மமெனும் பெயருள்ள ப்ரக்ருதி கருவடையும் இடமாகவுள்ளது. அறிவின்மை, காமம், கர்மம் முதலியவற்றின் தொடர்பால் ப்ரளய காலத்தில் என்னிடமடங்கியிருக்கும் சிதாபஸனுகிய க்ஷேத்ரஜ்ஞனை, படைக்கும் காலத்தில் அவனுக்கு போக்யமாகிய ப்ரக்ருதி உருவான க்ஷேத்ரத்தில் (உடலில்) சேர்ப்பிக்கிறேன் எனக் கருத்து.

ஸ்ரீ சங்கரர்:— என் வசமான மாயை எல்லாப் பூதங்களுக்கும் காரணம். அது கார்ய ரூபமான ப்ரபஞ் சத்தைவிட பெரியதானதால் மஹத்தென்றும் கார்ய வளர்ச்சிக்குக் காரணமாகையால் ப்ரஹ்மமென்றும் சொல்லப்படுகிறது. அதில் எல்லா பூதங்களின் படைப்புக் குக் கராணமான ஹிரண்யகர்பனுடைய (நான்முக பிரும்மாவின்) உற்பத்திக்குக் காரணமான விதையைப் போடுகிறேன் (கருவை வைக்கிறேன்). க்ஷேத்ர க்ஷேத்ரஜ்ஞ என்ற இரண்டு சக்திகளையுடைய ஈச்வரனுன நான், அறிவின்மை, காமம், கர்மம் இவைகளுடன் ஒட்டியிருக் கும் க்ஷேத்ரஜ்ஞனை க்ஷேத்ரத்துடன் சேர்ப்பிவிக்கிறேன். ஹிரண்யகர்ப்பன் மூலமாக எல்லாப்பிராணிகளும் உற்பத்தியாகின்றன.

ஸ்ரீ ராமானுஜர் :— முன்னர் 7ஆம் அத்யாயத்தில் சொன்னபடி எட்டு விதமாகவுள்ள ப்ரக்ருதி மஹத ஹங்காரங்களுக்குக் காரணமாகையால், ச்ருதியில் இந்த ப்ரக்ருதி ப்ரஹ்மமாகவே சொல்லப்பட்டிருப்பதாலும் ப்ரஹ்மமென்றும் சொல்லப்படுகிறது. பரப்ரக்ருதி எல்லாப் ப்ராணிகளுக்கும் விதையாகையால், பரப்ரக்ருதி யான சேதனனை அபரப்ரக்ருதி என்ற அசேதனப் ப்ரக்ருதியுடன் கூட்டி வைக்கிறேன். இந்தச் சேர்க்கை யால் ப்ரஹ்மா முதல் சிறு புல், பூச்சி வரையுள்ள எல்லா பூதங்களுமுண்டாகின்றன.

ஸ்ரீ ராகவேந்த்ரர் :— மஹத் ப்ரஹ்ம என்ற சித் ப்ரக்ருதியான என் மனைவியிடத்தில், இருபத்து நான்கு தத்வங்களோடு கூடியதும், என் வயிற்றிலடங்கியது மாகிய ஜீவர்களை, சுக்ல ரூபமாகச் சித் ப்ரக்ருதியின் கர்பத்தில் (கருவில்) வைக்கிறேன். அவளிடத்திலிருந்து எல்லா உலகங்களும் உண்டாகின்றன.]

सर्वयोनिषु कौन्तेय मूर्तयः संभवन्ति याः ।
तासां ब्रह्म महद्योनिरहं बीजप्रदः पिता ॥ ४

ஸர்வயோனிஷு கௌந்தேய மூர்தய: ஸம்பவந்தி யா: 1
தாஸாம் ப்ரஹ்ம மஹத்யோநிரஹம் பீஜப்ரத: பிதா 11 4

ஓ! குந்தியின் மகனே! எல்லா இனங்களிலும், எந்த அசைவற்ற அசைவுள்ள பொருள்கள் உற்பத்தியா கின்றனவோ அவைகளுக்கு ப்ரக்ருதி (மாயை) தாயார். நான் விதைபோட்ட தகப்பன்.

[ஸ்ரீ ராமானுஜர் :— கருவடைவதற்கிடமான ஜட ப்ரக்ருதியில் விதையான சேதன ப்ரக்ருதியை அதன் கர்மத்தை யொட்டி சேர்ப்பிக்கிறேன். ஆகையால் ப்ரக்ருதி தாயார், நான் தகப்பன்.

सर्वयोनिषु (ஸர்வ யோனிஷு) = தேவர், பித்ருக்கள், மனிதர், விலங்கு, பக்ஷி முதலிய இனங்கள்—ஸ்ரீ சங்கரர்.

महद्ब्रह्म = மஹா லக்ஷ்மீ—ஸ்ரீ ராகவேந்த்ரர்.]

सत्त्वं रजस्तम इति गुणाः प्रकृतिसंभवाः ।
निबध्नन्ति महाबाहो देहे देहिनमव्ययम् ॥ ५

ஸத்த்வம் ரஜஸ்தம இதி குணு: ப்ரக்ருதிஸம்பவா: ।
நிபத்னந்தி மஹாபாஹோ தேஹே தேஹினமவ்யயம் ॥ 5

பெரும் கைகளையுடையவனே! ப்ரக்ருதியிலிருந்துண்டான ஸத்வம், ரஜஸ், தமஸ் என்ற குணங்கள் உடலில் இருக்கும் அழிவற்றவனுன (தேஹத்தையுடையவனுன) ஆன்மாவை கட்டுகின்றன. (தங்கள் கார்யங்களான ஸுகம், துஃக்கம் மோஹம் முதலியவற்றுடன் சேர்ப்பிக்கின்றன.)

[ஸ்ரீ சங்கரர்:— ஆத்மாவின் தன்மை ஒன்றிலும் பற்றுதலேயுடையதல்ல. ஆனுல் உடலுடன் தொடர்பு ஏற்பட்ட காரணத்தால் அவன் கட்டுப்படுகிறது போல் காணப்படுகிருன்.

ஸ்ரீ ராகவேந்த்ரர்:— ஸத்வாபிமானியான லக்ஷ்மி தேவதைகளேயும், ரஜோபிமானியான பூதேவி மனிதர்களேயும், தமோபிமானியான துர்கை அஸுரர்களேயும் (தைத்யர்களேயும்) ஸுக துஃக்க மோஹாதிகளால் கட்டுவிக்கிருர்கள்.]

तत्र सत्त्वं निर्मलत्वात्प्रकाशकमनामयम् ।
सुखसङ्गेन बध्नाति ज्ञानसङ्गेन चानघ ॥ ६

தத்ர ஸத்த்வம் நிர்மலத்வாத்ப்ரகாசகமனுமயம் ।
ஸுகஸங்கேன பத்னுதி ஞானஸங்கேன சானக ॥ 6

ஓ! பாபமற்றவனே! அந்த மூன்று குணங்களுள் பரிசுத்தத்தால் ஸ்படிகம்போல் பிரகாசிக்கிறதும், அமைதியாயுமுள்ள ஸத்வகுணம், ஸுகத்தின் தொடர்பாலும், ஞானத்தின் தொடர்பாலும் ஆன்மாவைக்கட்டுப்படுத்துகிறது.

[ஸ்ரீ சங்கரர் :— ஸுகம் உடலுக்குத் தொடர்புள்ளது. ஆன்மாவுக்கு எவ்விதக் கட்டும் கிடையாது. ஆன்மாவை ஸுகம் தன்னுடையது போல் பிரமிக்கச் செய்கிறது. ஞானமும் இது போலவே. இந்த ஞானம் ஆத்மஸ்வரூப ஞானமல்ல, வ்ருத்திஞானம் ஆத்மஸ்வரூப ஞானமல்லாத உலக விஷயமான ஞானம் வ்ருத்தி ஞான மெனப்படும்.

ஸ்ரீ ராமானுஜர் :— ஸத்வகுணம் ஆன்மாவை ஸுகத்தின் தொடர்பாலும், ஞானத்தின் தொடர்பாலும் கட்டுகிறது, என்ருல் ஸுகம், ஞானம் இவைகளை அடைய வைதிக, லௌகிக கார்யங்களைச் செய்யும்படி செய்து, அதன் மூலம் ஸுகம், ஞானம் இவைகளையுண்டாக்கி, அக் கர்மங்களுக்கேற்ப பயன்களையடைய மறுபடி பிறவியைக் கொடுக்கிறது. இதனுல்தான் கட்டுதலேற்படுவதாகச் சொல்லப்படுகிறது.]

रजो रागात्मकं विद्धि तृष्णासङ्गसमुद्भवम् ।
तन्निबध्नाति कौन्तेय कर्मसङ्गेन देहिनम् ॥ ७

ரஜோ ராகாத்மகம் வித்தி த்ருஷ்ணுஸங்கஸமுத்பவம் ।
தந்நிபத்னுதி கௌந்தேய கர்மஸங்கேன தேஹினம் ॥ 7

ஓ குந்தியின் மகனே! ரஜோ குணத்தை ஆசையின் உருவாகவும், ஆசையையும் அபிமானத்தையும் உண்டாக்குகிறதாயும் அறிந்துகொள். இது கர்மத்தொடர்பால் ஆன்மாவைக் கட்டுப்படுத்துகிறது. (இம்மை மறுமைக்கான ஸாதனங்களான கர்மங்களினுல் பற்றுதலையுண்டாக்குகிறது.)

[ஸ்ரீ ராமானுஜர் :— ஆசையால் தான் (ஆத்மா) செய்யும் புண்ய பாப கர்மங்களால் அவற்றின் பயன்களை யனுபவிக்க பிறவிகளை உண்டாக்குகின்றன.

ஸ்ரீ ராகவேந்த்ரர் :— பூதேவி ரஜோ குணத்துடன் மனிதர்களை கர்மத்தில் கட்டுப்படும்படி செய்கிருள்.]

तमस्त्वज्ञानजं विद्धि मोहनं सर्वदेहिनाम् ।
प्रमादालस्यनिद्राभिस्तन्निबध्नाति भारत ॥ ८

தமஸ்த்வஞானஜம் வித்தி மோஹனம் ஸர்வதேஹிநாம் ।
ப்ரமாதாலஸ்யநித்ராபிஸ்தந்நிபத்நாதி பாரத ॥ 8

ஓ! அர்ஜுன! தமோ குணத்தை அறிவின்மையாலுண்டானதாகவும், எல்லாப் பிராணிகளுக்கும் மோஹத்தை (புத்தித் தடுமாட்டத்தை) உண்டாக்கக் கூடியதாகவும் அறிந்துகொள். அது கவனக்குறைவு, சோம்பல், தூக்கம் இவைகளால் கட்டுகிறது (ஆன்மாவுக்கு இந்த குணங்களை உண்டாக்குகிறது).

[ஸ்ரீ ராகவேந்த்ரர் :— தமோ குணாபிமானியான துர்க்கை தமோ குணத்துடன் தைத்யர்களை (அரக்கர்களை) கட்டுகிறாள்.]

सत्त्वं सुखे संजयति रजः कर्मणि भारत ।
ज्ञानमावृत्य तु तमः प्रमादे संजयत्युत ॥ ९

ஸத்த்வம் ஸுகே ஸம்ஜயதி ரஜ: கர்மணி பாரத ।
ஞானமாவ்ருத்ய து தம: ப்ரமாதே ஸம்ஜயத்யுத ॥ 9

ஓ! அர்ஜுன! ஸத்வகுணம் ஸுகத்திலும், ரஜோ குணம் கர்மத்திலும், தமோ குணம் ஞானத்தை மறைத்து கவனக்குறைவு முதலியவற்றுடனும் சேர்ப்பிவிக்கின்றன (ஆன்மாவிற்கு இவைகளை யுண்டாக்குகின்றன).

रजस्तमश्चाभिभूय सत्त्वं भवति भारत ।
रजः सत्त्वं तमश्चैव तमः सत्त्वं रजस्तथा ॥ १०

ரஜஸ்தமஸ்சாபிபூய ஸத்த்வம் பவதி பாரத ।
ரஜ: ஸத்த்வம் தமஸ்சைவ தம: ஸத்த்வம் ரஜஸ்ததா ॥ 10

ஓ! அர்ஜுனா! ஸத்வகுணம் ரஜஸ் தமோ குணங்களையும், ரஜோகுணம் ஸத்வதமோ குணங்களையும் அப்படியே தமோகுணம் ஸத்வரஜோ குணங்களையும் அடக்கித் தலை காட்டும்.

[ஸ்ரீதரர், ஸ்ரீ சங்கரர், ஸ்ரீ ராமானுஜர், ஸ்ரீராகவேந்த்ரர்:— இந்த ச்லோகத்தை முன் ச்லோகத்துடன் ஒட்டி பொருள் கொள்ளவேண்டும். ஒவ்வொரு பிராணியிடத்திலும் ஸத்வ, ரஜஸ், தமோ குணங்கள் மூன்றுமுண்டு. அவற்றில் எப்போது எந்தக்குணம் மேலிடுகிறதோ, அப்போது அந்த குணம் மற்ற இரண்டையும் அடக்கி, தன் கார்யங்களை அதிகமாகச் செய்விக்கும். ஸத்வகுணம் மேலிட்டால் ஸுகம், ஞானம் அதிகமாகும். ரஜோகுணம் மேலிட்டால் கர்மத்தில் அதிகம் ஈடுபாடுண்டாகும். தமோ குணம் மேலிட்டால் கவனக்குறைவு, சோம்பல், தூக்கம் இவை அதிகமாகுமென அறியவும்.

ஸ்ரீ ராமானுஜர்:— முன் கர்ம வினையை யொட்டியும், உணவுப் பழக்கங்களாலும், முக் குணங்களில் ஒன்று மேலிடும்.

सर्वद्वारेषु देहेऽस्मिन्प्रकाश उपजायते ।
ज्ञानं यदा तदा विद्याद्विवृद्धं सत्त्वमित्युत ॥ ११

ஸர்வத்வாரேஷு தேஹேஅஸ்மின் ப்ரகாச உபஜாயதே ।
ஞானம் யதா ததா வித்யாத்விவ்ருத்தம் ஸத்த்வமித்யுத ॥ 11

இவ்வுடலில் காது முதலிய எல்லா த்வாரங்களிலேயும் (ஓட்டைகளிலும்) ஞான உருவான ஒளியும் ஸுகமும் எப்போது உண்டாகின்றனவோ அப்போது ஸத்வகுணம் வளர்ச்சியடைந்துள்ளதாக அறிய வேண்டியது.

[ஸ்ரீ ராமானுஜர்:— உடலில் புலன்களால் பொருள் களின் ஸ்வரூபநிச்சய ஞானமுண்டாகும்போது ஸத்வ குணம் வளர்ச்சியடைந்ததாக அறியவேண்டியது]

लोभः प्रवृत्तिरारम्भः कर्मणामशमः स्पृहा ।
रजस्येतानि जायन्ते विवृद्धे भरतर्षभ ॥

லோப: ப்ரவ்ருத்திராரம்ப: கர்மணுமசம: ஸ்ப்ருஹா I
ரஜஸ்யேதாநி ஜாயந்தே விவ்ருத்தே பரதர்ஷப II 12

ஓ! அர்ஜுனா! ரஜோகுணம் வளர்ச்சியடைந்தால், பொருளாசை, கார்யத்தில் முயற்சி, கர்மங்களைத் தொடங்குதல், சித்த ஸமாதானமின்மை, ஆசை இவைகளுண்டாகின்றன.

[लोभः (லோப:)=(1) பிறரின் பொருளில் ஆசை —ஸ்ரீசங்கரர், (2) தன் பொருளைச் செவ்வனே செலவு செய்யாத லோபித்தன்மை —ஸ்ரீராமானுஜர், ஸ்ரீ ராகவேந்த்ரர், (3) பேராசை —ஸ்ரீதரர்.

प्रवृत्तिः (ப்ரவ்ருத்தி:)=(1) கார்யங்களில் ஈடுபடுதல் —ஸ்ரீ சங்கரர், (2) பிரயோஜனமின்றி ஏதேனும் ஒரு கார்யத்தில் ஈடுபடுதல்—ஸ்ரீராமானுஜர், ஸ்ரீராகவேந்த்ரர்.

स्पृहा (ஸ்ப்ருஹா) = (1) ஸாதாரணப் பொருள்களில் ஆசை—ஸ்ரீசங்கரர், (2) காணும் பொருள்களிலெல்லாம், உயர்ந்ததோ, தாழ்ந்ததோ எல்லாவற்றிலும் ஆசை —ஸ்ரீதரர், (3) விஷயங்களில் இச்சை —ஸ்ரீராமானுஜர், (4) கிடைக்காத பொருளில் ஆசை —ஸ்ரீராகவேந்த்ரர்.]

अप्रकाशोऽप्रवृत्तिश्च प्रमादो मोह एव च ।
तमस्येतानि जायन्ते विवृद्धे कुरुनन्दन ॥ १३

அப்ரகாசோஅப்ரவ்ருத்திஸ்ச ப்ரமாதோ மோஹ ஏவ ச I
தமஸ்யேதானி ஜாயந்தே விவ்ருத்தே குருநந்தன II 13

அர்ஜுனா! தமோகுணம் வளர்ச்சியடைந்தால், அறிவின்மை, கார்யங்களில் முயற்சியின்மை, கவனக்குறைவு, விபரீத ஞானம் ஆகியவை உண்டாகின்றன.

[अप्रकाशः (அப்ரகாச:)=(1) அறிவே ஏற்படாமை —ஸ்ரீராமானுஜர், (2) காது முதலிய புலன்களுக்குரிய ஞானமில்லாமை—ஸ்ரீ ராகவேந்த்ரர், (3) ஸத்வகுணத்தின் கார்யமான பகுத்தறிவு, ஸுகம் இவை இல்லாமை— ஆசிரியர்.

अप्रवृत्तिश्च (அப்ரவ்ருத்திஸ்ச)=(1) மந்தமாக இருத்தல் —ஸ்ரீராமானுஜர், (2) ஒரு கார்யத்திலும் ஈடுபாடில்லா திருத்தல்— ஸ்ரீ ராகவேந்த்ரர், (3) ரஜோகுண கார்யங் களில் முயற்சியின்றி இருத்தல் —ஆசிரியர்]

यदा सत्त्वे प्रवृद्धे तु प्रलयं याति देहभृत् ।
तदोत्तमविदां लोकानमलान्प्रतिपद्यते । १४

யதா ஸத்த்வே ப்ரவ்ருத்தே து ப்ரலயம் யாந்தி தேஹப்ருத் ।
ததோத்தமவிதாம் லோகானமலான்ப்ரதிபத்யதே ॥ 14

எப்போது ஸத்வகுணம் வளர்கிறதோ, அப்போது மரணத்தையடைகிற ஜீவன், மேலான ஞானிகளின் பரிசுத்தமான உலகங்களை அடைகிறான்.

[ஸ்ரீதரர் :— ஹிரண்யகர்பனை உபாஸிப்பவர்கள் அடையத்தக்க ஒளிமயமான ஸுகானுபவத் தகுதி யுடைய உலகங்களையடைகிறான்.

ஸ்ரீ சங்கரர் :— ப்ரக்ருதி தத்வஞானிகளடையத் தகுந்த லோகங்களையடைகிறான்.

ஸ்ரீ ராமானுஜர் :— ஆத்மஸ்வரூபத்தையறிந்தவர்களு டைய தூய்மையான கூட்டத்தில் சேருகிறான். மரணத் திற்குப் பின் ப்ரஹ்ம ஞானிகளின் குலத்தில் பிறந்து, ஆத்மஞானமடையத்தகுந்த புண்ய கர்மங்களைச் செய்ய அதிகாரமுடையவனாகிறான்.

ஸ்ரீ ராகவேந்த்ரர் :— விஷ்ணு ஞானிகளடையத்தகுந்த நிர்தோஷமான உடலையடைகிறான். உத்தமர்களுடைய குலத்தில் பிறவியடைகிறான்.]

रजसि प्रलयं गत्वा कर्मसङ्गिषु जायते ।

तथा प्रलीनस्तमसि मूढयोनिषु जायते ॥ १५

ரஜஸி ப்ரலயம் கத்வா கர்மஸங்கிஷு ஜாயதே 1
ததா ப்ரலீனஸ்தமஸி மூடயோனிஷு ஜாயதே 11 **15**

ரஜோகுணம் வளர்ந்துள்ளபோது மரணமடைந்தால் கர்மத்தில் விருப்புடைய மனித இனத்தில் பிறக்கிறுன். அப்படியே தமோகுணமதிகமான காலத்தில் மரணமடைந்தவன் விலங்கு முதலிய இனங்களில் பிறக்கிறுன்.

[कर्मसङ्गिषु (கர்மஸங்கிஷு) = (1) பயனில் விருப்பமுள்ள கர்மங்களைச் செய்கிறவர்களின் குலத்தில் பிறந்து, பயன் கருதி கர்மங்களைச் செய்து வருகிறுன் —ஸ்ரீராமானுஜர், (2) காம்ய கர்மங்களைச் செய்வோரின் குலத்தில் பிறக்கிறுன் —ஸ்ரீ ராகவேந்த்ரர்]

कर्मणः सुकृतस्याहुः सात्त्विकं निर्मलं फलम् ।

रजसस्तु फलं दुःखमज्ञानं तमसः फलम् ॥ १६

கர்மண: ஸுக்ருதஸ்யாஹு: ஸாத்த்விகம் நிர்மலம் பலம் 1
ரஜஸஸ்து பலம் து:கமஞானம் தமஸ: பலம் 11 **16**

ஸாத்விகமான கர்மத்திற்கு ஸத்வகுணத்திறுலுண்டான தூய்மையான ஸுகத்தையும், ரஜோகுணத்திறுலுண்டாகிற கர்மத்திற்கு துயரத்தையும், தமோகுணத்திறுலுண்டான கர்மத்திற்கு அஞானத்தையும் (அறிவின்மையையும்) பயனுக வித்வான்கள் சொல்கிறுர்கள்.

[निर्मलम् (நிர்மலம்)=பிரகாசாதிக்கமுள்ள ஸுகத்தை —ஸ்ரீதரர், दुःखम् (துஃகம்)=ஸுகமும் துயரமும் கலந்தது —ஸ்ரீ ராகவேந்த்ரர்]

सत्त्वात्संजायते ज्ञानं रजसो लोभ एव च ।
प्रमादमोहौ तमसो भवतोऽज्ञानमेव च ॥ १७

ஸத்த்வாத்ஸம்ஜாயதே ஞானம் ரஜஸோ லோப ஏவ ச I
ப்ரமாதமோஹௌ தமஸோ பவதோஅஞானமேவ ச II 17

ஸத்வ குணத்திலிருந்து ஞானமும், ரஜோ குணத்திலிருந்து ஆசையும், தமோ குணத்திலிருந்து அஜாக்கிரதை, விபரீத ஞானம், அறிவின்மை (அஞானம்) ஆகியனவும் உண்டாகின்றன.

ऊर्ध्वं गच्छन्ति सत्त्वस्था मध्ये तिष्ठन्ति राजसाः ।
जघन्यगुणवृत्तिस्था अधो गच्छन्ति तामसाः ॥ १८

ஊர்த்வம் கச்சந்தி ஸத்த்வஸ்தா மத்யே திஷ்டந்தி ராஜஸா: I
ஜகன்யகுணவ்ருத்திஸ்தா அதோ கச்சந்தி தாமஸா: II 18

ஸத்வகுணமுடையவர் மேல் உலகையும், ரஜோகுணமுடையவர் மானிட உலகையும், தமோ குணமுடையவர் கீழுலகையுமடைகிருர்கள்.

[ஸ்ரீதரர் :— ஸத்வகுணம் வளர்ச்சியடைந்தபோது மரணமடைந்தவர்கள் மேலும் மேலும் மகிழ்ச்சி தரும் ஸத்ய லோகம் வரையுள்ள மேல் உலகங்களை அவரவர் ஸத்வகுண வளர்ச்சிக்கேற்ப அடைவார்கள். ரஜோ குணம் வளர்ச்சியுற்றவர்கள் மானிட உலகில் மறுபடி மறுபடி பிறப்பார்கள். தமோகுணம் விருத்தியடைந்தவர்கள் மேலும் மேலும் நரகத்தை அடைவார்கள்.

ஸ்ரீ சங்கரர் :— தமோகுணம் வளர்ச்சி யடைந்தவர்கள், விலங்கினம் பக்ஷிகள் முதலியவைகளாகப் பிறப்பார்கள்.

ஸ்ரீராமானுஜர்:— ஸத்வகுணம் வளர்ந்தவர்கள் படிப்படியாகப் பிறவிக் கடலிலிருந்து விடுபட்டு மோக்ஷமடைகிருர்கள். ரஜோகுணம் வளர்ச்சியடைந்தவர்கள் அக்

குணத்திற்குப் பயனுன ஸ்வர்க்கத்தை அடையும் பொருட்டு கர்மங்களைச்செய்து, ஸ்வர்க்கத்தை யடைவதும், மறுபடி பூவுலகில் பிறப்பதுமாக இருக்கிருர்கள். தமோ குணம் முற்றியவர், முதலில் தாழ்ந்த இனங்களிலும் பிறகு முறையே விலங்கினங்களாகவும், பிறகு புழுக்களாகவும், பின்னர், மரம், கொடி, புல், கல், மண் முதலியனவாகவும் பிறக்கின்றனர்.]

नान्यं गुणेभ्यः कर्तारं यदा द्रष्टानुपश्यति ।
गुणेभ्यश्च परं वेत्ति मद्भावं सोऽधिगच्छति ॥ १९

நான்யம் குணேப்ய: கர்தாரம் யதா த்ரஷ்டானுபச்யதி ।
குணேப்யஸ்ச பரம் வேத்தி மத்பாவம் ஸோஅதிகச்சதி ॥ 19

விவேகி, புத்தி முதலியவைகளாகப் பரிணமித்திருக்கும் குணங்களைப் பார்க்கிலும், வேருெருவனைக் கர்த்தாவாக எப்போது அறிகிறதில்லையோ, குணங்களைப் பார்க்கிலும் வேருனவனுக ஆன்மாவை அறிகிருனே, அப்போது என் ஸ்வருபத்தை யடைகிருன்.

[ஸ்ரீதரர் :— குணங்களின் செய்கைக்குத் தான் காரணமுமல்ல, கர்த்தாவுமல்ல, குணங்களே கர்த்தா, தான் (ஜீவன்) சாக்ஷியாக மாத்திரமிருப்பவன், குணங்களைக் காட்டிலும் வேருனவன் என அறிபவன் ப்ரஹ்மமாகிருன்.

ஸ்ரீ சங்கரர் :— எல்லாச் செயல்களுக்கும் கர்த்தா குணங்களேயன்றி ஆன்மாவல்ல என அறிகிறவன் வாஸுதேவனின் தன்மையை யடைகிருன். அதாவது எல்லாம் வாஸுதேவனெனப் பார்க்கிறவனுகி வாஸுதேவமயமாக ஆகிருன்.

ஸ்ரீ ராமானுஜர் :— ஸத்வ குணமுடைய அறிவாளி, சுத்தனுன ஆன்மாவுக்கு, ஆரம்பமற்ற கர்மத்தொடர்பினுலுண்டான குணங்களால் செயல் புரியும் தன்மை

யுண்டாகியிருக்கிறது. இந்தக் குண ஸம்பந்தமே கட்டுதலை ஏற்படுத்துகிறது. இந்தக் கட்டை விலக்கிக்கொண்ட சுத்தாத்மா கர்த்தாவல்ல, அவன் முழுமையான ஞான ஸ்வரூபி என எவன் தன்னை அறிகிருனே அவன் என் தன்மையான துயரமற்ற நிலையை யடைகிருன்.

ஸ்ரீமத்வர் :— குணங்கள் பரிணாமிகர்த்தாவென்றும், ஈச்வரன் ஸ்வதந்த்ரகர்த்தாவே யன்றி பரிணாமிகர்த்தா வல்லவென்றும் அறிகின்றவன் என்னை அடைகின்ருன். (பரிணாமி கர்த்தாவுக்கு உதாரணம், நகைகளைச்செய்ய உதவும் தங்கம். அந்தத் தங்கத்தைக்கொண்டு நகைகளைச் செய்யும் தட்டான் ஸ்வதந்த்ரகர்த்தா.)

ஸ்ரீ ராகவேந்த்ரர்:— எப்போது ஜீவன், குணங்களைக் காட்டிலும் வேருன ஈச்வரனைக் கர்த்தாவாகப் பார்க்கிருனே, எவன் குணங்களைக் காட்டிலும் ஸ்வதந்திரனுன பரமாத்மாவை அறிகிருனே, அவன் என்னிடத்திலிருக்கும் தன்மையை யடைகிருன்.

गुणानेतानतीत्य त्रीन्देही देहसमुद्भवान् ।
जन्ममृत्युजरादुःखैर्विमुक्तोऽमृतमश्नुते ॥ २०

குணானேதானதீத்ய த்ரீன்தேஹீ தேஹஸமுத்பவான் ।
ஜன்மம்ருத்யுஜராது:கைர்விமுக்தோஅம்ருதமச்னுதே ॥ 20

உடலையுடைய ஆன்மா, உடலாலுண்டாக்கப்பட்ட இந்த முக்குணங்களைத்தாண்டி, பிறப்பு, இறப்பு, மூப்பு, துயரமிவைகளினுல் விடப்பட்டவனுக ப்ரஹ்மானந்தத்தை யடைகிருன்.

[अमृतम् (அம்ருதம்)=(1) என் உருவமான இருப்பை —ஸ்ரீ சங்கரர். (2) ஆத்மானுபவத்தை — ஸ்ரீ ராமானுஜர் (3) பரப்ஹ்மத்தை—ஸ்ரீ ராகவேந்த்ரர்.]

अर्जुन उवाच -

कैर्लिङ्गैस्त्रीन्गुणानेतानतीतो भवति प्रभो ।
किमाचारः कथं चैतांस्त्रीन्गुणानतिवर्तते ॥ २१

அர்ஜுன உவாச -

கைர்லிங்கைஸ்த்ரீன்குணனேதாநதீதோ பவதி ப்ரபோ ।
கிமாசார: கதம் சைதாம்ஸ்த்ரீன்குணனதிவர்ததே ॥ 21

அர்ஜுனன் சொல்வது —

ஓ! பிரபுவே! இந்த மூன்று குணங்களை அதிக்ரமித்தவன் (தாண்டியவன்) எந்த அடையாளங்களுடனிருப்பான்? அவன் எவ்வித ஆசாரம் (நடத்தை, ஒழுக்கம்) உடையவன்? எப்படி அவன் முக்குணங்களையும் மிஞ்சுகிருன்?

श्रीभगवानुवाच -

प्रकाशं च प्रवृत्तिं च मोहमेव च पाण्डव ।
न द्वेष्टि संप्रवृत्तानि न निवृत्तानि काङ्क्षति ॥ २२

ஸ்ரீபகவானுவாச -

ப்ரகாசம் ச ப்ரவ்ருத்திம் ச மோஹமேவ ச பாண்டவ ।
ந த்வேஷ்டி ஸம்ப்ரவ்ருத்தானி ந நிவ்ருத்தானி காங்க்ஷதி ॥

उदासीनवदासीनो गुणैर्यो न विचाल्यते ।
गुणा वर्तन्त इत्येव योऽवतिष्ठति नेङ्गते ॥ २३

உதாஸீனவதாஸீனோ குணைர்யோ ந விசால்யதே ।
குண வர்தந்த இத்யேவ யோஅவதிஷ்டதி நேங்கதே ॥ 23

समदुःखसुखः स्वस्थः समलोष्टाश्मकाञ्चनः ।
तुल्यप्रियाप्रियो धीरस्तुल्यनिन्दात्मसंस्तुतिः ॥ २४

ஸமது:கஸுக: ஸ்வஸ்த: ஸமலோஷ்டாச்மகாஞ்சன: I
துல்யப்ரியாப்ரியோ தீரஸ்துல்யநிந்தாத்மஸம்ஸ்துதி: II 24

मानापमानयोस्तुल्यस्तुल्यो मित्रारिपक्षयोः ।
सर्वारम्भपरित्यागी गुणातीतः स उच्यते ॥ २५

மாஞுபமானயோஸ்துல்யஸ்துல்யோ மித்ராரிபக்ஷயோ: I
ஸர்வாரம்பபரித்யாகீ குணுதீத: ஸ உச்யதே II 25

ஸ்ரீ கிருஷ்ணபகவான் சொல்கிருர் —

ஓ! பாண்டுவின் புதல்வனே ! எவன் இயற்கையாக உண்டான ஸத்வகுண கார்யங்களான ஒளி முதலியன வைகளையும், ரஜோகுண கார்யங்களான ஈடுபாடு முதலியவைகளையும், தமோ குண கார்யங்களான மோஹம் முதலியவைகளையும் வெறுக்கிறதில்லையோ நீங்கிப்போன அவைகளை மறுபடி வேண்டுகிறதில்லையோ, எவன் சாக்ஷியைப் போலிருந்துகொண்டு குணங்களின் செயல்களான, ஸுகம் முதலியவற்ருல் சலித்துக்கொள்வ தில்லையோ, குணங்கள் அவைகளின் செயல்களில் தாமே ஈடுபடுகின்றன என எவன் தெரிந்திருக்கிருனே, எவன் ஸ்வரூப நிஷ்டையிலிருந்து அசைவதில்லையோ, இன்ப துன்பங்களில் ஒரே நிலையிலும், (ஸமமாகவும்), ஸ்வரூப நிஷ்டையிலே இருக்கிறவனுகவும், மண் கட்டி, கல், தங்கம் இவைகளை ஒரேவிதமாய் (ஸமமாக) நினைக்கிற வனுகவும், விரும்பியவை விரும்பாதவைகளில் ஸமமாக வும், தைர்யமுள்ளவனுயும், தன்னை நிந்தனை செய்தாலும், புகழ்ந்தாலும் அவற்றில் ஸமமான புத்தியுடனும், மானம் அவமானங்களில் ஸமமாகவும், தன் எதிரி நண்பன் ஆகியவரிடமும் ஒரே நிலையில் பழகுபவனுகவும் எல்லா வித முயற்சிகளையும் ஈடுபாடுகளையும் விட்டவனுகவும்,

எவன் இருக்கிருனே, அவன் குணங்களுக்கு அப்பாற் பட்டவனென்று சொல்லப்படுகிருன்.

22. न द्वेष्टि (ந த்வேஷ்டி) = த்வேஷிக்கிறதில்லை என்ருல் தமோ குண கார்யமான மோஹத்திஞல் மோஹ மடைந்தேனென்றும், அறிவின்மையால் அவிவேக மடைந்தேனெனவும், ரஜோ குண கார்யமான கர்ம ப்ரவ்ருத்தியால் ஸ்வரூப நிஷ்டைக்கு இடராகும்படி கர்மங்களைச்செய்து கொண்டிருக்கிறேனெனவும், ஸத்வ குணகார்யமாகிய ப்ரகாசம் முதலிய ஸ்வரூப நிஷ்டைக்கு இடையூராக விஷய ஸுகத்தில் பற்றுண்டாகிறபடியால் அதுவும் கட்டின் உருவாகவுள்ளதென்றும், எண்ணி அவைகளைத் துவேஷிக்கிறதில்லையோ—ஸ்ரீ சங்கரர்.

23. उदासीनवत् आसीनः (உதாஸீனவத் ஆஸீன:)= (1) ஆன்மாவுக்குவேருன விஷயங்களில் பற்றுதலற்ற வனுகவும்—ஸ்ரீ ராமானுஜர். (2) விஷ்ணுவின் தொடர் புள்ள கர்மங்களைத் தவிர மற்றவைகளைப் பொருட் படுத்தாதவனுகவும் – ஸ்ரீ ராகவேந்த்ரர்.

नेंगते (நேங்கதே) = குணங்களின் கார்யத்தைத் தழுவி நடக்கிறதில்லையோ—ஸ்ரீ ராமானுஜர். (2) விஷ்ணு ஸம்பந்தமான கார்யங்களைச் செய்வதில் சலிக்கிற தில்லையோ—ஸ்ரீ ராகவேந்த்ரர்.)

24. तुल्यनिन्दात्मसंस्तुतिः (துல்யநிந்தாத்மஸம்ஸ்துதி:) =(1) நிந்தை (இழிவு படுத்தல்), புகழ்தல் இவை ஆன்மாவைச் சார்ந்ததல்ல, உடலைச் சேர்ந்தவை என அறிகிறவனுகவும், மற்றும் மானம் அவமானம் முதலியவைகளிலும் இப்பொருளையே கொள்ளத்தக்கது —ஸ்ரீ ராமானுஜர். (2) தன்னைத்தானே புகழ்ந்துகொள் வதை (ஆத்ம ஸ்துதியை) நிந்தைக்கு ஸமமாக எண்ணுகிறவனுக—ஸ்ரீ ராகவேந்த்ரர்.

25. सर्वारम्भपरित्यागी (ஸர்வாரம்பபரித்யாகீ) = (1) உணவு முதலிய அத்யாவச்யமானவைகளைத் தவிர மற்றவைகள் வேண்டுமென முயற்சிக்காதவன் —ஸ்ரீசங்கரர். (2) உடல் தொடர்புள்ள எல்லாக் கார்யங் களையும் விட்டவன்—ஸ்ரீ ராமானுஜர். (3) வைஷ்ணவ கர்மங்கள் தவிர பிற கர்மங்களை விட்டவன் —ஸ்ரீ ராகவேந்த்ரர்.]

मां च योऽव्यभिचारेण भक्तियोगेन सेवते ।
स गुणान्समतीत्यैतान्ब्रह्मभूयाय कल्पते ॥ २६

மாம் ச யோஅவ்யபிசாரேண பக்தியோகேன ஸேவதே 1
ஸ குணான்ஸமதீத்யைதான்ப்ரஹ்மபூயாய கல்பதே ll 26

எவன் பரமேச்வரனாகிய என்னையே சலிக்காத பக்தி யோகத்தினால் உபாஸிக்கிறானோ (ஸேவை செய் கிறானோ) அவன் இந்த மூன்று குணங்களையும் வென்று ப்ரஹ்மமாகிறதற்குத் தகுதியுடையவனாக ஆகிறான்.

[ஸ்ரீ சங்கரர் :— எந்தத் துறவி அல்லது கர்மயோகி எல்லா பூதங்களின் ஹ்ருதயத்தில் வாழும் ஈச்வரனும் நாராயணனுமான என்னையே, ஒரு போதும் வேறு விஷயங்களில் ஈடுபடாது, பஜிக்கின்ற யோகத்தால், அதாவது விவேக விஞ்ஞானமாகிய யோகத்தினால் (ஐக்யானு ஸந்தத்தினால்) உபாஸிக்கிறானோ அவன் பகவத் அனுக்ரஹத்திற்குத் தகுதியடைந்து குணங்களை வென்று ப்ரஹ்ம பவனமாகிய மோக்ஷத்தை அடைகிறான்.

ஸ்ரீ ராமானுஜர் :— விவேகானுஸந்தானம் மாத்திரம் குணங்களைத்தாண்டப் போதாது. ப்ரக்ருதி வாஸனை வெகு காலமாகத் தொடர்ந்து வந்து கொண்டிருப்பதால் அதைத் தாண்டுகிறது மிகவும் அரிது. ஆகையால் பக்தவாத்ஸல்யம், க்ருபை முதலிய குணங்களுடன் கூடிய என்னை எவன் சரணடைகிறானோ அவன் குணங்களை வென்று என்னைப்போல ஆகத் தகுதியடைகிறான்.

ஸ்ரீமத்வர், ஸ்ரீ ராகவேந்த்ரர்:– 'ப்ரஹ்மபூதாயகல்பதே' என்றால் சித்ப்ரக்ருதியைப்போல் மாற தகுதியாகிறான். அதாவது சித்ப்ரக்ருதி எப்படி விஷ்ணுவுக்குப் பிரியமானவளோ அப்படி இந்த பக்தனும் பிரியமானவனாகிறான் அல்லது சித்பரக்ருதியை யடைகிறேன்.]

ब्रह्मणो हि प्रतिष्ठाहममृतस्याऽव्ययस्य च ।
शाश्वतस्य च धर्मस्य सुखस्यैकान्तिकस्य च ॥ २७

ப்ரஹ்மணோஹி ப்ரதிஷ்டாஹமம்ருதஸ்யாவ்யயஸ்ய ச ।
சாச்வதஸ்ய ச தர்மஸ்ய ஸுகஸ்யைகாந்திகஸ்ய ச ॥ 27

குணங்களை மிஞ்ச என்னை உபாஸிக்கவேண்டும். ஏனெனில் நான் பரமாத்மாவுக்குப் பிரதிபிம்பம். அழிவற்ற மோக்ஷத்திற்கும் சாச்வதமான (அழியாத) தர்மத்திறகும், எல்லையற்ற இன்பத்திற்கும் (ஸுகத்திற்கும்) இருப்பிடம்.

[சங்கரர் :— விகாரமற்ற (வேறுபடாத), அழிவற்ற, நித்யமான (நிலையான) தர்மமான ஞானயோகத்தினாலடையத்தக்க, ஆனந்த ஸ்ரூபமான, மாறாத ஸ்வபாவமுள்ள, பரப்ரஹ்மத்தின் உருவம் நானே. எந்த சக்தியால் பக்தனுக்கு அனுக்ரஹம் செய்யும்பொருட்டு ப்ரஹ்மம் ஈடுபட்டிருக்கிறதோ, அந்த சக்தியே ப்ரஹ்மம். அந்த ப்ரஹ்மமே நான். சக்தியையுடையவனுக்கும் சக்திக்கும் வேறுபாடில்லை. ஆதலால் இப்படிச் சொல்லப்பட்டது.

ஸ்ரீதரர் :— என்னை உபாஸிப்பவன் எப்படி ப்ரஹ்மமாக ஆவானென்றால் – ஒளிமயமான கூட்டம் ஸூர்ய மண்டலமாக எப்படி காணப்படுகிறதோ, அதுபோல் நான் ப்ரஹ்மத்திற்கு பிரதிமையாக (உருவமாக) இருக்கிறேன். ப்ரஹ்மமே நான் எனக் கருத்து. (ஸத், சித், ஆனந்தம் ஆகியன சேர்ந்து ஓர் உருவாக அவதரித்துள்ளேன்.)

ஸ்ரீ ராமானுஜர்:— விகாரமற்ற, அழிவற்ற, பரப்ரஹ்மத்திற்கு நான் உருவமாக இருக்கிறேன். பூர்ணமான ஐச்வர்யத்திற்கு, ஞானியாலடையத்தகுந்த இன்பத்திற்கும், புகலிடமாயிருக்கிறேன் (தொடர்புள்ளவன்). குணங்களை மிஞ்சவும், அழியாத ஐச்வர்யத்திற்கும், பகவானை அடையவும், ப்ரபத்தி என்கிற பகவானிடம் சரணுகதியே முக்ய காரணமாகச் சொல்லப்படிருக்கிறது. அதுதான் ப்ரஹ்மத்தைப் போலாவதற்கு முக்ய வழி.

ஸ்ரீ ராகவேந்த்ரர்:— குணங்களுக்கு அப்பாற்பட்டவன் என்னை அடைகிருனெனச் சொல்லவேண்டியது. லக்ஷ்மியை அடைவதை ஏன் சொல்லவேண்டும் என்ருல், லக்ஷ்மி எப்போதும் என்னிடத்திலிருப்பதால், அவளை யடைந்தால் என்னை யடைந்ததாகவே ஆகிறதென இதனுல் சொல்லப்பட்டது. ச்லோகத்தின் பொதுப் பொருள் = நான் சித்ப்ரக்ருதியான லக்ஷ்மிக்கும், முக்தர்களின் கூட்டங்களுக்கும், அழிவற்ற வலிமையை யுண்டாக்கும் தர்மத்திற்கும் மோக்ஷ ஸுகத்திற்கும் ஆதாரமாக இருக்கிறேன்.]

குணத்ரய விபாகமெனும்
பதினுன்காவது அத்யாயம்
முற்றிற்று.

பதினைந்தாவது அத்யாயம்

புருஷோத்தம ப்ராப்தியோகம்

श्रीभगवानुवाच -

ऊर्ध्वमूलमधःशाखमश्वत्थं प्राहुरव्ययम् ।
छन्दांसि यस्य पर्णानि यस्तं वेद स वेदवित् ॥ १

ஸ்ரீ பகவானுவாச-

ஊர்த்வமூலமதசாகமச்வத்தம் ப்ராஹுரவ்யயம் ।
சந்தாம்ஸி யஸ்ய பர்ணனி யஸ்தம் வேத ஸ வேதவித் ॥ 1

ஸ்ரீகிருஷ்ணபகவான் அர்ஜுனனை நோக்கிச் சொல்வது—

மேலான புருஷோத்தமனுகிய நாராயணனை வேராகவும், கீழ்ப்பட்ட பிரும்மா முதலியோரை கிளைகளாகவுமுள்ள, ஸ்திரமில்லாத (திடமற்ற) ஸம்ஸாரமாகிற மரத்தை அழிவற்றதாக வேதங்கள் சொல்கின்றன. வேதங்கள் எந்த மரத்திற்கு இலைகளோ அந்த மரத்தை எவன் அறிகிருனே அவன் வேதத்தின் பொருளை அறிந்தவன்.

[ஸ்ரீதரர்:— 14-ஆவது அத்யாயம் 27-ஆவது ச்லோகத்தினுல் ஏகாந்த பக்தியினுல் ஈச்வரனைப் பஜிப்பவன் ஞானத்தினுல் ப்ரஹ்மத்தின் தன்மையை யடைகிறதாகச் சொல்லப்பட்டது. அந்த பக்தி ஞானம் உலக வாழ்க்கையில் வைராக்யம் (வெறுப்பு) அடையாதவனுக்கு ஏற்படாது. அந்த வைராக்யத்தை அர்ஜுனனுக்கு உபதேசிக்கும் பொருட்டு 2½ ச்லோகங்களில் உலக வாழ்க்கையான ஸம்ஸாரத்தை மரமாக வர்ணித்து பகவான் சொல்கிருர்.

अश्वत्थम् (அச்வத்தம்) = நாளைக்கு இருக்காதது. வேதத்தில் ஸம்ஸாரம் அச்வத்தமரமாக (அரசமரமாக)

வர்ணிக்கப்பட்டிருப்பதால், அப்படியே சொல்லி வேதங்கள் கூறுவதாகப் பொருள் கூறப்படுகிறது.

ஸ்ரீ சங்கரர் :— கர்மானுஷ்டானமுள்ளவர்களுக்கும், ஞானிகளுக்கும் அவரவர்களின் அனுஷ்டானத்திஞலுண்டாகும் பலன் தன் வசமானது என்பதையும் பக்தி யோகத்திஞல் தன்னைப் பஜிக்கிறவன் தன் கிருபையால் படிப்படியாக ப்ரஹ்மஞானத்தை யடைந்து, குணங்களை மிஞ்சி, மோக்ஷத்தை யடைகிருனென முன் அத்யாயத்தில் பகவான் சொன்ஞர். இப்போது அர்ஜுனன் கேட்காமலேயே ஸம்ஸாரத்தில் விரக்தி (வெறுப்பு) அடைந்தவனே ப்ரஹ்மஞானத்தை யடையத்தகுந்தவஞதலால், அந்த விரக்தி ஏற்படும் பொருட்டு அந்த ஸம்ஸாரத்தின் உருவை மரத்திற்கு ஒப்பிட்டு பகவான் விவரித்துக் கூறுகின்ருர்.

ஸ்ரீ ராமானுஜர் :— 13ஆவது அத்யாயத்தில் ப்ரக்ருதி, புருஷன் இவர்களின் ஸ்வரூபத்தை விசாரித்து, பரிசுத்தனும் பரிபூர்ண ஞாஞகாரனுமான ஜீவனுக்கு ப்ரக்ருதி ஸம்பந்தமான மூன்று குணங்களின் நீண்ட காலத் தொடர்பிஞலுண்டான தேவர், மனிதன் முதலிய உடலுருவாகவுள்ள ப்ரக்ருதியின் தொடர்பு ஆரம்பமற்றதெனச் சொல்லப்பட்டது. 14ஆவது அத்யாயத்தில் அந்த ஜீவனுக்குக் கார்ய காரண உருவாகவுண்டான ப்ரக்ருதியின் தொடர்பு குணங்களின் தொடர்பிஞல் பகவாஞல் செய்யப்பட்டது என்பதும், அந்த குணத்தொடர்பின் விவரமும், அந்த குணங்களினின்று விடுபடுவதால் ஆன்மாவின் உண்மை உருவையடையப் பகவானிடம் பக்தி முக்யமானதெனவும் சொல்லப்பட்டன. இந்த அத்யாயத்தில் அழிவுள்ள (க்ஷரன்) கட்டுண்ட ஜீவன் (ஸம்ஸாரி) அக்ஷரனெனும் (அழிவற்ற) விடுபட்ட ஜீவன் இவர்கள் பகவானின் விபூதி ரூபங்கள் என்பதும், இவ்விருவர்களைக் காட்டிலும் வேருன பகவான் எவ்விதக் குறைபாடில்லாதவராயும் முழுமையான கல்யாண குணங்களையுடையவரெனவும், எல்லாவற்றிற்கும் மேம்பட்டவரெனவும் சொல்லப்படுகிறது.

இந்த முதல் ச்லோகத்தில் அஸங்கமெனும் கத்தியினுல் வெட்டப்பட்டு கட்டுதலைப் போக்கடித்துக் கொண்ட அக்ஷரனெனும் விபூதியைச் சொல்லும்பொருட்டு, வெட்டிக்கொள்ள வேண்டியதும், ப்ரக்ருதித் தொடர்புகொண்டதும், கட்டுண்டதுமான க்ஷரனுக்கு (அழியக்கூடியதற்கு) தொடர்புள்ள ஸம்ஸாரத்தை அச்வத்த (அரசு) மரத்தின் உருவாக வர்ணிக்கிருர்.

ஸ்ரீமத்வர்:— இந்த அத்யாயத்தில் ஸம்ஸாரத்தின் உருவும் அதிலிருந்து விடுபடுவதற்கான வழிகளும் அவைகளின் அறிவும் சொல்லப்படுகின்றன.

ऊर्ध्वमूलम् (ஊர்த்வமூலம்)=(1) காலத்திஞல் ஸூக்ஷ்மமாயும் அல்லது காலத்தைக் காட்டிலும் ஸூக்ஷ்மமாயும், நித்யமாயும் (அழிவற்றதாயும்), எல்லாவற்றிற்கும் காரணமாயும், அவ்யக்தமெனும் மாயையை சக்தியாகவுடையதுமாகவுள்ள ப்ரஹ்மத்தை மூலமாக (வேராக) உள்ள ஸம்ஸார மரம்—ஸ்ரீ சங்கரர். (2) மேல் ஏழு உலகங்களில் மேலான ஸத்யலோகத்திலுள்ள நான்முக பிரும்மாவினுல் இந்த உலகமெல்லாம் படைக்கப்படுவதால், நான்முகனுன பிரும்மா, மேலாகவுள்ள காரணமாக இருக்கிருர் —ஸ்ரீ ராமானுஜர். (3) ஸர்வோத்தமனுன விஷ்ணுவை மூலமாகவுடையது—ஸ்ரீமத்வர். (4) மேலானவர்களான விஷ்ணுவையும், சித், அசித் ப்ரக்ருதிகளையும் மூல காரணமாக உடையது—ஸ்ரீ ராகவேந்த்ரர்.

अधःशाखं (அத:சாகம்) = (1) மஹத்தத்வம், அஹங்காரதத்வம், பஞ்சபூதங்கள் (ஐந்து பூதங்கள்), சப்தம் முதலிய விஷயங்கள் இவைகளைக் கிளைகளாகவுடையது —ஸ்ரீ சங்கரர். (2) கீழாகவுள்ள பூவுலகிலுள்ள மனிதன், விலங்கு, பக்ஷி, பூச்சி, புழு, ஜடப்பொருள் ஆகிய யாவும் கீழாகவுள்ள கிளைகள்—ஸ்ரீராமானுஜர். (3) விஷ்ணுவுக்குக் கீழ்ப்பட்ட எல்லா உலகங்களையும் கிளைகளாக உடையது —ஸ்ரீமத்வர்.

अश्वत्थं (அச்வத்தம்)=(1) அடுத்த நிமிஷத்தில் இருக்காது என்ற பொருளைக் கொடுப்பதுடன், ச்ருதி வாக்யங்களினாலும் புராண வசனங்களினாலும் ஸம்ஸாரமெனும் மரத்திற்கும் அச்வத்தமெனும் அரச மரத்திற்கும் பல ஒற்றுமைகளிருப்பதால் அச்வத்தமெனச் சொல்லப்பட்டது—ஸ்ரீ சங்கரர். (2) ஒரேவிதமாக நாளைக்கு இருக்காத—ஸ்ரீமத்வர். (3) ஒரே உருவமாக இருப்பதில்லை, அல்லது மாறி மாறி இருப்பதால் (சஞ்சலமாக இருப்பதால்) அச்வத்தமென்ற பெயரையுடையது —ஸ்ரீ ராகவேந்த்ரர்.

अव्ययं (அவ்யயம்) = (1) நாசமற்றது. மாயை ஆரம்பமில்லாதது. ஆகையால் மாயாமயமான ஸம்ஸாரமும் ஆதியும் அந்தமுமற்ற தொடர்ச்சியானது-ஸ்ரீ சங்கரர். (2) ஞானோதய மேற்படும் வரை ஸம்ஸாரம் தொடர்ந்திருப்பதால் நாசமற்றது—ஸ்ரீ ராமானுஜர். (3) ஒவ்வொரு படைப்பின்போதும் உண்டாகிக்கொண்டே இருப்பதால் அழிவற்றதாகச் சொல்லப்பட்டது. ஆற்றில் செல்லும் தண்ணீரின் ஓடுதல்போல் நாசமற்றது—ஸ்ரீ மத்வர். (4) ஆற்றுவெள்ளம்போல் நித்யமாகையாலும், முன் கல்பத்திலிருந்தபடியே இப்போதுமிருப்பதாலும், அழிவற்றது.

छंदांसि यस्य पर्णानि (சந்தாம்ஸி யஸ்ய பர்ணானி) = (1) வேதங்கள் எந்த மரத்திற்கு இலைகளோ — இலைகள் மரங்களை வளரச் செய்வதுபோல் காம்ய கர்மங்களைச் சொல்லும் வேதங்கள் ஸம்ஸாரமாகிய மரத்தை வளரச் செய்கின்ற இலைகள்—ஸ்ரீ ராமானுஜர். (2) வேதங்கள் இலைகள் - இலைகளுண்டான பின்னரே காய் முதலியன உண்டாகின்றன. அதுபோல் வேதங்களால் புண்ய பாபப்பயன்கள் உண்டாகின்றன—ஸ்ரீமத்வர். (3) வேதங்களையும் வேதாபிமானி தேவதைகளையும் இலைகளாக வுடையது--ஸ்ரீ ராகவேந்த்ரர்.]

अधश्चोर्ध्वं प्रसृतास्तस्य शाखा गुणप्रवृद्धा विषयप्रवालाः ।
अधश्च मूलान्यनुसंततानि कर्मानुबन्धीनि मनुष्यलोके ॥ २

அதஸ்சோர்த்வம் ப்ரஸ்ருதாஸ்தஸ்ய சாகா
குணப்ருவ்ருத்தா விஷயப்ரவாலா : 1
அதஸ்சமூலான்யனுஸம்ததானி
கர்மானுபந்தீனி மனுஷ்யலோகே ll 2

ஸத்வம் முதலிய குணங்களினுல் வளர்ச்சியுற்றதும், சப்தம் முதலிய விஷயங்களைத் துளிர்களாக உடையதுமான அந்த ஸம்ஸாரமெனும் மரத்தின் கிளைகள், கீழுலகங்களிலும் மேலுலகங்களிலும் பரவியிருக்கின்றன. கீழுலுகங்களிலும் மேலுலகங்களிலும் அனுபவித்தபின் மீதியாகவுள்ள கர்மசேஷமெனும் பூவுலகில் தம்மிஷ்டப்படி கர்மங்களை நடத்துகின்றதுமான வேர்கள் மேலும் கீழும் பரவியுள்ளன.

[ஸ்ரீதரர் :— நான்முக ப்ரம்மாவும், அவருக்குக் கீழ்ப்பட்ட எல்லா ஜீவன்களும், ஸம்ஸாரமெனும் மரத்தின் கிளைகளாகச் சொல்லப்பட்டார்கள். இவர்களில் பாபம் செய்தவர்கள் கீழ் உலகில் (பூமியில்) விலங்கு, பக்ஷி போன்ற பிறவிகளை யடைந்து பரவியுள்ளனர். புண்யம் செய்தவர் மேலுலகில் தேவதைகள் போன்ற பிறவிகளை யடைந்து பரவியுள்ளனர். இப்படிக் கீழும் மேலும் பரவியுள்ளவர்கள்தான் இந்த ஸம்ஸார மரத்திற்கு மேலும் கீழுமுள்ள கிளைகள். இக் கிளைகள் ஸத்வம் முதலிய மூன்று குணங்களால் வளர்ச்சி யடைகின்றன அந்தக் கிளைகளுக்குச் சப்தம் போன்ற விஷயங்கள் துளிர்கள். இந்த மரத்தின் வேர்கள் கீழ் மேலுலகங்களில் பரவியுள்ளன. அவைகளில் முக்யமான ஆணி வேர் ஈச்வரன். பக்க வேர்கள் ஜீவன்கள், கீழ் மேலுலகங்களில் அனுபவித்ததுபோக மிச்சமான கர்ம வாஸனைதான். இந்தக் கர்ம வாஸனை தன் பற்றுதலோடு பூவுலகில் பிறவியை யுண்டாக்கி, தன் தன்மைக்குத் தக்கபடி கர்மங்களைச்

செய்விக்கிறது. பூவுலகம் தவிர பிற உலகங்களில் கர்மங்கள் செய்வது கிடையாது.

ஸ்ரீ சங்கரர் :— ஞான கர்மத்தின் பயன்கள்தான் விரிவடைந்துள்ள கிளைகள். இப்பயன்களில் சேர்ந்ததே உடல். அதுவும் கிளைதான். இந்த உடலினுல் வளர்ச்சி யடையும் புலன்களுக்குரியவைகளான விஷயங்கள் துளிர்கள். (மற்றவையெல்லாம் மேலேயுள்ள ஸ்ரீதரரின் பொருள் போலவே.)

ஸ்ரீ ராமானுஜர் :— ஸம்ஸார மரத்திற்கு மனிதன், விலங்கு, பறவை முதலியன கிளைகள், மனிதர்களால் செய்யப்பட்ட கர்மங்களால் மேலும் மேலும் உண்டா கின்றதும், கீழே வியாபித்துள்ளதுமான மனிதன், விலங்கு, பக்ஷி முதலிய உருவங்களே. மற்றும் சில கிளைகள் மேலே வியாபித்துள்ள கிளைகள், தேவர், யக்ஷர், கந்தர்வர், கின்னரர் போன்ற உருவங்கள். இந்தக் கிளைகள் ஸத்வம் முதலிய குணங்களால் வளர்ச்சி யடைந்து, விஷயங்களைத் துளிர்களாக உடையவை. பிரம்மாவை வேராகவும், மனிதன், விலங்கு முதலியவைகளைக் கிளை களாகவும் கொண்ட ஸம்ஸார மரத்தின் வேர்கள் மேலுலகிலும் கீழுலகிலும் பரவியுள்ளன. புருஷனுக்குக் கட்டு ஏற்படுத்தும் கர்மங்கள்தான் வேர்கள். மனித உலகில் வியாபித்துள்ள வேர்கள் முன்னர் மனிதனுக இருக்கையில் செய்த கர்மங்களால் பின்னும் தனக்குண் டாகும் மானிட உருவம் முதலியனவே. மேலுலகிலுள்ள வேர்கள் முன்னர் மனிதனுக இருக்கும்போது செய்த கர்மங்களால் தனக்குண்டாகும் தேவ கந்தர்வ முதலிய உருவங்கள்.

ஸ்ரீமத்வர் :— கிளைகளாகிற பஞ்ச மஹா பூதங்கள் முந்திய காரண ப்ரக்ருதியில் ஸூக்ஷ்மமாயும், பிந்திய உடல் முதலிய கார்ய ப்ரக்ருதியில் ஸ்தூலமாயும் வியாபித் துள்ளன. பூதங்கள் தான் குணங்களினுல் வளர்ச்சி யடைந்துள்ளன. பார்த்தவுடன் ஸுகமாய் தோன்றுகிற

படியால் விஷயங்கள் துளிர்களாகச் சொல்லப்பட்டன. மேலான வேர் விஷ்ணு ரூபங்கள். கீழான வேர் விஷ்ணு வின் அவதாரம் முதலிய ரூபங்கள்.

ஸ்ரீ ராகவேந்த்ரர் :— இந்த ஜகத் (ஸம்ஸாரம்) மரத்திற்குக் கிளைகளின் இடத்தில் சித், அசித் உருவங்களான மஹத் முதலிய எட்டும் ஸத்வம் முதலிய குணங்களால் வளர்ச்சியுற்றும், ஸூக்ஷ்ம ரூபத்தினுல் அவ்யக்தத்திலும், ஸ்தூல ரூபத்தால் உடல் முதலியவற்றிலும் வியாபித்துள்ளன. தற்காலத்தில் ஸுகம் முதலியவற்றில் ஒற்றுமையுள்ளதால் சப்தம் போன்ற விஷயங்கள் துளிர்களாகச் சொல்லப்பட்டன. விஷ்ணு ரூபங்களும் சித், அசித் ப்ரக்ருதிகளும், ஸத்வாதி குணங்களும், ஜகத் (ஸம்ஸாரம்) மரத்தின் கீழ் பாகமான மனித உலகில் கர்மங்களுக்கேற்ப பலன்களைக் கொடுப்பவைகளாக எல்லா பதார்த்தங்களிலும் வியாபித்துள்ளன.]

न रूपमस्येह तथोपलभ्यते नान्तो न चादिर्न च संप्रतिष्ठा ।
अश्वत्थमेनं सुविरूढमूलमसङ्गशस्त्रेण दृढेन छित्त्वा ॥ ३

ந ரூபமஸ்யேஹ ததோபலப்யதே
நாந்தோ ந சாதிர்ன ச ஸம்ப்ரதிஷ்டா ।
அச்வத்தமேனம் ஸுவிரூடமூல-
மஸங்கசஸ்த்ரேண த்ருடேன சித்த்வா ॥ 3

ततः पदं तत्परिमार्गितव्यं यस्मिन्गता न निवर्तन्ति भूयः ।
तमेव चाद्यं पुरुषं प्रपद्ये यतः प्रवृत्तिः प्रसृता पुराणी ॥ ४

தத: பதம் தத்பரிமார்கிதவ்யம்
யஸ்மின்கதா ந நிவர்தந்தி பூய: ।
தமேவ சாத்யம் புருஷம் ப்ரபத்யே
யத: ப்ரவ்ருத்தி: ப்ரஸ்ருதா புராணீ ॥ 4

ஸம்ஸாரத்திலிருக்கும் மக்களால் இந்த ஸம்ஸார மரத்தின் முன்னர் சொல்லப்பட்ட விதமாகவுள்ள உருவ மானது அறியப்படுவதில்லை. ஆரம்பம், மையம், முடிவு அறியப்படுவதுமில்லை. கெட்டியான வேர்களையுடைய இந்த அரச மரத்தைத் திடமான வைராக்யம் (வெறுப்பு) எனும் ஆயுதத்தினுல் வெட்டி, அதன்பிறகு எந்தப் புருஷனிடமிருந்து நீண்ட காலமாகத் தொடர்ந்து வந்துள்ள ஸம்ஸாரத்தில் ஈடுபாடு பரவியுள்ளதோ அந்தப் புருஷனையே சரணமடைகிறேனென ஏகாந்த பக்தியுடன் எந்த மேலான இடத்தை அடைந்தவர்கள், மறுபடி ஸம்ஸாரமெனும் பிறவிக்கடலுக்கு வருகிறதில்லையோ அந்த மேலான இடத்தைத் தேடவேண்டியது.

[असङ्गशस्त्रेण (அஸங்கசஸ்த்ரேண) = (1) மகன், நண்பன், பணம் முதலிய பொருள்களிலுள்ள ஆசையை விடுவது வைராக்யம் எனப்படும். இந்த வைராக்யமெனும் ஆயுதத்தினுல்—ஸ்ரீ சங்கரர். (2) என்னுடையது (மமகாரம்) நான் (அஹங்காரம்) என்றவைகளை விடுதலெனும் ஆயுதத்தால்—ஸ்ரீதரர். (3) ஸங்கத்தை (சேர்க்கையை) விடுவதுடன் கூடிய ஞானமெனும் ஆயுதத்தால் —ஸ்ரீமத்வர்.

छित्वा (சித்வா) = (1) ஸம்ஸாரமெனும் மரத்தை விதையுடனழித்து—ஸ்ரீ சங்கரர் (2) ஸம்ஸாரத்தை அழித்து—ஸ்ரீமத்வர்.]

निर्मानमोहा जितसङ्गदोषा अध्यात्मनित्या विनिवृत्तकामाः ।
द्वन्द्वैर्विमुक्ताः सुखदुःखसंज्ञैर्गच्छन्त्यमूढाः पदमव्ययं तत् ॥ ५

நிர்மானமோஹா ஜிதஸங்கதோஷா
அத்யாத்மநித்யா வினிவ்ருத்தகாமா: 1
த்வந்த்வைர்விமுக்தா: ஸுகதுக்கஸம்ஞைர்-
கச்சந்த்யமுடா: பதமவ்யயம் தத் 11 5

அஹங்காரம் (நான் என்ற எண்ணம்), கெட்ட ஆசை இவைகளற்றவும், மகன், நண்பன் என்ற ஆசையான கெடுதியன்றியும், ப்ரஹ்மஞான நிஷ்டையில் உள்ளவும், ஆசையிலிருந்து விடுபட்டவும், இன்பம் துன்பமென்ற இருமைகளிலிருந்து விடுபட்டவும், அவித்யையெனும் அறியாமையைப் போக்கிக் கொண்டவர்கள் முன் சொன்ன அழிவற்ற மேலான இடத்தை அடைகிறார்கள்.

[ஸ்ரீ ரா மா னு ஜ ர் :— என்னைச் சரண் அடைந்து, அனுத்மாவான உடல் முதலியவற்றில் ஆத்மாபிமான மான மோஹத்தை (ஏமாற்றத்தை) விட்டவர்களாக, குண மயமான பொருள்களில் போக சக்தியென்ற தீமையை ஜயித்தவர்களாயும், ஆத்மஞானபரர்களாயும், ஆன்மா வைத் தவிர பிற வஸ்துக்களில் ஆசையை விட்டவர்களா யும், ஆன்மா, ஆன்மாவில்லாதது என்ற விவேக ஸ்வரூப ஞானத்தை யுடையவர்களாயுமிருக்கிறவர்கள் முழுமை யான ஞான உருவான உருவையடைகிறார்கள்.]

न तद्भासयते सूर्यो न शशाङ्को न पावकः ।
यद्गत्वा न निवर्तन्ते तद्धाम परमं मम ॥ ६

ந தத்பாஸயதே ஸூர்யோ ந சசாங்கோ ந பாவக: ।
யத்கத்வா ந நிவர்தந்தே தத்தாம பரமம் மம ॥ 6

எந்த மேலான இடத்தை யடைந்து மறுபடி திரும்புகிற தில்லையோ, அந்த இடத்தை ஸூர்யன், சந்த்ரன், அக்னி இவர்கள் பிரகாசிக்கச் செய்கிறதில்லை. அந்த இடம்தான் என்னுடைய மேலான ஸ்வரூபம்.

[குறிப்பு :— இந்த ச்லோகத்திற்கு ஒத்ததாக கடோபநிஷத்—2ஆவது அத்யாயம் வல்லி-5, வாக்யம், 15, முண்டகோப நிஷத்—2ஆவது அத்யாயம் கண்டம் 2, 16ஆவது வாக்யமும் காணப்படுகின்றன.

न तत्र सूर्यो भाति न चन्द्र तारकं नेमाविद्युतो भान्ति तोयमग्निः ।
तमेव भान्तमनुभाति सर्वं तस्य भासा सर्वं इदं विभाति । —

ப்ரஹ்மத்தை ஸூர்யன், சந்த்ரன் நக்ஷத்ரங்கள் மின்னல்கள் ஆகியவை ப்ரகாசமாகச் செய்யமுடியாது. இந்த அக்னி எப்படி ப்ரகாசமாகச் செய்யமுடியும்? தானுகப் பிரகாசித்துக் கொண்டிருக்கும் ப்ரஹ்மத்தைப் பற்றிக்கொண்டே எல்லாம் விளங்கிக் கொண்டிருக்கின்றன. இவை யாவும் அவருடைய காந்தியினுல் விளங்குகின்றன.]

ममैवांशो जीवलोके जीवभूतः सनातनः ।
मनःषष्ठानीन्द्रियाणि प्रकृतिस्थानि कर्षति ॥ ७

மமைவாம்சோ ஜீவலோகே ஜீவபூத: ஸநாதன: ।
மன:ஷஷ்டானீந்த்ரியாணி ப்ரக்ருதிஸ்தானி கர்ஷதி ॥ 7

என்னுடைய அம்சமாகவும், ஆரம்பமற்றதாகவும் இருக்கும் ஜீவன், மாயையிலடங்கியிருக்கிறதும், மனதை ஆருவதாகவுடையதுமான புலன்களை ஸம்ஸாரத்தில் அனுபவிப்பதற்காக (போகார்த்தமாக) இழுக்கிருன்.

[ஸ்ரீதரர் :— கட்டுகளை நீக்கிக்கொள்ளாதவர்கள் மீதமுள்ள கர்மங்களுடன், ப்ரளய காலத்திலும், தூங்கும் காலத்திலும் ப்ரக்ருதியோடு கூடின ஈச்வரனிடத்தில் (ஸகுண ப்ரஹ்மத்தினிடத்தில்) அடங்கியிருந்து, பிறகு படைக்கும் காலத்தில் மறுபிறவி யடைகிருர்கள். கர்ம பந்தத்தை அழித்து சுத்த ப்ரஹ்மத்தை யடைந்தவர்கள் மறுபடி பிறவியை யடைகிறதில்லை.

ஸ்ரீ சங்கரர் :— பரமாத்மாவான, என் அம்சமான ஜீவன் என்னுடைய ஒரு பாகம். என்னையன்றி அவன் வேறல்ல. ஆனுல் அவித்யை (அறியாமை) என்ற காரணத்தால் ஸ்ம்ஸாரத்தில் தான் செய்பவன், அனுபவிப்பவன் என வெகுகாலமாகப் பிரஸித்தி யடைந்துள்ளான். ஒன்ருன ஸூர்யன் ஜலத்தில் காணப்பட்டால், அது ஆகாயத்தில் காணப்படுகின்ற ஸூர்யனின் பிரதிபிம்பமேயன்றி வேருனதல்ல. ஜலமெனும் உபாதியினுல் வேருகத்

தோன்றுகிறது. எந்த ஜலத்தில் காணப்படுகிறதோ அந்த ஜலத்தை நீக்கிவிட்டுப் பார்த்தால், ஆகாயத்திலுள்ள ஸூர்யனைத்தவிர மற்றொரு ஸூர்யன் காணப்படுவதில்லை. அதேபோல் ஒரு குடத்திலுள்ள ஆகாசமும் வெளியிலேயுள்ள ஆகாசமும் ஒன்றேயெனினும், குடமெனு முபாதியினால் குடத்திலுள்ள ஆகாசம் வேருகத் தோன்றும். குடத்தை உடைத்துவிட்டால் குடத்திலுள்ள ஆகாசமென்பதேயில்லை. இப்படியே ப்ரஹ்மத்தின் அம்சமாகவும், அதினின்று வேருனதில்லாததுமான ஜீவன் மாயையின் கார்யத்தில் பல உடல்களில் அவித்யை (அறிவின்மை) எனும் உபாதியால் வெவ்வேருகக் காணப்பட்டாலும், அவித்யை நீங்கிடின் (உபாதி நீங்கிவிட்டால்) அந்த ஜீவன் எதனுடைய அம்சமோ அந்த அம்சியான ப்ரஹ்மமே. அம்சம் அம்சியை (அம்சத்தைக் கொண்டவனை) அடைந்தால் திரும்பி வருவதில்லை. ஜீவன் ஈச்வரனைவிட வேருனவன். அவன் செய்கிருன், அனுபவிக்கிருன் என்ற தோற்றமெல்லாம் அவித்யா ரூபமான அஞானத்தினுலுண்டாயினவே

ஸ்ரீ ராமானுஜர் :— அநாதியாயும், என் அம்சமாயுமுள்ள ஒரு ஜீவன், அநாதி கர்ம அவித்யையால் ஞானம் முதலிய ஐச்வர்யங்கள் குறைந்து, ஜீவனென்ற பெயருடன் உயிருள்ளன வாழும் உலகங்களை பூர்வ கர்ம வினைப்படி ப்ரக்ருதியிலிருந்துண்டான தேவர், மனிதன் முதலிய உடல்களிலுள்ள மனமுட்பட்ட ஆறு புலன்களை (விஷயங்களை) அனுபவிக்கும் பொருட்டு இழுத்துக்கொள்கிருன். மற்றொரு ஜீவன் அவித்யையை (அறியாமையை) நீக்கிக்கொண்டு உண்மையான தன் ஸ்வரூபத்தை (ப்ரக்ருதி விமுக்தாத்ம ஸ்வரூபத்தை) அடைகிருன்.

ஸ்ரீ ராகவேந்த்ரர் :— ஜகத் எனும் மரத்தை (ஸம்ஸார மரத்தை) வெட்ட பிரம்மா முதலியோரை ஸேவிக்கலாமெனில், அதனுல் முடியாது, பகவானையே சரணடைய வேண்டுமெனச் சொல்லப்பட்டது. பிரம்மா முதலிய தேவர்களிலிருக்கும் ஜீவன்கள் என் அம்சமே, அவர்கள்

என்னைக்காட்டிலும் வேருனவர்களானுலும், ஸூர்யனுக்கு மினுமினுப் பூச்சி எப்படியோ, அப்படியே என் ஆபாஸாம்சங்கள். அவர்களுக்குச் செயல்புரியும் தன்மை மனதுள்பட இந்த்ரியங்களை விஷயத்தில் இழுத்துக்கொள்வது மட்டுமே. அதாவது விஷயங்களில் ஈடுபடுத்துவது எனக்கருத்து.

शरीरं यदवाप्नोति यच्चाप्युत्क्रामतीश्वरः ।
गृहीत्वैतानि संयाति वायुर्गन्धानिवाशयात् ॥ ८

சரீரம் யதவாப்நோதி யச்சாப்யுத்க்ராமதீச்வர: ।
க்ருஹீத்வைதானி ஸம்யாதி வாயுர்கந்தானிவாசயாத் ॥ 8

புலன்களுக்கு மேலதிகாரியான ஜீவன் எவ்வகை உடலை அடைந்தாலும், எந்த உடலிலிருந்து வெளிப்பட்டாலும், வாஸனைக்கிருப்பிடமான பூவிலிருந்து காற்று வாஸனையைப்பிடித்துக்கொண்டு போவது போல, முன் சொன்ன புலன்களை எடுத்துக்கொண்டு போகிருன் (கிரஹித்துக்கொண்டு போகிருன்).

श्रोत्रं चक्षुः स्पर्शनं च रसनं घ्राणमेव च ।
अधिष्ठाय मनश्चायं विषयानुपसेवते ॥ ९

ச்ரோத்ரம் சக்ஷு: ஸ்பர்சனம் ச ரஸனம் க்ராணமேவ ச ।
அதிஷ்டாய மனஸ்சாயம் விஷயானுபஸேவதே ॥ 9

ஜீவன் காது, கண், தோல், நாக்கு, மூக்கு, மனது, இவைகளை அடைந்து, விஷய ஸுகங்களை அனுபவிக்கிருன். புலன்களின்றி ஜீவன் விஷயங்களை அனுபவிக்கக் காரணமில்லை. கர்மத்தை யொட்டி விஷய ஸுகங்களை அனுபவிக்கவே உடல் உண்டாகியுள்ளது. அந்த விஷய அனுபவங்களுக்காகவே புலன்களை எடுத்துக்கொண்டு போகிறதாக முன்னர் சொல்லப்பட்டது.

उत्क्रामन्तं स्थितं वापि भुञ्जानं वा गुणान्वितम् ।
विमूढा नानुपश्यन्ति पश्यन्ति ज्ञानचक्षुषः ॥ १०

உத்க்ரரமந்தம் ஸ்திதம் வாபி புஞ்ஜானம் வா குணுன்விதம் l
விமூடா நானுபச்யந்தி பச்யந்தி ஞானசக்ஷுஷ: ll 10

உடலிலிருக்கையிலும், வேறுவுடலையடையும் போதும், விஷயங்களை அனுபவிக்கும்போதும், புலன்களுடன் சேர்ந்திருக்கையிலும், ஜீவனை அஞானிகள் (அறிவிலிகள்) காண்கிறதில்லை. ஞானக்கண்ணுள்ளவர்கள் (பேரறிவு படைத்தோர்) காண்கிருர்கள்.

[ஸ்ரீ சங்கரர்:— இன்பம், துன்பம், மோஹம் இவைகளுடன் கூடிய தெசைகளிலெல்லாம் பார்க்கக்கூடிய ஜீவன் காணப்படுவது கேட்கப்படுவது முதலியவைகளில் மனதைப் பரவவிடுகிறவர்கள் அறிகிறதில்லை.

ஸ்ரீ ராமானுஜர்;— குணங்களால் சூழப்பட்ட உடலைக் கொண்ட ஜீவனையோ, உடலைவிட்டுப்போகும் ஜீவனையோ, குணமயமான விஷயங்களை அனுபவிப்பவனையோ, உடலே ஆன்மா என்ற அறிவையுடைய மூடர்கள், உடலைக் காட்டிலும் வேருன, ஞானாகாரமான ஜீவனை ஒரு போதும் காண்கிறதில்லை. விவேகிகள் காண்கிருர்கள்.

ஸ்ரீ ராகவேந்த்ரர் :— உடலைவிட்டுப் போகிறவனுன, உடலிலிருப்பவனுன, நற்பயனை அனுபவிக்கிறவனுன, அநேக குணங்களுடன் கூடினவனுன ஈச்வரனை, அறிவில்லாதோர் காண்கிறதில்லை. ஞானிகள் காண்கிருர்கள்.]

यतन्तो योगिनश्चैनं पश्यन्त्यात्मन्यवस्थितम् ।
यतन्तोऽप्यकृतात्मानो नैनं पश्यन्त्यचेतसः ॥ ११

யதந்தோ யோகினஸ்ஸைனம் பச்யந்த்யாத்மன்யவஸ்திதம் l
யதந்தோஅப்யக்ருதாத்மானே நைனம் பச்யந்த்யசேதஸ: ll

த்யானம் முதலியவற்ருல் முயற்சிக்கும் யோகிகள், உடலிலுள்ள ஜீவாத்மாவைப் பார்க்கிருர்கள். சாஸ்திரம் முதலியவற்றிலுள்ள பயிர்ச்சிகளால் முயற்சி செய்தாலுங் கூட சித்த சுத்தியில்லாத அற்ப ஞானிகள் ஆன்மாவைப் பார்க்கிறதில்லை.

[ஸ்ரீ சங்கரர் :— முயற்சிக்கின்ற மன அமைதியுடைய சிலர் புத்தியில் தோற்றுகிற ஆன்மாவை, ‘இவன் தான் நானென்று’ அறிகிருர்கள். தவம் முதலியன செய்து கொண்டிருந்தாலும், காமம், வெகுளி முதலியவற்றை அடக்காது மட்டமான நடத்தைகளை விடாதுமுள்ள அசுத்த புத்தியுடன் கூடின அவிவேகிகள் (ஞானமற்றவர்கள்) ஆன்மாவைப் பார்க்கிறதில்லை.

ஸ்ரீ ராமானுஜர் :— என்னைச் சரணடைவதன் மூலம் கர்ம யோகம் முதலியவற்றில் முயற்சி செய்பவர்கள் சித்த சுத்தியுள்ள யோகிகள், யோகமெனும் கண்களால், உடலைக்காட்டிலும், வேறுபட்டவனுகவும், ஸ்வரூபத்துடன் கூடியவனுகவும், உடலிலுள்ள ஜீவனைப் பார்க்கிருர்கள். என்னைச் சரணடையாதும் அசுத்த மனமுடையவனும், ஆன்மாவைப் பார்க்கச் சக்தியற்ற மனமுள்ளவனுமாகவுள்ள அவிவேகி, முயற்சித்தும் பார்க்கிறதில்லை.

ஸ்ரீ ராகவேந்த்ரர் :— ஞானிகள் பரமாத்மாவைப் பார்க்கிருர்கள். அஞானிகள் பரமாத்மாவைப் பார்க்கிறதில்லை.

यदादित्यगतं तेजो जगद्भासयतेऽखिलम् ।
यच्चन्द्रमसि यच्चाग्नौ तत्तेजो विद्धि मामकम् ॥ १२

யதாதித்யகதம் தேஜோ ஜகத்பாஸயதே அகிலம் I
யச்சந்த்ரமஸி யச்சாக்னௌ தத் தேஜோ வித்தி மாமகம் II

எந்த எந்த ஒளிகள் எல்லா உலகையும் பிரகாசமாக்குகின்றதோ அந்த ஸூர்யனிடமுள்ள, சந்த்ரனிடமுள்ள, நெருப்பிலுள்ள எல்லா தேஜஸ்ஸும் (ஒளிக் காந்தியும்) என்னுடையது என அறி.

[ஸ்ரீதரர்:— பரமாத்ம ஸ்வரூபம் விசித்ரமான சக்தியுடன் கூடியது என இது முதல் நான்கு ச்லோகங்களில் சொல்லப்படுகிறது.

ஸ்ரீ சங்கரர்:— பகவத் ஸ்வரூபம் ஸர்வாத்மகத்வம், ஸர்வவ்யாபகத்வம் உடையதென்று இது முதல் 4 ச்லோகங்களினுல் சொல்லப்படுறது. ஸூர்யன், சந்த்ரன், அக்னி இவைகளிலுள்ள உலகத்தை ஒளிமயமாக்கும் தேஜஸ் என்னுடையதென்றறி. அவைகளிடத்தேயுள்ள சைதன்யம் (ஆத்ம ஸ்வரூபம்) எதுவோ, அதுதான் எல்லாவுலகையும் ப்ரகாசமாக்குகிறது. அந்த சைதன்ய ஸ்வரூபம் நானென்று அறி.

ஸ்ரீ ராமானுஜர்:— ப்ரக்ருதியினுலுண்டான பஞ்ச (ஐந்து) மஹா பூதங்களில் சேர்ந்த ஸூர்யன், சந்த்ரன், அக்னி முதலியவற்றிலுள்ள ஒளிகூடத் தன்னுடைய விபூதி என்பது சொல்லப்படுகிறது. எல்லா உலகையும் பிரகாசமாக்கும் ஸூர்யன், சந்த்ரன், அக்னி ஆகியோர்களாக நான் ஸேவிக்கப்பட்டு, அவர்களுக்கு என்னுல் கொடுக்கப்பட்ட ஒளி என்னுடைய விபூதி என அறி.

ஸ்ரீ ராகவேந்த்ரர்:— ஸூர்யன் முதலியவைகளின் ஒளி என் வசப்பட்டது (அதீனம்) என அறி]

गामाविश्य च भूतानि धारयाम्यहमोजसा ।
पुष्णामि चौषधीः सर्वाः सोमो भूत्वा रसात्मकः ॥ १३

காமாவிச்ய ச பூதானி தாரயாம்யஹமோஜஸா ।
புஷ்ணுமி சௌஷதீ: ஸர்வா: ஸோமோ பூத்வா ரஸாத்மக: ॥

நான் வலிமையால் பூமியில் நுழைந்து பிராணிகளைத் தாங்கி (சுமந்துகொண்டிருக்கிறேன்.) இரஸ உருவான (சாறு போன்ற ஜல உருவான) சந்த்ரனாக இருந்து எல்லாப் பயிர்களுக்கும் வலிமையூட்டிக்கொண்டு (போஷித்து) இருக்கிறேன்.

अहं वैश्वानरो भूत्वा प्राणिनां देहमाश्रितः ।
प्राणापानसमायुक्तः पचाम्यन्नं चतुर्विधम् ॥ १४

அஹம் வைச்வானரோ பூத்வா ப்ராணினும் தேஹமாச்ரித: 1
ப்ராணுபானஸமாயுக்த: பசாம்யன்னம் சதுர்விதம் ll 14

நான் பிராணிகளின் உடல்களையடைந்து, அக்னியாக இருந்து கொண்டு, அக்னியை எரித்து ஒளி மயமாக்கும் ப்ராணன், அபானன் என்ற காற்றுகளுடன் கூடியவனாக, நான்கு விதமான உணவுகளை ஜீர்ணம் செய்விக்கிறேன்.

[நான்கு விதமான உணவுகள் :— (1) பற்களால் கடித்துச் சாப்பிடுகிறவை, (2) கடிக்காது நாக்கினுல் மென்று விழுங்குபவை, (3) நாக்கினுல் நக்கிச் சாப்பிடும் உணவு, (4) வாயினுல் உறிஞ்சிச் சாப்பிடுபவை (பழ ரஸம் முதலியவை)—ஸ்ரீ சங்கரர், ஸ்ரீதரர், ஸ்ரீ ராமானுஜர், ஸ்ரீ ராகவேந்த்ரர்.]

सर्वस्य चाहं हृदि सन्निविष्टो मत्तः स्मृतिर्ज्ञानमपोहनं च ।
वेदैश्च सर्वैरहमेव वेद्यो वेदान्तकृद्वेदविदेव चाहम् ॥ १५

ஸர்வஸ்ய சாஹம் ஹ்ருதி ஸங்நிவிஷ்டோ
மத்த: ஸம்ருதிர்ஞானமபோஹனம் ச 1
வேதைஸ்ச ஸர்வைரஹமேவ வேத்யோ
வேதாந்தக்ருத்வேதவிதேவ சாஹம் ll 15

எல்லாப் பிராணிகளுடைய ஹ்ருதயத்தில் நான் ஊடுருவியிருக்கிறேன். என்னுலேயே அந்தப் பிராணி

களுக்கு நினைவு, அறிவு, மறதி இவையுண்டாகின்றன. எல்லா வேதங்களினுலேயும் அறியத்தக்கவன் நானே. வேதார்த்தங்களை யறிந்தவனும், வேதாந்த முறையை வகுத்தவனும் நானே.

द्वाविमौ पुरुषौ लोके क्षरश्चाक्षर एव च ।
क्षरः सर्वाणि भूतानि कूटस्थोऽक्षर उच्यते ॥ १६

த்வாவிமௌ புருஷௌ லோகே க்ஷரஸ்சாக்ஷர ஏவ ச ।
க்ஷர: ஸர்வாணி பூதானி கூடஸ்தோஅக்ஷர உச்யதே ॥ 16

[உலகில் க்ஷரன், அக்ஷரன் என இருவகைப் புருஷர்களுண்டு. பிரும்மா (உடலுடைய நான்முகன்) முதல் உடலுடைய எல்லா ஜடப் (அசைவற்ற) பொருள்கள் வரை க்ஷர மென்றும், சேதனன் (ஆத்மா) அக்ஷர னென்றும் சொல்லப்படுகிருர்கள்.

कूटस्थः (கூடஸ்த:) = (1) கல்களின் குவியல்களடங்கிய மலைபோல இருப்பவன் அதாவது உடலழிந்தாலும் இவன் (ஜீவன்) அழியாது மலைபோல் அசையாதிருப்பவன் —ஸ்ரீதரர். (2) இராசி (குப்பல்) போல இருக்கப்பட்டவன் அல்லது மாயையில் இருக்கிறவன் (ஞானமின்றி) ஸம்ஸார விதை நசிக்காமலிருப்பதால் அக்ஷரனென்று சொல்லப் பட்டது - ஸ்ரீ சங்கரர். (3) ப்ரக்ருதித் தொடர்பிலிருந்து விடுபட்ட விமுக்த ஜீவன் அக்ஷரனென்று சொல்லப்படு கிருன்—ஸ்ரீ ராமானுஜர். (4) லக்ஷ்மி விகாரமற்றிருப்ப தாலும், புருஷனைப் போல் சக்தியுடையவளாகையாலும் கூடஸ்தனென்ற ஆண்பால் சொல்லால் சொல்லப் பட்டாள்—ஸ்ரீ ராகவேந்த்ரர்]

उत्तमः पुरुषस्त्वन्यः परमात्मेत्युदाहृतः ।
यो लोकत्रयमाविश्य बिभर्त्यव्यय ईश्वरः ॥ १७

உத்தம: புருஷஸ்த்வன்ய: பரமாத்மேத்யுதாஹ்ருத: ।
யோ லோகத்ரயமாவிச்ய பிபர்த்யவ்யய ஈச்வர: ॥ 17

அழிவற்ற ஈச்வரனுன எந்த ஆத்மா மூன்றுலகங்களி லும் நுழைந்து காப்பாற்றுகிருரோ, அத்தகைய பரம புருஷன் அழிவடைவன, அழிவற்றவை ஆகியவற்றுக்கு அப்பாற்பட்டவனுகவும், பரமாத்மாவாகவும் வேதங் களினுல் சொல்லப்படுகிருன்.

[ईश्वरः (ஈச்வர:) = (1) எல்லாமறிந்தவனுன நாராயணன் என்கிற பெயருள்ள நியாமகன்—ஸ்ரீசங்கரர். (2) நியாமகத்வ முடையவன்—ஸ்ரீ ராமானுஜர்.

लोकत्रयम् (லோகத்ரயம்) = (1) பூலோகம், புவர் லோகம், ஸ்வர்க லோகம்—ஸ்ரீ சங்கரர். (2) ஜடம், அத்துடன் சேர்ந்துள்ள கட்டுண்ட ஜீவன், முக்த ஜீவன் என்ற மூன்றையும்—ஸ்ரீ ராமானுஜர்.]

यस्मात्क्षरमतीतोऽहमक्षरादपि चोत्तमः ।
अतोऽस्मि लोके वेदे च प्रथितः पुरुषोत्तमः ॥ १८

யஸ்மாத்க்ஷரமதீதோஅஹமக்ஷராதபி சோத்தம: I
அதோஅஸ்மி லோகே வேதே ச ப்ரதித: புருஷோத்தம: II 18

எதனுல் நான் அசேதனத்தை அதிக்ரமித்தவனுகவும் (அசேதனத்தைக் காட்டிலும் வேருனவனுகவும்) சேதனத் தைக்காட்டிலும் மேலோனுகவும் இருக்கிறேனே, அதனுல் உலகிலும் வேதத்திலும் புருஷோத்தமனென்று புகழடைந்தவனுக இருக்கிறேன்.

[क्षरम् (க்ஷரம்) = அச்வத்தமென முன்னர் சொல்லப் பட்ட மரத்தை.

लोके (லோகே) = (1) உலகில் ஜனங்களினுலும், காவ்யம் முதலியவற்றில் கவிகளாலும்—ஸ்ரீ சங்கரர், (2) ஸ்ம்ருதியிலும்—ஸ்ரீ ராமானுஜர், ஸ்ரீ ராகவேந்த்ரர்.]

यो मामेवमसंमूढो जानाति पुरुषोत्तमम् ।
स सर्वविद्भजति मां सर्वभावेन भारत ॥ १९

யோ மாமேவமஸம்முடோ ஜாநாதி புருஷோத்தமம் ।
ஸ ஸர்வவித்பஜதி மாம் ஸர்வபாவேன பாரத ॥ 19

பரதவம்சத்திலுத்த அர்ஜுனா! எவன் நிச்சயமான அறிவுடன், முன் சொன்னபடி என்னைப் புருஷோத்தமனென அறிகிறானோ அவன் எல்லாவற்றையும் அறிந்தவன். என்னை எல்லா வழிகளிலும் பூஜிக்கிறவன்.

[जानाति (ஜாநாதி) = (1) என்னையே தான் என அறிகிறான் — ஸ்ரீ சங்கரர். (2) என்னைப் புருஷோத்தமனென்றும், அழிவற்றவனாகவும், அழியத்தக்கது, அழிவற்றது இவைகளுக்கப்பாற்பட்டவனென்றும், பிரபஞ்சத்தில் பரவி நிற்பவனென்றும், அதை (பிரபஞ்சத்தை) தாங்கி நிற்கும் ஈச்வரனென்றும் எவன் அறிகிறானோ —ஸ்ரீ ராமானுஜர்.

सर्वभावेन (ஸர்வபாவேன) = (1) எல்லாவற்றிற்கும் ஆன்மாவாக—ஸ்ரீ சங்கரர். (2) என்னை அடைவதற்கான எல்லாவழிகளிலும்—ஸ்ரீ ராமானுஜர்.]

इति गुह्यतमं शास्त्रमिदमुक्तं मयानघ ।
एतद्बुद्ध्वा बुद्धिमान्स्यात्कृतकृत्यश्च भारत ॥ २०

இதி குஹ்யதமம் சாஸ்த்ரமிதமுக்தம் மயானக ।
ஏதத்புத்த்வா புத்திமான்ஸ்யாத்க்ருதக்ருத்யஸ்ச பாரத ॥ 20

ஓ! பாரதா! இவ்விதம் மிகவும் ரஹஸ்யமான இந்த கீதா சாஸ்திரமானது என்னால் உனக்குச் சொல்லப் பட்டது ஓ! துயரமற்றவனே! இந்த முழுமையான சாஸ்திரத்தை அறிந்தவன் நல்ல ஞானமுடையவனாகவும் மோக்ஷத்திற்காகச் செய்யவேண்டிய எல்லாவற்றையும் செய்துகொண்டவனாகவும் ஆவான்.

[ஸ்ரீ சங்கரர் :— इदं शास्त्रं (இதம் சாஸ்த்ரம்) = இந்த ச்லோகங்களால் எல்லா வேத சாஸ்ரதிரங்களின் பொருள்களும் சொல்லப்பட்டிருப்பதால் இந்த அத்யாயமே சாஸ்திரமாக உபசாரமாகச் சொல்லப் பட்டது.

ஸ்ரீ ராமானுஜர் :— புருஷோத்தமன் நான் (க்ருஷ்ண பகவான்) எனக்கூறும் ரகஸ்யங்களுள் ரகஸ்யமான இந்த சாஸ்திரத்தை அறிந்தவன் ஞானியாவான். என்னை அடைய வேண்டுமெனும் ஆசையுள்ளவன், அவ்வித மடையவேண்டிய எல்லா சாஸ்திரங்களினுலுமுண்டான அறிவையடைகிருன். செய்துகொள்ள வேண்டிய எல்லா வற்றையும் செய்து கொண்டவனுகவுமாகிருன்.]

புருஷோத்தம ப்ராப்தி யோகமெனும்
பதினைந்தாவது அத்யாயம்
முற்றிற்று.

பதினாறுவது அத்யாயம்

தைவாஸுர ஸம்பத் விபாகயோகம்

श्रीभगवानुवाच -
अभयं सत्त्वसंशुद्धिर्ज्ञानयोगव्यवस्थितिः ।
दानं दमश्च यज्ञश्च स्वाध्यायस्तप आर्जवम् ॥ १

ஸ்ரீபகவானுவாச -
அபயம் ஸத்த்வஸம்சுத்திர்ஞானயோகவ்யவஸ்திதி: l
தானம் தமஸ்ச யஞஸ்ச ஸ்வாத்யாயஸ்தப ஆர்ஜவம் ll 1

अहिंसा सत्यमक्रोधस्त्यागः शान्तिरपैशुनम् ।
दया भूतेष्वलोलुप्त्वं मार्दवं ह्रीरचापलम् ॥ २

அஹிம்ஸா ஸத்யமக்ரேரதஸ்த்யாக: சாந்திரபைசுனம் l
தயா பூதேஷ்வலோலுப்த்வம் மார்தவம் ஹ்ரீரசாபலம் ll 2

तेजः क्षमा धृतिः शौचमद्रोहो नातिमानिता ।
भवन्ति संपदं दैवीमभिजातस्य भारत ॥ ३

தேஜ: க்ஷமா த்ருதி: சௌசமத்ரோஹோ நாதிமாநிதா l
பவந்தி ஸம்பதம் தைவீமபிஜாதஸ்ய பாரத ll 3

ஸ்ரீ க்ருஷ்ண பகவான் அர்ஜுனனுக்குத் தொடர்ந்து கூறுகிறார் :—

ஓ ! அர்ஜுன ! பயமின்மை, மனநிம்மதி, ஆத்மஞான மடைய உபாயத்தை யறிந்து அந்த நிஷ்டையில் இருத்தல் நல்ல தகுதியுள்ளவர்களுக்குத் தானம் செய்தல், கர்மேந்த்ரியங்களை அடக்குதல், வேள்விகளைச்செய்தல், ப்ரஹ்மயஞம் முதலிய ஜபயஞங்களைச் செய்தல், தவம் செய்தல், நேர்மை (எல்லாக் கார்யங்களிலும் நேர்மை), பிறருக்குத் துன்பம் செய்யாமை, பொய்பேசாமை, கோப

மின்மை, கொடை (தியாகம்), மனதைக்கட்டுப்படுத்தல், பிராணிகளிடத்தில் தயவுடன் இருத்தல் விஷய ஸுகங்களில் ஆசையின்மை, கொடூரமற்ற தன்மை, வெட்கம், சிறு ஆசையின்மை, பெருந்தன்மை, பொறுமை, தைர்யம், உடலின் சுத்தம், மனத்தூய்மை, பிறருக்குத் துரோஹம் செய்யாமை, கர்வமின்மை, இவை தேவதைகளடையத் தக்கவைகளை அடையத் தகுதியுடன் பிறந்தவனுக்குண்டாகின்றன.

[ஸ்ரீ சங்கரர்:— பிராணிகளின் இயற்கை, தைவதம், ஆஸுரம், ராக்ஷஸம் என்று மூன்று வகைகளாக 9ஆவது அத்யாயத்தில் சொல்லப்பட்டது. தைவ ஸம்பத்தினால் கட்டிலிருந்து விடுபடுதலும், ஆஸுர, ராக்ஷஸ ஸம்பத்துக்களால் கட்டிலகப்படுவதும் ஏற்படுமாதலால், முந்தியதை அடையவும் பின்னிரண்டையும் விடவும் முயற்சிக்க வேண்டுமெனக் கருத்து.

ஸ்ரீ ராமானுஜர்:— இந்த அத்யாயத்தில் சாஸ்திரங்களால் அறியத்தகுந்த சில பொருள்களைத் திடப்படுத்தும் பொருட்டு தைவாஸுரவிபாகம் சொல்லப்படுகிறது.

ஸ்ரீ மத்வர்:— மோக்ஷ ஸாதனங்களுக்கு எதிரியானதைக் களையவேண்டுமென்பது இதனால் சொல்லப்படுகிறது.

1. सत्त्वसंशुद्धिः (ஸத்வஸம்சுத்தி:) = (1) வ்யவஹாரங்களில் வஞ்சனை, மோசம், பொய் இவைகளில்லாத மனத்தூய்மை—ஸ்ரீ சங்கரர் (2) இரஜஸ்தமோ குணங்களின் கார்யங்களை மனதில் சேர்க்காமலிருத்தல்—ஸ்ரீராமானுஜர்.

ज्ञानयोगव्यवस्थितिः (ஞானயோகவ்யவஸ்திதி:) = (1) சாஸ்திரங்களினாலும், ஆசார்யோபதேசத்தினாலும் ஆத்மா முதலியனபற்றி அறிவது ஞானம். அந்த ஞானத்தை விஷயங்களிலிருந்து இழுத்து ஒரே கவனமாகத் தன் ஆன்மாவையறியும் கார்யத்தில் ஈடுபடுத்துவது யோகம். இந்த ஞானம், யோகம், ஆகியவற்றில் திடமான நிஷ்டைதான் வ்யவஸ்திதி. இது தான் தெய்வ ஸம்பத்து. இதையடைந்தவர்களின் இயற்கைதான் ஸாத்விக ஸ்வபாவம்

—ஸ்ரீ சங்கரர். (2) ப்ரக்ருதி விமுக்தாத்ம ஸ்வரூபத்திலேயே நிலைத்திருப்பது — ஸ்ரீ ராமானுஜர். (3) ஞானோபாயத்தில் நிஷ்டை யடைவது—ஸ்ரீ ராகவேந்த்ரர்.

यज्ञश्च (யஞஸ்ச) = (1) வேதங்களில் சொல்லப்பட்ட அக்னிஹோத்ரம் முதலிய யஞங்களையும், ஸ்ம்ருதிகளில் கூறப்பட்ட தேவ பித்ரு யஞங்களையும் செய்தல் —சங்கரர். (2) பயன்கருதாது பகவதாராதனை ரூபமாக யஞங்களைச் செய்தல்—ஸ்ரீ ராமானுஜர். (3) தேவ பித்ரு யஞங்கள் அல்லது ஜோதிஷ்டோமம் முதலிய யஞங்கள் செய்தல்—ஸ்ரீ ராகவேந்த்ரர்.

2. अक्रोध: (அக்ரோத:) = (1) துன்பப்படுத்தப்பட்டதனாலுண்டாகும் கோபத்தை யடக்குதல் — ஸ்ரீ சங்கரர். (2) பிறரால் ஹிம்ஸிக்கப்பட்டாலும் மனம் விகாரமடையாதிருத்தல் — ஸ்ரீ ராமானுஜர். (3) பிறரை ஹிம்ஸிக்க மனதில் ஏற்படும் துடிப்பை அகற்றல் —ஸ்ரீ ராகவேந்த்ரர்.

त्याग: (த்யாக:)=(1) ஸன்யாஸம் (முன்னரே 'தானம்' என்ற பதம்வந்திருப்பதால், இதற்கு ஸன்யாஸம் என்ற பொருள் கூறப்பட்டது—ஸ்ரீ சங்கரர்) (2) ஆத்மாவின் ஸுகத்திற்கு விரோதமான பொருள்களை எடுத்துக் கொள்ளாமலிருத்தல்—ஸ்ரீ ராமானுஜர்.

अपैशुनम् (அபைசுனம்) = (1) ஒருவனின் நன்மை தீமைகளை வெளியிடாமை—ஸ்ரீ சங்கரர். (2) காணாத இடத்தில் பிறரைத் தூஷிக்காமலிருத்தல்—ஸ்ரீதரர். (3) ஜனங்களுக்குக் கெடுதியை உண்டாக்கத்தக்க சொற்களைப் பேசாதிருத்தல்—ஸ்ரீ ராமானுஜர்.

ह्री: (ஹ்ரீ:)=செய்யக்கூடாத காரியத்தைச் செய்வதில் வெட்கம்—ஸ்ரீதரர், ஸ்ரீ ராமானுஜர், ஸ்ரீ ராகவேந்த்ரர்.

अचापलम् (அசாபலம்) = (1) பிரயோஜனமற்ற கார்யங்களைச் செய்யாதிருத்தல்—ஸ்ரீதரர், ஸ்ரீ சங்கரர்.

(2) ஆசையையுண்டாக்கும் பொருள்களில் ஆசையற்றிருத்தல்–ஸ்ரீ ராமானுஜர். (3) உறுதி–ஸ்ரீராகவேந்த்ரர்.

3. क्षमा (க்ஷமா)=(1) அடிக்கப்பட்டாலும், துன்புறுத்தப்பட்டாலும், மனதில் துடிப்பு, விகாரமேற்படாமலிருத்தல்—ஸ்ரீ சங்கரர், (2) பிறரால் துன்புறுத்தப்பட்டாலுல் மனம் கலங்காமலிருத்தல். (3) அபகாரம் செய்தவனிடத்தில் கோபமோ, அவனுக்குக்கெடுதி செய்ய வேண்டுமென்ற எண்ணமோ இல்லாதிருத்தல் —ஸ்ரீமத்வர் (4) அபகாரம் செய்தவனிடத்தில் கோபமில்லாமல் அவனுக்கு உபகாரமும் செய்தல் —ஸ்ரீ ராகவேந்த்ரர்.

धृतिः (த்ருதி:) = (1) உடலும் புலன்களும் சோர்வடையினும், அவைகளைப்பற்றிக் கவலையின்றியிருக்கும் மனத்துணிவு –ஸ்ரீசங்கரர் (2) பேராபத்துக் காலத்திலும், செய்ய வேண்டியவற்றைவிடாது செய்தல்—ஸ்ரீ ராமானுஜர். (3) கவலையின்றி இருத்தல்—ஸ்ரீ ராகவேந்தரர்.

अद्रोहः (அத்ரோஹ:) = (1) பிறரைக்கொல்ல நினையாமை — ஸ்ரீதரர், ஸ்ரீ சங்கரர். (2) பிறருடைய கார்யங்களுக்கு இடையூறு செய்யாமை—ஸ்ரீ ராமானுஜர், ஸ்ரீ ராகவேந்த்ரர்.]

दम्भो दर्पोऽतिमानश्च क्रोधः पारुष्यमेव च ।
अज्ञानं चाभिजातस्य पार्थ संपदमासुरीम् ॥ ४

தம்போ தர்போஅதிமானஸ்ச க்ரோத: பாருஷ்யமேவ ச ।
அஞானம் சாபிஜாதஸ்ய பார்த்த ஸம்பதமாஸுரீம் ॥ 4

ஓ பார்த்தா! டம்பம், செல்வம், கல்வி முதலியவற்ருல் மதித்திருப்பதும், தற்புகழும், கோபமும், கொடூரத்தன்மையும், அறிவின்மையும் அஸுரஸம்பத்தை யடையத்தகுந்தவனுகப் பிறந்தவனுக்கு உண்டாகின்றன.

[अतिमानश्च (அதிமானஸ்ச) = (1) கல்வி முதலிய வற்ருலுண்டாகும் அஹங்காரம்—ஸ்ரீ ராமானுஜர். (2) ப்ரமாணத்தை அதிக்ரமித்தல்—ஸ்ரீ ராகவேந்த்ரர். (3) அபிமான: என்று பாடம்—ஸ்ரீதரர்.

पारुष्यम् (பாருஷ்யம்) (1) கடினமான வார்த்தை—ஸ்ரீதரர், ஸ்ரீ சங்கரர். (2) நல்லோருக்கு மனக் கஷ்டமேற்படுத்தும் சுபாவம்—ஸ்ரீ ராமானுஜர். (3) பிறருக்கு மனக் கஷ்ட முண்டுபண்ணும் சுபாவம்—ஸ்ரீ ராகவேந்த்ரர்.]

दैवी संपद्विमोक्षाय निबन्धायासुरी मता ।
मा शुचः संपदं दैवीमभिजातोऽसि पाण्डव ॥ ५

தைவீ ஸம்பத்விமோக்ஷாய நிபந்தாயாஸுரீ மதா l
மா சுச: ஸம்பதம் தைவீமபிஜாதோஅஸி பாண்டவ ll 5

ஓ பாண்டவ!

தைவஸம்பத் ஸம்ஸாரக்கட்டிலிருந்து விடுபடவும், அஸுரஸம்பத் ஸம்ஸாரக் கட்டை யுண்டாக்கவும் காரணங்களென நிச்சயிக்கப்பட்டுள்ளன. தைவ ஸம் பத்தை யடையப் பிறந்தவனுக இருக்கிருய். துக்கமடை யாதே.

द्वौ भूतसर्गौ लोकेऽस्मिन्दैव आसुर एव च ।
दैवो विस्तरशः प्रोक्त आसुरं पार्थ मे शृणु ॥ ६

த்வௌ பூதஸர்கௌ லோகேஅஸ்மின்தைவ ஆஸுர ஏவச l
தைவோ விஸ்தரச: ப்ரோக்த ஆஸுரம் பார்த மேச்ருணு ll 6

இவ்வுலகில் பூதங்களின் படைப்பு தைவமென்றும் ஆஸுரமென்றும் இருவகைகளாகவுள்ளன. தைவ ஸ்ருஷ்டி விஸ்தாரமாகச் சொல்லப்பட்டது. அஸுர ச்ருஷ்டியை என்னிடமிருந்து கேள்.

[9ஆவது அத்யாயம் 12ஆவது ச்லோகத்தில் அஸுர, ராக்ஷஸ ஸ்வபாவங்கள் பற்றி சொல்லப்பட்டன. இப்போது அஸுர ஸ்வாபாவம் மட்டும் சொல்லி ராக்ஷஸ ஸ்வபாவம் சொல்லப்படவில்லை. ஏனெனில் இரண்டிற்கும் பலன் ஒன்றுதான். ஒன்றைப்பற்றி சொன்னாலேயே மற்றொன்றும் சொல்லப்பட்டதாகவே ஆகிறது—ஸ்ரீதரர்.

प्रवृत्तिं च निवृत्तिं च जना न विदुरासुराः ।
न शौचं नापि चाचारो न सत्यं तेषु विद्यते ॥ ७

ப்ரவ்ருத்திம் ச நிவ்ருத்திம் ச ஜநா ந விதுராஸுரா: ।
ந சௌசம் நாபி சாசாரோ ந ஸத்யம் தேஷு வித்யதே ॥ 7

அஸுர ஸ்வபாமுடைய மக்கள் தர்மத்தில் ஈடுபாட்டையும் அதர்மத்தினின்று விடுபடுதலையும் அறியமாட்டார்கள். அவர்களிடத்தில் தூய்மையோ, ஆசாரமோ (நல்ல நடத்தையோ) உண்மையோ இருக்கமாட்டாது.

[निवृत्तिं (நிவ்ருத்திம்) = (1) புருஷார்த்தத்திற்கு (தர்மார்த்தகாம மோக்ஷம் என்ற நான்கில் மோக்ஷத்திற்கு) கெடுதியானதைத் தவிர்க்கவும்—ஸ்ரீ சங்கரர். (2) மோக்ஷ ஸாதனம்—ஸ்ரீ ராமானுஜர். (3) கெட்ட கார்யங்களிலிருந்து விடுபடுதலை—ஸ்ரீ ராகவேந்த்ரர்.]

असत्यमप्रतिष्ठं ते जगदाहुरनीश्वरम् ।
अपरस्परसंभूतं किमन्यत्कामहैतुकम् ॥ ८

அஸத்யமப்ரதிஷ்டம் தே ஜகதாஹுரநீச்வரம் ।
அபரஸ்பரஸம்பூதம் கிமன்யத்காமஹைதுகம் ॥ 8

அஸுரஸ்வாபவமுடைய ஜனங்கள் ஜகத், வேதம் முதலியன பிரமாணங்களையுடையதல்ல வென்றும், தர்மம், அதர்மம் இவைகளின் தீர்மானத்தையுடையதல்ல வென்றும், ஈச்வரனையுடையதல்ல வென்றும், ஆண்,

பெண் தொடர்பினலுண்டானதென்றும், அவர்களின் காமமே காரணமென்றும், வேறென்ன காரணமிருக்கிற தென்றும் சொல்கிறார்கள்.

[கடவுளில்லை யெனும் சார்வாக மதத்தினர் இப்படிச் சொல்கிறார்கள்—ஸ்ரீ சங்கரர்]

एतां दृष्टिमवष्टभ्य नष्टात्मानोऽल्पबुद्धयः ।
प्रभवन्त्युग्रकर्माणः क्षयाय जगतोऽहिताः ॥ ९

ஏதாம் த்ருஷ்டிமவஷ்டப்ய நஷ்டாத்மானோ அல்பபுத்தய: ।
ப்ரபவந்த்யுக்ரகர்மாண: க்ஷயாய ஜகதோ அஹிதா: ॥ 9

இந்தச் சார்வாக மதத்தைக் கடைபிடித்துக் கெட்ட மனதையுடையவர்களாகவும், அற்ப புத்தியையுடையவர்களாகவும், கொடூரமான கர்மங்களையுடையவர்களாயும், உலகிற்கு விரோதிகளாயு முள்ளவர்கள் உலகின் அழிவின் பொருட்டு உண்டாகிறார்கள்.

[अल्पबुद्धयः (அல்பபுத்தய:) = (1) விஷயங்களிலேயே புத்தியைச் செலுத்துபவர்—ஸ்ரீ சங்கரர். (2) காணப்படும் பொருள்களில் மட்டும் புத்தியைச் செலுத்துபவர்—ஸ்ரீதரர். (3) பானைபோலுள்ள உடலில், அதனின்று வேறுபட்ட ஆன்மா இருக்கிறானெனும் அறிவில்லாதவர்—ஸ்ரீராமானுஜர்.

उग्रकर्माणः (உக்ரகர்மாண:) = உலகிலுள்ள பிராணிகளுக்குத் துன்பம் விளைவிக்கும் கர்மங்களைச் செய்பவர்கள்—ஸ்ரீ சங்கரர், ஸ்ரீதரர்.]

काममाश्रित्य दुष्पूरं दम्भमानमदान्विताः ।
मोहाद्गृहीत्वासद्ग्राहान्प्रवर्तन्तेऽशुचिव्रताः ॥ १०

காமமாச்ருத்ய துஷ்பூரம் தம்பமானமதான்விதா: ।
மோஹாத்க்ருஹீத்வாஸத்க்ரஹான்ப்ரவர்தந்தேஅசுசி
வ்ரதா: ॥ 10

முழுமையற்ற காமத்தைத்தழுவி, டம்பம், அஹங்காரம், கர்வம் இவைகளுடன் கூடியவர்களாயும், தூய்மையற்ற விரதங்களை யுடையவர்களாயுமிருப்பவர்கள், அறிவின்மையால் கெட்ட வழியிலடைந்தவைகளைக்கொண்டு கெட்ட வழிகளில் ஈடுபடுகின்றனர்.

[अशुचिव्रता: (அசுசிவ்ரதா:)=(1) போதை வஸ்துக்கள், புலால் முதலியவற்றைச் சாப்பிடும் பழக்கத்தையுடையவர்கள்—ஸ்ரீதரர். (2) சாஸ்திரத்தில் மட்டமாகச் சொல்லப்பட்டவைகளைச் செய்கிறவர்கள்-ஸ்ரீ ராமானுஜர்.

असद्ग्राहान् (அஸத்க்ராஹான்)=(1) அக்ரமமாக ஈட்டியவைகளை யடைந்து—ஸ்ரீ ராமானுஜர். (2) கெட்ட சாஸ்த்ரங்களைக் கற்று அதனுல் உண்டான கெட்ட அறிவையடைந்து—ஸ்ரீ ராகவேந்த்ரர்.]

चिन्तामपरिमेयां च प्रलयान्तामुपाश्रिताः ।
कामोपभोगपरमा एतावदिति निश्चिताः ॥ ११

சிந்தாமபரிமேயாம் ச ப்ரலயாந்தாமுபாச்ரிதா: I
காமோபபோகபரமா ஏதாவதிதி நிஸ்சிதா: II 11

आशापाशशतैर्बद्धाः कामक्रोधपरायणाः ।
ईहन्ते कामभोगार्थमन्यायेनार्थसञ्चयान् ॥ १२

ஆசாபாசசதைர்பத்தா: காமக்ரோதபராயணு: I
ஈஹந்தே காமபோகார்தமன்யாயேநார்தஸஞ்சயான் II 12

அளவிடக்கூடாத, மரணம் வரை தொடர்ந்து வருகிற எண்ணத்தை அடைந்தவர்களாயும், காம அனுபவமே மனிதனின் குறிக்கோளென எண்ணினவர்களாயும், சிற்றின்ப அனுபவமே முடிவான பிரயோஜன மென்றும், அதைவிட மேலானது இல்லையென்ற நிச்சயத்தையுடையவர்களாயும், ஆசையாகிற அநேக கயிறுகளால் கட்டுண்டவர்களாயும், காமம், வெகுளியாகியவைகளை

முக்யமாக அடைந்தவர்களாயுமிருக்கிறவர்கள், காமத்தை அனுபவிக்கவே, திருட்டு முதலியகெட்ட செய்கைகளால் செல்வக் குவியல்களை விரும்புகிறார்கள்.

[ईहन्ते (ஈஹந்தே)=முயற்ச்சிக்கிறார்கள்—ஸ்ரீ சங்கரர்.]

इदमद्य मया लब्धमिमं प्राप्स्ये मनोरथम् ।
इदमस्तीदमपि मे भविष्यति पुनर्धनम् ॥ १३

இதமத்ய மயா லப்தமிமம் ப்ராப்ஸ்யே மனோரதம் ।
இதமஸ்தீதமபி மே பவிஷ்யதி புனர்தனம் ॥ 13

असौ मया हतः शत्रुर्हनिष्ये चापरानपि ।
ईश्वरोऽहमहं भोगी सिद्धोऽहं बलवान्सुखी ॥ १४

அஸௌ மயா ஹத: சத்ருர்ஹநிஷ்யே சாபராநபி ।
ஈச்வரோஅஹமஹம் போகீ ஸித்தோஅஹம் பலவான்ஸுகீ ॥

आढ्योऽभिजनवानस्मि कोऽन्योऽस्ति सदृशो मया ।
यक्ष्ये दास्यामि मोदिष्य इत्यज्ञानविमोहिताः ॥ १५

ஆட்யோஅபிஜனவானஸ்மி கோஅன்யோஅஸ்தி ஸத்ருசோ மயா ।
யக்ஷ்யே தாஸ்யாமி மோதிஷ்ய இத்யஞானவிமோஹிதா: ॥

अनेकचित्तविभ्रान्ता मोहजालसमावृताः ।
प्रसक्ताः कामभोगेषु पतन्ति नरकेऽशुचौ ॥ १६

அநேகசித்தவிப்ராந்தா மோஹஜாலஸமாவ்ருதா: ।
ப்ரஸக்தா: காமபோகேஷு பதந்தி நரகேஅசுசௌ ॥ 16

இப்பொருள் என்னால் இப்போது அடையப்பட்டது. இக் கோரிக்கையை யடைவேன், இப்பொருள் என்னிடமுள்ளது (பிறரிடம் இல்லை), இப்பொருளுங்கூடப் பின்னு

முண்டாகும், இந்த எதிரி என்னுல் கொல்லப்பட்டான், பிற எதிரிகளேயும் கொல்வேன், நான் திறமை யுடையவன், நான் ஸுகங்களே யனுபவிப்பவன், நான் எண்ணியபடி கார்யங்களேச் செய்து முடிப்பவன், வலிமையுடனும், ஸுகத்துடனும், செல்வமுடையவனுயும், உயர்குலத் தோனுகவுமிருக்கிறேன். எனக்கு ஈடாக வேறு எவனிருக் கிருன்? யாகம் செய்யப்போகிறேன், தானம் செய்யப் போகிறேன், மகிழ்ச்சியடையப் போகிறேன் என இப்படி அறிவின்மையால் மோஹமடைந்தும், மோஹ வலேயினுல் சூழப்பட்டும் பலவித நிலேயற்ற எண்ணங்களுடைய மனதினுல் பிரமை யடைந்தும், சிற்றின்பங்களில் அதிக ஆசை யுடையவர்களாயுமிருப்பவர்கள் அசுத்தமான நரகத்தில் வீழ்கின்றனர்.

["அவனன்றி அணுவும் அசையாது" ("तेन विना तृणमपि न चलति") என்றதை நம்பாது தானே எல்லா வற்றையும் செய்ததாகவும், செய்கின்றதாகவும், செய்யப் போவதாகவும், தானே எல்லாவல்லமையும் பொருந்திய வனுக இருப்பதாகவும், எல்லாவற்றிற்கும் காரணமான கடவுள் ஒருவனுண்டென்பதை நம்பாதிருப்பவன் நரகத்தை யடைகிருன் எனக்கருத்து.

दास्यामि (தாஸ்யாமி) = (1) என்னேப் புகழ்பவர் களுக்குக் கொடுப்பேன்—ஸ்ரீதரர். (2) நாட்டியம் முதலிய வற்றிற்குக் கொடுப்பேன்—ஸ்ரீ சங்கரர். (3) அதிகமான தக்ஷிணே கொடுப்பேன், அன்னதானம் செய்வேன் —ஸ்ரீராகவேந்த்ரர்.]

आत्मसंभाविताः स्तब्धा धनमानमदान्विताः ।
यजन्ते नामयज्ञैस्ते दम्भेनाविधिपूर्वकम् ॥ १७

ஆத்மஸம்பாவிதா: ஸ்தப்தா தனமானமதான்விதா: 1
யஜந்தே நாமயஜ்ஞைஸ்தே தம்பேநாவிதிபூர்வகம் ll 17

अहंकारं बलं दर्पं कामं क्रोधं च संश्रिताः ।
मामात्मपरदेहेषु प्रद्विषन्तोऽभ्यसूयकाः १८

அஹம்காரம் பலம் தர்பம் காமம் க்ரோதம் ச ஸம்ச்ரிதா: ।
மாமாத்மபரதேஹேஷு ப்ரத்விஷந்தோஅப்யஸூயகா: ॥ 18

तानहं द्विषतः क्रूरान्संसारेषु नराधमान् ।
क्षिपाम्यजस्रमशुभानासुरीष्वेव योनिषु ॥ १९

தானஹம் த்விஷத: க்ரூரான்ஸம்ஸாரேஷு நராதமான் ।
க்ஷிபாம்யஜஸ்ரமசுபானுஸுரீஷ்வேவ யோனிஷு ॥ 19

தற்புகழ் உடையவர்களாய், வணக்க மின்றியவர்களாய், செல்வத்தாலுண்டான கர்வம், மதம் ஆகியவற்றுடன் கூடியவர்களாய், அஹங்காரம், வலிமை, இறுமாப்பு, ஆசை, கோபம் இவைகளையுடையவர்களாய், தன்னுடல் பிறவுடலிலுள்ள் பரமாத்மாவாகிய என்னை வெறுப்பவர்களாய், என்னை அவதூறு செய்கிறவர்களாய் உள்ளவர்கள், டம்பத்தால் வேதக் கட்டளைப்படியல்லாது பெயரளவில் யஞம் முதலிய கர்மங்களைச் செய்கிறார்கள். துவேஷ மனப்பான்மையுடன், க்ரூர ஸ்வபாவமுள்ளவர்களாயும், அசுத்தமானவர்களாயும், மானிடருள் மட்டமானவர்களாயுமுள்ளவர்களை, எப்போதும் அஸுரப் பிறவிகளாகவே நான் படைக்கிறேன்

[प्रद्विषन्तः (ப்ரத்விஷந்த:) = (1) என் கட்டளையை மதியாததால் விரோதிகளாகின்றனர் — ஸ்ரீ சங்கரர். (2) பகவானிருப்பதும், அவர் நியாமகனுஞலும் நான் செய்வதைத்தடுக்கட்டும், அல்லது இதைச்செய்யட்டும் என்று சொல்வது த்வேஷம்—ஸ்ரீ ராகவேந்த்ரர்.

अभ्यसूयकाः (அப்யஸூயகா:) = (1) நல்லொழுக்கத்துடன் கூடிய பெரியோர்களிடத்தில் குற்றம் சொல்பவர்கள்—ஸ்ரீ தரர். (2) அசூயைப்படுகிறவர்கள்—

ஸ்ரீ சங்கரர், ஸ்ரீ ராமாநுஜர். (3) கடவுளேயில்லை என்ற வாதமாகிய அசூயையுள்ளவர்கள்—ஸ்ரீ ராகவேந்த்ரர்.

आसुरीष्वेव योनिषु (ஆஸுரீஷ்வேவ யோனிஷு) = (1) குரூரமான புலி முதலிய பிறவிகளில்—ஸ்ரீதரர், ஸ்ரீ சங்கரர், (2) என்னைத்வேஷித்துக்கொண்டேயிருக்கும் பிறவிகளில்—ஸ்ரீ ராமாநுஜர்]

आसुरीं योनिमापन्ना मूढा जन्मनि जन्मनि ।
मामप्राप्यैव कौन्तेय ततो यान्त्यधमां गतिम् ॥ २०

ஆஸுரீம் யோனிமாபன்னு மூடா ஜன்மனி ஜன்மனி ।
மாமப்ராப்யைவ கௌந்தேய ததோ யாந்த்யதமாம் கதிம் ॥ 20

குந்தியின் மகனே! ஒவ்வொரு பிறவியிலும் அஸுரப் பிறவியை யடைந்த மூடர்கள், என்னையடையாது, அதைக்காட்டிலும் (அஸுரப் பிறவியைக்காட்டிலும்) தாழ்ந்த பிறவியை யடைகிறார்கள்.

अधमां गतिं (அதமாம் கதிம்)=(1) பூச்சி, புழுக்களின் பிறவிகளை—ஸ்ரீதரர், (2) வெறுக்கத்தக்க கீழ்தரமான பிறவிகளை—ஸ்ரீ சங்கரர். (3) நித்ய நரகத்தை—ஸ்ரீ ராகவேந்த்ரர்.]

त्रिविधं नरकस्येदं द्वारं नाशनमात्मनः ।
कामः क्रोधस्तथा लोभस्तस्मादेतत्त्रयं त्यजेत् ॥ २१

த்ரிவிதம் நரகஸ்யேதம் த்வாரம் நாசனமாத்மன: ।
காம: க்ரோதஸ்ததா லோபஸ்தஸ்மாதேதத்த்ரயம் த்யஜேத் ॥

ஆசை, (சிற்றின்பத்திலாசை) கோபம், லோபம் (பேராசை) என்ற மூன்று விதமான இவை நரகத்திற்கு வாயிலாகவும், தனக்கு அழிவையும் கொடுக்கக் காரணமாகவுள்ளன. ஆகவே இம்மூன்றையும் விட்டுவிட வேண்டும்.

[नाशनमात्मनः (நாசனமாத்மன:) = (1) ஒரு புருஷார்த்தத்திற்கும் தகுதியற்று தன் ஆன்மாவைக்கெடுக்கின்றனவாகவும்—ஸ்ரீ சங்கரர், (2) தன் ஸ்வரூபத்தை யடையாமல் செய்கின்றன—ஸ்ரீ ராமானுஜர், (3) பெரும் கேட்டை உண்டாக்குகின்றன—ஸ்ரீ ராகவேந்த்ரர்.]

एतैर्विमुक्तः कौन्तेय तमोद्वारैस्त्रिभिर्नरः ।
आचरत्यात्मनः श्रेयस्ततो याति परां गतिम् ॥ २२

ஏதைர்விமுக்த: கௌந்தேய தமோத்வாரைஸ்த்ரிபிர்நர: l
ஆசரத்யாத்மன: ச்ரேயஸ்ததோ யாதி பராம் கதிம் ll 22

ஓ! குந்தியின் மகனே! நரகத்திற்குக் காரணமான இந்த மூன்றுகளையும் (காமம், க்ரோதம், லோபம்) விட்டு விட்ட மனிதன். தனக்கு நன்மையைச் செய்துகொள்கிறான். எனவே மோக்ஷத்தை யடைகிறான்.

यः शास्त्रविधिमुत्सृज्य वर्तते कामकारतः ।
न स सिद्धिमवाप्नोति न सुखं न परां गतिम् ॥ २३

ய: சாஸ்த்ரவிதிமுத்ஸ்ருஜ்ய வர்ததே காமகாரத: l
ந ஸ ஸிததிமவாப்னோதி ந ஸுகம் ந பராம் கதிம் ll 23

எவன் சாத்திரங்களில் கூறப்பட்ட தர்மத்தை விட்டு தன் னிஷ்டப்படி நடக்கிறானோ, அவன் தத்வ அறிவையோ, இன்பத்தையோ, மோக்ஷத்தையோ அடைவதில்லை.

[सिद्धिं (ஸித்திம்) = (1) புருஷார்த்தத்திற்கு வேண்டிய தகுதியை—ஸ்ரீ சங்கரர். (2) ஸ்வர்கம் முதலியவற்றை யடையும் பயனை—ஸ்ரீ ராமானுஜர். (3) புருஷார்த்தத்திற்கு வேண்டிய ஸாதனங்களை—ஸ்ரீ ராகவேந்த்ரர்.]

तस्माच्छास्त्रं प्रमाणं ते कार्याकार्यव्यवस्थितौ ।
ज्ञात्वा शास्त्रविधानोक्तं कर्म कर्तुमिहार्हसि ॥ २४

தஸ்மாச்சாஸ்த்ரம் ப்ரமாணம் தே
கார்யாகார்யவ்யவஸ்திதௌ ।
ஞாத்வா சாஸ்த்ரவிதானோக்தம்
கர்ம கர்துமிஹார்ஹஸி ॥ 24

ஆகையால், செய்யுத்தகுந்தது இது, செய்யத்தகாதது இது என்பதில், சாத்திரம் (ச்ருதி, ஸ்ம்ருதி, இதிஹாஸ, புராணங்கள்) ப்ரமாணமாகவுள்ளது. (விதி அல்லது சட்டமாகும்) சாத்திரத்தில் சொல்லப்பட்டதை அறிந்து, இவ்வுலகில் கர்மத்தைச் செய்ய தகுதியுள்ளவனாக இருக்கிறாய். (இப்பூவலகில் மோக்ஷத்தில் விருப்பமுள்ளவர்கள், கர்மத்தினால் சித்த சுத்தியையும், அதனால் அறிவையும், அதனால் மோக்ஷத்தையும் அடைய வேண்டியவர்களானதினால், நீ சாத்திரத்தில் கூறிய கர்மத்தை முறைப்படி செய்யவேண்டுமென்பது கருத்து.)

தைவாஸுரஸம்பத் விபாகயோக மெனும்
பதினாறாவது அத்யாயம்
முற்றிற்று.

பதினேழாவது அத்யாயம்

ச்ரத்தாத்ரய விபாக யோகம்

अर्जुन उवाच-

ये शास्त्रविधिमुत्सृज्य यजन्ते श्रद्धयान्विताः ।

तेषां निष्ठा तु का कृष्ण सत्त्वमाहो रजस्तमः ॥ १

அர்ஜுன உவாச—

யே சாஸ்த்ரவிதிமுத்ஸ்ருஜ்ய யஜந்தே ச்ரத்தயான்விதா: ।
தேஷாம் நிஷ்டா து கா க்ருஷ்ண ஸத்த்வமாஹோ
ரஜஸ்தம: ॥ 1

அர்ஜுனன் சொல்வது :—

ஓ க்ருஷ்ண ! எவர்கள் சாத்திரமுறையைக் கைவிட்டு, ஊக்கத்துடன் பகவானை ஆராதிக்கிறார்களோ அவர்களுடைய அந்தநிலை ஸாத்விகமா? ராஜஸமா? அல்லது தாமஸமா? எத்தகையது?

[ஸ்ரீதரர், ஸ்ரீ சங்கரர்:— சாஸ்திர விதியை அறிந்தும் அதை நிராகரித்து நடக்கிறவனுக்கு ஊக்கமே ஏற்படாது. சிரத்தை (ஊக்கமென்பது) பகவானுண்டென்ற நிச்சய புத்தி அல்லது வேதம் முதலியவற்றில் நம்பிக்கை. சாஸ்திர விதி தெரிந்தவனுக்கு சாஸ்திர விரோதமான ஆராதனை முதலியவற்றில் ச்ரத்தை ஏற்படாது எனவே சாஸ்திர விதி தெரிந்தவன் விஷயத்தில் இக் கேள்வி யுண்டானதல்ல. ஏனெனில் பின்னர் சொல்லப்படும் பதில் சாஸ்திர விதியைக் கைவிட்டவன் விஷயத்திற்குப் பொருந்தாது. அசக்தியினாலாவது, சோம்பலினாலாவது சாஸ்திரங்களைப் பாராமலும், சாஸ்திரங்களின் பொருளைத் தெரிந்து கொள்ளாமலும், வழிவழியாக அனுஷ்டித்துவந்த ஆசாரத்தை (அல்லது நல்ல சேர்க்கையை)க்கொண்டு ஊக்கத்துடன் பூஜை முதலியன செய்கிறவன் விஷயமாகவே இக்கேள்வி உண்டாயிருக்கவேண்டும்.

ஸ்ரீ ராமானுஜர் :— மனிதன் அடையவேண்டிய தத்வஞானம், அதற்கான உபாயம் முதலியன சாஸ்திரத்திலேயே அறியப்படவேண்டுமென முன் அத்யாயத்தில் சொல்லப்பட்டது. இந்த அத்யாயத்தில் சாஸ்திர விதியை விட்டுச் செய்யும் ஆராதனைகள் பயனற்றது என்பதும், சாஸ்திரத்தில் கூறப்பட்ட ஆராதனையும் கூட மூன்றுவித மானது என்பதும், சாஸ்திர விதியின் லக்ஷணமும் சொல்லப்படுகின்றன. இந்த ச்லோகத்தில் சாஸ்திர முறையை விட்டுச் செய்யப்படும் பூஜை பயனற்றது என்பதை அறியாத அர்ஜுனன், சாஸ்திரத்தில் சொல்லப்படாது ஆனால் ஊக்கத்துடன் செய்யப்படும் யாகம் முதலிய ஆராதனைகளாலுண்டாகிற பயன் ஸாத்விகமா, ராஜஸமா அல்லது தாமஸமா எனக் கேட்கிறான்.]

श्रीभगवानुवाच -

त्रिविधा भवति श्रद्धा देहिनां सा स्वभावजा ।
सात्त्विकी राजसी चैव तामसी चेति तां शृणु ॥ २

ஸ்ரீ பகவானுவாச—

த்ரிவிதா பவதி ச்ரத்தா தேஹினாம் ஸா ஸ்வபாவஜா ।
ஸாத்விகீ ராஜஸீ சைவ தாமஸீ சேதி தாம் ச்ருணு ॥ 2

பகவான் சொல்வது :—

பிராணிகளின் முன் பிறவிக் கர்ம வாஸனையால் உண்டான அந்த ச்ரத்தை (ஊக்கம்) ஸாத்விகம், ராஜஸம், தாமஸம் என மூன்றுவிதம். அதைக்கேள்.

[ஸ்ரீதரர் :— சாஸ்திரத்தைத் தழுவாது பரம்பரை ஆசாரத்தை ஒட்டிய ஊக்கம் முக்குணங்களுள்ளது. பிறவிகளின் முற்பிறவி வாஸனையையொட்டியது. அத்தகைய ஸ்வபாவத்தை சாஸ்திர அறிவு மாற்றிவிடும். சாஸ்திர அறிவுடன் கூடிய பரமேச்வர பூஜை முதலியவற்றிலுள்ள ஊக்கம் ஸாத்விகமே. அது குணத்தால் மூன்றுவிதமல்ல.

ஸ்ரீ ராமானுஜர் :— சாஸ்திர விரோதமான யாகாதி விஷயங்களிலுள்ள ச்ரத்தைக்கும், அதனுடன் செய்யப் படும் கர்மாக்களுக்கும் பலனில்லை என்பதை மனதில் கொண்டு, சாஸ்திரங்களில் சொல்லப்பட்டதும். ச்ரத்தை யுடன் செய்யப்படும் யாகம் முதலிய கர்மங்களை குணங்களினுல் மூன்றுவிதமெனக்காட்ட பகவான் சொல் கிருர். ச்ரத்தை என்பது உருசி அல்லது அன்புடன் கூடிய ஈடுபாடு. முற்பிறவியின் வாஸனையால் அந்த ச்ரத்தை உடல், புலன்கள், மனம் (அந்தக் கரணம்) விஷயங்கள் இவைகளாலுண்டாக்கப்படுகிறது.

ஆசிரியர் :— முற் பிறவியின் கர்மசேஷத்தை ஒட்டியே அவனவனுக்கு அத்தகைய ஊக்கம் (ச்ரத்தை) ஏற்படுகிறது. புண்ய கர்மசேஷமானுல் ஸாத்விக ச்ரத்தையும், பாப கர்மசேஷமானுல் தாமஸச்ரத்தையும், புண்ய பாபங்கள் கலந்த கர்மசேஷமானுல் ராஜஸ ச்ரத்தையும் ஏற்படும்.]

सत्त्वानुरूपा सर्वस्य श्रद्धा भवति भारत ।
श्रद्धामयोऽयं पुरुषो यो यच्छ्रद्धः स एव सः ॥ ३

ஸத்வானுரூபா ஸர்வஸ்ய ச்ரத்தா பவதி பாரத ।
ச்ரத்தாமயோஅயம் புருஷோ யோ யச்ச்ரத்த: ஸ ஏவ ஸ: ॥ 3

அர்ஜுனு! எல்லாப் பிராணிகளின் அந்தக் கரணத்தை (மனச் சாட்சியை) தழுவி ச்ரத்தை (ஊக்கம்) உண்டாகிறது. இந்த ச்ரத்தையுடன் பூஜிக்கும் ஜீவன் ச்ரத்தையையே உருவாகவுடையவன். எவன் எத்தகைய ச்ரத்தையுடன் கூடினவனே அவன் அப்படிப்பட்ட ச்ரத்தையையுடையவனே. (எத்தகைய பூஜையில் ஊக்க முள்னவனே அவ்வித ஊக்கமுடையவனுக அறிய வேண்டியது.)

ஸ்ரீதரர் :— சாஸ்திர விதியை யொட்டாது முன்னேர் கள் கையாண்ட முறையைத் தழுவி பூஜிக்கிறவனின்

ச்ரத்தை முக்குணங்களுடன் கூடியது. அக் குணங்களில் எக்குணம் வளர்ச்சிடைந்திருக்கிறதோ அக்குண ச்ரத்தை யுடையவனெனச் சொல்லப்படுகிறுன். சாஸ்திர விதி களின்படி ச்ரத்தையோடு பூஜிக்கிறவனின் ச்ரத்தை ஸாத்விகமே. ஏனெனில் சாஸ்திர அறிவினுல் அவன் ராஜஸதாமஸ ச்ரத்தைகளிலிருந்து தன்னை விலக்கிக்கொள் கிறுன்.

ஸ்ரீ ராமானுஜர் :— அந்தக்கரணத்தின் வளர்ச்சியை ஒட்டியே ச்ரத்தை ஏற்படுகிறது. அந்த ச்ரத்தையைத் தழுவியே கார்யங்களில் மனிதன் ஈடுபடுகிறுன். அதற்குத் தகுந்த பயனடைகிறுன். பயன் எப்படிப்பட்டதோ அதை அனுபவிக்கும் புருஷனும் அப்படிப்பட்டவனே.

ஆசிரியர் :— ஜீவஸ்வரூபம் மூன்றுவிதமென்பதை மனதில்கொண்டு இச் செய்யுளுக்குப் பொருள்கொள்ள வேண்டும். எல்லாப் பிராணிகளுக்கும் உண்டாகும் ச்ரத்தை ஜீவஸ்வரூபம் எதுவோ அதற்குத்தக்கதாக உண்டாகிறது. இந்த ஜீவன் ச்ரத்தையையே ஸ்வரூபமாக வுடையவனுக இருக்கிறுன். அதெப்படியெனில் எந்த ஜீவன் எப்படிப்பட்ட ச்ரத்தையுடையவனே அவன் அப்படிப்பட்டவனே.]

यजन्ते सात्त्विका देवान्यक्षरक्षांसि राजसाः ।
प्रेतान्भूतगणांश्चान्ये यजन्ते तामसा जनाः ॥ ४

யஜந்தே ஸாத்விகா தேவான்யக்ஷரக்ஷாம்ஸி ராஜஸா: ।
ப்ரேதான்பூதகணும்ஸ்சான்யே யஜந்தே தாமஸா ஜநா: ॥ 4

ஸத்வகுண முடையவர்கள் தேவதைகளைப் பூஜிக் கிறுர்கள், ரஜோகுண முடையவர்கள் யக்ஷ ராக்ஷஸர் களையும், தமோ குண முடையவர்கள், பிணம், பூதங்கள் முதலியவற்றையும் பூஜிக்கின்றனர். எவரெவர் எந்த வகுப்பைப் பூஜிப்பதில் ஊக்கமுள்ளவர்களாக இருக் கின்றனரோ, அவரவர்களை அந்தந்த வகுப்பைச் சேர்ந்தவர்களாக அறிய வேண்டும்.

अशास्त्रविहितं घोरं तप्यन्ते ये तपो जनाः ।
दम्भाहंकारसंयुक्ताः कामरागबलान्विताः ॥ ५

அசாஸ்த்ரவிஹிதம் கோரம் தப்யந்தே யே தபோ ஜநா: 1
தம்பாஹம்காரஸம்யுக்தா: காமராகபலான்விதா: ll 5

कर्शयन्तः शरीरस्थं भूतग्राममचेतसः ।
मां चैवान्तःशरीरस्थं तान्विद्ध्यासुरनिश्चयान् ॥ ६

கர்சயந்த: சரீரஸ்தம் பூதக்ராமமசேதஸ: 1
மாம் சைவாந்த:சரீரஸ்தம் தான்வித்யாஸுரநிஸ்சயான் ll 6

உடலிலுள்ள பிருத்வி முதலிய பூதக்கூட்டங்களையும், சரீரத்தில் அந்தர்யாமியாக (உள்ளடங்கி) இருக்கும் என்னையும், துன்புறுத்துவர்களாயும், டம்பம், தான் எனும் இறுமாப்பு, விஷயங்களிலாசை, அபிமானம், பிடிவாதம் இவைகளை யுடையவர்களாயும், விவேகமற்றவர்களாயுமுள்ள எவர்கள் சாஸ்த்ர விரோதமாயும், குரூரமாயும் தவம் செய்கிறார்களோ அவர்களை அஸுர ஸ்வபாவமுள்ளவர்களெனத் தெரிந்துகொள்.

[अन्तः शरीरस्थं मां चैव (அந்த: சரீரஸ்தம் மாம் சைவ) = (1) கர்மம், புத்தி இவைகளுக்குச் சாக்ஷியாகவுள்ள நாராயணனாகிய என்னையும்—ஸ்ரீ சங்கரர். (2) என் அம்சமாகவுள்ள ஜீவனையும்—ஸ்ரீ ராமானுஜர். (3) அந்த அபிமானி தேவதைகளையும் அவர்களுக்கு நியாமகனாகவுள்ள என்னையும்—ஸ்ரீ ராகவேந்த்ரர்.

कशयन्तः (கர்சயந்த:) (कर्षयन्तः என்றும் பாடம் உண்டு) =(1) இச் சொல்லை புலன்கள் பூதக்கூட்டங்களுக்கு என உபயோகிக்கையில் இளைக்கச் செய்கிறவர்களென்றும், பகவானுக்கு என உபயோகிக்கையில் கட்டளையை மீறுபவர்களென்றும் கொள்ளவேண்டியது—ஸ்ரீ சங்கரர், ஸ்ரீதரர். (2) வருத்துகிறார்கள்—ஸ்ரீ ராமானுஜர். (3) அர்ப்ப குணமுள்ளவர்களாக நினைக்கிறார்கள்—ஸ்ரீ ராகவேந்த்ரர்.]

आहारस्त्वपि सर्वस्य त्रिविधो भवति प्रियः ।
यज्ञस्तपस्तथा दानं तेषां भेदमिमं शृणु ॥ ७

ஆஹாரஸ்த்வபி ஸர்வஸ்ய த்ரிவிதோ பவதி ப்ரிய: 1
யஞஸ்தபஸ்ததா தானம் தேஷாம் பேதமிமம் ச்ருணு 11 7

எல்லோருக்கும் விருப்பமான உணவும் மூன்று (ஸாத்விகம், ராஜஸம், தாமஸம்) விதமாக இருக்கிறது. யஞமும் (யாகம் முதலியனவும்), தவமும், தானமும் அப்படியே மூன்று விதங்களாகவுள்ளன. அவைகளின் இத்தகைய வேறுபாடுகளைச் சொல்கிறேன் கேள்.

[உயிரினங்களின் குணத்திற்குத்தக்கபடி அந்தந்த உணவு வகையில் விருப்ப மேற்படுகிறது.]

आयुःसत्त्वबलारोग्यसुखप्रीतिविवर्धनाः ।
रस्याः स्निग्धाः स्थिरा हृद्या आहाराः सात्त्विकप्रियाः ॥ ८

ஆயு:ஸத்த்வப்லாரோக்யஸுகப்ரீதிவிவர்தனா: 1
ரஸ்யா: ஸ்நிக்தா: ஸ்திரா ஹ்ருத்யா ஆஹாரா:
ஸாத்த்விகப்ரியா: 11 8

ஆயுள், உத்ஸாஹம் (ஊக்கம்), வலிமை, ஸுகம் (இன்பம்), ப்ரீதி (விருப்பம்) இவைகளை வளர்க்கின்றவும், சாறுள்ளவும், எண்ணெயுள்ளவும், திடமானவும். மனதிற்கின்பமாகவுமுள்ள உணவுகள் ஸாத்விகர்களுக்கு விருப்பமானவை.

[हृद्याः (ஹ்ருத்யா:)=(1) தித்திப்பானது-ஸ்ரீராமானுஜர். (2) மாம்பழம் போன்ற சாருள்ளவை—ஆசிரியர்.

स्थिराः (ஸ்திரா:)=(1) உடலில் அதிக நேரம் நிலையாகயிருக்கும் ஸாரமுள்ளவை—ஸ்ரீ தரர், ஸ்ரீசங்கரர், ஸ்ரீ ராமானுஜர். (2) சிறிது காலத்திற்குப்பின் ஜீர்ணமாகத்தக்கவை —ஸ்ரீமத்வர். (3) கோதுமை, ரவை போன்றவைகளால் தயாரிக்கப்பட்ட உணவு—ஆசிரியர்.]

कट्वम्ललवणात्युष्णतीक्ष्णरूक्षविदाहिनः ।
आहारा राजसस्येष्टा दुःखशोकामयप्रदाः ॥ ९

கட்வம்லலவணாத்யுஷ்ணதீக்ஷ்ணரூக்ஷவிதாஹின : l
ஆஹாரா ராஜஸஸ்யேஷ்டா து:கசோகாமயப்ரதா: ll 9

மிகக் கசப்பு புளிப்பு, சூடு, காரம், வரட்சி, தாகத்தை யுண்டாக்கக்கூடியது முதலியவையுள்ளதாகவும், துயரம், சோகம், நோய் இவைகளை யுண்டாக்கக் கூடியதுமான உணவு வகைகள் ராஜஸ ஸ்வபாவமுள்ளவனுக்கு விருப்பமானவை. இத்தகைய உணவுகளை விரும்பிச் சாப்பிடுபவர்கள் ராஜஸ குணமுடையவரென தெரிந்து கொள்ளத்தக்கது. ஸ்ரீ சங்கரர், ஸ்ரீதரர் இவர்களின் கருத்துப்படி மேற்கண்ட உணவு வகைகளை அதிகம் உண்ணலாகாது.]

यातयामं गतरसं पूति पर्युषितं च यत् ।
उच्छिष्टमपि चामेध्यं भोजनं तामसप्रियम् ॥ १०

யாதயாமம் கதரஸம் பூதி பர்யுஷிதம் ச யத் l
உச்சிஷ்டமபி சாமேத்யம் போஜனம் தாமஸப்ரியம் ll 10

சமையல் செய்து ஒரு யாம நேரம் கழிந்ததாகவும் (ஒரு யாமம் = 3 மணி) ஸாரமற்றுப் போனதாயும், நாற்றமெடுத்ததாயும், சமையல் செய்து ஓர் இரவு கழிந்து போனதாகவுள்ளதாயும் (முன்னாள் சமையல் செய்யப்பட்ட) ஒருவன் சாப்பிட்டு மீதம் விட்டதாயும், அசுத்தமாயும் உள்ள உணவு எதுவோ, அந்த உணவு தமோ குணம் படைத்தவர்களுக்கு பிரியமானது.

[यातयःम (யாதயாமம்) = (1) நன்றாய் வேகாதது—ஸ்ரீ சங்கரர் (2) சமையல் செய்தபின் வெகுநேரமானது—ஸ்ரீ ராமானுஜர். (3) ஆறிப்போனது—ஸ்ரீதரர்]

अफलाकाङ्क्षिभिर्यज्ञो विधिदृष्टो य इज्यते ।
यष्टव्यमेवेति मनः समाधाय स सात्त्विकः ॥ ११

அபலாகாங்க்ஷிபிர்யஞோ விதித்ருஷ்டோ ய இஜ்யதே ।
யஷ்டவ்யமேவேதி மன: ஸமாதாய ஸ ஸாத்விக: ॥ 11

யஞம் (வேள்வி போன்ற சடங்குகள்) செய்ய வேண்டியதுதானென்று மனதைத் திடப்படுத்திக் கொண்டு சாத்திரத்தினல் அறியப்பட்ட எந்த யஞம் பயனில் ஆசையில்லாதவர்களால் செய்யப்படுகிறதோ, அந்த யஞம் ஸாத்விகமானது.

अभिसंधाय तु फलं दम्भार्थमपि चैव यत् ।
इज्यते भरतश्रेष्ठ तं यज्ञं विद्धि राजसम् ॥ १२

அபிஸம்தாய து பலம் தம்பார்தமபி சைவ யத் ।
இஜ்யதே பரதச்ரேஷ்ட தம் யஞம் வித்தி ராஜஸம் ॥ 12

ஓ பரதகுலத்துமேலோனே! பயனை விரும்பியாவது, டம்பத்திற்காகவாவது எந்த யஞம் (வேள்வி முதலிய சடங்குகள்) செய்யப்படுகிறதோ அந்த யஞத்தை ராஜஸமென அறிந்துகொள்.

विधिहीनमसृष्टान्नं मन्त्रहीनमदक्षिणम् ।
श्रद्धाविरहितं यज्ञं तामसं परिचक्षते ॥ १३

விதிஹீனமஸ்ருஷ்டான்னம் மந்த்ரஹீனமதக்ஷிணம் ।
ச்ரத்தாவிரஹிதம் யஞம் தாமஸம் பரிசக்ஷதே ॥ 13

விதிமுறையைவிட்டும், அன்னதானம், மந்த்ரம், தக்ஷிணை, ச்ரத்தை (ஊக்கம்) இவைகளன்றி செய்யப்படுகிற யஞத்தைத் தாமஸமென்று சொல்கிருர்கள்.

[असृष्टान्नम् (அஸ்ருஷ்டான்னம்) = யஞத்திற்கு வேண்டியதாகச்சொல்லப்பட்டுள்ள பொருள்களின்றி —ஸ்ரீ ராமானுஜர்.

मन्त्रहीनम् (மந்த்ரஹீனம்)=ஸ்வரம், வர்ணம் இவைகளை உச்சரிக்காமல்—ஸ்ரீ சங்கரர்.

अदक्षिणम् (அதக்ஷிணம்)=அந்தயஞத்திற்கு குறிக்கப் பட்ட அளவு தக்ஷிணையின்றி—ஸ்ரீ ராமானுஜர்]

देवद्विजगुरुप्राज्ञपूजनं शौचमार्जवम् ।
ब्रह्मचर्यमहिंसा च शारीरं तप उच्यते ॥ १४

தேவத்விஜகுருப்ராஜ்ஞபூஜனம் சௌசமார்ஜவம் ।
ப்ரஹ்மசர்யமஹிம்ஸா ச சரீரம் தப உச்யதே ॥ 14

ப்ருஹ்மா, விஷ்ணு, ருத்ரன் முதலிய தேவதைகள், அந்தணர், குருமார்கள், ஞானிகள் ஆகியோரைப் பூஜிப்பது, உடலைச் சுத்தமாக வைத்துக்கொள்வது, நேர்மை, ப்ரம்மசர்யம், பிறருக்குத் துன்பம் செய்யாமை இவை உடலினுல் செய்யத்தகுந்த தவம் எனப்படும்.

[ब्रह्मचर्यम् (ப்ரஹ்மசர்யம்)=ஸ்த்ரீகளிடத்தில் பேசுவது, ஸ்த்ரீயை நினைப்பது, அவளுடைய பெயரைச் சொல்வது, அவளுடன் விளையாடுவது, அவளைப்பார்த்தல் (கெட்ட நோக்குடன்), இரகசியமாக அவளுடன் பேசுதல், அவளுடன் காம லீலைகளைப் பற்றி நினைப்பது, ஸ்த்ரீ போகம் இவைகள் யாவுமில்லாதிருப்பதே ப்ரஹ்மசர்யம் என்பது ஞானிகளின் கருத்து.]

अनुद्वेगकरं वाक्यं सत्यं प्रियहितं च यत् ।
स्वाध्यायाभ्यसनं चैव वाङ्मयं तप उच्यते ॥ १५

அனுத்வேககரம் வாக்யம் ஸத்யம் ப்ரியஹிதம் ச யத் ।
ஸ்வாத்ய யாப்பஸனம் சைவ வாங்மயம் தப உச்யதே ॥ 15

பிறர் மனதிற்கு நோவுண்டுபண்ணுதவும், உண்மையானதும், இன்பம் தருவதும், பிரயோஜனமாகவுமுள்ள

சொல்லும், வேத சாஸ்திரங்களில் பயிற்சியும், வாக்கினுல் செய்யத்தக்க தவமெனப்படுகிறது.

[हितं (ஹிதம்) பிற்காலத்தில் ஸுகத்தைக் கொடுக்கக் கூடியது—ஸ்ரீ சங்கரர், ஸ்ரீதரர், ஸ்ரீ ராமானுஜர்]

मनःप्रसादः सौम्यत्वं मौनमात्मविनिग्रहः ।
भावसंशुद्धिरित्येतत्तपो मानसमुच्यते ॥ १६

மன: ப்ரஸாத: ஸௌம்யத்வம் மௌனமாத்மவினிக்ரஹ: l
பாவஸம்சுத்திரிதயேதத்தபோ மானஸமுச்யதே ll 16

மனம் நற்கார்யங்களில் நிலையாகயிருப்பது. குரூரமின்மை, பகவானைத் தியானஞ் செய்து கொண்டிருப்பது, மனதைப் புலன்களுச்குரிய விஷயங்களிலிருந்து (சிற்றின்பப் பொருள்களிலிருந்து) திருப்புதல், கபடமின்மை (உள்ளொன்றும், வெளியொன்றுமாக இல்லாமை) ஆகிய இவை மனதினுல் செய்யத்தக்க தவம் எனப்படும்.

[मनःप्रसादः (மன:ப்ரஸாத:) = (1) மனத் தூய்மை —ஸ்ரீ சங்கரர், (2) கோபம் முதலியனவின்றி இருப்பது--ஸ்ரீ ராமானுஜர்.

सौम्यत्वं (ஸௌம்யத்வம்) = (1) முகப்பொலிவினுல் அறிந்துகொள்ளத்தக்க அந்தஃகரண (மனப்போக்கு) அல்லது அமைதி நிறம்பியிருப்பது — ஸ்ரீ சங்கரர். (2) பிறருக்கு நன்மை செய்ய உதவியாக இருத்தல் —ஸ்ரீ ராமானுஜர்.

मौनं (மௌனம்)=(1) பேசாமலிருத்தல், மனதின் ஏவலால் தான் வாய் பேசுகிறது. மனம் வாயை ஏவாமலிருக்குமாயின் வாய் பேசாது எனவே வாயை அடக்குவதான மௌனம் மனதின் செய்கையெனச் சொல்லப் படடுள்ளது—ஸ்ரீ சங்கரர். (2) மனதைக்கொண்டு பேச்சைத் தடுப்பது—ஸ்ரீ ராமானுஜர்.

भावसंशुद्धिः (பாவஸம்சுத்தி:) = (1) பிறருடன் கார்யங்களை நடத்துவதில் மோசம் செய்யாதிருத்தல்—ஸ்ரீ சங்கரர், ஸ்ரீதரர், (2) ஆன்மாவைத்தவிர பிற விஷயங்களில் நினைவற்றிருப்பது—ஸ்ரீராமானுஜர். (3) மனத் தூய்மையை ஏற்படுத்திக்கொள்வது அதாவது ஆசையற்றிருப்பது —ஸ்ரீ ராகவேந்த்ரர்.]

श्रद्धया परया तप्तं तपस्तत्त्रिविधं नरैः ।
अफलाकाङ्क्षिभिर्युक्तैः सात्त्विकं परिचक्षते ॥ १७

ச்ரத்தயா பரயா தப்தம் தபஸ்தத்த்ரிவிதம் நரை: l
அபலாகாங்க்ஷிபிர்யுக்தை: ஸாத்விகம் பரிசக்ஷதே ll 17

பயன் கருதாது, பிற விஷயங்களில் செல்லாது நிலையான மனதுடன் கூடிய மக்களால் சிறந்த ஊக்கத்துடன் செய்யப்படும் (உடல், வாக்கு, மனம் இவற்ருல்) மூன்று விதமான தவத்தை ஸாத்விகமானதென ஆன்ஞேர் கூறுகின்றனர்.

[இந்த அத்யாயம் 14, 15, 16 ச்லோகங்களில் சொல்லப்பட்ட உடல், வாக்கு, மனமிவைகளால், பயன் கருதாமல், பரமாத்மாவிடத்திலேயே நிறுத்தப்பட்ட மனதுடன், ச்ரத்தையோடு செய்யப்படும் தவம் ஸாத்விகமென இந்த 17ஆவது ச்லோகத்தினுல் தெரிவிக்கப்படுகிறது]

सत्कारमानपूजार्थं तपो दम्भेन चैव यत् ।
क्रियते तदिह प्रोक्तं राजसं चलमध्रुवम् ॥ १८

ஸத்காரமானபூஜார்த்தம் தபோ தம்பேன சைவ யத் l
க்ரியதே ததிஹ ப்ரோக்தம் ராஜஸம் சலமத்ருவம் ll 18

வாக்கினுலும், உடலினுலும், மரியாதையையும் பொருளீட்டலையும் உத்தேசித்தும், டம்பத்தினுலும் எந்தத் தவம் செய்யப்படுகிறதோ, சஞ்சலமானதும், திடமற்றதுமான அத்தவம் இவ்வுலகில் ராஜஸமானதாகக் கூறப்படுகிறது.

[सत्कारमानपूजार्थं (ஸத்காரமானபூஜார்தம்)=(1) இவன் தவசி என்பது முதலிய வாயால் துதிப்பது ஸத்காரம். கண்ட உடன் எழுந்து வணங்குதல் முதலிய உடலினுல் செய்கிற பூஜை மானம்—ஸ்ரீ சங்கரர், ஸ்ரீதரர். வெகுமதி பெறுவது போன்றவை பூஜை—ஸ்ரீதரர், பாத பூஜை முதலியன பூஜை—ஸ்ரீ சங்கரர். (2) மனதினுல் பூஜிப்பது ஸத்காரம், வாக்கினுல் புகழ்வது மானம். உடலினுல் வணங்குதல் முதலியன பூஜை—ஸ்ரீ ராமானுஜர், ஸ்ரீ ராகவேந்த்ரர்.

चलं (சலம்) = (1) நியமமில்லாதது—ஸ்ரீதரர், (2) ஸ்வர்கம் முதலிய பயன்களைக் கொடுப்பதால் நிலையற்றது—ஸ்ரீ ராமானுஜர்.

अध्रुवं (அத்ருவம்)= ஏதோ ஒரு காலத்தில் பயனைக் கொடுக்கத்தக்கது—ஸ்ரீ சங்கரர்]

मूढग्राहेणात्मनो यत्पीडया क्रियते तपः ।
परस्योत्सादनार्थं वा तत्तामसमुदाहृतम् ॥ १९

மூடக்ராஹேணாத்மனே யத்பீடயா க்ரியதே தப: ।
பரஸ்யோத்ஸாதனார்த்தம் வா தத்தாமஸமுதாஹ்ருதம் ॥ 19

அவிவேகத்தினுல் (அறிவின்மையால்) உண்டான பிடிவாதத்தினுலோ தன் உடலை வருத்திக்கொள்வதினுலோ, மற்றொருவனின் அழிவின் பொருட்டோ (பில்லி சூன்யம் முதலியவற்ருல்), எந்தத் தவம் செய்யப்படுகிறதோ அது தாமஸமெனச் சொல்லப்பட்டுள்ளது.

दातव्यमिति यद्दानं दीयतेऽनुपकारिणे ।
देशे काले च पात्रे च तद्दानं सात्त्विकं स्मृतम् ॥ २०

தாதவ்யமிதி யத்தானம் தீயதே அனுபகாரிணே ।
தேசே காலே ச பாத்ரேச தத்தானம் ஸாத்விகம் ஸ்ம்ருதம் ॥

கொடுக்கவேண்டுமென்ற தீர்மானத்துடன், எந்த தானமானது, புனிதமான இடத்திலும் (புண்ய க்ஷேத்ரத்தில்), புண்ய காலத்திலும் (கிரஹணம் முதலிய), தனக்குத் திரும்ப உதவி செய்யத்தகாத, வேத சாஸ்திர அறிவு படைத்த அந்தணனுக்குக் கொடுக்கப்படுகிறதோ அந்த தானம் ஸாத்விகமானதெனக் கூறப்பட்டுள்ளது.

पात्रे (பாத்ரே) = (1) வேதார்த்தங்களை யறிந்த ப்ரஹ்ம ஞானிகளிடத்தில்—ஸ்ரீசங்கரர். (2) நல்லவர்களிடத்தில் —ஸ்ரீ ராகவேந்த்ரர். (3) காப்பாற்றுகிறவன் பொருட்டு, எப்படியெனில் தானங் கொடுத்தவனை ஆபத்திலிருந்து காப்பாற்றுகிறவனுதினுல்—ஸ்ரீதரர்.]

यत्तु प्रत्युपकारार्थं फलमुद्दिश्य वा पुनः ।
दीयते च परिक्लिष्टं तद्दानं राजसं स्मृतम् ॥ २१

யத்து ப்ரத்யுபகாரார்தம் பலமுத்திச்ய வா புன : 1
தீயதே ச பரிக்லிஷ்டம் தத்தானம் ராஜஸம் ஸ்ம்ருதம் 11 21

பிரதியுபகாரத்தை உத்தேசித்தோ, ஸ்வர்கம் போன்ற பயனைக்கருதியோ, மனவருத்தத்துடனே, எந்த தானம் கொடுக்கப்படுகிறதோ அது ராஜஸமென்று சொல்லப் பட்டிருக்கிறது.

[परिक्लिष्टम् (பரிக்லிஷ்டம்) = (1) அமங்களமான பொருளை—ஸ்ரீ ராமானுஜர். (2) நியாய மற்ற வழியில் தேடிய பொருளை—ஸ்ரீ ராகவேந்த்ரர்.]

अदेशकाले यद्दानमपात्रेभ्यश्च दीयते ।
असत्कृतमवज्ञातं तत्तामसमुदाहृतम् ॥ २२

அதேசகாலே யத்தானமபாத்ரேப்யஸ்ச தீயதே 1
அஸத்க்ருதமவஞாதம் தத்தாமஸமுதாஹ்ருதம் 11 22

தூய்மையற்ற தேசத்திலும் (இடத்திலும்), காலத்தி லும், தகுதியற்ற மட்டமானவர்களுக்கும், பூஜை முதலியன செய்யாதும், மரியாதையின்றியும் எந்த தானம் கொடுக்கப்படுகிறதோ, அது தாமஸமாகிவிடும்.

[ஸ்ரீ சங்கரர், ஸ்ரீதரர் :— தேசம் (இடம்), காலம், பாத்ரம் (தகுதியுடைய மனிதன்) இவைகள் தகுந்தவை யல்லாமலிருக்கையிலும் பூஜை மரியாதை இவைகளுடன் கூடாதும் செய்யும் தானம் தாமஸமாகிவிடும்.]

ओं तत्सदिति निर्देशो ब्रह्मणस्त्रिविधः स्मृतः ।
ब्राह्मणास्तेन वेदाश्च यज्ञाश्च विहिताः पुरा ॥ २३

ஓம்தத்ஸதிதி நிர்தேசோ ப்ரஹ்மணஸ்த்ரிவித: ஸ்ம்ருத: ।
ப்ராஹ்மணஸ்தேன வேதாஸ்ச யஞாஸ்ச விஹிதா: புரா ॥ 23

பரப்ரஹ்மத்திற்கு 'ஓம்', 'தத்', 'ஸத்' என்று மூவகைப் பெயர்கள் ஞானிகளால் சொல்லப்பட்டிருக்கின்றன. அப் பெயர்களால் அந்தணர்களும், வேதங்களும், யஞங்களும் ஆதிகாலத்தில் படைக்கப்பட்டனர்.

[ஸ்ரீதரர் :— 'ஓம்' என்பது ப்ரஹ்மத்தின் பெயரென உபநிடதத்தில் பல இடங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. ஜகத்திற்குக் காரணமாகவும், ஞானிகளினுல் பார்க்கப் பட்டதாகவுமுள்ளதால் பரப்ரஹ்மம் 'தத்' என்றும், அழிவற்ற, உண்மையான, மேலான பொருள் எதுவோ அந்த பரப்ரஹ்மம் 'ஸத்' என்றும் சொல்லப்பட்டிருக் கிறது.

ஸ்ரீ ராமானுஜர் :— வேதத்தில் சொல்லப்பட்ட யஞம் முதலிய கர்மத்திற்கு 'ஓம், தத், ஸத்' என்ற மூன்று சொற்களும் ஒட்டினவை. ஓம் என்ற சொல்லை கர்மாவின் ஆரம்பத்திலும், தத், ஸத் இவைகளை அக் கர்மாவிற்குத் தகுதியை உண்டாக்க, இறுதியில் உச்சரிக் கும்படியாகவும் வேதத்தில் விதிக்கப்பட்டுள்ளது. எனவே 'ஓம், தத், ஸத்' என்ற சப்தங்கள் வேதத்தில் கூறப்பட்ட கர்மாக்களை ஒட்டினவை.

ஸ்ரீ ராகவேந்த்ரர்:— "ஓம், தத், ஸத்" இவை ப்ரஹ்மத்தின் பெயர்கள். ஸகல ஜகத்தையும் தாங்குவதால் 'ஓம்' என்றும், குணங்களால் வியாபித்திருப்பதால் அல்லது ஞானிகளால் பார்க்கப்படுகிறபடியால் 'தத்' என்றும் தோஷமில்லாது நற்குண பூர்ணமாக உள்ளதால் 'ஸத்' என்றும் ச்ருதிகளில் (வேதங்களில்) சொல்லப் பட்டுள்ளது.]

तस्मादोमित्युदाहृत्य यज्ञदानतपःक्रियाः ।
प्रवर्तन्ते विधानोक्ताः सततं ब्रह्मवादिनाम् ॥ २४

தஸ்மாதோமித்யுதாஹ்ருத்ய யஞதானதப:க்ரியா: I
ப்ரவர்தந்தே விதானோக்தா: ஸததம் ப்ரஹ்மவாதிநும் II 24

ஓம், தத், ஸத் இவை ப்ரஹ்மத்தின் நாமங்காளாகையால் (பெயர்களாகையால்) வேதத்தை செவ்வனே யறிந்தவர்களின், சாத்திரங்களில் சொல்லப்பட்ட யஞ, தான, தவம் முதலிய செய்கைகள், ஓமென உச்சரித்து எப்போதும் ஆரம்பிக்கப்படுகின்றன.

[ஸ்ரீதரர், ஸ்ரீ ராகவேந்த்ரர்:— யஞம் முதலிய கார்யங்களை ஆரம்பிக்கையில் ஓமென்பதை உச்சரிப்பதால், அக்கிரியைகளில் மந்த்ரம், தந்த்ரம் முதலியவற்றின் குறைவுகளாலுண்டாகும் தோஷங்கள் (குறைபாடுகள்) நீங்கி அக்ரியைகள் ஸபலமாகின்றன]

तदित्यनभिसंधाय फलं यज्ञतपःक्रियाः ।
दानक्रियाश्च विविधाः क्रियन्ते मोक्षकाङ्क्षिभिः ॥ २५

ததித்யநபிஸந்தாய பலம் யஞதப:க்ரியா: I
தானக்ரியாஸ்ச விவிதா: க்ரியந்தே மோக்ஷகாங்க்ஷிபி: II 25

மோக்ஷத்தில் விருப்பமுள்ளவர்களால், தத் என்று உச்சரித்தும், பயனைக் கோராதும் பலவிதமான யஞம், தவம், தானம் முதலிய கார்யங்கள் செய்யப்படுகின்றன.

सद्भावे साधुभावे च सदित्येतत्प्रयुज्यते ।
प्रशस्ते कर्मणि तथा सच्छब्दः पार्थ युज्यते ॥ २६

ஸத்பாவே ஸாதுபாவே ச ஸதித்யேதத்ப்ரயுஜ்யதே ।
ப்ரசஸ்தே கர்மணி ததா ஸச்சப்த: பார்த யுஜ்யதே ॥ 26

ஓ! பார்த்தா! உண்டென்னும் பொருளிலேயும், தகுதியுள்ளது (யோக்யம்) எனும் பொருளிலேயும், 'ஸத்' என்கிற சொல் உபயோகிக்கப்படுகிறது. அப்படியே மங்களகரமான திருமணம் முதலிய கார்யங்களில் 'ஸத்' என்கிற சொல் உபயோகிக்கப்படுகிறது.

[सद्भावे (ஸத்பாவே) ஒருவனிடமில்லாத பொருள் அவனுக்கு உண்டானுல் அல்லது கிடைத்தால், அந்தப்பொருள் 'ஸத்' எனப்படும்—ஸ்ரீ சங்கரர், ஸ்ரீதரர், ஸ்ரீ ராகவேந்த்ரர்.

साधुभावे (ஸாதுபாவே)=(1) கெட்டவன் நல்லவனுகி விட்டால் அவனை 'ஸத்' என்று சொல்லலாம்—ஸ்ரீ சங்கரர், (2) நல்லதென்ற பொருளிலும் — ஸ்ரீ ராமானுஜர், (3) உத்தமமான பொருளிலேயும்—ஸ்ரீமத்வர்.]

यज्ञे तपसि दाने च स्थितिः सदिति चोच्यते ।
कर्म चैव तदर्थीयं सदित्येवाभिधीयते ॥ २७

யஞே தபஸி தானே ச ஸ்திதி: ஸதிதி சோச்யதே ।
கர்ம சைவ ததர்தீயம் ஸதித்யேவாபிதீயதே ॥ 27

யஞத்திலும், தவத்திலும், தானத்திலும், நிலையாகவும், உறுதியாகவும் செய்யப்படும் நிஷ்டை 'ஸத்' எனச் சொல்லப்படுகிறது. ப்ரஹ்மத்தை யுத்தேசித்துச் செய்யப்படும் பூஜைகளும் அவைகளுக்குதவியான கர்மங்களுங் கூட 'ஸத்' என்றே சொல்லப்படுகின்றன.

[நிஷ்டை என்ருல் செய்யப்படும் கர்மங்கள் பகவானுக்கு அர்ப்பணமாக வேண்டுமென்கிற எண்ணம் —ஸ்ரீ ராகவேந்த்ரர்.

तदर्थीयं कर्म चैव (ததர்தீயம் கர்ம சைவ)=(1) யஞும், தானம், தவம் முதலியவற்றிற்குதவியான கர்மங்கள் அல்லது ப்ரஹமத்தின் ஆராதனேக்கனுகூலமான கர்மங்கள்—ஸ்ரீ சங்கரர், ஸ்ரீமத்வர். (2) மனம், வாக்கு இவைகளால் செய்யும் பூஜை முதலியனவின்றி, உடலால் செய்யப்படும் வணங்குதல், கோயில் கட்டுதல், அதற்கான பொருளேத்தேடுதல், கோயிலில் பகவானுக்குப் பணிவிடை செய்த்ல், பூஜைக்கு பூக்கள் கிடைக்க நந்தவனம் அமைத்தல் முதலியன—ஸ்ரீதரர் (3) மூன்று வர்ணங்களுக்கும் அடுத்த கர்மங்களும்—ஸ்ரீ ராமானுஜர்.]

अश्रद्धया हुतं दत्तं तपस्तप्तं कृतं च यत् ।
असदित्युच्यते पार्थ न च तत्प्रेत्य नो इह ॥ २८

அச்ரத்தயா ஹுதம் தத்தம் தபஸ்தப்தம் க்ருதம் சயத் ।
அஸதித்யுச்யதே பார்த ந ச தத்ப்ரேத்ய நோ இஹ ॥ 28

ஓ அர்ஜுன! சிரத்தை (ஊக்கம்) இல்லாது செய்யப்பட்ட ஹோமம், தானம், தவம் பிற கர்மம் ஆகியவை 'அஸத்' எனச் சொல்லப்பட்டது. அத்தகைய தானம் முதலிய கர்மங்கள் பரலோகத்திலும், இவ்வுலகத்திலும் பிரயோஜனமில்லாமல் போகின்றன.

['அஸத்' என்ருல் இவ்வுலகிலோ, பரலோகத்திலோ பயனேக் கொடுக்காததால்—ஸ்ரீ ராமானுஜர்.]

ச்ரத்தாத்ரய விபாக யோகமெனும்
பதினேழாவது அத்யாயம்
முற்றிற்று.

பதினெட்டாவது அத்யாயம்

மோக்ஷ ஸன்யாஸ யோகம்

अर्जुन उवाच -

संन्यासस्य महाबाहो तत्त्वमिच्छामि वेदितुम् ।
त्यागस्य च हृषीकेश पृथक्केशिनिषूदन ॥ १

அர்ஜுன உவாச-

ஸன்யாஸஸ்ய மஹாபாஹோ தத்வமிச்சாமி வேதிதும் l
த்யாகஸ்ய ச ஹ்ருஷீகேச ப்ருதக்கேசினிஷூதன ll 1

அர்ஜுனன் கிருஷ்ணபகவானை நோக்கிச் சொல்வது :—

இந்திரியங்களுக்கு நியாமகனும் (புலன்களை ஏவுபவனும்), கேசி என்ற அரக்கனைக்கொன்றவனுமான, தோள்வலிமையுடையோனே! ஸன்யாஸத்தினுடையவும் (துறவரத்தினுடையவும்), தியாகத்தினுடையவும் உண்மையை (ஸ்வபாவத்தை) தனித்தனியே அறிய விரும்புகிறேன்.

[அத். 5, 6-13 ச்லோகங்களில், எல்லாக் கர்மங்களையும் மனதினல் விட்டவன் ஸுகமாக இருப்பானென்றும், அத். 9, 6-28 ச்லோகங்களில் ஸகல கர்மங்களையும் விட்டவன் மோக்ஷமடைகிறுன் என்றும், அத். 4, 6-20 ச்லோகங்களில், அத். 12, 6-11 ச்லோகங்களில், எல்லாக் கர்மங்களின் பயனை த்யாகம் செய்யவேண்டு மென்றும் சொல்லப்பட்டதால், இவை ஒன்றுக்கொன்று விரோத மாகக் காணப்படுகிறது. எனவே அர்ஜுனன் ஐயமேற் பட்டுக் கேட்கிருன்—ஸ்ரீதரர்.

ஸ்ரீ சங்கரர்:— எல்லா வேதங்களின் பொருளைக் கொண்ட கீதையின் ஸாரத்தைச் சுருக்கி இவ்வத்யாயத் தில் சொல்லப்படுகிறது.

ஸ்ரீ ராமானுஜர் :— இந்த அத்யாயத்தில் மோக்ஷ ஸாதனமாகக் குறிக்கப்படும் ஸன்யாஸமும், தியாகமும் ஒன்றென்பதும், தியாகத்தின் உருவும், எல்லாக் கர்மங்களையும் செய்பவன் பகவானென்றும், ஸத்வ குணத்தையே அடைய வேண்டுமென்றும், அந்தந்த வர்ணத்தினருக்குரிய கர்மத்தைச் செய்வதால் பரம புருஷப்ராப்திக்குக் காரணமாகிறதென்றும், எல்லா கீதா சாஸ்திர ஸாரமாகிய பக்தியோகமும் சொல்லப்படுகின்றன. இந்த ச்லோகத்தில், ச்ருதி வாக்யங்களில் மோக்ஷ ஸாதனமாகக் கூறப்படும் ஸன்யாஸம், தியாகமிரண்டு மொன்ரு, வெவ்வேரு, எனக் கேட்கப்படுகிறது.]

श्रीभगवानुवाच -
काम्यानां कर्मणां न्यासं संन्यासं कवयो विदुः ।
सर्वकर्मफलत्यागं प्राहुस्त्यागं विचक्षणाः ॥ २

ஸ்ரீபகவானுவாச -
காம்யானும் கர்மணும் ந்யாஸம் ஸன்யாஸம் கவயோ விது: ।
ஸர்வகர்மபலத்யாகம் ப்ராஹுஸ்த்யாகம் விசக்ஷணு: ॥ 2

ஸ்ரீ கிருஷ்ணபகவான் அர்ஜுனனை நோக்கிச் சொல்வது !

பயன் கருதிச் செய்யப்படும் கர்மங்களின் விடுதலை ஸன்யாஸமென அறிவாளிகள் அறிகின்றனர். எல்லாக் கர்மங்களின் பயனைத் தியாகம் செய்வதைத் தியாகமென வித்வான்கள் சொல்கின்றனர்.

[ஸ்ரீதரர் :— மகனையடைய வேண்டும், ஸ்வர்கத்தையடையவேண்டும் என்ற நோக்கங்களை அடைய வேதத்தில் சொல்லப்பட்டுள்ள கர்மங்கள் பயன் கருதிச் செய்யப்படுவதால் காம்ய கர்மம். இதைச் செய்யாமலிருப்பது ஸன்யாஸமெனச் சிலரும், வேதத்தில் கூறப்படும் நித்ய, நைமித்திக (ஸங்கராந்தி, பெற்ருேர்களுக்குச் செய்யும் சடங்குகள் முதலியன) எல்லாக் கர்மங்களைச்

செய்து, அவைகளின் பயனை ஈச்வரனுக்கு அர்ப்பணித்து விடுவது தியாகமென்று சிலரும் சொல்கிறார்கள். நித்ய கர்மங்களுக்கும், சில நைமித்திக கர்மங்களுக்கும் காம்ய கர்மங்களுக்குப்போல், வேதத்தில் பயன் சொல்லப்பட வில்லையாதலால், பயனில்லாத கர்மத்தைச் செய்து, பயனைத்தியாகம் செய் என்று சொல்வது சரியாகத் தோன்றவில்லையே என்றால், அந்த நித்ய நைமித்திக கர்மங்கள் சொல்லப்பட்டுள்ள வேதப் பகுதிகளில், அவைகளுக்குப் பயன் சொல்லப்படாவிடினும், "सर्वएते पुण्यलोका भवन्ति", "कर्मणा पितृलोकम्" இத்தகைய வாக்யங்களால் விஷேச புண்ய பலன் கூறப்பட்டுள்ளதால் பயனுண்டெனவே கருதவேண்டியது. இப்படிச் சொல்வதால் கர்மம் அவசியம் செய்ய வேண்டியதாகிறது. ஆன்மாவிடத்திலேயே திருப்தியடைந்து ஆன்மாவிடத்திலேயே ஸமாதி யடைந்தவனை விட்டு கர்மம் தானாகவே விலகிவிடும். அத்தகையவன் கர்மம் செய்யத் தேவையில்லை.

ஸ்ரீ சங்கரர் :— அச்வமேதம் போன்ற காம்ய கர்மங்களைச் செய்யவேண்டியிருந்தாலும், அவைகளை விடுவதே ஸன்யாஸமென்று சிலரும், நித்ய நைமித்திகமான எல்லாக் கருமங்களையும் செய்து பலனை ஈச்வரார்ப்பணம் செய்வது தியாகமென்றும் சிலர் சொல்கிறார்கள். காம்ய கர்மத்தை விடுவதென்றாலும், கர்ம பலத்தை விடுவதென்றாலும் ஒரேவிதமான பொருள்தான் உண்டாகும். நித்ய நைமித்திக கர்மங்களுக்குப் பலனே (பயனே) கிடையாதே, எனவே பயனைத்தியாகம் செய்வதென்பது பொருத்தமல்ல எனச் சிலர் சொல்லுகிறார்கள். அது சரியல்ல. அவைகளுக்குப் பலனுண்டென்பதே பகவானின் அபிப்பிராயம்.

ஸ்ரீ ராமானுஜர் :— 'ஸர்வ கர்ம பலத்யாகம்' என்றால் நித்ய நைமித்திக காம்ய, கர்ம பலத்யாகமென்று சிலர் சொல்கின்றனர். (மற்ற விஷயத்தில் ஸ்ரீ சங்கரரை ஒத்த பொருளே.)

ஸ்ரீமத்வர், ஸ்ரீ ராகவேந்த்ரர் :— பயனில் ஆசையை விடுவதாலாவது செய்யாதிருப்பதாலாவது காம்ய கர்மத்தைவிடுவது ஸன்யாஸம். பகவத்ப்ரீதி விஷயம் தவிரமற்றதில் எல்லாக் காம்ய பலத்தை (பயனை) விடுவதே தியாகம்.

त्याज्यं दोषवदित्येके कर्म प्राहुर्मनीषिणः ।
यज्ञदानतपःकर्म न त्याज्यमिति चापरे ॥ ३

த்யாஜ்யம் தோஷவதித்யேகே கர்ம ப்ராஹுர்மனீஷிண: ।
யஞ்தானதப:கர்ம ந த்யாஜ்யமிதி சாபரே ॥ 3

விவேகிகள் (அறிவாளிகள்) சிலர் கர்மம் தோஷத்தை (கெடுதியை) உண்டாக்கப்பட்டதாகையால் (கூடியதாகையால்) விடத்தக்கதென்றும், மற்றும் சிலர், யஞம், தானம், தவம் ஆகிய கர்மங்கள் விடத்தக்கவையல்லவென்றும் சொல்கிருர்கள்.

निश्चयं शृणु मे तत्र त्यागे भरतसत्तम ।
त्यागो हि पुरुषव्याघ्र त्रिविधः संप्रकीर्तितः ॥ ४

நிஸ்சயம் ச்ருணு மே தத்ர த்யாகே பரதஸத்தம ।
த்யாகோ ஹி புருஷவ்யாக்ர த்ரிவித: ஸம்ப்ரகீர்தித: ॥ 4

பரதகுலமேலோனே! மேற்சொன்ன. தியாக விஷயத்தில் என் தீர்மானத்தைக்கேள். ஓ மனிதர்களுள் மேலோனே! தியாகம் மூன்றுவிதமாகச் சொல்லப் பட்டுள்ளது.

[ஸ்ரீ சங்கரர் :— தியாக, ஸன்யாஸ சொற்களுக்குப் பொருள் ஒன்றே. கர்மாதிகாரிகளுக்கு மூன்றுவிதமாகச் சொல்லப்பட்டுள்ளதேயன்றி ப்ரஹ்ம ஞானிகளுக்குச் சொன்னதல்ல.

त्रिविध: (த்ரிவித:)=(1) ஸத்வ, ரஜஸ். தமோ குண வேற்றுமைகளால் மூன்று விதம் — ஸ்ரீ சங்கரர். (2) பலத்யாகம், அபிமானத்யாகம் கர்த்ருத்வத்யாகம் என மூன்று விதம்—ஸ்ரீ ராமானுஜர், ஸ்ரீ ராகவேந்த்ரர்.]

यज्ञदानतपःकर्म न त्याज्यं कार्यमेव तत् ।
यज्ञो दानं तपश्चैव पावनानि मनीषिणाम् ॥ ५

யஞதானதப:கர்ம ந த்யாஜ்யம் கார்யமேவ தத் ।
யஞோ தானம் தபஸ்சைவ பாவனானி மனீஷிணாம் ॥ 5

யஞம், தானம், தவம் முதலிய கர்மமானது விடத்தக்க தல்ல. அது செய்யப்படவேண்டியதே. யஞமும், தானமும், தவமும் விவேகிகளுக்குச் சித்த சுத்தியை உண்டாக்கத் தக்கவை.

[ஸ்ரீ ராமானுஜர் :— யஞம், தானம், தவம் முதலிய வேதோக்த கர்மங்களை மோக்ஷத்தில் விருப்பமுள்ளவர்கள் ஒரு காலத்திலும் விடக்கூடாது. உடலுள்ளவரை செய்ய வேண்டியது.

ஸ்ரீ ராகவேந்த்ரர் :— யஞம், தானம், தவம் எல்லோரும் செய்யவேண்டியதே. துறவிகளுக்கு ஞானம், யஞம், வித்யாதானம், அபயப்ரதானம் ஆகியவை தானம், பிரம்மசர்யம் முதலியன தவம் ஸ்த்ரீகளுக்கும், அந்தணரல்லாதார்க்கும், விஷ்ணுநாம கீர்த்தனம் யஞம், உண்மை பேசுதல் தானம், உபவாஸம் முதலியன தவம்.]

एतान्यपि तु कर्माणि सङ्गं त्यक्त्वा फलानि च ।
कर्तव्यानीति मे पार्थ निश्चितं मतमुत्तमम् ॥ ६

ஏதான்யபி து கர்மாணி ஸங்கம் த்யக்த்வா பலானி ச ।
கர்தவ்யானீதி மே பார்த நிஸ்சிதம் மதமுத்தமம் ॥ 6

ஓ பார்த்தா! இந்த யஞம், தானம், தவம் எனும் கர்மங்கள், அபிமானத்தையும் (பிரியத்தையும்), பயன் களையும் விட்டுச் செய்யவேண்டியவை என்பது என்னுடைய மேலான எண்ணம்.

[ஸ்ரீ சங்கரர்:— ஸங்கத்தையும் பயனையும் விரும்பிச் செய்யும் யஞம், தானம். தவமிவை கட்டுறச்செய்பவை யாகிலும், ஸங்கத்தையும், பயனையும் கருதாது மோக்ஷத் தில் ஆசையுடையவனும் இக்கர்மங்களைச் செய்ய வேண்டுமென்பதற்காக 'அபி' (अपि) என்ற சொல் சேர்க்கப்பட்டுள்ளது. காம்ய கர்மம் கட்டு ஏற்படுத்துமா தலால் 'அபி' என்ற சொல்லினுல் காம்ய கர்மம் சேர்க்கத் தகாதது.

ஸ்ரீ ராமானுஜர்:— ப்ரஹ்மத்தை உபாஸிப்பதுடன் யஞம், தானம், தவமிவை உடலுள்ளவரை செய்துவர வேண்டியதென்பது நிச்சயமான பகவத் அபிப்ராயம்.

ஸ்ரீ ராகவேந்த்ரர்:— கர்மத்தை விடவேண்டுமென ஞானிகள் சொல்லியிருக்கிறதற்கு (முன்னர்) விரோதமென நினைக்காத வழியில், ஸங்கம், ஸ்நேஹம், ஸ்வர்க்கம் முதலிய பயன்கள் இவைகளைவிட்டுக் கர்மம் செய்ய வேண்டுமென்பது உத்தமமான மதம் என பகவான் சொல்கிருர்.]

नियतस्य तु संन्यासः कर्मणो नोपपद्यते ।
मोहात्तस्य परित्यागस्तामसः परिकीर्तितः ॥ ७

நியதஸ்ய து ஸன்யாஸ: கர்மணோ நோபபத்யதே ।
மோஹாத்தஸ்ய பரித்யாகஸ்தாமஸ: பரிகீர்தித: ॥ 7

அவச்யமாகச் செய்யவேண்டியதென விதிக்கப் பட்டுள்ள கர்மங்களைத் தியாகம் செய்யக்கூடாது. அறிவின்மையால் அப்படி அவைகளைத் தியாகம் செய் வது தாமஸமெனப்படும். (காம்ய கர்மத்தை விடுவது

முறையே. சித்த சுத்தி வழியே மோக்ஷத்திற்குக் காரணமாகவுள்ள நித்யம் செய்யவேண்டிய கர்மத்தை மோக்ஷத்தில் விருப்பமுள்ளவன் விடக்கூடாது.)

[நித்ய, நைமித்திக கர்மங்கள் உடலைச் சுத்தமாக்கத் தக்கவை. அவை சித்த சுத்தியையும், அதனுல் ஞானமும், பிறகு மோக்ஷமும் உண்டாக்கும். எனவே நித்ய நைமித் திககர்மங்களை (பஞ்சமஹா யஞங்கள், வைசுவதேவம் முதலியனவற்றை) விடக்கூடாது—ஸ்ரீ ராமானுஜர்.

தியாகமென்பது பலத்தியாகமே யன்றி கர்மத்யாக மல்ல என்பது மூன்று ச்லோகங்களால் சொல்லப்படு கிறது. வர்ணுச்ரமங்களுக்குத் தகுதியான கர்மங்களை விடக்கூடாது. அப்படி விட்டால் விட்டவன் நரகத்தை யடைவான்—ஸ்ரீ ராகவேந்த்ரர்.]

दुःखमित्येव यत्कर्म कायक्लेशभयात्त्यजेत् ।
स कृत्वा राजसं त्यागं नैव त्यागफलं लभेत् ॥ ८

து:கமித்யேவ யத்கர்ம காயக்லேசபயாத்த்யஜேத் 1
ஸ க்ருத்வா ராஜஸம் த்யாகம் நைவ த்யாகபலம் லபேத் 11 8

எவன் துக்க முண்டாகுமென்றும், உடலின் உழைப்புக்குப் பயந்தும் கர்மத்தை விடுகிருனே அவன் ராஜஸமானத்தியாகத்தைச்செய்து, தியாகப்பயனை (தியாகத்தின் பயனுன ஞான நிஷ்டையை) அடைகிற தில்லை.

[ஸ்ரீ சங்கரர் :— எல்லாக் கர்மங்களையும் ஞானத்தை யடைந்ததால் விடுகின்ற ஞானிகளைப்போல், துக்கம் முதலியவைகளினுல் நித்ய நைமித்திக கர்மங்களை விடுகிறவன் மோக்ஷத்தை யடையமாட்டான்.

ஸ்ரீ ராமானுஜர்:— தேகப்ரயாஸை முதலிய துக்கங் களை யோசித்துக் கர்மங்களை விடக்கூடாது. சிரம முண்டாக்கக்கூடியதாக இருக்கிறது என்ற பயத்தினுல்

எவன் பஞ்ச மஹாயஜ்ஞம் முதலிய வர்ணாச்ரம தர்மங்களை விடுகிறானோ அது ராஜஸமான தியாகம்.

குறிப்பு:— ராஜஸத்யாகம் என்றால் கர்மம் செய்யாததால் இன்னகெடுதியுண்டாகுமெனத் தெரிந்திருந்தும் உடல் சிரமம் முதலியவற்றிற்குப் பயந்து கர்மத்தை விட்டுவிடுவது.]

कार्यमित्येव यत्कर्म नियतं क्रियतेऽर्जुन ।
सङ्गं त्यक्त्वा फलं चैव स त्यागः सात्त्विको मतः ॥ ९

கார்யமித்யேவ யத்கர்ம நியதம் க்ரியதேஅர்ஜுன ।
ஸங்கம் த்யக்த்வா பலம் சைவ ஸ த்யாக: ஸாத்விகோ மத: ॥

அர்ஜுனா! நித்யமாய் செய்ய வேண்டியதாய் விதிக்கப்பட்ட எக்கர்மம் செய்யப்படவேண்டியதென தெரிந்து, அபிமானம், பயன் இவைகளைவிட்டுச் செய்யப் படுகிறதோ அந்த அபிமானம், பயன் ஆகியவற்றை விடுவது ஸாத்விகத்யாகமென எனது எண்ணம்.

[ஸ்ரீ சங்கரர்:— பகவானின் சொற்படியே நித்ய கர்மத்திற்குப் பயனுண்டென ஏற்படுகிறது. அறிவிலிகள் நித்ய கர்மத்திற்குப் பயன் சித்த சுத்தி அல்லது தோஷ நிவ்ருத்தி எனச் சொல்வது சரியல்ல என இந்த பகவானின் வாக்யத்தால் வெளிப்படுகிறது.

ஸ்ரீ ராமானுஜர்:— 'நியதம் கர்ம' என்றதால், நித்ய நைமித்திக வர்ணாச்ரமங்களை யொட்டிய கர்மங்களை, ஸங்கத்தையும், பயனையும் விட்டு, பகவதாராதனமாக வெண்ணிச்செய்ய வேண்டியது. இந்த பலத்யாகம் ஸாத்விகம் அதாவது ஸத்வ குணத்தினாலுண்டானதென அறியப்பாலது.

ஸ்ரீ ராகவேந்த்ரர்:— அவச்யம் செய்யவேண்டிய வர்ணாச்ரமத்திற்குத்தக்க கர்மங்களைச் செய்யாது விடின் தோஷமேற்படுமெனத் தெரிந்து, ஸங்கத்தையும், ஸ்வர்காதி பயனையும் விட்டு, அவ்வந்த வர்ணாச்ரமத்திற்குரிய கர்மாக்களைச் செய்வது ஸாத்விகத்யாகமாகும்.

न द्वेष्ट्यकुशलं कर्म कुशले नानुषज्जते ।
त्यागी सत्त्वसमाविष्टो मेधावी छिन्नसंशयः ॥ १०

ந த்வேஷ்ட்யகுசலம் கர்ம குசலே நானுஷஜ்ஜதே l
த்யாகீ ஸத்வஸமாவிஷ்டோ மேதாவீ சின்னஸம்சய: ll 10

ஸத்வ குணத்தை முக்யமாகவும், (ஸுகம் தரத்தகும் கார்யத்தைச் செய்து அதனுல் ஸுக மடையவேண்டு மெனும் எண்ணமோ, துயர்தரக் கூடிய கார்யத்தைச் செய்தால் துயரமுண்டாகுமென பயந்து அதைச் செய்யா திருக்கவேண்டுமெனும் எண்ணமோயில்லாத), திடமான புத்தியுள்ளவும், ஸந்தேகமற்றவுமான (அபிமானம், பயன் இவைகளை விட்டவனுக) தியாகி துயர்தரும் கர்மத்தை வெறுப்பதுமில்லை. ஸுகம் தரும் (ஸ்வர்கம் முதலிய பயன்தரும்) கர்மத்தில் ஒட்டுகிறதுமில்லை. (விரும்புவதில்லை.)

[सत्वसमाविष्टः (ஸத்வஸமாவிஷ்ட:) = (1) ஆத்மா, ஆத்மாயில்லாதது எனும் பகுத்தறிவுக்குக் காரணமான ஸத்வ குணத்தினுல் சூழப்பட்டவனுக—ஸ்ரீ சங்கரர். (2) உண்மை அறிவுள்ளவன்—ஸ்ரீ ராமானுஜர். (3) சுத்த ஸத்வ குணமுடையவன்—ஸ்ரீ ராகவேந்த்ரர்.

मेधावी (மேதாவீ) = (1) ஆத்மஞானமுடையவன் —ஸ்ரீ சங்கரர். (2) பகவத் தத்வஞானி—ஸ்ரீ ராகவேந்த்ரர்.

छिन्नसंशयः (சின்னஸம்சய:) ஆத்மஞானமே மோக்ஷ காரணமா என்கிற ஸந்தேகத்தைப் போக்கடித்துக் கொண்டவனுய்—ஸ்ரீ சங்கரர். (2) பராபர தத்வத்திலாவது பகவத் விஷயமான தர்மங்களிலாவது ஸந்தேஹ மற்றவன்—ஸ்ரீ ராகவேந்த்ரர்.

त्यागी (த்யாகீ) = (1) ஸங்கத்தையும் பயனையும் விட்டு நித்ய கர்மத்தைச் செய்கிறவன் — ஸ்ரீ சங்கரர். (2) சங்கம், கர்த்ருத்வம் (செய்பவன் எனும் எண்ணம்),

பயன் இவைகளை விட்டவன்—ஸ்ரீ ராமானுஜர். (3) எல்லாக் கர்மங்களையும் பகவானிடம் அர்ப்பணித்தவன் —ஸ்ரீ ராகவேந்த்ரர்.

अकुशलम् (அகுசலம்) = (1) ஸம்ஸாரத்தில் கட்டுப்படச் செய்யும் காம்ய கர்மம்—ஸ்ரீ சங்கரர். (2) பாப கர்மம் —ஸ்ரீ ராமானுஜர். (3) தற்கால இன்பத்தைத்தராததும், தேகப் பிரயாஸை முதலிய துக்கத்தைத் தரத்தக்கதாயு முள்ள கர்மம்—ஸ்ரீ ராகவேந்த்ரர்.

नानुषज्जते (நானுஷஜ்ஜதே) = (1) அதில் விருப்பம் வைப்பதில்லை—ஸ்ரீ சங்கரர். (2) ஆசைப்படுகிறதில்லை —ஸ்ரீ ராகவேந்த்ரர்.

न हि देहभृता शक्यं त्यक्तुं कर्माण्यशेषतः ।
यस्तु कर्मफलत्यागी स त्यागीत्यभिधीयते ॥ ११

ந ஹி தேஹப்ருதா சக்யம் த்யக்தும் கர்மாண்யசேஷத: 1
யஸ்து கர்மபலத்யாகீ ஸ த்யாகீத்யபிதீயதே ll 11

உடலில் பிரிய முள்ள ஜீவனால் கர்மங்களை முழுதும் விடுவது ஸாத்யமல்ல (முடியாது). எவன் கர்மத்தின் பயனைவிட்டவனோ அவன் தியாகி எனப்படுகிறான்.

[ஸ்ரீதரர் :— எல்லாக் கர்மங்களின் பயனைவிட்டவன் தான் முக்யத் தியாகி, கர்மங்களை விட்டவன் தியாகியாக மாட்டான்.

ஸ்ரீ சங்கரர் :— உடலில் அபிமானமுள்ளவன் விஷயத்தில் இந்தத் தியாகம் முக்யமாகத் துதிக்கப் பட்டுள்ளது. உடலில் அபிமான மற்றவனால்தான் எல்லாக் கர்மங்களையும் விடமுடியும்.

ஸ்ரீ ராமானுஜர் :— எல்லாக் கர்மங்களையும் ஒருவனு லும் விடமுடியாது. உணவு முதலிய கர்மங்களை உடலைக் காப்பாற்றும் பொருட்டுச் செய்தே ஆகவேண்டும்.

எனவே கர்ம பலத்யாகமே தியாகமாகும். பலத்யாகத்துடன் கர்த்ருத்வ அபிமான த்யாகங்களும் சேர்ந்தே சொல்லப்பட்டதாகக்கொள்ளத்தக்கது.

ஸ்ரீ ராகவேந்த்ரர் :— தியாகம் என்பது கர்மபலத் தியாகமேயன்றி கர்மத் தியாகமல்ல.]

अनिष्टमिष्टं मिश्रं च त्रिविधं कर्मणः फलम् ।
भवत्यत्यागिनां प्रेत्य न तु संन्यासिनां क्वचित् ॥ १२

அனிஷ்டமிஷ்டம் மிச்ரம் ச த்ரிவிதம் கர்மண: பலம் ।
பவத்யத்யாகிநும் ப்ரேத்ய ந து ஸன்யாஸிநும் க்வசித் ॥ 12

துயரம் மலிந்த நரக ஜன்மம், ஸுகமான தேவப் பிறவி, ஸுகம் து:கமிரண்டும் கலந்த மனிதப் பிறவி, இப்படி மூன்று விதமான (புண்ய, பாவ, கலப்பு) கர்மத்தின் பயன், பயன் கருதிக் கர்மம் செய்பவர்களுக்கு மரண மடைந்த பின் ஏற்படுகிறது. பயன் கருதாது ஈச்வரார்ப்பண புத்தியுடன் கர்மம் செய்பவர்களுக்கு (பிரம்ம நிஷ்டையிலுள்ள பற்றற்றவர்களுக்கு) ஒருபோதும் இவை (இந்த மூன்றுவித பயன்களும்) ஏற்படுவதில்லை.

पञ्चेमानि महाबाहो कारणानि निबोध मे ।
सांख्ये कृतान्ते प्रोक्तानि सिद्धये सर्वकर्मणाम् ॥ १३

பஞ்சேமானி மஹாபாஹோ காரணானி நிபோத மே ।
ஸாங்க்யே க்ருதாந்தே ப்ரோக்தானி ஸித்தயே ஸர்வ
கர்மணும் ॥ 13

பெரும் கைகளையுடையோனே! எல்லாக் கர்மங்களின் ஸித்தியின் பொருட்டு, கர்மத்தை அழிக்கச் செய்கிறதும், (கர்மத்தின் பயனில் பற்றுதலுண்டாகாமல் செய்வதும்) ப்ரஹ்ம ஸ்வரூபத்தை விளக்குகிறதுமான வேதாந்த சாஸ்திரத்தில் சொல்லப்பட்டவைகளும்,

என்றால் சொல்லப்படப்போகிறவைகளுமாகிய ஐந்து காரணங்களை என் வாக்கியத்தினால் அறிந்துகொள். (ஒவ்வொரு கர்மத்திற்கும் தானே செய்பவன் என அறிவிலி நினைக்கிறான். அது தவறு. ஐந்து செய்பவர் களிருக்கிறார்கள் எனக் கருத்து.)

[सांख्ये (ஸாங்க்யே) = (1) தத்வங்களை விளக்கும் சாங்க்ய சாஸ்திரத்தில், (2) வேதத்தினாலுண்டான ஞானம், உயிர், ஜீவன் இவைகளைத்தன் கார்யங்களுக் குத் துணையாகக்கொண்ட பரமாத்மாவே கர்த்தா எனும் நிச்சயத்துடன் கூடிய—ஸ்ரீ ராமானுஜர். (3) விஷ்ணுவின் அவதாரமான கபிலர் செய்த சாங்க்ய சாஸ்திரத்தில்—ஸ்ரீ ராகவேந்த்ரர்.]

अधिष्ठानं तथा कर्ता करणं च पृथग्विधम् ।
विविधाश्च पृथक्चेष्टा दैवं चैवात्र पञ्चमम् ॥ १४

அதிஷ்டானம் ததா கர்தா கரணம் ச ப்ருதக்விதம் ।
விவிதாஸ்ச ப்ருதக்சேஷ்டா தைவம் சைவாத்ர பஞ்சமம் ॥

உடலும், அதுபோல் அஹங்காரத்துடன் (நான் என்ற எண்ணத்துடன்) கூடிய ஆன்மாவும் (ஜீவனும்) பலவிதமான கண், வாய் முதலிய உபகரணங்களும், பலவிதமாயும், வெவ்வேறாகவுமுள்ள ப்ராணன், அபானன் முதலிய செய்கைகளும் காரணங்கள். இவை களில் கண், வாய் முதலியவைகளுக்கு நியாமகர்களான (உத்தரவிடுபவர்களான) ஸௌர்யன் முதலியவர்கள் அல்லது ஸர்வாந்தர்யாமியான (எல்லாவற்றிலும் ஊடுருவி நிற்பவரான) ஈச்வரன் ஐந்தாவது காரணம்.

[कर्ता (கர்தா) = (1) உபாதி லக்ஷண போக்தா —ஸ்ரீ சங்கரர். (2) ஜீவன்—ஸ்ரீ ராமானுஜர். (3) ஜீவனுக் குக் கர்த்ருத்வமில்லையென முன்பே சொல்லப்பட்டிருப்ப தால் கர்தா விஷ்ணு—ஸ்ரீமத்வர். (4) விஷ்ணு அல்லது பராதீன கர்த்தாவான ஜீவன்—ஸ்ரீ ராகவேந்த்ரர்.

करणञ्च (கரணஞ்ச) = (1) கண் முதலிய பன்னிரண்டு (கர்மேந்த்ரியங்கள் 5, ஞானேந்த்ரியங்கள் 5, புத்தி, மனம், ஆகப் பன்னிரண்டு)—ஸ்ரீ சங்கரர். (2) கர்மேந்த்ரியங்களும், மனமும்—ஸ்ரீ ராமானுஜர். (3) இந்த்ரியங்கள்—ஸ்ரீமத்வர். (4) ஞானேந்த்ரியங்கள் அல்லது ஸ்ருக், ஸ்ருவம் முதலியவை—ஸ்ரீ ராகவேந்த்ரர்.

दैवंचैव (தைவம் சைவ)=(1) இந்த்ரியங்களின் நியாமகர்களான ஸூர்யன் முதலியோர்—ஸ்ரீ சங்கரர். (2) முக்ய காரணனும், அந்தர்யாமியுமான பரமாத்மா—ஸ்ரீ ராமானுஜர். (3) அத்ருஷ்டமெனும் புண்ய பாபம்—ஸ்ரீமத்வர். (4) அத்ருஷ்டம் அல்லது விஷ்ணு—ஸ்ரீ ராகவேந்த்ரர்.]

शरीरवाङ्मनोभिर्यत्कर्म प्रारभते नरः ।
न्याय्यं वा विपरीतं वा पञ्चैते तस्य हेतवः ॥ १५

சரீரவாங்மனோபிர்யத்கர்ம ப்ராரபதே நர: I
ந்யாய்யம் வா விபரீதம் வா பஞ்சைதே தஸ்ய ஹேதவ: II

மனிதன், உடல், வாக்கு, மனம் இவைகளால் ஒழுங்கானவோ, ஒழுங்கற்றவோ எந்தக் கர்மத்தைத்துடங்குகிறானோ, அக் கர்மத்திற்கு முன் சொன்ன உடல் முதலான ஐந்தும் காரணங்களாக இருக்கின்றன.

[ஸ்ரீ சங்கரர் :— இங்கு உடல், வாக்கு, மனம் இம்மூன்று மட்டுமே காரணங்களாகச் சொல்லப்பட்டுள்ளன. கண், காது முதலியவைகள் உடல் வாக்கு, மனம் இவைகளுக்குத் துணைக் கருவிகள். கண், காது முதலியனவற்றால் விஷயங்களைக் கிரஹித்து அனுபவிக்க வேண்டியது மனம். மனத்துடன் கூடினால்தான் அவைகளுக்குச் சக்தி ஏற்படும். எனவே மற்றவைகள் இங்கு சொல்லப்பட்ட மூன்றினுள் அடங்கியவை. எனவே மனம், வாக்கு, காயம் மாத்திரம் சொல்லப்பட்டுள்ளன.]

तत्रैवं सति कर्तारमात्मानं केवलं तु यः ।
पश्यत्यकृतबुद्धित्वान्न स पश्यति दुर्मतिः ॥ १६

தத்ரைவம் ஸதி கர்தாரமாத்மானம் கேவலம் து ய: ।
பச்யத்யக்ருதபுத்தித்வான்ன ஸ பச்யதி துர்மதி: ॥ 16

அந்தக் கர்ம விஷயத்தில் இவ்வைந்து காரணங்களிருக்கையில் உபாதியில்லாத, சேர்க்கையற்ற ஆன்மாவைக்கர்த்தாவாக அறிகிறவன் கெட்ட புத்தியுடைய, விவேகமற்ற புத்தியையுடையவன். அவன் அறிகிறதில்லை.

[ஸ்ரீ சங்கரர் :— உடல் வேறு, ஆன்மா வேறு என்ற அறிவில்லாமல் உடலே ஆன்மா என்ற அறிவுடையவனானதாலும், ஆன்மா வேறென அறிந்தும் கர்த்தா ஐந்தாகயிருக்க, தானே கர்த்தாவென நினைப்பதாலும், பிறவி மரணங்களுக்குக் காரணமான புத்தியையுடையவனானதால் கெட்ட புத்தியுள்ளவனாகச் சொல்லப்பட்டான். சாஸ்திர ஞானம், ஆசார்யோபதேச ஞானமிவையில்லாததினால் பயிற்சியற்ற புத்தியையுடையவன். எனவே இவன் ஆத்ம ஸ்வரூபத்தையோ, கர்மத்தின் இயல்பையோ அறிந்தவனல்ல.

ஸ்ரீ ராமானுஜர், ஸ்ரீ ராகவேந்த்ரர் :— எல்லாக் கர்மங்களையும், ஈச்வராதீனமாய்ச் செய்யத் தகுந்த ஜீவன் தானே கர்த்தாவென நினைப்பதாலும், சாஸ்த்ர அறிவில்லாததினாலும், துர்புத்தியுடையவனெனச் சொல்லப்பட்டான். அவன் உண்மையையறிந்தவனல்ல.]

यस्य नाहंकृतो भावो बुद्धिर्यस्य न लिप्यते ।
हत्वापि स इमांल्लोकान्न हन्ति न निबध्यते ॥ १७

யஸ்ய நாஹம்க்ருதோ பாவோ புத்திர்யஸ்ய ந லிப்யதே ।
ஹத்வாபி ஸ இமாம்லோகான்ன ஹந்தி ந நிபத்யதே ॥ 17

எவனுக்குத்தான் கர்த்தா என்ற எண்ணமில்லேயோ, எவனுடைய புத்தி விஷயங்களில் பற்றுகிறதில்லேயோ, அவன், இவ்வுலகிலுள்ள பிராணிகளைக் கொன்றபோதிலும். கொன்றவனுகமாட்டான், கொன்றதினுல் ஏற்படும் பாவத்திஞல் கட்டுறமாட்டான்.

[ஸ்ரீதரர்:— கர்மம் செய்வது, உடல் புலன்களே யின்றி சேர்க்கையற்ற ஆன்மாவல்ல, தான் கர்தாவல்ல என அறிந்த ஆத்மஞானி, கொல்லுவதென்றகார்யத்தைச் செய்தாலும், பிறர் அவன் கொன்ருன் என எண்ணலாமேயன்றி, கொல்லுதல் என்ற செயல் தன்னுடையதென்ரே, தான் எச் செயலேயும் செய்ததாகவோ, அவன் அறியமாட்டாஞகையால், அவனுக்குக் கொன்றதினுல் பாபமோ தோஷமோ இல்லே. எனவே நித்ய கர்மத்திஞல் இவன் கட்டுறுவானெனச் சொல்ல இடமில்லே.

ஸ்ரீசங்கரர்:— உடலே ஆன்மா, தானே யாவற்றையும் செய்கிறவனென எண்ணுபவன் விஷயத்தில், அவன் தான் கொன்றவனெனச்சொல்வது ஸாதாரணம். ஆன்மா, தூய்மையானவன், அவன் சாட்சி மட்டுமே, செய்கை அவனுக்கில்லே, உடல் முதலியவற்றிற்கே என்ற அறிவுடையவன், கொன்றதுபோல் தோன்றிஞலும், கொல்வது போன்ற செயல்கள் உடல் முதலியவற்றைச் சேர்ந்ததாதலிஞல் ஆத்மஞானியிடம் அச்செயல்களின் தோஷங்கள் ஒட்டுகிறதில்லே, இப்படிச் சொல்வதால் உடலுடன் கூடிய ஆன்மாவுக்குக் கர்த்ருத்வமுண்டென்ருகிறதே என்ருல், ஆன்மா ஒன்றுடனும் ஒட்டாதது, உடல் முதலிய சேர்க்கைகள் ஆரோபிதம் (ஏற்றப்பட்டது) ஆகையால், கர்த்ருத்வமில்லே. அதற்குக் காரணம் அறிவின்மை. சுத்தாத்ம ஞானிக்குத்தான் ஸர்வ கர்ம ஸன்யாஸம் சொல்லப்பட்டுள்ளது.

ஸ்ரீ ராமானுஜர்:— ஈச்வரன் எல்லா கர்மங்களுக்கும் முக்ய கர்த்தவே யன்றி, தான் கர்த்தாவல்ல வென்று எவன் அறிகிருனே அவன் கர்மங்களிஞல் கட்டுப்படுகிறதில்லே. இப்போர்க் களத்தில் எதிரேயுள்ள பீஷ்மர்

ஆகியோர் மாத்திரமல்ல, இன்னும் உலகிலுள்ள எல்லோரையும் கொன்றாலும் உனக்குக் கொன்ற தோஷமில்லை எனக்கருத்து.

ஸ்ரீ ராகவேந்த்ரர்:— உலகில் கொல்வதற்கென ஏற்பட்டுள்ள ருத்ரன், யமன் இவர்களுக்குக் கொல்லுதலாலுண்டாகும் தோஷமில்லையென்பது இச்செய்யுளின் கருத்து. எவ்வளவு ப்ரஹ்மஞானியானாலும் சிறிதாவது அபிமானமும், அஹங்காரமும் இல்லாமல்போகாது. ஆகையால் ஞானிகள் விஷயத்தில் இந்த ச்லோகம் பொருந்தாது. இதனால் அபிமானத் தியாகம்தான் ஸன்யாஸ சப்தத்தின் பொருள் என்று கொள்ள வேண்டும்.]

ज्ञानं ज्ञेयं परिज्ञाता त्रिविधा कर्मचोदना ।
करणं कर्म कर्तेति त्रिविधः कर्मसंग्रहः ॥ १८

ஞானம் ஜ்ஞேயம் பரிஜ்ஞாதா த்ரிவிதா கர்மசோதனா ।
கரணம் கர்ம கர்தேதி த்ரிவித: கர்மஸங்க்ரஹ: ॥ 18

கர்மத்தை நடப்பிக்கக் காரணம், அறிவு, அறியத் தகுந்தது, அறிகிறவன் என மூன்று விதமாக இருக்கிறது. கர்மத்திற்கு ஆச்ரயமானது (புகலிடம்), கண் முதலிய புலன்களாகிய முக்ய ஸாதனம், பிரியமான வஸ்து, செய்கிறவன் என இப்படி மூன்று விதமாக உள்ளது.

ज्ञानं कर्म च कर्ता च त्रिधैव गुणभेदतः ।
प्रोच्यते गुणसंख्याने यथावच्छृणु तान्यपि ॥ १९

ஞானம் கர்ம ச கர்தா ச த்ரிதைவ குணபேதத: ।
ப்ரோச்யதே குணஸங்க்யானே யதாவச்ச்ருணு தான்யபி ॥ 19

ஸத்வம், ரஜஸ், தமஸ் ஆகிய குணங்களின் இயல்பைச் சொல்கிற சாங்க்ய சாஸ்திரத்தில் ஞானம், கர்மம், கர்த்தா ஆகிய மூன்றும் குணங்களின் வேறு

பாட்டினுல் மூன்று விதமாகவே சொல்லப்பட்டுள்ளன. அவைகளை உள்ளபடி கேள்.

[ஸ்ரீதரர்:- இந்த ச்லோகத்திலுள்ள (ஏவ) என்ற சொல்லினுல் கர்த்ருத்வம் குணங்களின் தொடர்பினுலே யென்றும், ஆன்மாவுக்கு இயற்கையாகக் கர்த்ருத்வ மில்லையெனவும், சொல்லப்பட்டதாகிறது. செய்கைகள் ஸாதனங்கள், பயன்கள் இவை ஆன்மாவிற்கில்லையென்று எடுத்துக்காட்டும் பொருட்டு அவற்றிற்கு முக்குணங் களின் தன்மை சொல்லப்படுகிறது.

ஸ்ரீ சங்கரர்:— ஞானம், க்ரியை, கர்த்தா இம் மூன்றும் முக்குணங்களுக்குட்பட்டவை, வெளிப்பட்டனவன்று எனத் தெரிவிக்கவே (ஏவ) என்ற பதம் சேர்க்கப் பட்டுள்ளது.

सर्वभूतेषु येनैकं भावमव्ययमीक्षते ।
अविभक्तं विभक्तेषु तज्ज्ञानं विद्धि सात्त्विकम् ॥ २०

ஸர்வபூதேஷு யேனைகம் பாவமவ்யயமீக்ஷதே ।
அவிபக்தம் விபக்தேஷு தஜ்ஞானம் வித்தி ஸாத்விகம் ॥

வெவ்வேருகவுள்ள எல்லாப் பொருள்களிலேயும் இடைவிடாது தொடர்ந்திருப்பதாகவும், ஒன்ருகவும், விகாரமற்றுமுள்ள பரமாத்ம ஸ்வரூபத்தை எதனுல் பார்க்கிருனே அந்த ஞானத்தை ஸாத்விகமென அறி.

[ஸ்ரீ சங்கரர் :— ஒன்ருகவுள்ள பரமாத்ம ஸ்வரூ பத்தை மாயை முதல் ஜடப்பொருள் வரை வெவ்வேருன எல்லாப் பொருள்களிலும் வேற்றுமையின்றியும், ஆகாயம் எல்லாப் பொருள்களிலும் நிறைந்திருக்கிறது போல் நிறைந்துள்ளதாயும், உண்மையான பொருள் ப்ரஹ்மமொன்றுதானெனவும், ப்ரஹ்மத்திற்காவது அதன் தர்மத்திற்காவது விகாரமில்லையெனவும் எந்த அறிவி னுல் அறிகிருனே அந்த அறிவு ஸாத்விகம் என அறி.

இப்படி அத்வைத ஞானம்தான் மோக்ஷத்திற்கு வழி. அதுவே ஸாத்விகம், த்வைதஞானம் மோக்ஷத்திற்கு வழியாகாது. அது ராஜஸம் என அறியவும்.

ஸ்ரீ ராமானுஜர்:— வர்ணுச்ரம பேதங்களினுல் மாறுபட்டுள்ள எல்லாப் பிராணிகளிடத்திலுமுள்ள ஆத்மா அப்படிப்பட்ட பேதத்தையுள்ளவனல்ல எனவும், ஆன்மா பிற பிராணிகளைப்போல் அல்லது பூதங்களைப் போல் பலவிதமாக இல்லாது ஒரே விதமாகவுள்ளவனென்றும், பூதங்கள் அழியக் கூடியவையானுலும், அவைகளிலுள்ள ஆன்மா அழியத்தக்கதல்லவெனவும் அல்லது பூதங்கள் வேறுபாட்டை யடைந்தாலும், ஆத்மா வேறுபாடு அடையாது, கர்மத்திலும் பயனிலும் பூதங்களுக்கு ஈடுபாடுண்டானுலும் ஆன்மாவிற்குக் கிடையாது. கர்மத்தின் கட்டாகிய ஸம்ஸார தெசையிலறிகிற இந்த அறிவு ஸாத்விகமானது. இதில் ஆத்மா ஜீவன் என்றயறித்தக்கது.

ஸ்ரீ ராகவேந்த்ரர்:— தனித்தனியாகவும், வேறுபாடுடையதும், எல்லா ஜீவப்பொருளிலுமுள்ள ஸர்வோத்தமனுகவும், அழிவற்றவனுகவும், எப்போதும் நிலையாகயிருப்பவனுகவும் விஷ்ணுவை எவன் அறிகிருனே அப்படி அறிவதான ஞானம் ஸாத்விகம்.

पृथक्त्वेन तु यज्ज्ञानं नानाभावान्पृथग्विधान् ।
वेत्ति सर्वेषु भूतेषु तज्ज्ञानं विद्धि राजसम् ॥ २१

ப்ருதக்த்வேன து யஜ்ஞானம் நாநபாவான்ப்ருதக்விதான் ।
வேத்தி ஸர்வேஷு பூதேஷு தஜ்ஞானம் வித்தி ராஜஸம் ॥

எல்லா பூதங்களிலுமிருக்கிற ஜீவர்களை உருவத்தினுல் வெவ்வேறென்றும், ஸுகம், துக்கம் முதலிய வேற்றுமைகளால் பலவிதமானவரென்றும், எந்த அறிவு தனித் தனியாக அறிகிறதோ அந்த அறிவு ராஜஸமெனத் தெரிந்துகொள்.

यत्तु कृत्स्नवदेकस्मिन्कार्ये सक्तमहैतुकम् ।
अतत्त्वार्थवदल्पं च तत्तामसमुदाहृतम् ॥ २२

யத்து க்ருத்ஸ்னவதேகஸ்மின்கார்யே ஸக்தமஹைதுகம் ।
அதத்த்வார்த்தவதல்பம் ச தத்தாமஸமுதாஹ்ருதம் ॥ 22

ஓர் உடலில் அல்லது பிரதிமையில், பரிபூர்ணத்திற் போல் (பரிபூர்ணமான ஆன்மாவில், பரிபூர்ணமெனவரும் அறிவைப்போல்), ஜீவனுவது, ஈச்வரனுவதுஇவ்வளவு தான் என்ற எண்ணத்தோடு கூடினவும், யுக்தியற்றதாக வும், உண்மையான பொருளை அறியாதவும் அற்பமான தாகவும் உள்ள ஞானம் தாமஸம் எனப்பட்டுள்ளது.

[एकस्मिन्कार्ये (ஏகஸ்மின்கார்யே) = (1) உடலில் ஜீவனும், வெளியிலுள்ள பிரதிமை முதலியவற்றில் ஈச்வரனும்—ஸ்ரீ சங்கரர். (2) பூதம், பிரேதம், பிசாசு முதலியவற்றின் பூஜை எனும் கர்மத்தில்—ஸ்ரீ ராமானுஜர். (3) कार्ये (கார்யே) ஜீவனுகிய தன்னிடத்தில்—ஸ்ரீ ராகவேந்நரர்.

कृत्स्नवत् (க்ருத்ஸ்னவத்) = (1) எல்லாப் பொருள் களும் ஈச்வரன் எனும் ஞானத்தைப்போல்—ஸ்ரீ சங்கரர். (2) பூர்ணமான பயனைக்கொடுக்குமென—ஸ்ரீ ராமானுஜர். (3) பரிபூர்ணமான ப்ரஹ்மமே தான் என்றறிகிறவும், பின்னும் ஜகத் ஸ்வரூபமே தான் என்று அறிகிறவும்—ஸ்ரீ ராகவேந்த்ரர்.

सक्तम् (ஸக்தம்) = (1) உடல் எவ்வளவோ அவ்வளவு தான் ஈச்வரனிருக்கிறுன், விக்ரஹங்கள் எவ்வளவோ அவ்வளவு தான் ஈச்வரன் இருக்கிறுன் என்றும் எண்ண முடைய—ஸ்ரீ சங்கரர். (2) அபிமானத்தோடு கூடியும்—ஸ்ரீ ராமானுஜர். (3) एकस्मिन् सक्तम् (ஏகஸ்மின் ஸக்தம்) = ஒரே ஜீவன், அவனே ப்ரஹ்ம ஸ்வரூபமென்று அறியும், அவனே ஜகத் ஸ்வரூபனென்றறிகிறவும்—ஸ்ரீராகவேந்த்ரர்.

अहैतुकम् (அஹைதுகம்) = (1) ஏன் அப்படியிருக்க வேண்டுமென்கிறதில் யுக்தியில்லாதும்—ஸ்ரீ சங்கரர். (2) முழுதுமான பயனைக்கொடுக்குமென்கிறதில் தகுந்த முகாந்திரமற்றதாயும்—ஸ்ரீ ராமானுஜர். (3) யுக்திக்கு பொருந்தாததும்—ஸ்ரீ ராகவேந்த்ரர்.

अतत्वार्थवत् (அதத்வார்த்தவத்) = (1) உண்மையற்ற விஷயத்தை யுடையவும்—ஸ்ரீ சங்கரர். (2) தான் (ஆத்மா) வர்ணங்களுடையவன் (அந்தணன் முதலிய வர்ணங்கள்) இல்லாவிடினும், உடையவனுக அறிவதும் —ஸ்ரீ ராமானுஜர். (3) பொய்யானதும்—ஸ்ரீ ராகவேந்த்ரர்.

अल्पं च (அல்பம் ச) = (1) அற்ப விஷயமாயும், அற்பப்பயனுடையதாகவுள்ளதும்—ஸ்ரீசங்கரர். (2) அற்ப பயன் தருவதாகவும், அற்பமான தேவதையையறிகிறதாயு முள்ள—ஸ்ரீ ராமானுஜர். (3) பலவித அறிவின்மையுடன் கூடியதாகவும் – ஸ்ரீ ராகவேந்த்ரர்.]

नियतं सङ्गरहितमरागद्वेषतः कृतम् ।
अफलप्रेप्सुना कर्म यत्तत्सात्त्विकमुच्यते ॥ २३

நியதம் ஸங்கரஹிதமராகத்வேஷத: க்ருதம் ।
அஃபலப்ரேப்ஸுனு கர்ம யத்தத்ஸாத்விகமுச்யதே ॥ 23

நித்யமாகச் செய்யவேண்டியதான எந்தக் கர்மம் பலாபேக்ஷையில்லாதவனுல் அபிமானமில்லாதும், ஆசை, வெறுப்புமின்றியும், செய்யப்பட்டதோ, அக் கர்மம் ஸாத்விகமெனச் சொல்லப்படுகிறது.

[अरागद्वेषत: (அராகத்வேஷத:) = (1) மகன் முதலியோரிடத்தில் ஆசையாலோ, எதிரிகளிடத்தில் வெறுப்பினுலோ செய்யப்படாது—ஸ்ரீதரர். (2) புகழ் தேடவேண்டுமெனவும், அபகீர்த்தி வரக்கூடாதெனவும் —ஸ்ரீ ராமானுஜர், ஸ்ரீ ராகவேந்த்ரர்.]

यत्तु कामेप्सुना कर्म साहंकारेण वा पुनः ।
क्रियते बहुलायासं तद्राजसमुदाहृदम् ॥ २४

யத்து காமேப்ஸுநா கர்ம ஸாஹங்காரேண வா புந: ।
க்ரியதே பஹுலாயாஸம் தத்ராஜஸமுதாஹ்ருதம் ॥ 24

பயனில் விருப்பமுள்ளவனாலாவது, தான் கர்த்தா வென்ற அஹங்காரமுள்ளவனாலாவது அதிக முயற்சியுடன் செய்யப்படும் கர்மம் ராஜஸமெனப்படுகிறது.

अनुबन्धं क्षयं हिंसामनपेक्ष्य च पौरुषम् ।
मोहादारभ्यते कर्म यत्तत्तामसमुच्यते ॥ २५

அநுபந்தம் க்ஷயம் ஹிம்ஸாமனபேக்ஷ்ய ச பௌருஷம் ।
மோஹாதாரப்யதே கர்ம யத்தத்தாமஸமுச்யதே ॥ 25

இனி நமக்குண்டாகக் கூடிய நன்மை, தீமைகளையும் பொருளழிவையும், பிறருக்குண்டாகும் துன்பத்தையும், எண்ணிப்பாராது, அறிவின்மையால் எந்தக் கர்மம் ஆரம்பிக்கப்படுகிறதோ, அது தாமஸமெனச் சொல்லப் படுகிறது.

मुक्तसङ्गोऽनहंवादी धृत्युत्साहसमन्वितः ।
सिद्ध्यसिद्ध्योर्निर्विकारः कर्ता सात्त्विक उच्यते ॥ २६

முக்தஸங்கோஅனஹம்வாதீ த்ருத்யுத்ஸாஹஸமன்வித: ।
ஸித்யஸித்யோர்நிர்விகார: கர்தா ஸாத்விக உச்யதே ॥ 26

பயன் கருதாமல், விருப்பைவிட்டு, தைர்யமும், விடா முயற்சியுமுள்ளவனான ஒருவனால் ஆரம்பிக்கப்பட்ட கர்மம், நிறைவேறினாலும், நிறைவேறாவிடினும், மகிழ்ச்சியோ, துயரமோ இல்லாதிருப்பவன் ஸாத்விக கர்த்தா எனப்படுகிறான்.

[अनहंवादी (அனஹம்வாதீ) = (1) தான் கர்த்தா வென்ற அபிமானத்தை விட்டவன்—ஸ்ரீ ராமானுஜர். (2) ஸர்வ கர்த்தா பகவான் என்ற நிச்சயத்தால், தான் கர்த்தப வென்ற அபிமானத்தை விட்டவன்—ஸ்ரீ ராகவேந்த்ரர்.]

सिद्ध्यसिद्ध्योः (ஸித்யஸித்யோ:) = கர்மத்தின் பயன் கிடைப்பினும், கிடைக்காவிடினும்.

निर्विकारः (நிர்விகார:) = சாஸ்திரப் பிரமாணத்தை நம்பி, பயனில் விருப்பமில்லாது ஈடுபடுவபனுயும் — ஸ்ரீசங்கரர்.]

रागी कर्मफलप्रेप्सुर्लुब्धो हिंसात्मकोऽशुचिः ।
हर्षशोकान्वितः कर्ता राजसः परिकीर्तितः ॥ २७

ராகீ கர்மபலப்ரேப்ஸுர்லுப்தோ ஹிம்ஸாத்மகோஅசுசி: ।
ஹர்ஷசோகான்வித: கர்தா ராஜஸ: பரிகீர்தித: ॥ 27

அபிமான, கர்மப் பயனிலாசை, பிறர் செல்வத்தில் விருப்பம், பிறருக்கு ஹிம்ஸை செய்யுமியல்பு இவை களுடன் கூடியவனுயும் ஆசார மற்றவனுயும், மகிழ்ச்சி துயரமுள்ளவனுயுமுள்ள கர்த்தா ராஜஸனெனச்சொல்லப் படுகிருன்.

[लुब्धः (லுப்த:) = (1) பிறர் செல்வத்திலாசையுடை யவன் அல்லது தன் செல்வத்தை வேள்வி முதலியவற்றில் செலவிட மனமில்லாதவன்—ஸ்ரீ சங்கரர். (2) கர்மத்திற்கு வேண்டிய திரவியத்தைச் செலவிட மனமில்லாதவன் —ஸ்ரீ ராமானுஜர், ஸ்ரீ ராகவேந்த்ரர்.

अशुचिः (அசுசி:) = (1) உள்ளும், புறம்பும் தூய்மை, யில்லாதவன்—ஸ்ரீ சங்கரர். (2) திரவிய சுத்தமில்லாதவன் —ஸ்ரீ ராகவேந்த்ரர்.]

अयुक्तः प्राकृतः स्तब्धः शठो नैष्कृतिकोऽलसः ।
विषादी दीर्घसूत्री च कर्ता तामस उच्यते ॥ २८

அயுக்த: ப்ராக்ருத: ஸ்தப்த: சடோ நைஷ்க்ருதிகோஅலஸ: ।
விஷாதீ தீர்கஸூத்ரீ ச கர்தா தாமஸ உச்யதே ॥ 28

நிலையற்ற மனமுடையவனும், விவேக மற்றவனுயும், வணக்க மற்றவனுயும், மோசக்காரனுகவும், பிறரை அவமானப்படுத்துபனுகவும், சோம்பலுள்ளவனுகவும், துயரமுள்ளவனுயும், காலதாமதம் செய்பவனுயும் இருக்கும் கர்த்தா தாமஸனெனச் சொல்லப்படுகிருன்.

[शठः (சட:)=(1) மாயாவி—ஸ்ரீ சங்கரர். (2) ஆபிசாரம் (சூன்யம்) செய்வதில் ஆசையுள்ளவன்—ஸ்ரீ ராமானுஜர். (3) வஞ்சகன்—ஸ்ரீ ராகவேந்த்ரர்.

नैष्कृतिकः (நைஷ்க்ருதிக:)=(1) வஞ்சகன்—ஸ்ரீசங்கரர். (2) கெட்ட கார்யம் செய்பவன்—ஸ்ரீ ராகவேந்த்ரர்.

बुद्धेर्भेदं धृतेश्चैव गुणतस्त्रिविधं शृणु ।
प्रोच्यमानमशेषेण पृथक्त्वेन धनंजय ॥ २९

புத்தேர்பேதம் த்ருதேஸ்சைவ குணதஸ்த்ரிவிதம் ச்ருணு ।
ப்ரோச்யமானமசேஷேண ப்ருதக்த்வேன தனஞ்ஜய ॥ 29

தனஞ்ஜயா! ஸத்வம் முதலிய குணங்களால் மூன்று விதமாகவும், முழுவதாகவும், தனித்தனியாகவும், சொல்லப்படப்போகிறதாகவும், தைர்யத்தினுடையவும் வேற்றுமையைக்கேள்.

प्रवृत्तिं च निवृत्तिं च कार्याकार्ये भयाभये ।
बन्धं मोक्षं च या वेत्ति बुद्धिः सा पार्थ सात्त्विकी ॥ ३०

ப்ரவ்ருத்திம் ச நிவ்ருத்திம் ச கார்யாகார்யே பயாபயே ।
பந்தம் மோக்ஷம் ச யா வேத்தி புத்தி: ஸா பார்த்த ஸாத்விகீ ॥

ஓ! பார்த்தா! தர்மத்தில் (சாஸ்திரத்தில் சொல்லப் பட்ட கார்யத்தில்) ஈடுபடுதலையும், அதர்மத்திலிருந்து விடுபடுதலையும் (செய்யத்தக்க, செய்யத்தகாத) கார்யங்கள், கார்யமல்லாதவைகளையும், பயம், பயமின்

மையையும், கட்டுறுதல், மோக்ஷம் இவை எத்தகைய தென்பதையும் எந்த புத்தி அறிகிறதோ அதுவே ஸாத்விக புத்தி.]

यया धर्ममधर्मं च कार्यं चाकार्यमेव च ।
अयथावत्प्रजानाति बुद्धिः सा पार्थ राजसी ॥ ६१

யயா தர்மமதர்மம் ச கார்யம் சாகார்யமேவ ச ।
அயதாவதப்ரஜாநதி புத்தி: ஸா பார்த்த ராஜஸி ॥ 31

ஓ அர்ஜுன! எந்த புத்தியினுல் தர்மம், அதர்மம், செய்யத்தகாதவை, ஆகியவற்றை, உள்ளபடியல்லாது, ஸந்தேஹமாக அறிகிருனே, அந்த புத்தி ராஜஸமானது.

[अयथावत् (அயதாவத்) = (1) ஒவ்வொரு கார்யத்தி லும் நிச்சய புத்தியில்லாது—ஸ்ரீ சங்கரர். (2) இதில் சொல்லப்பட்ட தர்மங்களில் சிலவற்றை சரியாகவும், சிலவற்றை விபரீதமாகவும்—ஸ்ரீதரர்.]

अधर्मं धर्ममिति या मन्यते तमसावृता ।
सर्वार्थान्विपरीतांश्च बुद्धिः सा पार्थ तामसी ॥ ३२

அதர்மம் தர்மமிதி யா மன்யதே தமஸாவ்ருதா ।
ஸர்வார்த்தான்விபரீதாம்ஸ்ச புத்தி: ஸா பார்த்த தாமஸீ ॥ 32

அர்ஜுன! எந்த புத்தி அறிவின்மையால் மூடப்பட்டு, அதர்மத்தைத் தர்மமெனவும், எல்லாப்பொருள்களையும் ஒன்றை மற்றொன்ருகவும், அறிகிறதோ அந்த புத்தி தாமஸமானது (இருளடைந்தது).

[ஸ்ரீதரர்:— முன் இரண்டு ச்லோகங்களிலும் இதிலும் புத்தியென்பது அந்த:கரணம். ஞானமென்பது அதன் செயல், த்ருதியென்ருலும் புத்தியின் வ்யபொரமே, தர்மம், அதர்மம் ஆகியவற்றிற்குப் புத்தி, ஞானம், த்ருதி ஸாதனமாகையால், அவைகளைப்பற்றி மட்டும் இங்கு

சொல்லப்பட்டது. அதனுல் ஆசை (இச்சை) முதலிய வற்றையும் முக்குண முள்ளவைகளாகக் கொள்ள வேண்டியது.

ஸ்ரீ ராமாநுஜர் :— அறிவின்மையால் மூடப்பட்ட தாமஸ புத்தி, தர்மத்தை அதர்மமாகவும், இல்லாததை இருப்பதாகவும், இருக்கிறதை இல்லாததாகவும், உயர்ந்ததைத் தாழ்ந்ததாகவும், தாழ்ந்ததை உயர்ந்ததாக வும் இப்படி யாவற்றையும் வித்யாஸமாக அறிகிறது.]

धृत्या यया धारयते मनःप्राणेन्द्रियक्रियाः ।
योगेनाऽव्यभिचारिण्या धृतिः सा पार्थ सात्त्विकी ॥ ३३

த்ருத்யா யயா தாரயதே மன:ப்ராணேந்த்ரியக்ரியா: 1
யோகேனுவ்யபிசாரிண்யா த்ருதி: ஸா பார்த்த ஸாத்விகீ 11 33

ஓ பார்த்தா! மனம் ஒரே நிலையிலிருப்பதால், சலிக்காத எந்த தைர்யத்தினுல், மனம், பிராணன்கள், இந்த்ரியங்கள் (புலன்கள்) இவைகளின் செயல்களை ஒருவன் நிறுத்துகிருனே, அந்த தைர்யம் ஸாத்விகமானது.

[योगेन (யோகேன) = (1) யோகஸமாதியினுல் --ஸ்ரீ சங்கரர். (2) மோக்ஷத்திற்குக் காரணமான பகவானை உபாஸிப்பதினுல்—ஸ்ரீ ராமாநுஜர். (3) பகவத் பக்தி யுடன் கூடிய யோகத்தினுல்—ஸ்ரீ ராகவேந்த்ரர்.

धारयते (தாரயதே) = (1) மனம், பிராணன்கள், புலன்கள் இவைகளை விஷயங்களினின்று திருப்பி ஆத்மத்தியானத்தில் நிறுத்துகிருனே — ஸ்ரீ சங்கரர். (2) பகவதுபாஸனையில் நிலைக்கச் செய்கிருனே—ஸ்ரீ ராமா நுஜர்.]

यया तु धर्मकामार्थान्धृत्या धारयतेऽर्जुन ।
प्रसङ्गेन फलाकाङ्क्षी धृतिः सा पार्थ राजसी ॥ ३४

யயா து தர்மகாமார்த்தான்த்ருத்யா தாரயதேஅர்ஜுன 1
ப்ரஸங்கேன பலாகாங்க்ஷீ த்ருதி: ஸா பார்த்த ராஜஸீ 11 34

அர்ஜுனா! எந்த தைர்யத்தினால் தர்மார்த்த காமங்களைத் தவிரவிடுகிறதில்லையோ, தர்மார்த்த காமங்களின் பயனை விரும்புகிறவனாகிறானோ அந்த தைர்யம் ராஜஸமானது. (தர்மா தர்மங்கள் முக்யம், பயன் முக்யமல்லவெனக்கருத்து)

यया स्वप्नं भयं शोकं विषादं मदमेव च ।
न विमुञ्चति दुर्मेधा धृतिः सा पार्थ तामसी ॥ ३५

யயா ஸ்வப்னம் பயம் சோகம் விஷாதம் மதமேவ ச ।
ந விமுஞ்சதி துர்மேதா த்ருதி: ஸா பார்த்த தாமஸீ ॥ 35

ஓ பார்த்தா! கெட்ட புத்தியையுடைய ஒருவன், தூக்கம், பயம், துயரம், கவலை, மயக்கம் இவைகளை எந்த தைர்யத்தினால் விடுகிறதில்லையோ, அந்த தைர்யம் தாமஸமானது.

[ஸ்ரீ ராமானுஜர் :— பயம், சோகம் முதலியன எந்த விஷயங்களின் வழியே உண்டாகுமோ அவைகளை விடாதிருப்பது தாமஸ தைர்யம்.

ஸ்ரீ ராகவேந்த்ரர் :— மட்டமானவைகளான, கனவு முதலியவைகளை எந்த தைர்யத்தினால் விடுகிறதில்லையோ அந்த தைர்யம் தாமஸமானது.]

सुखं त्विदानीं त्रिविधं शृणु मे भरतर्षभ ।
अभ्यासाद्रमते यत्र दुःखान्तं च निगच्छति ॥ ३६

ஸுகம் த்விதானீம் த்ரிவிதம் ச்ருணு மே பரதர்ஷப ।
அப்யாஸாத்ரமதே யத்ர து:காந்தம் ச நிகச்சதி ॥ 36

यत्तदग्रे विषमिव परिणामेऽमृतोपमम् ।
तत्सुखं सात्त्विकं प्रोक्तमात्मबुद्धिप्रसादजम् ॥ ३७

யத்ததக்ரே விஷமிவ பரிணாமேஅம்ருதோபமம் ।
தத்ஸுகம் ஸாத்விகம் ப்ரோக்தமாத்மபுத்திப்ரஸாதஜம் ॥ 37

பரதச்ரேஷ்டா! மூன்று வகையான ஸுகத்தை என்னிடமிருந்து கேட்டுக்கொள். எதில் பழக்கத்தினுல் மகிழ்ச்சியையடைவானே, எந்த ஸுகம் ஆரம்பத்தில் விஷம்போன்றும், முடிவில் அமிர்தம் போன்றும் ஆகுமோ உண்மை ஸ்வரூபத்தின் ஞானத்தினுல் மன அழுக்குகள் நீங்கி, தூய்மையாக இருப்பதாலுண்டான அந்த ஸுகம் ஸாத்விகமானதாகச் சொல்லப்படுகிறது.

[अग्रे (அக்ரே) = (1) ஞான, வைராக்யத்யான ஸமாதிகளை அனுஷ்டிக்க ஆரம்பிக்கும் காலத்கில் —ஸ்ரீசங்கரர். (2) யோகாப்யாஸத்தில் தன் ஸ்வய ஸ்வரூபம் தெரியாமலிருக்குங் காலத்தில்—ஸ்ரீராமானுர்.

परिणामे (பரிணமே) = (1) ஞானம், வைராக்யமிவை களில் தேர்ந்தபின் — ஸ்ரீ சங்கரர். ஸ்வரூபானு ஸந்தானத்திலிருக்கையில்—ஸ்ரீ ராமனுஜர்.

आत्मबुद्धिप्रसादजम् (ஆத்ம புத்தி ப்ரஸாதஜம்) = (1) தூய்மையான, நிர்மலமான ஆத்ம ஸ்வரூப ஞானத்தினு லுண்டான அல்லது பூர்ணமான ஆத்ம ஸ்வரூபம் தவிர வேறு எதிலும் ஈடுபாடில்லாத ஞானம் பூர்ணமாகும் காலத்திலுண்டான—ஸ்ரீ சங்கரர். (2) ஆத்மஸ்வரூபமன்றி வேறு எதுவும் தோன்ருத புத்தியினுலுண்டான—ஸ்ரீ ராமா னுஜர். (3) விஷ்ணுவின் பிரஸாதத்தினுலுண்டான புத்தி, அது எதுவெனில், விஷ்ணுவைத்தவிர வேறு விஷயங்களை கிரஹிக்காமலிருப்பதாலுண்டான—ஸ்ரீ ராகவேந்த்ரர்.]

विषयेन्द्रियसंयोगाद्यत्तदग्रेऽमृतोपमम् ।
परिणामे विषमिव तत्सुखं राजसं स्मृतम् ॥ ३८

விஷயேந்த்ரியஸம்யோகாத்யத்ததக்ரேஅம்ருதோபமம் 1
பரிணமே விஷமிவ தத்ஸுகம் ராஜஸம் ஸ்ம்ருதம் 11 38

பிரஸித்தமான எந்த ஸுகம் விஷயம் புலன்களின் தொடர்பினுல் ஆரம்பத்தில் அமிழ்தத்திற்கு ஸமமாகவும் முடிவில் விஷத்தைப் போலுமிருக்குமோ அந்த ஸுகம் இராஜஸமெனப்படுகிறது.

[ஸ்த்ரீகளுடன் சேர்தல் போன்றவை ஆரம்பத்தில் ஸுகம் போலிருக்கும். பிறகு இஹம், பரம் ஆகியவற்றில் துயரையுண்டாக்கும். ஆகையால் விஷம் போன்றதாகச் சொல்லப்பட்டது—ஸ்ரீதரர். விஷய ஸுகம், (தன்மனைவி முதலியவற்றில்) வலிமை, ரூபம், அறிவு, ஞாபகசக்தி, பணம், ஊக்கம் முதலியவைகளைப்போக்கடித்துவிடும். பிற ஸ்த்ரீகளிடம் சேர்வதால், பாவப்பயனை நரகத்திற்குக் காரணமாகும். எனவே விஷமாகச் சொல்லப்பட்டது—ஸ்ரீ சங்கரர். பசி முதலியவற்றின் நிவ்ருத்திக்காக விஷயங்களை அனுபவித்த பின் அந்த அனுபவம் நரகத்திற்குக்காரணமானதால் விஷம் உண்டது போலிருக்குமெனக்கருத்து—ஸ்ரீ ராமானுஜர்.]

यदग्रे चानुबन्धे च सुखं मोहनमात्मनः ।
निद्रालस्यप्रमादोत्थं तत्तामसमुदाहृतम् ॥ ३९

யதக்ரே சானுபந்தே ச ஸுகம் மோஹனமாத்மன: ।
நித்ராலஸ்யப்ரமாதோத்தம் தத்தாமஸமுதாஹ்ருதம் ॥ 39

எந்த ஸுகம் துவக்கத்திலும், முடிவிலும், தனக்குப் புத்தி மாராட்டத்தை (மோஹத்தை) உண்டாக்குவதாகவும், தூக்கம், சோம்பல், உபயோகமற்ற விஷயங்களைக் குறித்து மனதில் எண்ணும் வீண் யோஜனை, இவைகளினுலுண்டாகும் அந்த ஸுகம் தாமஸமெனச் சொல்லப்படுகிறது.

[निद्रालस्यप्रमादोत्थम् (நித்ராலஸ்யப்ரமாதோத்தம்) = (1) தூக்கம் அதை அனுபவிக்கும் (தூங்கும்) காலத்தில் பொருள்களைத்தெரியவொட்டாது செய்யும். சோம்பல் புலன்களை விஷயங்களில் ஈடுபடாது நிறுத்தி, பொருள்களைத் தெரியாது செய்யும். ப்ரமாதம் எனும் வீண் யோஜனை, மனம் செய்ய வேண்டியதைச்செய்யாது தடுத்து, பொருள்களின் உண்மை உருவைத் தெரியாது செய்யும். ஆதலால் இவைகளாலுண்டாகும் ஸுகம் தாமஸமானது—ஸ்ரீ ராமானுஜர். (2) ப்ரமாதம் என்ருல்

உண்மையாக எடுத்துக்கொள்ளத்தக்க எதையும் கெட்ட வழியில் (விபரீதமாக) எடுத்துக்கொள்வது—ஸ்ரீ ராகவேந்த்ரர்.]

न तदस्ति पृथिव्यां वा दिवि देवेषु वा पुनः ।
सत्त्वं प्रकृतिजैर्मुक्तं यदेभिः स्यात्त्रिभिर्गुणैः ॥ ४०

ந ததஸ்தி ப்ருதிவ்யாம் வா திவி தேவேஷு வா புன: ।
ஸத்வம் ப்ரக்ருதிஜைர்முக்தம் யதேபி: ஸ்யாத்த்ரிபிர்குணை: ॥

மாயையிலிருந்துண்டான ஸத்வம் முதலிய முக்குணங்களால் விடப்பட்ட (குண ஸம்பந்தமில்லாத) அசைவற்ற, அசைவனவான பொருள் மானிடவுலகில் மானிடர் முதலியவர்களிலாவது, ஸ்வர்கத்தில் தேவதைகளிலாவது, மற்றும் எவ்விடத்திலாவது கிடையாது (ஸ்வர்க்கம் மற்றும் கீழ்பட்ட எவ்வுலகமும், ஸத்வ, ரஜஸ் தமோ குணங்களுடன் கூடினவையே.)

[ஸ்ரீ ராமானுஜர்:— பிரம்மா முதல் ஜடப்பொருள் வரை யாவத்தும் முக்குணங்களால் வியாபிக்கப் பட்டவையே.

ஸ்ரீ ராகவேந்த்ரர்:— மோக்ஷமடைந்தவர்களுக்கு, முக்குணத்தொடர்பில்லை எனக் காண்பிக்கவே, மானிடவுலகிலும், தேவலாகத்திலும். குணங்களின் தொடர்பற்ற ஜீவ ஜந்துக்களில்லையெனச் சொல்லப்பட்டதாகக் கொள்ளவேண்டும்]

ब्राह्मणक्षत्रियविशां शूद्राणां च परंतप ।
कर्माणि प्रविभक्तानि स्वभावप्रभवैर्गुणैः ॥ ४१

ப்ராஹ்மணக்ஷத்ரியவிசாம் சூத்ராணும் ச பரம்தப ।
கர்மாணி ப்ரவிபக்தானி ஸ்வபாவப்ரபவைர்குணை: ॥ 41

அர்ஜுனு ! அந்தணர், க்ஷத்திரியர், வைச்யர், சூத்ரர் ஆகிய நான்கு வர்ணத்தாருக்கு முன் கர்ம வினையா லுண்டான ஸத்வம் முதலிய முக்குணங்களால் கர்மம் தனித்தனியாகப் பிரித்துச் சொல்லப்பட்டுள்ளன.

[ஸ்ரீதரர்:— எல்லாம் குணத்தினுல் சூழ்ப்பட்டதானுல் மோக்ஷமடைய வர்ணு ச்ரமத்திற்கேற்ப கர்மங்களை ஈச்வராரதனமாகவே செய்துவந்தால் அந்த ப்ரஸாதத் தால் ஞானமடைந்து, அதனுல் மோக்ஷமடையலாம் என ஆரம்பம் முதல் கடைசி வரை இந்த பகவத் கீதையில் சொல்லப்படுகிறது.]

शमो दमस्तपः शौचं क्षान्तिरार्जवमेव च ।
ज्ञानं विज्ञानमास्तिक्यं ब्रह्मकर्म स्वभावजम् ॥ ४२

சமோ தமஸ்தப: சௌசம் க்ஷாந்திரார்ஜவமேவ ச l
ஞானம் விஞானமாஸ்திக்யம் ப்ரஹ்மகர்ம ஸ்வபாவஜம் ll 42

மனதையடக்குதலும், வெளிப்புலன்களை யடக்கு தலும், தவமும், மனத் தூய்மை, உடல் தூய்மையும், பொறுமையும், நேர்மையும், சாஸ்திர அறிவும், அனுபவ ஞானமும், வேதத்தில் நம்பிக்கையும் இயல்பாகவுண் டான அந்தணரின் கர்மங்களாம்.

[शमः (சம:) = (1) பகவன் நிஷ்டை—ஸ்ரீ ராகவேந்த்ரர். (2) வெளி இந்த்ரியங்களை அடக்குதல்—ஸ்ரீ ராமானுஜர்.

दमः (தம:) = (1) புலன்களை (இந்திரியங்களை) யடக்குதல்—ஸ்ரீராகவேந்த்ரர். (2) அந்தக்கரணத்தை யடக்குதல்—ஸ்ரீ ராமானுஜர்.

तपः (தப:) = போகங்களையடக்கி சாஸ்திரத்தில் கூறியபடி உடலை வருத்துதல்—ஸ்ரீ ராமானுஜர்.

आर्जवम् (ஆர்ஜவம்) = (1) உள்ளும், புறமும் ஒத்து நடப்பது—ஸ்ரீ ராமானுஜர். (2) மனம், வாக்கு, காயம் மூன்றும் ஒரே விதமாகச் செயல்படல்—ஸ்ரீ ராகவேந்த்ரர்.

ज्ञानं (ஞானம்)=(1) பராபரதத்வஞானம்—ஸ்ரீ ராமானுஜர். (2) ஸாதாரண வஸ்து ஞானம்—ஸ்ரீராகவேந்த்ரர்.

आस्तिक्यं (ஆஸ்திக்யம்) = (1) பரலோக முண்டென்ற நிச்சயம்—ஸ்ரீதரர். (2) அனந்த கல்யாண குணங்களுடைய, முக்ய வேதாந்த சாஸ்திரங்களால் அறியத்தக்க, ஜகத்தின் முக்ய காரணமான, ஆதாரமான, நியாமகரான பகவானை ஆராதிக்க, வேதங்களில் கூறப்பட்ட கர்மங்களால் ஆராதிக்கப்பட்ட பகவானே தர்மார்த்த காம மோக்ஷ பலங்களை கொடுப்பவர் என்ற எலலா வேதப் பொருளிலும் நம்பிக்கை—ஸ்ரீ ராமானுஜர்]

शौर्यं तेजो धृतिर्दाक्ष्यं युद्धे चाप्यपलायनम् ।
दानमीश्वरभावश्च क्षात्रं कर्म स्वभावजम् ॥ ४३

சௌர்யம் தேஜோ த்ருதிர்தாக்ஷ்யம் யுத்தே சாப்யபலாயனம் ।
தானமீச்வரபாவஸ்ச க்ஷாத்ரம் கர்ம ஸ்வபாவஜம் ॥ 43

பராக்ரமம், புகழ், தைர்யம், ஸாமர்த்யம், போரில் பின் வாங்காமை, தானம் கொடுப்பது, அரசாளும் சக்தி இவை க்ஷத்திரியருக்கு ஸ்வபாவமாகவுள்ள கர்மங்கள்.

[दाक्ष्यं (தாக்ஷ்யம்)=(1) நல்ல தருணத்தில் மோஹமடையாது உடனே செய்வது—ஸ்ரீ சங்கரர். (2) எல்லாக் கார்யங்களையும் தானே நிர்வகிக்கும் திறமை—ஸ்ரீ ராமானுஜர். (3) ஸாமர்த்யம்—ஸ்ரீ ராகவேந்த்ரர்.]

कृषिगौरक्ष्यवाणिज्यं वैश्यकर्म स्वभावजम् ।
परिचर्यात्मकं कर्म शूद्रस्यापि स्वभावजम् ॥ ४४

க்ருஷிகௌரக்ஷ்யவாணிஜ்யம் வைச்யகர்ம ஸ்வபாவஜம் ।
பரிசர்யாத்மகம் கர்ம சூத்ரஸ்யாபி ஸ்வபாவஜம் ॥ 44

பயிரிடுவதும் மாடுகளைக் காப்பதும், வியாபாரம் செய்வதும் வைசியரின் இயல்பான கர்மங்கள். பிற மூன்று வர்ணத்தாருக்கும் பணிவிடை செய்வது சூத்ரர்களின் இயல்பான கர்மங்கள்.

स्वे स्वे कर्मण्यभिरतः संसिद्धिं लभते नरः ।
स्वकर्मनिरतः सिद्धिं यथा विन्दति तच्छृणु ॥ ४५

ஸ்வே ஸ்வே கர்மண்யபிரத: ஸம்ஸித்திம் லபதே நர: ।
ஸ்வகர்மநிரத: ஸித்திம் யதா விந்ததி தச்ச்ருணு ॥ 45

அந்த அந்த வர்ணத்தாருக்கு விதிக்கப்பட்டுள்ள கர்மத்தில் ஊக்கமுடைய மனிதன் ஞானத்திற்கான தகுதியை யடைகிறான். தனக்குரிய கர்மானுஷ்டானத்தி லிருப்பவன் எப்படி ஞானத்திற்கான தகுதியை யடைகிறான் என்பதைச் சொல்கிறேன் கேள்.

[संसिद्धिं (ஸம்ஸித்திம்) = (1) கர்மானுஷ்டானத்தினால் அசுசி (தூய்மையற்றது) விடுபட்டு, உடல், புலன்களுக்கு ஞான நிஷ்டைத் தகுதியை—ஸ்ரீ சங்கரர். (2) பரமபத ப்ராப்தியை — ஸ்ரீ ராமானுஜர். (3) ஞானத்தின் மூலம் முக்தியை—ஸ்ரீ ராகவேந்த்ரர்.]

यतः प्रवृत्तिर्भूतानां येन सर्वमिदं ततम् ।
स्वकर्मणा तमभ्यर्च्य सिद्धिं विन्दति मानवः ॥ ४६

யத: ப்ரவ்ருத்திர்பூதானாம் யேன ஸர்வமிதம் ததம் ।
ஸ்வகர்மணா தமப்யர்ச்ய ஸித்திம் விந்ததி மானவ: ॥ 46

எந்த அந்தர்யாமியான (ஊடுருவி நிற்கும்) ஈச்வர னிடமிருந்து பிராணிகளுக்கு ப்ருவ்ருத்தி (செயலில் ஈடு பாடு) உண்டாகிறதோ, எந்த ஈச்வரனால் இந்த ப்ரபஞ்சம் முழுதும் வியாபிக்கப்பட்டுள்ளதோ, அந்த ஈச்வரனை மனிதன் தனக்குரிய கர்மத்தினாலாராதித்து, ஞானத்திற் கான தகுதியையடைகிறான்.

[स्वकर्मणा (ஸ்வகர்மணா) = (1) அவ்வந்தவர்ணாச்ரமத் திற் குரிய வேதத்தில் சொல்லப்பட்ட கர்மத்தினால்— ஸ்ரீ சங்கரர். (2) சமதமாதிகளுடன் கூடிய கர்மத்தால் —ஸ்ரீ ராமானுஜர்.

श्रेयान्स्वधर्मो विगुणः परधर्मात्स्वनुष्ठितात् ।
स्वभावनियतं कर्म कुर्वन्नाप्नोति किल्बिषम् ॥ ४७

ச்ரேயான் ஸ்வதர்மோ விகுண: பரதர்மாத் ஸ்வனுஷ்டிதாத் ।
ஸ்வபாவநியதம் கர்ம குர்வன்னுப்னேதி கில்பிஷம் ॥ 47

தன் வர்ணுச்ரமத்திற்குரியதென விதிக்கப்பட்டிருக்கும் கர்மம் குணமற்றதாகக் காணப்பட்டாலும் கிரமமாகப் பின்பற்றப்படும் பிறருடைய தர்மத்தைக்காட்டிலும் (கர்மத்தைக் காட்டிலும்) மேலானது. இயல்பாக ஏற்பட்ட கர்மத்தைச் செய்பவன் பாவத்தை அடையமாட்டான். (இதனுல் தன் தர்மத்தை விட்டு பிறர் தர்மத்தை அனுஷ்டிப்பவன், தன் தர்மத்தை விட்ட பாவத்தையும், பிறருடைய தர்மத்தை அனுஷ்டித்ததாலுண்டாகும் பாவத்தையும் அடைகிருனென்று கருத்து.)

[ஸ்ரீ சங்கரர் :— விஷத்திலுள்ள புழுக்களுக்கு விஷம் எப்படி கெடுதியாகாதோ, பிற பிராணிகளுக்கு எப்படி விஷம் கெடுதியாகுமோ, அப்படியே பிறர் கர்மம் தோஷமாஞலும், தன் கர்மம் அப்படியல்ல.

ஸ்ரீதரர் :— க்ஷத்ரியனுன உனக்கு யுத்தம் செய்து கொல்வது ஸ்வதர்மமாயும், பிச்சையெடுத்துண்பது பிறர் தர்மமாகுமென்பதை பகவான் அர்ஜுனனுக்கு குறித்துக் காட்டுகிறதாகிறது.

ஸ்ரீ ராமானுஜர் :— இந்த ச்லோகத்தின் கருத்தாவது கர்மயோகம் ஸுலபமானது. ஏனெனில் எப்போது உடல் உண்டாயிற்ருே அது முதல் கர்மம் செய்து பழக்கம் ஏற்பட்டிருக்கிறது. ஞான யோகமோ புலன்கள், மனம் இவைகளையடக்கிச்செய்ய வேண்டியதாக இருப்பதால், அதிக முயற்சியும் காலமும் தேவையாகிறது. எனவே அதைக்காட்டிலும் பயனில் ஆசையைவிட்டும். அபிமானமின்றியும், ஈச்வரார்ப்பண புத்தியுடன் செய்யப்படும் கர்மயோகம் மேலானது. இதனுல் ஞானமும் ஞானத்தினுல் மோக்ஷமும் சீக்கிரமாக உண்டாகும்.]

सहजं कर्म कौन्तेय सदोषमपि न त्यजेत् ।
सर्वारम्भा हि दोषेण धूमेनाग्निरिवावृताः ॥ ४८

ஸஹஜம் கர்ம கௌந்தேய ஸதோஷமபி ந த்யஜேத் ।
ஸர்வாரம்பா ஹி தோஷேண தூமேநாக்னிரிவாவ்ருதா: ॥ 48

குந்தியின் மகனே! இயல்பாகவுள்ள கர்மத்தை தோஷத்துடன் கூடியதானுலும் விட்டுவிடக்கூடாது. நெருப்பு எப்படி புகையினுல் சூழப்பட்டிருக்குமோ அதுபோல் எல்லாக் கர்மங்களும் தோஷங்களால் சூழப்பட்டுள்ளன.

[ஸ்ரீ சங்கரர் :— தோஷத்துடன் கூடிய கர்மத்தையும் ஏன் அனுஷ்டிக்க வேண்டுமென்ருல் கர்மத்தைவிட்டு மனிதன் ஒரு வினடி கூட இருக்கமுடியாது என முன்பே சொல்லப்பட்டது. கர்மம் குறைபாடுகளுடனிருக்கையில் பிறர் கர்மத்தை அனுஷ்டித்தாலென்ன என்ருல் பிறர் கர்மத்தை அனுஷ்டிப்பதால் கேடு நேரிடுமென முன்னதாகச் சொல்லப்பட்டது. ப்ரஹ்மஞானி கர்மங்களை விட்டுவிடமுடியும். ஆனுல் மற்றவர் கர்மங்களை விடக் கூடாது.

ஸ்ரீ ராமானுஜர் :— துயர்தருவதானுலும், கர்மம் செய்வது எளிதாகையால், ஞான வழியைப் பின்பற்ற தகுந்தவனுகிலும், கர்மத்தைச் செய்யாதுவிடக்கூடாது. நெருப்புடன் புகை பிறந்திருப்பதுபோல், கர்மமும், ஞானமும் துயரத்துடன் பிறந்திருப்பினும், கர்மயோகம் எளிதெனவும், ஞான யோகம் கடினமெனவும் கருத்து.]

असक्तबुद्धिः सर्वत्र जितात्मा विगतस्पृहः ।
नैष्कर्म्यसिद्धिं परमां संन्यासेनाधिगच्छति ॥ ४९

அஸக்தபுத்தி: ஸர்வத்ர ஜிதாத்மா விகதஸ்ப்ருஹ: ।
நைஷ்கர்ம்யஸித்திம் பரமாம் ஸன்யாஸேனுதிகச்சதி ॥ 49

எல்லாப் பொருள்களையும் அபிமானமுடைய புத்தியை யுடையவனும், மனதை ஜயித்தவனும், பயனிலாசையில்லாதவனுமான மனிதன், பயனையும், அபிமானத்தையும் விட்டுவிடும் ஸன்யாஸத்தினுல், மேலான ஸர்வ கர்ம நிவ்ருத்தியாகிய (எல்லாக் கர்மங்களிலிருந்தும் விடுபடுவதாகிய) சித்த சுத்தியையடைகிருன்.

[सर्वत्र (ஸ்ர்வத்ர) = (1) பிள்ளை, நண்பன், செல்வம் முதலியவற்றில் — ஸ்ரீ சங்கரர். (2) கர்மப்பயன் முதலியவற்றில்—ஸ்ரீ ராமானுஜர்.

[असक्तबुद्धिः (அஸக்தபுத்தி:) = (1) தன்னுடையதெனும் அபிமானத்தைவிட்ட புத்தியை யுடையவன் —ஸ்ரீ சங்கரர். (2) அபிமானமில்லாத புத்தியை யுடையவன் —ஸ்ரீ ராமானுஜர்.

विगतस्पृहः (விகதஸ்ப்ருஹ:) = (1) மகன் முதலியவற்றில் ஆசையற்ற ஆத்மஞானி—ஸ்ரீ சங்கரர். (2) தான் கர்த்தாவல்ல, ஈச்வரனே எல்லாவற்றிற்கும் கர்த்தாவெனத் தெரிந்து கர்த்ருத்வாபிமானத்தைவிட்டவனும் —ஸ்ரீ ராமானுஜர். (3) இம்மை, மறுமை ஸுகத்தில் ஆசையை விட்டவன்—ஸ்ரீ ராகவேந்த்ரர்.

परमां (பரமாம்) = (1) சிரேஷ்டமான — ஸ்ரீ சங்கரர். (2) உத்தமமான—ஸ்ரீ ராமானுஜர். (3) பூர்ணமான— ஸ்ரீ ராகவேந்தரர்.

नैष्कर्म्यसिद्धिं (நைஷ்கர்ம்யஸித்திம்) = (1) ஞான நிஷ்டையை அல்லது அதே விஞடியில் ப்ரஹ்ம ஸ்வரூபமாவது—ஸ்ரீ சங்கரர். (2) ஞான யோகத்தின் பலனுன ஸர்வ கர்மங்களுமற்றுப்போன ஞான நிஷ்டையை— ஸ்ரீ ராமானுஜர். (3) மோக்ஷத்திற்குபயோகமான ப்ராரப்தம் தவிர மற்ற அநிஷ்ட கர்ம நாசத்தை —ஸ்ரீராகவேந்த்ரர்.

सन्यासेन (ஸன்யாஸேன) = (1) செம்மையாகவடைந்துள்ள ப்ரஹ்மஞானத்தினுல் அல்லது ப்ரஹ்மஞானமுண்டாகி எல்லாக் கர்மங்களையும் விட்டதால்—ஸ்ரீ சங்கரர். (2) அபிமானம், பயன் இவைகளை விடுவதான ஸன்யாஸத்தோடு கூடின மனிதன் மேற்கண்டபடி ஈச்வராராதனைரூபமான கர்மங்களைச்செய்து வந்தால்—ஸ்ரீ ராமானுஜர். (3) காம்ய கர்மத்தியாகத்தால் அல்லது கர்மத்தை ஈச்வரார்ப்பணமாகச் செய்வதால்—ஸ்ரீ ராகவேந்த்ரர்.]

सिद्धिं प्राप्तो यथा ब्रह्म तथाप्नोति निबोध मे ।
समासेनैव कौन्तेय निष्ठा ज्ञानस्य या परा ॥ ५०

ஸித்திம் ப்ராப்தோ யதா ப்ரஹ்ம ததாப்னோதி நிபோத மே ।
ஸமாஸேனைவ கௌந்தேய நிஷ்டா ஞானஸ்ய யா பரா ॥ 50

ஓ குந்தியின் மகனே! ப்ரஹ்மஞானத்தின் முடிவு எதுவோ, ப்ரஹ்மஞான ஸித்தியை யடைந்தவன் எவ்விதம் ப்ரஹ்மத்தையடைவானே அந்த விதத்தைச் சுருக்கமாக என்னிடமிருந்து தெரிந்து கொள்.

[सिद्धिं (ஸித்திம்) = (1) பயன் கருதாக் கர்மத்தினுல் ஈச்வரனை ஆராதித்து உடல், புலன்களுக்கு ஈச்வரனின் அருளாலுண்டான ஞான நிஷ்டாத் தகுதியை-ஸ்ரீசங்கரர். (2) உடலிருக்கும் வரை செய்யப்பட்ட கர்மயோகத்தினுல் அடைந்தத் தியான சக்தியை—ஸ்ரீ ராமானுஜர்.

ஸ்ரீ சங்கரர் இந்த ச்லோகத்திற்கு விரிவாக எழுதியுள்ள விரிவுரையின் சுருக்கமான ஸாரம் :—

இன்ன பொருள் இந்தவிதமாகயிருக்கிறதென்கிற அறிவு ஞானமென்றும், அந்த ஞானத்தினுலறியப்பட்ட பொருளைத் தவிர பிற பொருள்களைப்பற்றி சிந்திக்காது, அந்தவறியப்பட்ட பொருளையே எப்போதும் தியானிப்பது 'நிஷ்டை' என்று சொல்லப்படும். கடிகாரம் போன்ற வஸ்துக்களுக்கு உருவமுள்ளது. அதைப்பற்றி

யறிந்து அதைப்பற்றியே சிந்தித்துப் பார்ப்பது அதைப் பற்றிய நிஷ்டை. ப்ரஹ்மஞானமும் இப்படித்தான் என்றாலும், ப்ரஹ்மத்திற்கு உருவம், உடல், அவயவங் கள், புலன்கள், மனம், ப்ராணன் முதலியன கிடையாது என்பது வேத வாக்யங்களால் சொல்லப்படுகின்றன. உருவம் முதலியன இல்லாத ப்ரஹ்மத்தை அறிவதும், அறிந்தபடி சிந்திப்பதும் (நிஷ்டை) எப்படி முடியு மென்றால், ப்ரஹ்மஞானம் என்பது ப்ருஹ்மத்தின் பரி மாணம் உருவம் முதலியனவற்றை அறிவதல்ல, ப்ரஹ்ம ஸ்வரூபத்தை அறிவதேயாகும். ஸ்வரூபம் என்றால் தன்மை, பரிமாணம், உருவம் இவை மாறுபடுபவை. ஸ்வரூபம் மாறாத்தன்மையே ப்ரஹ்மம். ப்ரஹ்மஸ்வரூபம் எதுஎனில் மலமற்றது, ஸூக்ஷ்மமானது, ஞானம் ஆனந்தம் முதலியனவே. இத்தகைய ப்ரஹ்மஸ்வரூபத்தின் அறிவை, குருவின் உபதேசத்தினால் அடைந்து, உலகை மறந்து, உபதேசிக்கப்பட்டபடி இடைவிடாது தியானம் செய்வதுதான் ப்ரஹ்ம நிஷ்டை எனப்படுகிறது. ஸாதாரண மனிதன் இந்த நிஷ்டையையடைவது கடினம். அறிவிலிகளுக்கு (அஞ்ஞானிகளுக்கு) ப்ரஹ்மம் ஆத்மாவைக் காட்டிலும் வேறாகவும், தூரத்திலிருப்பதாக வும், அந்த ப்ரஹ்மத்தைப்பற்றிய ஞானம் கிடைக்கக் கூடாததெனவும் தோன்றும். குருவின் உபதேசம் பெற்ற ஒருவன் தன் உடலை அரணியாகவும், பிரணவத்தை (ஓம் என்ற எழுத்தை) மத்தாகவும், செய்துகொண்டு கடைதலான தியானாப்யாஸத்தினால் காணப்படாமலிருக் கும் ப்ரஹ்மத்தை அறிவான். எள்ளில் எண்ணெயும், தயிரில் வெண்ணெயும், பூமிக்குள் ஜலமும், அரணியில் நெருப்பும், காணப்படாதிருந்தாலும் அவைகள் வெளிப் படுவதுபோல், உண்மையாலும், தவத்தாலும் தேடுபவ னுக்கு அவனுள்ளேயே ப்ரஹ்மம் விளங்கும் என ச்வேதாச்வதர உபநிஷத்தில் (முதல் அத்யாயத்தில் 14-15) சொல்லப்பட்டுள்ளது.

நல்ல குருவின் உபதேசம் பெறுதலும், விஷயங்களி லாசை, ப்ரஹ்மத்தைத் தெரிவிக்கும் ப்ரமாணங்களை

விசாரிக்காமை, அறிவின்மையால் பொருள்களில் கர்த்ருத்வாபிமானம், தன்னுடையது எனும் மமதை, இவைகளை உடைய எப்போதும் விபரீத புத்தியையுடையவர்களுக்கு உருவற்ற ப்ரஹ்மஸ்வரூபத்தின் அறிவு ஏற்படாது. ஆனால் நல்ல குருவின் உபதேசம் பெற்று, வேத சாஸ்திரங்களில் பயிற்சியடைந்து, ஆசை, தான் என்ற எண்ணம், என்னுடையது என்ற எண்ணம் ஆகியவற்றை விட்டு, ஆத்மாவைத் தவிர வேறு பொருள்களில்லை என்ற திட நம்பிக்கையுடன் முயல்பவனுக்கு ப்ரஹ்மத்தைப் பற்றிய அறிவு ஏற்படுவது மிக எளிது.

ஆத்மஸ்வரூப ஞானமேற்பட விஷயங்களெனும் வெளிப் பொருள்களில் ஆசையை விடவேண்டும். இப்படி விஷயவாஸனையை விட விஷயங்களில் வைராக்யம் (வேண்டாமை) ஏற்படவேண்டும். வைராக்ய மேற்பட வேதாந்த சாஸ்திரத்தைக் குருவின் மூலம் அறிந்து விஷயங்கள் அழியக் கூடியவையென அறியவேண்டும். ஆனால் ஆத்மஸ்வரூபம் விடத் தகுந்ததுமல்ல, அடையத் தகுந்ததுமல்ல. உடல் முதலியவற்றை ஆன்மாவெனத் தெரிந்துகொள்வது பிரமை (தப்பான எண்ணம்). உண்மையில் உடல் முதலியவை ஆன்மாவல்ல. ஆன்மாவை அறிய சாஸ்த்ர விசாரம் தேவையில்லை. உபாதியல்லது பிரமையை நீக்கவே சாஸ்திர அறிவு பயன்படும்.

ஒரு விளக்கை ஒரு பாத்திரத்தில் வைத்துவிட்டதால் அதன் ஒளிக்கோ, உருவத்திற்கோ யாதொரு குறைவு மேற்படுவதில்லை. ஆனால் தீபம் அங்கு இருப்பது சற்று தூரத்திலிருப்பவனுக்குத் தெரிவதில்லை. தீபத்தை மறைத்திருக்கும் பாத்திரத்தை (உபாதியை) நீக்கிவிட்டால் தீபம் பிரகாசிப்பது நமக்கு விளங்கும். விளக்கு மூடப்பட்டிருந்தாலும், திறந்திருந்தாலும் அதன் ஸ்வரூபத்திலோ பிரகாசத்திலோ மாறுதலில்லை. தீபத்தின் விஷயத்தில் முயற்சியொன்றும் தேவையில்லை. உபாதியான பாத்திரத்தை நீக்குவதில்தான் முயற்சி தேவை. அதே

போல் அறிவின்மையாலேற்படும் விஷய வாஸனையை (பற்றுதலை) நீக்கவே வேத சாஸ்திரங்களில் முயற்சி தேவையேயன்றி ஆத்மாவை அறிய முயற்சியொன்றும் தேவையில்லை.

பல பிறவிகளில் முயற்சித்துப் பழக்கத்தினுல் தானே அனுபவமடைந்து, அதனுல் ப்ரஹ்மத்தின் ஸ்வரூபம் விளங்கவேண்டுமே யன்றி ஸாதாரணமாக அறியக் கூடியதல்ல; நிரூபிக்கக்கூடியதுமல்ல. இப்படிச் சொல்வதால் ப்ரஹ்மம் இல்லை எனக்கொள்ளக்கூடாது. உதாரணமாக கற்கண்டைத் தின்றவன் அது இனிப் பானது எனச் சொல்லும்போது, அதைத் தின்றே பாராத வன் அது எப்படி எனக் கேட்டால் நிரூபிக்க முடியாதல் லவா? அது அனுபவத்தினுல் தான் தெரியமுடியும். அது போல் ப்ரஹ்மஸ்வரூபமும் அனுபவத்தினுலேயே அறியத் தக்கது, இனிப்பான ருசிக்கு உருவமில்லை யாஞலும் அது கற்கண்டில் இருப்பது எப்படி உண்மையோ அதுபோல ப்ரஹ்மஸ்வரூபமும் உண்மையே. அதை ஞானத்தினுல் அறிய வேண்டுமென்பதும், அந்த ஞான நிஷ்டையை யடைந்தவன் ப்ரஹஸ்வரூபமாகப் பிரகாசிப்பதும் உண்மையே. ப்ரவிமஞான நிஷ்டை ஓர் உருவம், ஒரு பரிமாணம் இவைகளைப் பற்றியதல்ல வென்பதும், அது எப்படிப்பட்டதென்பதும் உபநிடதங்களில் பல இடங்களில் சொல்லப்பட்டுள்ளன.]

बुद्ध्या विशुद्धया युक्तो धृत्यात्मानं नियम्य च ।
शब्दादीन्विषयांस्त्यक्त्वा रागद्वेषौ व्युदस्य च ॥ ५१

புத்த்யா விசுத்தயா யுக்தோ த்ருத்யாத்மானம் நியம்ய ச ।
சப்தாதீன்விஷயாம்ஸ்த்யக்த்வா ராகத்வேஷௌ
வ்யுதஸ்ய ச ॥ 51

विविक्तसेवी लघ्वाशी यतवाक्कायमानसः ।
ध्यानयोगपरो नित्यं वैराग्यं समुपाश्रितः ॥ ५२

விவிக்தஸேவீ லக்வாசீ யதவாக்காயமானஸ: ।
த்யானயோகபரோ நித்யம் வைராக்யம் ஸமுபாச்ரித: ॥ 52

अहंकारं बलं दर्पं कामं क्रोधं परिग्रहम् ।
विमुच्य निर्ममः शान्तो ब्रह्मभूयाय कल्पते ॥ ५३

அஹங்காரம் பலம் தர்பம் காமம் க்ரோதம் பரிக்ரஹம் ।
விமுச்ய நிர்மம: சாந்தோ ப்ரஹ்மபூயாய கல்பதே ॥ 53

தூய நிச்சயத்துடன் கூடியவனாக, தைர்யத்தினால் புத்தியை விஷயங்களிலிருந்து (இன்பத்திற்குறியவை களிலிருந்து) அடக்கியவனாக, சப்தம் முதலிய விஷயங் களை விட்டவனாக, விருப்புவெறுப்பற்றவனாக, தனிமை யான இடத்தில் இருக்கை, மிதமான உணவு, வாக்கு, உடல், மனம், எப்போதும் ப்ரஹ்மத் தியானத்தில் விருப்ப முள்ளது போன்றவையுடன் கூடியவன், விஷய வைராக்யத்தை (இன்பங்களில், ஆசையின்மை) அடைதல் மற்றும் நான் என்ற இறுமாப்பு, பிடிவாதம், கெட்ட வழிகளில் ஈடுபாடு, ஆசை, கோபம், அபிமானம், இவைகளை விடுதல், மமதை யற்றிருத்தல், ஒழிவடைந் திருத்தல். இத்தகைய குணங்கள் பொருந்தியவன் தானே ப்ரஹ்ம மென்ற நிச்சய ஞானத்துடனிருப்பதற்குத் தகுதியுடையவனாக இருக்கிறான்.

51. [विशुद्धया (விசுத்தயா) = (1) मायारहितया (மாயாரஹிதயா) = கபடமற்ற—ஸ்ரீ சங்கரர். (2) ஆத்ம ஸ்வரூபத்தை க்ரஹிக்கிற—ஸ்ரீ ராமானுஜர். (3) விஷயத் தில் பற்றுதலற்ற—ஸ்ரீ ராகவேந்த்ரர்.

आत्मानं (ஆத்மானம்) = (1) கார்ய காரண உருவான அந்தஃகரணத்தை—ஸ்ரீ சங்கரர். (2) மனதை—ஸ்ரீ ராமா னுஜர், ஸ்ரீ ராகவேந்த்ரர்.

शब्दादीन् विषयान् (சப்தாதீன் விஷயான்)=(1) உடல் நிலைப்பதற்குத் தேவையான உணவு முதலியவற்றை

தவிர பிற விஷயங்களை (இன்பங்களை)—ஸ்ரீ சங்கரர். (2) சப்தம் போன்றவைகளை அனுபவிக்க வேண்டுமென்கிற ஆசைகளை—ஸ்ரீ ராகவேந்த்ரர்.

रागद्वेषौ (ராகத்வேஷௌ) உடலின் போஷணைக்காகத் தன் முயற்சியின்றி கிடைக்கும் உணவு தண்ணீர் முதலியவற்றில் உருசியினாலாசையும், அருசியால் வெறுப்பும் (த்வேஷமும்)—ஸ்ரீ சங்கரர்.

52. विविक्तसेवी (விவிக்தஸேவீ) = (1) காடுகள், நதிக்கரையிலுள்ள மணல் திட்டு, மலைக் குகைகள், இத்தகைய தனிமையான இடத்தில் வசிக்கிறவன்—ஸ்ரீ சங்கரர். (2) தன்னுடைய தியானத்திற்கு விரோதமில்லாத இடத்தில் வசிக்கிறவன்—ஸ்ரீ ராமானுஜர். (3) பரிசுத்தமான இடத்தில் இருக்கிறவன்—ஸ்ரீதரர்.

यतवाक्कायमानसः (யதவாக்காய மானஸ:) = (1) பேச்சு, உடல், மனமாகியவற்றைத் தியானத்திற்கு உதவியாகச் செய்து கொண்டவன் — ஸ்ரீ ராமானுஜர், (2) தகுதியற்றவைகளிலல்லாது பிற விஷயத்தில், வாக்கு, உடல் மனமிவைகளை உபயோகிக்கிறவன்—ஸ்ரீ ராகவேந்த்ரர்.

ध्यानयोगपरः (த்யானயோகபர:) = (1) ஆத்ம ஸ்வரூப சிந்தனை, த்யானம், அதில் இடைவிடாது நிலைத்திருப்பது யோகம். இவைகளில் விருப்ப முள்ளவன் — ஸ்ரீ சங்கரர். (2) ஞான யோகத்தில் விருப்பமுள்ளவன்—ஸ்ரீ ராமானுஜர். (3) ஞானமாகிற உபாயத்தில் விருப்பமுள்ளவன் —ஸ்ரீ ராகவேந்த்ரர்.

वैराग्यं समुपाश्रितः (வைராக்யம் ஸமுபாச்ரித:) = (1) காணப்படுவதும், காணப்படாததுமான பொருள்களில் ஆசையை விட்டவன்—ஸ்ரீ சங்கரர். (2) தியானிக்கத்தக்க பொருளைத் தவிர பிற பொருள்களில் ஆசையை யொழிப்பதை (வைராக்யத்தை) நாளுக்கு நாள் வளர்த்துக் கொண்டவன்—ஸ்ரீ ராமானுஜர்.

53. अहंकारं (அஹங்காரம்) = (1) தான் என்ற இறுமாப்பை—ஸ்ரீ சங்கரர், (2) தான் விரக்தன் (ஆசையற்றவன்) என்ற அஹங்காரத்தை—ஸ்ரீதரர். (3) உடல் முதலியவற்றில் ஆத்மா என்ற புத்தியை—ஸ்ரீ ராமானுஜர். (4) நான் கர்த்தா (செய்கிறவன்) என்ற அபிமானத்தை —ஸ்ரீ ராகவேந்த்ரர்.

बलं (பலம்) = (1) காமம், ராகம் இவைகளுடன் கூடிய சக்தி, உடலின் சக்தியல்ல — தன்னிடமுள்ள பொருள்கள் தன்னைவிட்டுப்போகாமலிருக்க முயலும் திறமை காமத்துடன் கூடிய சக்தி, தன்னிடமில்லாத பொருளைத்தேடும் திறமை ராகத்துடன் கூடிய சக்தி —ஸ்ரீ சங்கரர். (2) ஆன்மாவற்றதில் ஆத்ம புத்தியின் வளர்ச்சிக்குக் காரணமான வாஸனுபலம்—ஸ்ரீராமானுஜர். (3) தான் அதிகத்திறமையுடையவனென்கிற அபிமானம் —ஸ்ரீ ராகவேந்த்ரர்.

दर्पं (தர்பம்) = (1) யோகத்திறனால் கெட்ட வழியில் நுழைவதை — ஸ்ரீதரர். (2) அதிக மகிழ்ச்சியால் தர்ம விரோதமாயுண்டாகிற திமிரை—ஸ்ரீ சங்கரர். (3) உடலிலுள்ள விருப்பத்தினுலுண்டாகும் மதத்தை —ஸ்ரீராமானுஜர் (4) தான் பயப்படத்தக்க விஷயத்திலும் கூட பயப்படாதிருத்தலை — ஸ்ரீ ராகவேந்த்ரர்.

निर्ममः (நிர்மம:) = (1) வருந்தாமல் கிடைத்த பொருள்களிலும் கூட அபிமான மற்றவன்—ஸ்ரீதரர். (2) தன் உடலிலும் அபிமானமற்றவன்—ஸ்ரீ சங்கரர். (3) தன்னுடையதல்லாத உடல் கிரியைகளில் தன்னுடையவை யென்ற அபிமான மற்றவன்—ஸ்ரீ ராமானுஜர். (4) தான் செய்யும் கர்மங்கள் தன்னுடையன என்ற அபிமான மற்றவன்—ஸ்ரீ ராகவேந்த்ரர்.

शान्तः (சாந்த:) = (1) எல்லாவற்றிலிருந்தும் விடுபட்டவன்—ஸ்ரீதரர். (2) ஆத்மானுபாவத்திலேயே ஸுகமடைந்தவன்—ஸ்ரீ ராமானுஜர். (3) கோப முண்டாகத்தக்க விஷயத்திலும்கூட பொறுமையாக இருப்பவன் —ஸ்ரீ ராகவேந்த்ரர்.

ब्रह्मभूयाय (ப்ரஹ்மபூயாய) = (1) ப்ரஹ்மமாகிறதற்கு —ஸ்ரீ சங்கரர். (2) ப்ரஹ்மத்தைப் போல ஆவதற்கு —ஸ்ரீ ராமானுஜர். (3) ப்ரஹ்மஞானத்திற்கு—ஸ்ரீ ராகவேந்தரர்.]

ब्रह्मभूतः प्रसन्नात्मा न शोचति न काङ्क्षति ।
समः सर्वेषु भूतेषु मद्भक्तिं लभते पराम् ॥ ५४

ப்ரஹ்மபூத: ப்ரஸன்னுத்மா ந சோசதி ந காங்க்ஷதி ।
ஸம: ஸர்வேஷு பூதேஷு மத்பக்திம் லபதே பராம் ॥ 54

தான் ப்ரஹ்மமென்கிற நிச்சய ஞானமும், சாந்தமான மனமுமுடையவன் ஏதும் நஷ்டப்படுகிறது குறித்து துக்கமடைகிறதில்லை. தனக்கு ஏதும் வேண்டுமென்று விரும்புகிறதுமில்லை. எல்லாப் பிராணிகளிடத்தும் ஒரே விதமாக (ஸமமாக) இருந்து கொண்டு மேலான என்னுடைய பக்தியையடைகிருன்.

[ब्रह्मभूत: (ப்ரஹ்ம பூத:) = (1) ப்ரஹ்மத்தையடைந்தவன் (ஜீவன் முக்தன்)—ஸ்ரீ சங்கரர். (2) ஒளிமயமானவும், முழுமையான ஞானவுருவாகவும், என்னுடைய சேஷமாகவும் (மீதமாகவும்) இருக்கும் ஸ்வரூபத்தையுடையவன்—ஸ்ரீ ராமானுஜர். (3) மனதை ப்ரஹ்மத்தினிடம் வைத்திருப்பவன் (லக்ஷ்மியை யடைந்தவன்) —ஸ்ரீ ராகவேந்த்ரர்.]

भक्त्या मामभिजानाति यावान्यश्चास्मि तत्त्वतः ।
ततो मां तत्त्वतो ज्ञात्वा विशते तदनन्तरम् ॥ ५५

பக்த்யா மாமபிஜாஞதி யாவான்யஸ்சாஸ்மி தத்வத: ।
ததோ மாம் தத்வதோ ஞாத்வா விசதே ததனந்தரம் ॥ 55

நான் எவ்வித பரிமாணம், உருவம் இவைகளையுடையவனுயிருக்கிறேனே, அவ்விதமென்னை பக்தியினுலறிகிருன். அப்படியறிந்தபின் உடனே (தாமதமின்றி) பரமானந்த ஸ்வரூபியாகி விடுகிருன்.

[ஸ்ரீ சங்கரர் :— என்னை மாயை முதலிய உபாதிகளுடன் கூடியவனுகவும், உபாதியற்ற அகண்ட ஞான ஸ்வரூபியாகவும், ஸர்வ வ்யாபியாகவுள்ளவனுகவும் அறிகிருன். ஞானமடைந்த பின் ப்ரஹ்மத்தில பிரவேசிப்பதுபோல் இச் செய்யுளினல் தோன்றும். ஞானத்தின் பயன் அவித்தையின் (அறிவின்மையின்) நிவ்ருத்தியே (நீக்கலே). அடையவேண்டியது ஒன்றுமில்லை. அடைவது என்ருல் அவித்யா நிவ்ருத்தி யடைவது தான். எனவே ப்ரஹ்மத்தில் பிரவேசிப்பது என்ருல் ப்ரஹ்ம ஸ்வரூபமாக விளங்குவது என்பதே கருத்து.

ஸ்ரீ ராமானுஜர் :— பக்தியினல் எவன் என்னை உண்மையாக அறிகிருனே அவன் அந்த பக்தியினலேயே என்னை அடைகிருன். பக்தியே மோக்ஷத்திற்கு முக்ய காரணமெனக் குறிக்கப்படுகிறது.

ஸ்ரீ ராகவேந்த்ரர் :— என்னை பரம பக்தியினல் தன் தகுதிக்கேற்ப எவன் அறிகிருனே அவன் அப்பக்தியினலேயே என்னை உண்மையாக அறிந்த பின் என்னை யடைகிருன், முக்தியை யடைகிருன்.]

सर्वकर्माण्यपि सदा कुर्वाणो मद्व्यपाश्रयः ।
मत्प्रसादादवाप्नोति शाश्वतं पदमव्ययम् ॥ ५६

ஸர்வகர்மாண்யபி ஸதா குர்வாணே மத்வ்யபாச்ரய: ।
மத்ப்ரஸாதாதவாப்னேதி சாச்வதம் பதமவ்யயம் ॥ 56

நித்ய நைமித்திக கர்மங்களை எப்போதும் செய்து கொண்டு என்னையே ஆச்ரயித்திருக்கிறவன் என்னுடைய அருளால் நிலையுள்ள அழிவற்ற இடத்தை அடைகிருன்.

मद्व्यपाश्रयः (மத்வ்யபாச்ரய:) = (1) வாஸுதேவனை என்னையே புகலிடமாகக் கொண்டவன்—என்னிடம் ஒப்புவிக்கப்பட்ட மனம் முதலியவற்றையுடையவன் —ஸ்ரீ சங்கரர். (2) பகவானே எல்லாவற்றிற்கும் கர்த்தா

(செய்பவன்) என எண்ணுபவன்—ஸ்ரீ ராமானுஜர். (3) என்னுடைய ஆராதனையின் உருவாக என்னிடம் எல்லா வற்றையும் ஒப்புவித்திருக்கிறவன்—ஸ்ரீ ராகவேந்த்ரர்.

ஸ்ரீ ராகவேந்த்ரர்:— இதிலுள்ள अपि (அபி) சப்தம் எந்தக் கர்மத்தையும் ஈச்வராராதனை உருவாக செய்ய வேண்டுமென்பதைக் குறிக்கிறது.]

चेतसा सर्वकर्माणि मयि संन्यस्य मत्परः ।
बुद्धियोगमुपाश्रित्य मच्चित्तः सततं भव ॥ ५७

சேதஸா ஸர்வகர்மாணி மயி ஸம்ன்யஸ்ய மத்பர: 1
புத்தியோகமுபாச்ரித்ய மச்சித்த: ஸததம் பவ ll 57

எல்லாக் கர்மங்களையும் மனதினால் என்னிடத்தில் அர்ப்பணம் செய்து, நானே (வாஸுதேவனே) அடைய வேண்டிய உத்தமமான ஸ்தானமென்று நிச்சய புத்தியை யடைந்து, எப்போதும் என்னிடத்திலேயே எண்ணத்தை வைத்தவனாக ஆகக்கடவாய்.

[सर्वकर्माणि (ஸர்வ கர்மாணி) = (1) இம்மை மறுமை களுக்கு உதவியான கர்மங்களை—ஸ்ரீ சங்கரர். (2) கர்த்தா உத்தேசமான தேவதைகள், இவர்களுடன் கர்மங்களை —ஸ்ரீ ராமானுஜர். (3) எல்லாவிதமான கர்மங்களை —ஸ்ரீ ராகவேந்த்ரர்.

चेतसा (சேதஸா)=(1) விவேக புத்தியினால்-ஸ்ரீ சங்கரர், (2) தான் ஈச்வரனின் அதீனன், அவனாலேவப்பட்டவன், அவனுடைய தாஸன் என்ற நிச்சய புத்தியினால் —ஸ்ரீ ராமானுஜர்.

मत्परः (மத்பர:)=(1) என்னையே உத்தமமான தெய்வ மென நம்பி—ஸ்ரீ சங்கரர். (2) முக்யமாக அடைய வேண்டிய பலன் நானேயென்ற நம்பிக்கையுடன் —ஸ்ரீ ராமானுஜர். (3) நானே மேலோனென்ற புத்தியுடன் கூடினவனாக—ஸ்ரீ ராகவேந்த்ரர்.]

मच्चित्तः सर्वदुर्गाणि मत्प्रसादात्तरिष्यसि ।
अथ चेत्त्वमहंकारान्न श्रोष्यसि विनङ्क्ष्यसि ॥ ५८

மச்சித்த: ஸர்வதுர்காணி மத்ப்ரஸாதாத்தரிஷ்யஸி I
அத சேத்வமஹம்காரான்ன ச்ரோஷ்யஸி வினங்க்ஷ்யஸி II

நீ என்னிடமே மனமுடையவனுய், என் அருளால் எல்லா துக்கங்களேயும் தாண்டிவிடுவாய். நீ தெரிந்தவ னென்கிற இறுமாப்பால் நான் சொன்னதைக் கேட்கா விடில் கெட்டுப்போவாய் (புருஷார்த்தத்தை அடைய மாட்டாய்).

यदहंकारमाश्रित्य न योत्स्य इति मन्यसे ।
मिथ्यैष व्यवसायस्ते प्रकृतिस्त्वां नियोक्ष्यति ॥ ५९

யதஹங்காரமாச்ரித்ய ந யோத்ஸ்ய இதி மன்யஸே I
மித்யைஷ வ்யவஸாயஸ்தே ப்ரக்ருதிஸ்த்வாம்
நியோக்ஷ்யதி II 59

ஒருக்கால் தானெனுமிறுமாப்படைந்து போர் செய்ய மாட்டேனென்று நிச்சயிப்பாயாகுல், அந்த உன்னுடைய தீர்மானம் பொய்யாகும். மாயை உன்னைப் போரில் ஈடுபடச் செய்யும்.

[प्रकृतिः (ப்ரக்ருதி:) = (1) க்ஷத்ரிய ஸ்வபாவம் —ஸ்ரீ சங்கரர். (2) ஈச்வர இச்சை—ஸ்ரீ ராகவேந்த்ரர்]

स्वभावजेन कौन्तेय निबद्धः स्वेन कर्मणा ।
कर्तुं नेच्छसि यन्मोहात्करिष्यस्यवशोऽपि तत् ॥ ६०

ஸ்வபாவஜேன கௌந்தேய நிபத்த: ஸ்வேன கர்மணு I
கர்தும் நேச்சஸி யன்மோஹாத்கரிஷ்யஸ்யவசோஅபி தத் II

குந்தியின் மகனே! முன் கர்மத்தாலுண்டானதும், உன் ஸ்வதர்மமுமாகிய வீரம் முதலிய கர்மத்திஞல் கட்டுப்

பட்ட நீ, அறிவின்மையால் (எதிரிகள் உறவினர் என்பதால்) எந்தப் போரைச் செய்ய விரும்புகிறதில்லையோ, அதைக்கூடப் பிறர்வசப்பட்டுச் செய்யப்போகிருய்.

[अवशोपि (அவசோபி) = (1) பராதீனனுகவே (பிறர் வயப்பட்டவனுக) — ஸ்ரீ சங்கரர். (2) பிறருடைய அவமதித்தலைப் பொறுக்க முடியாமல்—ஸ்ரீ ராமானுஜர். (3) பகவானின் விருப்பத்திற்கு வசப்பட்டு—ஸ்ரீராகவேந்த்ரர்.]

ईश्वरः सर्वभूतानां हृद्देशेऽर्जुन तिष्ठति ।
भ्रामयन्सर्वभूतानि यन्त्रारूढानि मायया ॥ ६१

ஈச்வர: ஸர்வபூதானும் ஹ்ருத்தேசேஅர்ஜுன திஷ்டதி ।
ப்ராமயன்ஸர்வபூதானி யந்த்ராருடானி மாயயா ॥ 61

ஓ அர்ஜுனு! யந்திரத்தில் ஏறிய பொருள்களைப் போல் எல்லாப் பிராணிகளையும் தன் சக்தியினுல் கர்மங்களில் ஈடுபடச் செய்துகொண்டு ஈச்வரன் எல்லாப் பிராணிகளின் ஹ்ருதயத்திலுமிருக்கிருர்.

[ஸ்ரீதரர்:— முன் 59, 60 ச்லோகங்களால் சாங்க்யர்கள் முதலியோரின் கருத்தை ஒட்டி ஜீவர்கள் ப்ரக்ருதியெனும் மாயைக்குட்பட்டு செயல்படுவதைச் சொல்லி, இந்த 61, 62 ச்லோகங்களில் ஜீவர்கள் தனக்குட்பட்டவர்களெனும் தன் மதத்தை பகவான் சொல்கிருர்,

ஸ்ரீ ராமானுஜர் :— எல்லாப் பிராணிகளும் முன் கர்மங்களுக்கேற்ப மாயைக்குட்பட்டு நடக்கும்படி தன்னுல் நியமிக்கப்பட்டுள்ளன என்பதை பகவான் சொல்கிருர்.

हृद्देशे (ஹ்ருத்தேசே)=(1) ப்ரவ்ருத்தி, நிவ்ருத்தி மூலமான ஞான மேற்படும் இடமாகிய ஹ்ருதயத்தில் —ஸ்ரீ ராமானுஜர்.]

तमेव शरणं गच्छ सर्वभावेन भारत ।
तत्प्रसादात्परां शान्तिं स्थानं प्राप्स्यसि शाश्वतम् ॥ ६२

தமேவ சரணம் கச்ச ஸர்வபாவேன பாரத ।
தத்ப்ரஸாதாத்பராம் சாந்திம் ஸ்தானம் ப்ராப்ஸ்யஸி
சாச்வதம் ॥ 62

பரத வம்சத்திலுதித்தோனே! உடலாலும், புலன்களாலும் அந்த ஈச்வரனையே சரணடைவாய். அந்த ஈச்வரனின் அருளால் மேலான சித்த ஸமாதானத்தையும் (மன அமைதியையும்) நித்யமான (அழிவற்ற) ஸ்தானத்தையும் (பேற்றையும்) அடைவாய்.

[परां शान्तिं (பராம் சாந்திம்) = (1) உத்தமமான உபசாந்தியை (மேலான அமைதியை) — ஸ்ரீ சங்கரர். (2) எல்லாக் கர்மங்களின் கட்டிலிருந்து விடுதலையை —ஸ்ரீ ராமானுஜர். (3) புத்தியை எப்போதும் பகவானிடத்தில் நிறுத்துதலை—ஸ்ரீ ராகவேந்த்ரர்.

स्थानं (ஸ்தானம்) = (1) விஷ்ணுவாகிய என் இடத்தை —ஸ்ரீ சங்கரர். (2) பரமபதத்தை—ஸ்ரீ ராமானுஜர். (3) என் வைகுண்ட லோகத்தை—ஸ்ரீ ராகவேந்த்ரர்.

குறிப்பு:— ச்லோகத்தின் ஆரம்பத்தில் 'तम्' (தம்) (அவனை) என்ற சொல்லை உபயோகித்திருப்பது அவனவனின் ஹ்ருதயத்திலிருக்கும் நியந்தாவான ஸ்வரூபம் ப்ரஹ்மமே யென்பதைக் குறிக்கவே உபயோகிக்கப்பட்டுள்ளது.]

इति ते ज्ञानमाख्यातं गुह्याद्गुह्यतरं मया ।
विमृश्यैतदशेषेण यथेच्छसि तथा कुरु ॥ ६३

இதி தே ஞானமாக்யாதம் குஹ்யாத்குஹ்யதரம் மயா ।
விம்ருச்யைததசேஷேண யதேச்சஸி ததா குரு ॥ 63

இவ்விதம், மிகவும் ரகஸ்யமான ஞானத்தைக் கொடுக்கவல்ல கீதா சாஸ்திரம் என்னுல் உனக்குச் சொல்லப்பட்டது. இந்த கீதா சாஸ்திரத்தை முழுதும் ஆராய்ந்து பார்த்து அதன் பிறகு எப்படி விரும்புகிருயோ அப்படிச் செய்.

[ज्ञानं =(1) கர்மயோகம், ஞானயோகம், பக்தியோகம் இவைகளை விளக்கும் கீதா சாஸ்திரம்—ஸ்ரீ ராமானுஜர். (2) அறியவேண்டியது—ஸ்ரீ ராகவேந்த்ரர்]

सर्वगुह्यतमं भूयः शृणु मे परमं वचः ।
इष्टोऽसि मे दृढमिति ततो वक्ष्यामि ते हितम् ॥ ६४

ஸர்வகுஹ்யதமம் பூய: ச்ருணு மே பரமம் வச: ।
இஷ்டோஅஸி மே த்ருடமிதி ததோ வக்ஷ்யாமி தே ஹிதம் ॥

எனக்கு மிகவும் பிரியப்பட்டவனுக உள்ளாய். அதனுல் உனக்கு அனுகூலமானதை (நலமானதை) மறுபடியும் சொல்லப்போகிறேன். எல்லா ரகஸ்யங்களிலும் மாபெரும் ரகஸ்யமானதும், மேலானதுமான என் வார்த்தையைக் கேள்.

मन्मना भव मद्भक्तो मद्याजी मां नमस्कुरु ।
मामेवैष्यसि सत्यं ते प्रतिजाने प्रियोऽसि मे ॥ ६५

மன்மனு பவ மத்பக்தோ மத்யாஜீ மாம் நமஸ்குரு ।
மாமேவைஷ்யஸி ஸத்யம் தே ப்ரதிஜானே ப்ரியோஅஸி மே ॥

என்னிடம் மனதை வைத்தவனுகவும், பக்தியுள்ளவனுகவும், என்னை ஆராதிக்கிறவனுகவும் ஆகுக. என்னை நமஸ்காரம் செய் (வணங்கு), என்னை அடைவாய். எனக்குப் பிரியனுக உள்ளாய். உனக்கு உண்மையில் உறுதியாகச் சொல்கிறேன்.

[ஸ்ரீ ராமானுஜர்:— இடைவிடாது, சலிக்காது வேதாந்தப் பொருளை நினைப்பவனாகவும், எனக்கு உகந்த, இடைவிடாத, சலிக்காத ஸ்வரூப ஸ்மரணையுள்ள வனாகவும், பிரியமாக என்னை ஆராதிப்பவனாகவும் ஆகக் கடவாய். என்னை மிகுந்த வணக்கம் செய், என்னையே யடைவாய். இது உண்மை. இப்படி எவன் என்னிடம் அன்பு வைக்கிறானோ நானும் அதுபோல் அவனிடம் அன்பு கொள்வேன். அவன் பிரிவையாற்றாது அவன் என்னை அடையும்படி செய்வேன்.

ஸ்ரீ ராகவேந்த்ரர்:- இதில் சொல்லப்பட்ட நமஸ்காரம் வரையுள்ள நான்கும் ஸாதன ஸார சதுஷ்டயமெனப் படும்.]

सर्वधर्मान्परित्यज्य मामेकं शरणं व्रज ।
अहं त्वा सर्वपापेभ्यो मोक्षयिष्यामि मा शुचः ॥ ६६

ஸர்வதர்மான்பரித்யஜ்ய மாமேகம் சரணம் வ்ரஜ 1
அஹம் த்வா ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி மா சுச: 11

எல்லா தர்மங்களையும் (சாஸ்திர முறைப்படி செய்ய வேண்டிய நித்ய நைமித்திக கர்மங்களை) விட்டு என்னையே சரணமடை. நான் உன்னை (அந்தக் கர்மங் களைவிட்ட) எல்லாப் பாவங்களிலிருந்தும் விடுவிப்பேன், துயரமடையாதே.

[ஸ்ரீ சங்கரர் :— எல்லாக் கர்ம நிஷ்டையைக் காட்டிலும் ஈச்வரனைச் சரணடைதல் முன்னர் முடிவாகச் சொல்லப்பட்டது. இப்போது கர்மயோக நிஷ்டையின் பயனாகவும் வேதாந்த ஸாரமாகவுமுள்ள பூர்ணஞானம் சொல்லப்படுகிறது. ஸகல கர்மங்களையும் விட்டு, எல்லா வற்றிலும் ஸமமாக ஊடுருவி நிற்கும், ஈச்வரனான என்னை நீயே அத்தகைய ப்ரஹ்ம மென்றும், என்னைத் தவிர வேறில்லை என திடப்படுத்திக்கொள். இத்தகைய நிச்சய முள்ள உன்னை கட்டுருவான எல்லாக் கர்மங்களிலிருந்தும் என்னுடைய ஸ்வரூப ப்ரகாசம் செய்விப்பதால் விடுவிக்கிறேன். ஆகையால் வருந்தாதே.

இந்த கீதா சாஸ்திரத்தில் சில ச்லோகங்கள் ஞானம், மோக்ஷத்திற்குக் காரணமென்றும், சில ச்லோகங்கள் கர்மங்களை அவசியம் செய்யவேண்டுமென்றும் சொல்கின்றன. இப்படி ஞானம், கர்மம் இரண்டையும் குறிப்பிட்டுச் சொல்வதால் ஞானம் மாத்திரமா அல்லது கர்மம் மட்டுமா அல்லது இரண்டும் சேர்ந்தா மோக்ஷ ஸாதனமென ஸந்தேஹம் ஏற்படுகிறது. ஞானம் எல்லா வேற்றுமை புத்தியையும் ஒழித்து மோக்ஷத்திற்கு வழியாகிறது. கர்மமோ செய்கை, காரணமான பொருள்கள், பயன் இவற்றின் வேற்றுமை அறிவை அடிப்படையாகக் கொண்டது. நான் செய்பவன், அனுபவிப்பவன் போன்ற வேற்றுமை எண்ணங்கள் அறிவின்மையால் ஆன்மாவிடம் ஆரம்பமின்றி வியாபித்துள்ளன. நான் மாயையற்றவன், கர்த்தாவல்ல, செயலற்றவன், அடையவேண்டியதான பயன் ஒன்றுமில்லாதவன், என்னையன்றி பிற பொருள் கிடையாது என்கிற அறிவு (ஞானம்) மேற்கண்ட கர்மத்தில் ஈடுபடும் வேற்றுமையுணர்ச்சியையும், அதன் காரணமான அறிவின்மையையும் போக்கடிக்கும். ஓர் இருட்டு மற்றோர் இருட்டை எப்படிப் போக்கடிக்காதோ அதுபோல கர்மம் அறிவின்மையைப் போக்கக் கூடியதல்ல. ஞானம், ஸூர்யன் உதித்தவுடன் இருளை நீக்குவது போல, கர்மத்திற்குக் காரணமான வேற்றுமை புத்தியையும், அதற்குக் காரணமான அறிவின்மையையும் (அவித்தையையும்) நீக்கிவிடுகிறது. ஆகையால் ஞானத்திற்குக் கர்மத்துடன் சேர்க்கை என்பதே ஒவ்வாதது. எனவே ஞானமே மோக்ஷத்திற்குக் காரணம்.

ஸ்ரீ ராமானுஜர்:— ஞான யோக, கர்ம யோக, பக்தி யோகங்களின் பயனை, அல்லது பக்தி யோகத்தின் ஆரம்பத்திற்கு எதிரான பாவங்களை நீக்கவல்ல பிராயச்சித்தங்களை கைவிட்டு, கர்த்தாவாகிய (செயல்படுபவனான) என்னையே, ஸேவிக்கத்தக்கவனாகவும், அடையத்தக்கவனாகவும், அடையுமுபாயமாகவும், அனுஸந்தானம் செய் (தியானி). நான் உன்னை, வெகு

காலமாகச் செய்யத்தகாததைச் செய்தும், செய்ய வேண்டியதைச் செய்யாதும், தேடப்பட்டதும், என்னை யடைய விரோதமாக உள்ளதுமான எல்லாப் பாவங்களிலிருந்தும், அல்லது பக்தி யோகத்தின் தொடக்கத்திற்கு விரோதமான எல்லா பாவங்களி லிருந்தும் விடுவிப்பேன். துயர மடையாதே.

ஸ்ரீ ராகவேந்த்ரர் :— ஸாதன ஸார சதுஷ்டயம் தவிர மற்ற கர்மங்களை விட்டு, அல்லது ஸர்வ கர்ம பலன்களை அல்லது வைஷ்ணவ தர்மங்களை விட்டு, என் ஒருவனையே சரணமடை. நான் எல்லாப் பாவங்களிலிருந்தும் விடுவிப் பேன். ஸம்ஸார பயத்தினுல் துக்க மடையாதே]

इदं ते नातपस्काय नाभक्ताय कदाचन ।
न चाशुश्रूषवे वाच्यं न च मां योऽभ्यसूयति ॥ ६७

இதம் தே நாதபஸ்காய நாபக்தாய கதாசன I
ந சாசுச்ருஷவே வாச்யம் ந ச மாம் யோஅப்யஸூயதி ll 67

இந்த கீதார்த்த தத்வம் தன் தர்மத்தை அனுஷ்டானம் செய்யாதவனுக்கும், அல்லது தவம் இல்லாதவனுக்கும். ஈச்வரன், குரு இவர்களிடம் பக்தியும், அவர்களுடைய பணிவிடையும் அல்லது இதைக்கேட்க விருப்பமு மில்லாதவனுக்கும், என்னை நிந்திப்பவனுக்கும் ஒரு போதும் உன்னுல் சொல்லத்தக்கதல்ல.

[உன் பொருட்டு சொல்லப்பட்ட இந்த கீதார்த்த தத்வத்தை தவம் செய்யாதவனுக்குச் சொல்லாதே. தவமியற்றுபவனுனலும், கடவுளிடமும், குருவிடமும் பக்தியில்லாதவனுக்குச் சொல்லாதே. தவம், பக்தியிருப் பினும் குருவுக்குப் பணிவிடை செய்யாதவன் அல்லது கேட்க விருப்பமில்லாதவனுக்குச் சொல்லாதே. தவம், பக்தி, பணிவிடை இவை மூன்றுமிருப்பினும், ஈச்வரனை நிந்திப்பவனுக்கு ஒருபோதும் சொல்லாதே எனக் கருத்து —ஸ்ரீ சங்கரர், ஸ்ரீ ராமானுஜர், ஸ்ரீ ராகவேந்த்ரர்.

ஸ்ரீ சங்கரர்:— தவமில்லாவிட்டாலும் பிற குணங்களிருக்குமாயின் மேதாவி (புத்தி கூர்மையுள்ளவன்) ஆனல் சொல்லலாம்.

य इमं परमं गुह्यं मद्भक्तेष्वभिधास्यति ।
भक्तिं मयि परां कृत्वा मामेवैष्यत्यसंशयः ॥ ६८

ய இமம் பரமம் குஹ்யம் மத்பக்தேஷ்வபிதாஸ்யதி ।
பக்திம் மயி பராம் க்ருத்வா மாமேவைஷ்யத்யஸம்சய: ॥ 68

எவன் மிகவும் ரகஸ்யமான இந்த நூலை (கீதையை) என்னுடைய பக்தர்களுக்குச் சொல்வானே (அல்லது உபதேசிப்பானே), அப்படிப்பட்டவன் என்னிடம் மேலான பக்தியைச் செய்து, எல்லாவிதமான ஐயப்பாடுகளும் நீங்கியவனுய் என்னையே அடைவான்.

[अभिधास्यति (அபிதாஸ்யதி) = கீதையிலுள்ள ச்லோகங்களையோ, அவைகளின் பொருளையோ மனதில் பதியும்படி சொல்கிருனே—ஸ்ரீசங்கரர்.]

न च तस्मान्मनुष्येषु कश्चिन्मे प्रियकृत्तमः ।
भविता न च मे तस्मादन्यः प्रियतरो भुवि ॥ ६९

ந ச தஸ்மான்மனுஷ்யேஷு கஸ்சின்மே ப்ரியக்ருத்தம: ।
பவிதா ந ச மே தஸ்மாதன்ய: ப்ரியதரோ புவி ॥ 69

மனிதர்களில் என் பக்தர்களிடம் இந்த கீதையை உபதேசிக்கிறவனைக் காட்டிலும் வேறு எவனும் எனக்கு மிகவும் விருப்பமுள்ளவனுகப் பூமியில் உண்டாகப் போகிறதுமில்லை.

अध्येष्यते च य इमं धर्म्यं संवादमावयोः ।
ज्ञानयज्ञेन तेनाहमिष्टः स्यामिति मे मतिः ॥ ७०

அத்யேஷ்யதே ச ய இமம் தர்ம்யம் ஸம்வாதமாவயோ: ।
ஞானயஜ்ஞேன தேனுஹமிஷ்ட: ஸ்யாமிதி மே மதி: ॥ 70

தர்மத்தை விட்டு விலகாத நம்மிருவருடைய இந்த (கேள்வி பதில் உருவாகவுள்ள) ஸம்பாஷணையை எவன் படிப்பானே, அவனல் ஞானமெனும் மேலான வேள்வியினல் நான் ஆராதிக்கப்பட்டவனென்பது என்னுடைய தீர்மானமான எண்ணம்.

[ஸ்ரீதரர் :— இந்த கீதையின் பொருளை அறியாது, பாராயணம் (படித்தல்) மட்டும் செய்தவனும்கூட ஸ்ரீ பகவானை ஆராதித்தவனென்பது கருத்து.

ஸ்ரீ சங்கரர் :— 'ஞானயஜ்ஞேன' என்று கூறப்படுவதால், இந்த கீதா சாஸ்த்ரம் ஞானயஜ்ஞத்திற்கு ஸமமானதெனப் போற்றப்பட்டதாகவோ, அல்லது தேவர்களின் பொருட்டுள்ள யஜ்ஞங்களை (வேள்விகளை)ப்போல் பயன் தரத்தக்கதாகவோ கொள்ளவேண்டியது.

யஜ்ஞம் (வேள்வி) நான்கு விதம் :— (1) விதியஜ்ஞம்—அதாவது உடலால் செய்யத்தக்க ப்ரஹ்மயஜ்ஞம் முதலியன. (2) ஜபயஜ்ஞம்—பாராயணம் முதலிய வாயினலுச்சரிப்பது. (3) உபாம்சுயஜ்ஞம்—பிறர் கேட்காவண்ணம் வாய்க்குள்ளேயே உச்சரிப்பது. (4) மானஸயஜ்ஞம்—மனதினல் தியானித்தல். மானஸயஜ்ஞம் தான் ஞானயஜ்ஞமாகும். படிப்பது ஞானயஜ்ஞமாகாது. ஆகையால் ஸ்துதியாகச் சொல்லப்பட்டுள்ளது.

ஸ்ரீ ராகவேந்த்ரர் :— பயனைச்சொல்லிக் கீதையின் பொருள் போற்றப்படுகிறது.]

श्रद्धावाननसूयश्च शृणुयादपि यो नरः ।
सोऽपि मुक्तः शुभांल्लोकान्प्राप्नुयात्पुण्यकर्मणाम् ॥ ७१

ச்ரத்தாவானனஸூயஸ்ச ச்ருணுயாதபி யோ நர: 1
ஸோஅபி முக்த: சுபால்லோகான் ப்ராப்னுயாத் புண்ய
கர்மணும் 11 71

எந்த மனிதன் ச்ரத்தை (ஊக்கம், விச்வாஸம்) உடையவனாகவும், பிறர் படிக்கையில் அஸூயை யற்றவனாகவும் கேட்கவாவது செய்கிறானோ, அவனும் கூட எல்லாப் பாவங்களிலிருந்தும் விடுபட்டவனாக புண்ய கர்மங்களைச்செய்தோரடையத்தக்க ஸ்வர்கம் முதலிய நல்ல உலகங்களை யடைவான்.

कच्चिदेतच्छ्रुतं पार्थ त्वयैकाग्रेण चेतसा ।
कच्चिदज्ञानसंमोहः प्रणष्टस्ते धनंजय ॥ ७२

கச்சிதேதச்ச்ருதம் பார்த்த த்வயைகாக்ரேண சேதஸா ।
கச்சிதஜ்ஞானஸம்மோஹ: ப்ரணஷ்டஸ்தே தனம்ஜய ॥ 72

அர்ஜுனா! இது வரை சொல்லப்பட்டது உன்னால் ஒரேவிதமான மனதுடன் கேட்கப்பட்டதா? உன் அறிவின்மையாலுண்டான (உறவினன், நண்பனென்ற) மோஹம் (புத்தி மாறுட்டம்) போய்விட்டதா?

[ஸ்ரீ சங்கரர்:— தன்னால் உபதேசிக்கப்பட்டதை அர்ஜுனன் செவ்வனே தெரிந்துகொண்டானா என்பதை அறியும் பொருட்டு பகவான் கேட்கிறார்.]

अर्जुन उवाच -

नष्टो मोहः स्मृतिर्लब्धा त्वत्प्रसादान्मयाच्युत ।
स्थितोऽस्मि गतसन्देहः करिष्ये वचनं तव ॥ ७३

அர்ஜுன உவாச -

நஷ்டோ மோஹ: ஸ்ம்ருதிர்லப்தா த்வத்ப்ரஸாதான்மயாச்யுத ।
ஸ்திதோஅஸ்மி கதஸந்தேஹ: கரிஷ்யே வசனம் தவ ॥ 73

அர்ஜுனன் சொல்வது :—

அச்சுதா! உம் அருளால் என்னால் ஆத்ம ஸ்வரூபானுஸந்தான மடையப்பட்டது. அறிவின்மை

போய் விட்டது. ஸந்தேக நிவ்ருத்தி அடைந்தேன். நீங்கள் சொன்னபடி செய்கிறேன்.

[ஸ்ரீசங்கரர் :— "அவிவேகம் போய்விட்டதா?" என்ற பகவானின் கேள்விக்கு 'அக்ஞானம் போய்விட்டது' எனப் பதில் கூறப்பட்டது. இதனுல் சாஸ்த்ர விசாரத்தினுல் அக்ஞானத்தின் (அறிவின்மை) விலகலும், ஆத்ம ஸ்வரூபானுஸந்தானமும் தான் பயனென்று வெளியாகிறது. 'உம்முடைய வாக்யத்தை நிறைவேற்றுவேன்', என்ற பதிலினுல் தனக்கு ஆக வேண்டியது ஒன்றுமில்லையெனவும், பகவானின் கட்டளைப்படி செய்வது தன் கடமையெனவும் தெளிவாகிறது.

ஸ்ரீ ராமானுஜர் :— 'स्मृतिर्लब्धा' (ஸ்ம்ருதிர்லப்தா) = தத்வஞான மடைந்தேன் — ஆத்மா ப்ரக்ருதியிலிருந்து வேறுபட்டவன், ப்ரக்ருதி ஸ்வபாவ முடையவனல்லவன், ஞான ஸ்வபாவமுடையவன், பரம புருஷனுக்கு சேஷன், பரம புருஷனுல் நியமிக்கப்படத்தக்கவன், இத்தகைய ஞானமும், எல்லாவுலகின் படைத்தல், காத்தல், அழித்தல் முதலிய லீலைகளைவுடைய கல்யாண ஸ்வரூபி; அளவற்ற, ஒப்பிலா ஞானம், வலிமை, செல்வம், வீர்யம், சக்தி, ஒளி முதலிய எல்லா நற்குணங்களின் கடலாக, ப்ரஹ்மம் என்ற சொல்லின் பொருளால் விளங்குகிறதுமான, பரம புருஷனைப் பற்றிய உண்மை அறிவும், இத்தகைய ஞானப் பயிற்சியினுல் நாளுக்கு நாள் வளர்ந்துவரும் பரம புருஷனின் அன்பை முக்யப்பயனுகக் கொண்ட நித்ய நைமித்திக கர்மங்களை அனுஷ்டித்தல், மற்றும் ஆத்ம குணங்களால் ஏற்படும் பக்தியென்ற பரம புருஷ உபாஸனையாலேயே வேதாந்தங்களினுலறியத்தக்க பரம புருஷனை, வாஸுதேவனை, நீர் (பகவான்) அடையத் தக்கவரென்ற அறிவும் கிடைத்தது.

गतसन्देहः (கதஸந்தேஹ:) = உறவு, நட்பு, கருணை இவற்ருல் வளர்ச்சி யடைந்த தப்பான அறிவினுலுண்டான எல்லா ஐயங்களும் நீங்கினவனுனேன்.

नष्टमोह: (நஷ்டமோஹ:)=ஆத்மாவல்லாத ப்ரக்ருதியில் (மாயையில்) ஆத்மா வென்றும், பரம புருஷ சரீரமான தால் அவரையே ஆத்மாவாகவுடைய எல்லா அசை வுள்ள, அசைவற்ற பொருள்களை அப்படியல்ல வென்றும், பரம புருஷனின் ஆராதனமாயிருப்பதால், பரமபுருஷனை அடைவதற்கு காரணமான நித்ய நைமித்திக கர்மங்கள் கட்டுக்குள்படக் காரணமென்றும் உண்டாகிய மோஹம் (புத்தி மாருட்டம்) போய்விட்டது.

ஸ்ரீ ராகவேந்த்ரர் :— स्मृति: लब्धा (ஸம்ருதி: லப்தா) = நாரயணனை வெறுப்பவர்களையும், அவர்களைச் சார்ந்த வர்களையும் கொல்வது அவச்ய மெனவும், அது மேலான தர்மமென்றும் அறிவு அடையப்பட்டது]

संजय उवाच -

इत्यहं वासुदेवस्य पार्थस्य च महात्मनः ।
संवादमिममश्रौषमद्भुतं रोमहर्षणम् ॥ ७४

ஸஞ்ஜய உவாச -

இத்யஹம் வாஸுதேவஸ்ய பார்தஸ்ய ச மஹாத்மன: ।
ஸம்வாதமிமமச்ரேளஷமத்புதம் ரோமஹர்ஷணம் ॥ 74

ஸஞ்ஜயன் த்ருதராஷ்ட்ர மன்னனை நோக்கிச் சொல்வது:-

இவ்விதம் நான் மஹாத்மாவான வாஸுதேவனுக்கும் அர்ஜுனனுக்குமிடையே நடந்த ஆச்சர்யமான, மயிர்க் கூச்சலுண்டாக்கத்தக்க உரையாடலைக் கேட்டேன்.

व्यासप्रसादाच्छ्रुतवानेतद्गुह्यमहं परम् ।
योगं योगेश्वरात्कृष्णात्साक्षात्कथयतः स्वयम् ॥ ७५

வ்யாஸப்ரஸாதாச்ச்ருதவானேதத்குஹ்யமஹம் பரம் ।
யோகம் யோகேச்வராத் க்ருஷ்ணாத் ஸாக்ஷாத் கதயத:
ஸ்வயம் ॥ 75

மாமுனிவரான வ்யாஸரின் அருளால் இரகஸ்யமும், மேலானதுமான யோக சாஸ்திரமாகிய இந்த கீதையை, தானே அர்ஜுனனுக்குச் சொன்னவரும், ஸகல யோகங்களுக்கும் ஈசனுமான க்ருஷ்ணபகவானிடமிருந்து நான் நேராகவே கேட்டேன்.

[व्यासप्रसादात् (வ்யாஸப்ரஸாதாத்) = பாரதப் போர் ஆரம்பமாகுமுன், குரு ஷேத்ரப் போர்க் களத்தில் நடக்கும் எல்லா விஷயங்களும் எனக்கு நேராகத் தெரியும்படிக்கும், தெரியும் யாவற்றையும் உமக்குச் சொல்லும் பொருட்டும், வ்யாஸமாமுனிவர் எனக்கு ஞானக் கண்களையும், காதுகளையும் கொடுத்துள்ள அருளால்—ஸ்ரீ ராகவேந்த்ரர்]

राजन्संस्मृत्य संस्मृत्य संवादमिममद्भुतम् ।
केशवार्जुनयोः पुण्यं हृष्यामि च मुहुर्मुहुः ॥ ७६

ராஜன் ஸம்ஸ்ம்ருத்ய ஸம்ஸ்ம்ருத்ய ஸம்வாதமிமமத்புதம் ।
கேசவார்ஜுனயோ: புண்யம் ஹ்ருஷ்யாமி ச முஹுர்முஹு: ॥

ஓ த்ருதராஷ்ட்ர மஹாராஜாவே!

ஆச்சர்யமும் புண்யமும் கூடிய இந்த க்ருஷ்ணனுக்கும் அர்ஜுனக்குமிடையே நடந்த உரையாடலை நினைத்து, நினைத்து, அடிக்கடி மகிழ்ச்சியடைகிறேன்.

तच्च संस्मृत्य संस्मृत्य रूपमत्यद्भुतं हरेः ।
विस्मयो मे महान्राजन्हृष्यामि च पुनः पुनः ॥ ७७

தச்ச ஸம்ஸ்ம்ருத்ய ஸம்ஸ்ம்ருத்ய ரூபமத்யத்புதம் ஹரே: ।
விஸ்மயோ மே மஹான்ராஜன் ஹ்ருஷ்யாமி ச புன: புன: ॥

அரசனே! ஹரியான அந்த க்ருஷ்ண பகவானின் மிக ஆச்சர்யமான அந்த விச்வ ரூபத்தையும் நினைத்து, நினைத்து என் வியப்பு அதிகமாகிறது. மறுபடியும், மறுபடியும் மகிழ்ச்சியுமடைகிறேன்.

यत्र योगेश्वरः कृष्णो यत्र पार्थो धनुर्धरः ।
तत्र श्रीर्विजयो भूतिर्ध्रुवा नीतिर्मतिर्मम ॥ ७८

யத்ர யோகேச்வர: க்ருஷ்ணோ யத்ர பார்த்தோ தனுர்தர: ।
தத்ர ச்ரீர்விஜயோ பூதிர்த்ருவா நீதிர்மதிர்மம ॥ 78

எந்த இடத்தில் (எக்கட்சியில்) யோகங்களுக்கெல்லாம் ஈசுனை க்ருஷ்ணபகவானும், காண்டீபமெனும் வில்லைத் தாங்கிய அர்ஜுனனும் இருக்கின்றனரோ, அவ்விடத்தில் (அக் கட்சியில்) ராஜ்யலக்ஷ்மியும், ஜயமும், வளர்ச்சியும், நீதியும் நிச்சயமாக இருக்கின்றன என்பது என் எண்ணம்

வேத வ்யாஸ முனிவரால் இயற்றப்பட்ட
மஹாபாரதத்தில், பீஷ்ம பர்வத்தில்
ஸ்ரீ க்ருஷ்ணார்ஜுன ஸம்வாதமாகிற
பகவத்கீதையின்
மோக்ஷஸன்யாஸ யோகமெனும்
பதினெட்டாவது அத்யாயம்
முற்றிற்று.

ஓம் தத் ஸத்